T. 27224

கழக வெளியீடு : கூஅக

சைவசித்தாந்த ஞானபோதம்

மறைமலையடிகள்
இயற்றியது

✱

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.,

திருநெல்வேலி சென்னை-1.

First Edition : (Author) 1906
Reprints „ 1915, 1922, 1935
(Kazhagam) June, 1959

SAIVA SIDDHANTA GNANABOTHAM

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY. TINNEVELLY, LTD.,
1/140 BROADWAY, MADRAS-1.
Head Office :
98, EAST CAR STREET, TIRUNELVELI.

SAARI ACHAKAM, 127, BROADWAY, MADRAS.

ஓம்

பதிப்புரை

சீர் சிறப்பமைந்த உலக வாழ்க்கையில் விழியிலா ரெய்தும் பெருந்துன்பம் யாவரானும் உணரப்பட்ட தொன்றே. அதனினும் மிக்க துன்பத்தினைக் கல்லாத மாந்தர் எய்துவர். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது நாளும் வழங்கும் மூதுரையன்றோ! கற்றவருள்ளும் கடவுளுணர்வினை எழுப்பி இம்மையிலும், உம்மையிலும், அம்மையிலும் நல்வாழ்வு வாழ நற்றுணை புரியும் மெய்ப்பொருள் நூல் கல்லாதார் மாலைக்கண்ணுடையார் போன்று மாலுற்று மதிமயங்கி மருள்வர்.

அத்தகைய மெய்ப்பொருள் நூல்களும் அவரவர் தந் தாய் மொழியினில்லாமல் அயன் மொழியினிருப்பின் மயலே பெருகித் தெளிவெய்துதற்கு வழியின்றி விழிப்பர். அத்தகைய குறைபாடு தொன்மையானும், நன்மையானும், முன்மையானும், இனிமை எளிமை இயல்பு உயிர்ப்புச் செட்டுத் தெளிவு முதலிய பன்மையானும் உலகத்திலேயே தனிசிறந்து இருவகை வழக்கிலும் பொன்றாது நின்று நிலவுவது நம் தமிழ்மொழியேயாம். நம் அருமைத் தமிழ்மொழிக்கண் தொல்காப்பியமுள்ளிட்ட சங்கத் தொகை நூல்களும், பன்னிருதிருமுறையும், பதினான்கு மெய்கண்ட நூல்களும் பிறவும் கிடைத்தற்கரிய பெரு வைப்பாக விளங்குகின்றன. இவற்றுள் சமய நூல்களும் சங்க நூல்கள் போன்று உலகோருணர்ந்து உய்தற்கேற்ற பொது நூல்களேயாம். இந்நூல்கள் அனைத்தினும் **"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்"**

என்னும் மெய்ப்பொருள்களே உயிர்ப் பொருளாய் நின்று நிலவுகின்றன. சமயப்பிணக்கம் சிறிதுமின்றிச் சமய இணக்கம் பெரிதுமுளதாய்த் திகழ்வது தொன்மைத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கான யாண்டுகள் முயன்று கைக்கொண்டொழுகிவரும் தமிழக நெறியேயாம்.

அதனையே "சைவ சித்தாந்தச் செந்நெறி" யென நன்னெறியாளர் வழங்கி வருகின்றனர். "திருக்குறள்" எத்துணைச் சிறந்த உலகப் பொதுநூல் எனக் கொண் டாடுகின்றோமோ அத்துணைச் சிறந்த பொது நூலே "சிவஞானபோத"மாகும். மேலும் அது திருக்குறளினும் நனிமிகச் சுருங்கிய வடிவில் இன்னுயிர்க்கினிய மன்னிய பெரும் பொருள்களை ஐயம் திரிபின்றித் தெளிவுற யாவரும் எளிதினும் இனிதினும் உணர்ந்துய்யுமாறு விளக்குகின்றது.

மேற்போந்த நூல்களின் சால்பு நிறை பிழிவாய் ஆசிரியர் மறைமலையடிகளாரால் "சைவ சித்தாந்த ஞான போதம்" என்னும் பழுதில் முழுமணி நூல் ஒன்று விழுமிதாகத் தரப்பட்டுள்ளது. அந்நூலகத்து க. சைவசமய மாட்சி, உ இந்துசமய உண்மைகள், ங. கடவுளுக்கு அருவுருவம் உண்டு, ச. சீவகாருணியம், ரு. இருசைவ விளக்கங்கள், சு. திருவுருவ வழிபாடு, எ. சிவலிங்க உண்மை, அ. அம்பலவாணர் திருக்கூத்துண்மை முதலிய பெருந் தலைப்புக்களும், இந்து சமயவுண்மைகள் என்ற பெருந் தலைப்பின்கண் அறிவு, உயிர், வினை, முற்பிறவி பிற்பிறவி, கடவுள் முதலிய பல உட்டலைப்புக்களும் காணப்படுகின்றன. "இரு சைவ விளக்கங்கள்" என்பது உலகியல் வேறுபாடு சிறிதும் தோன்றாத மூவாட்டைக் குழந்தைப் பருவத்தே விழுமிய முழுமுதற் சிவபெருமானால் ஆட்

கொள்ளப்பட்டுத் "திரு நெறிய தமிழ்" பாடியருளிய திருஞானசம்பந்தப் பெருமானும் அத்தகைய குழந்தைப் பருவத்தே ஆட்கொள்ளப்பட்டுத் தனித்தமிழ் முதனூலாம் "சிவஞான போதம்" பாடியருளிய மெய்கண்ட தேவநாயனாரும் ஆவர்.

இந்நூலகத்து நாடும், மொழியும், நன்னெறியும் மெய்ம்மையாகவுணர்ந்து எல்லாரும் பிணக்கின்றி இணங்கி வாழவும், சைவசித்தாந்தம் கைக்கொண்டொழுகும் செந்நெறியாளர் வழிபட்டு வரும் தெய்வத் திருவுருவப்படிமங்கள் ஏனையார் வழிபடும் விக்கிரகங்கள் போன்றன அல்லவென்னும் உண்மை உறுதி பெறவும், அப்பாலாய் நிற்கும் கடவுட்கு இயல்பாகவே அருளுருவம் உண்டென்பதும், அவர் மெய்யடியார் பொருட்டுப் பல்வேறு அருளுருவத் திருமேனி கொண்டருள்வரென்பதும், அத்திருமேனிகள் ஏனையார் கூறும் உருவெளித் தோற்றங்கள் போன்றன அல்ல என்பதும், கடவுள் திருமேனி கொள்வதால் அவற்கு நேரும் இழுக்கொன்றுமின்றென்பதும், மனவியல் புணர்ந்தார் திருவுருவ வாயிலாகவன்றி வேறு எவ்வகையானும் வழிபடுதல் சாலாதென்பதும், அருளிரக்கமாகிய சீவகாருணியமே உறுதிப்பொருளாமென்பதும், தெய்வவுண்மைத் தன்மையினைச் சிவலிங்கத் திருவுருவமும், அம்பலவாணர் திருவுருவமும் விளக்கிக் காட்டும் மெய்ப்பொருள் போன்று வேறு எவ்வுருவத்தும் எவ்வுலகத்தும் எம்மொழியிலும் காண்டற்கியலாதென்பதும் பிறவும் சீரிய செந்தமிழ் நூற்சான்றுகள் மட்டுமன்றி, ஆரிய வேதாகம உபநிடதம் முதலியவற்றினின்றும், ஆங்கில நூல்களினின்றும் பலப்பல மேற்கோட் சான்றுகள் செலத்தகுமுறையில் காட்டியுள்ளார்கள்.

இந்நூலொன்றே பொதுவாகச் செந்தமிழன்பர்கட்கும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்கட்கும், திருக்கோவில் அலுவலாளர்கள், அறங்காவலர், அருச்சகர், வழிபாட்டாளர்கள் முதலியோர்கட்கும், ஆசிரிய மாணவர்கட்கும் எல்லாவகையான வாழ்க்கைகட்கும் நல்வழி காட்டும் பெரு நூலாகும்.

அடிகளார் எழுதி வைத்துள்ள ௧௯௫௦-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ௯-ஆம் நாள் விருப்ப ஆவணத்தின் படி வாரமுறையில் கழகம் இதனை நான்காம் பதிப்பாக வெளியிடுகின்றது. அடிகளார் இந்நூலை முதற்பதிப்பாக ஞானசாகரத்தில், 1906, 1915-ஆம் ஆண்டுகளிலும், இரண்டாம் பதிப்பாக 1922-ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பாக 1935-ஆம் ஆண்டிலும் ஆக மூன்று பதிப்புகள் வெளியிட்டுள்ளார்கள். இதனைச் செந்தமிழன்பர்கள் கற்றுப் பெரும் பயன் எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

ஓம்

சைவசித்தாந்த உண்மை இதுவே என எண்ணிறந்த
சொற்பொழிவுகளானும் அரிய பெரிய நூல்களானும்
இனிது விளக்கி, இத்தென்றமிழ் நாடெங்குஞ்
சித்தாந்த ஞாயிறுபோற் றிகழ்ந்தவரும்,
முகவை மன்னரால் 'வைதிக சைவ
சித்தாந்த சண்டமாருதம்' எனப்
பட்டஞ் சூட்டப்பட்டவரும்,
அடியேமுக்குச் சைவ
சித்தாந்த நுட்பங்களைத் தமது அருட்
பெருக்கொடு குழைத்து ஊட்டினவருமான

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்

என்னும் எம் சித்தாந்த
ஆசிரியர் அடியேமிடத்து வைத்த
அருட்பெருந் தகைமையை நினைந்து
நினைந்து கனிந்திடுதற்கோர் அறிகுறியாக
இந்நூல் அடியேமால் வகுக்கப்படுகின்றது.

உள்ளுறை

மூன்றும் பதிப்பின் முகவுரை ... ix

இந்நூலிற் கண்ட வடசொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் ... xi

ஆங்கில முன்னுரை ... 1

சைவ சமய மாட்சி ... க

இந்து சமய உண்மைகள் ... உஎ

சமரச சன்மார்க்கம் ... ருக

கடவுளுக்கு அருளுருவம் உண்டு ... சுரு

சீவகாருணியம் ... எஉ

இரு சைவ விளக்கங்கள் ... அஎ

திருவுருவ வழிபாடு ... க0அ

சிவலிங்க உண்மை ... கசுஅ

அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை உஉஅ

ஓம்

மூன்றும் பதிப்பின் முகவுரை

கற்றவர்முதற் கல்லாதவர் ஈறான எத்திறத்தவர்க்கும் இனிது விளங்கும்பொருட்டுப் பற்பல ஊர்களிலும் பற்பல நகர்களிலும் அவைக்களங்களில் யாம் நிகழ்த்திய சைவசித்தாந்தச் சொற்பொழிவுகளின் ஒரு தொகுதியே **சைவசித்தாந்த ஞானபோத முதற்பாகம்** என்னும் இந்நூலின்கட் பெரும்பாலும் அடங்கியிருக்கின்றன.

இந்நூலின் முதற்பதிப்பாகக் கருதப்படும் எம்முடைய சொற்பொழிவுகள் சில 1906, 1915ஆம் ஆண்டுகளில் வெளிவந்த எமது ஞானசாகரத்தின் இதழ்களில் வெளிப்போந்தனவாகும். அவை அப்போது **முன்பனிக்கால உபந்நியாசங்கள்** என்னும் பெயரால் தனிநூலாகவும் வெளிவந்தன. அந்நூலில் அடங்கியவை ஆறு விரிவான சொற்பொழிவுகளேயாகும்.

அப்பதிப்பின்படிகள் செலவானபின், 1922-ஆம் ஆண்டில் பின்னும் பத்துச்சொற்பொழிவுகள் சேர்க்கப்பட்டு, ஆக மொத்தம் பதினாறு சொற்பொழிவுகள் அடங்கிய இதன் இரண்டாம் பதிப்பு வெளிவரலாயிற்று.

அவ்விரண்டாம்பதிப்புப் படிகள் செலவழிந்தபின், இதன் மூன்றும் பதிப்பை அச்சிடத்துவங்கிப் பல ஆண்டுகள் கழிந்தமையானும், இவற்றிடையே இன்னும் பல சொற்பொழிவுகளைச் சேர்க்கவேண்டுவது இன்றியமையாததாய் நேர்ந்தமையானும், இச்சொற்பொழிவுகளையெல்லாம் ஒருங்கே சேர்ப்பின் இந்நூல் அறுநூறுபக்கங்களுக்குமேற் பெருகுமெனக் கண்டமையானும் ஒன்பது சொற்பொழிவுகள் தொகுத்த இந்நூலின் முதற்பாகத்தை இப்போது வெளியிடலானேம். ஏனைச்சொற்பொழிவுகள் தொகுத்த இரண்டாம்பாகம் இனிப் பதிப்பிட்டு வெளியிடப்படும்.

எம்முடைய நூல்களிற் சிறுபான்மையாகக் காணப்படும் வடசொற்களையும் முற்றக்களைந்து, தூயதமிழ்ச் சொற்களையே அவ்வவ்விடங்களில் நிரப்பி இப்போது பதிப்பிட்டுவரும் எமது

முறைப்படி, இந்நூலின் முற்பதிப்பில் வெளிவந்த விரிவுரைகளி லிருந்த வடசொற்களைக் களைந்து ஆங்காங்குத் தூயதமிழ்ச் சொற்களைப் பெய்தும், இப்போது இதன்கட் புதியவாகச் சேர்க்க எடுத்த விரிவுரைகளைத் தூய தனித்தமிழிலேயே எழுதியும் இந்நூலை இயற்றலானேம்.

ஆனாலும், இத்தமிழ்நாட்டிற் புதியராய்ப்புகுந்த ஆரியர், பௌத்தர், சமணர், மாயாவாதவேதாந்திகள், வைணவர் என்பா ரெல்லாந், தமிழ்மக்களை மருட்டுதற்பொருட்டு, அவர் வழங்குந் தமிழ்மொழியிற் றம்முடைய கோட்பாடுகளை வரைந்துவையா மல், அவர் அறியாத வடமொழியில் அவைதம்மை வரைந்து வைத்து, அவைகளை மறைபொருளாகவே பரப்பிவந்தமையால், அன்னார்செய்த ஏமாற்றத்தினின்றுந் தமிழ்மக்களை வீடுவிக்கக் கருதிய பிற்காலத்துத் தமிழ்ப்பெரியார்களும், பண்டைத்தமிழ்ச் சான்றோர் கண்ட முடிந்த வுண்மைகளுக்குச் 'சைவசித்தாந்தம்' என வடமொழியிற் சிறப்புப்பெயர் நிறுவியும், அவ்வுண்மைகளை விளக்குங்காற் பற்பல குறியீடுகளை வடசொற்கொண்டே புதிய வாய்ச் சமைத்தும், வடமொழியிலேயே 'சிவாகமங்கள்,' 'சிவ புராணங்கள்' இயற்றியுந், தமிழ்ச்சான்றோர் தமது மெய்யறிவாற் றெளிந்த மெய்ப்பொருள்களை இத்தமிழ்நாட்டகத்தே பரவச் செய்யலாயினர். அதனால், அங்ஙனஞ் சிறப்புப்பெயர்களாகவுங் குறியீடுகளாகவும் புகுந்து தமிழ்நூல்களில் நிலைபெற்ற வட சொற்கள் சொற்றொடர்களைச் சடுதியில் மாற்றினால் அவற்றிற் பழகினார்க்கு இந்நூற்பொருள் மயக்கத்தைத் தருமெனக் கருதி, அவையிற்றைமட்டும் மாற்றாது ஆங்காங்கு இருக்கவிட்டேம். ஆனாலும், அவைதமக்கு நேரான தனித்தமிழ்ச்சொற்களையும் இந்நூலின்இறுதியிற் காட்டியிருக்கின்றேம். அங்ஙனங்காட்டப் பட்டிருக்குந் தமிழ்ச்சொற்கள் நன்கு வழங்கிவரலானபின், அவ்வடமொழிச் சிறப்புப்பெயர்கள் சொற்கள் சொற்றொடர் களையுங் களைந்துவிடக் கருதியிருக்கின்றேம். இதுகாறும் உதவிசெய்த சிவபிரான் இன்னும் அடியேமுக்கு உதவுக!

பல்லாவரம்,
பொதுநிலைக்கழக நிலையம்,
திருவள்ளுவர் ஆண்டு, ககூசுசு.

மறைமலையடிகள்.

இந்நூலிற் கண்ட வடசொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள்

அசுத்த மாயை - தூவா மாயை
அத்துவிதமுத்தி - இரண்டற்ற வீடு
அந்தக்கரணான்ம வாதம் - அகக் கருவியே உயிரெனும்வழக்கு
அபர ஞானம்-பொதுக் காட்சி
அமயம் - நேரம்
அவசரம் - நேரம்
அவதாரம் - பிறவி
அற்புதம் - புதுமை
அனுபவம் - நுகர்ச்சி, பழக்கம்
ஆகமம் - அறிவு நூல்
ஆசாரிய சுவாமிகள் - ஆசிரிய அடிகள்
ஆத்திக சமயம் - உண்டெனும் மதம்
ஆராதனை - வணக்கம், வழிபாடு
இடாநாடி - இடப்பால்நரம்பு
இதயகுகை - நெஞ்சகம்
இரசவாதம்-பொன்செய்முறை
இராசதம் - மன வெழுச்சி : எழுச்சிபாடு
உப பிருங்கணம் - வழிநூல் : சார்புநூல்
கணம் - குழாம் : கூட்டம்
கண்டம் - நிலப்பிரிவு : பிரிவு
கரம் - செய்வது
கலைஞானம் - கலையறிவு
காருணியம் - அருள்
காவியம்-பொருட்டொடர்நிலை
சங்கிதை - தொகுதி
சச்சிதானந்தம் - உண்மையறிவின்பம்
சடம் - அறிவில்லது
சத்தி - ஆற்றல்
சத்துவம் - நன்மை
சமயவாதி - சமயக்கணக்கர்
சம்பந்தம்-இயைபு: தொடர்பு
சரிதம் - வரலாறு
சாதி - இனம்
சிங்கம் - அரிமா
சித்து - அறிவு
சிவாயநம - சிவனே போற்றி
சிற்ப வித்தை - கற்றச்சு : கொற்று : கொத்து
சீவப் பிரம வாதம் - உயிரே கடவுளெனும் வழக்கு
சீவர்கள் - உயிர்கள்
சுகம், பாக்கியம், ஆனந்தம் - நலம் : இன்பம்
சுழுனை நாடி - நடு நரம்பு
சைவ சித்தாந்தம் - சைவத்தின் முடிந்த முடிவு
ஞான மார்க்கம் - அறிவு நெறி
ஞானம் - நூல்
தகரோபாசனை - நெஞ்சக வழிபாடு
தரத்திற்கு - தகுதிக்கு: நிலைக்கு
தருக்கம் - அளவை
தாமதம் - மயல்
தாரணை - நினைவொருமை
தீர்க்கதரிசி - முக்காலவுணர்வினன்

வடசொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள்

நாடி - நரம்பு : குழாய்
நாதம் - ஒலி
நாத்திக சமயம் - இல்லெனும் மதம்
நிமித்த காரணம் - வினைமுதல்
நரீசுரவாதி - பாழ்ங்கோளன்
நிர்க்குணோபாசனை - குணமில்ல தன்வழிபாடு
பகுதி - முதனிலை ; அடி
படம் - ஓவியம்
பதி பசு பாசம் - கடவுள் உயிர் மலம்
பத்தி மார்க்கம் – அன்பு நெறி
பர ஞானம் - அருட் காட்சி
பரப்பிரமம் - மிகப் பெரியது
பரவயிந்தவம் - மேல் மாயை
பலி பீடம் - படையல் மேடை
பாரமார்த்திகம் - உண்மை நிலை
பாலன் - குழந்தை
பாவனை - ஒப்பு : எண்ணம் : நினைப்பு
பாஷியம் - பேருரை
பிங்கல நாடி-வலப்பால் நரம்பு
பிச்சன் - கிறுக்கன்
பிரத்தியாகாரம் - ஐந்தவித்தல்
பிரமாணம் - தலைமை : மேற்கோள்
பிராணன்மவாதம் - மூச்சே யுயிரெனும் வழக்கு
பிரீதி – உவகை
புத்தி - அறிவு
பூதம் - முதற்பொருள் : முதல்
பெத்தான்மா – கட்டுற்ற உயிர்
மடம் - பள்ளி : பாழி
மனித - ஆண்மை
முத்தான்மா – வீடுற்ற உயிர்
முத்திரை - பொறி
மூர்த்தி - கடவுள்
மைல் (ஆங்கிலம்) – வழியளவு
யோகிகள் - தவத்தோர்
விக்கிரகம் - பருப்பொருளுரு
விஞ்ஞானன்மவாதம்-அறிவே யுயிரெனும் வழக்கு
வியவகாரம் - உலக வழக்கு
வீரர் - மறவர்
வேதாந்தம் - மறைமுடிவு
வைத்திய நாதன் - மருத்துவர் தலைவன்

ENGLISH PREFACE

*"The Caiva Siddhantha system is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion. * * * Caivism is the old pre-historic religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil people"*

:—Dr. G. U. Pope in his English translation of the sacred Tamil lyrics, the *Thiruvachakam* of the great Saiva Saint Manickavachakar, p. lxxiv.

The above extract expresses the just estimate arrived at by that Great Christian missionary and profound Tamil scholar Dr. G. U. Pope as regards the intrinsic merit and high antiquity of the Saiva Siddhanta the religion and philosopby of the Tamil people. Most of his active period of life Dr. Pope spent in the heart of the Tamil country moving intimately with all classes of the Tamil people and learning at first-hand not only their beliefs, customs and manners but also their ancient classics such as *Thirukkural, Purananooru, Silappathikaram, Manimekalai, Palamoli, Naladiyar, Periapuranam, Sivajnanabodham,* and others. His erudition in Tamil was equal to, and in some respects even exceeded, the erudition of great native scholars. So his impartial estimate of the Saiva Siddhanta, coming as it does from a great western scholar who combined in himself the culture of both west and east, might, by being prefixed to this English Preface of the

following work of mine on Saivism, serve well to impress its value and importance on the minds of those learned Indians and Europeans to whom it is a sealed book. For the modern philosophic and religious thought in the east and the west is so strongly coloured either by the atheistic system of the Buddhists or by the pantheistic system of Sankara and his cult, except where the most wholesome teachings of Professor William James have pervaded, that almost all lines of inquiry either into the realm of matter or into the realm of spirit, might be said, without exaggeration, to end themselves either in a materialistic monism or in an idealistic monism; that is to say, they affirm simply that in the end (the end of what is not clear from what they affirm) there exists nothing but what appears to be a form of energy whether you call it matter or spirit.

In whatever way this kind of monism so stubbornly held in the teeth of all human experince, may seem to satisfy certain "tough-minded" people, certain it is that it cannot satisfy the cravings of the "tender-minded" people, as the two types, namely the monists and the pluralists, have been so pertinently called by Prof. James. We who live in the world of both mind and matter, we who acquire all our knowledge and experience by our contact with so many intelligent beings higher and lower, with so many products of matter which minister unto our wants, cannot rest content with such a nameless and formless and therefore such an incomprehensible monism, but need a system which would meet our wishes and aspirations in entire harmony with our past and present experiences.

While our worldly experience is thus manysided, it has yet a unity that underlies all its variety. In the

words of James, "It is both one and many," and therefore "let us adopt a sort of pluralistic monism."* Now the Saiva Siddhanta furnishes us with such a *pluralistic monism* as is evident from the following quotation taken from one of the fourteen authoritative works in Tamil which treat of the Saiva Siddhanta system. According to this system,

> "There are six entities which have no beginning. The first of these is the Lord (Pathi) Who is One. The second is the aggregate of all Souls (Pacu) with their undeveloped potentialities of thought and act, interpenetrated by a divine but hidden influnce. The third is the impurity of Anavam wearing the form of darkness. The fourth is twofold deeds (Vinai). The fifth and sixth are the two kinds of Mayai, the pure and impure the substratum and material of the phenomenal universe."†

In the following work which comprises nine of my Tamil lectures delivered at different places and on different occasions, I have given to the best of my ability a clear and rational exposition of the views of the Saiva Siddhanta relating to the six entities enumerated above. For the guidance of English-knowing readers I will give here a succinct explanation of the six categories.

Saivism is strictly a monotheistic religion holding that only as God which is truth, intelligence, and bliss, which is above births and deaths, which is all love and grace towards all individual souls, which is distinct from both matter and finite selves and yet dwells within them

* Pragmatism, p. 13 † Taken from Dr. G. U. Pope's translation of the Thiruvarutpayan; see his Translation of the Thiruvachakam, p, lii.

and without and is ever active in bringing the souls out of darkness and setting them in its light and beatitude. It calls God by the name of *Sivam*, simply because this term specifies the essential quality of God which is pure love, pure bliss. In later times many more gods such as Subramanya, Ganesa, Veerabhadra and others were adopted into its fold but none of the founders of the Saiva religion held any one as God except Siva. In the ten collections of the sacred hymns or Thirumurai sung by St. Thirujnanasambandha, St Appar, St. Sundarar, St. Manickavachakar and others, there is not a single hymn sung in praise of any god other than Siva. And in each and every temple of Siva his only true emblem the Sivalinga is set up in the central shrine as the pre-eminent object of first worship, while the images of all other gods are quartered around the central sanctuary and offered only subordinate places and ordinary worship. Thus you find that not only do the ancient sacred literature of Saivism but the very construction of its temples and the pre-eminent form of worship daily offered in them to Siva also bear indisputable testimony to the monotheistic character of the Saiva religion.

According to Saivism God is as remote and transcendent as he is near and personal. Though his nature is one, it appears to be twofold to the finite conception of the individual minds, just as the sun which appears to our naked eyes like a small bright disc, is, in reality, immense in its size and thus seems to present two aspects to our perception and conception. As has been so well pointed out by Prof. James in the lecture on Philosophy in his epochmaking work: "The Varieties of Religious Experience," "that the transcendentalist reasonings fail to make religion universal," this incomprehensible and

inconceivable aspect of God can never appeal to a devout mind that is thirsting after to obtain at least a glimpse of his presence and personality. In so far as God is will, intelligence and freedom, he cannot be an unfeeling, unintelligent and impersonal existence. Nowhere is the personal aspect of God which is in vital relation with all living beings is so strongly emphasized as in Saivism. Since he is in and near every vital being and is helping them all to develop their faculties of thought and feeling, life is held in it so sacred that taking it away from a man or a beast is looked upon by it as an unpardonable and sacrilegious crime. Hence the very word Saivism has come to be applied to a vegetarian mode of living also.

Now, it is this hankering of the human mind after the living personal relation of God to itself that has prompted it to feel deeply the need of setting up a physical image before its outer eyes as a means of setting up a corresponding mental image before its inner eyes. For all our knowledge of anything consists in bringing into our mind a mental image corresponding to that particular physical thing and storing it up permanently in our memory for after use. Blot that image out of your mind or forget it altogether and you thereby lose the knowledge of it also once for all. In fact, a man of vast knowledge is ditinguished from another man of small knowledge only by his power of forming in his mind as well as of fixing on his memory myriads of distinct mental images corresponding exactly to the forms of physical objects which he was observing attentively and nothing carefully. This psychological law pertaining to the formation and development of the human mind must disclose to us the necessity of keeping before our eyes an image made of clay or wood, stone or any mineral matter for the sake of raising

up in our mind a clear image of God corresponding to it. For, is it not utterly impossible for us to conceive of an object that we have not previously seen or heard, touched or smelled or tasted? It is the deep-felt longing of the human mind for a concrete thing to meditate upon that has brought into existence a multitude of temples not only in the Tamil country where its number is comparatively very large but also in other ancient civilized countries such as Egypt, Babylonia, Chaldea in the west, and Mexico and Peru in the east. We cannot close this part of our subject relating to idol-worship better than in the words of Dr. Edward Caird taken from his masterly treatment of "The Evolution of Religion." His words run as follows:-

"To represent God as a mere object is, as we have seen, to express the divine in an inadequate form, in a form that, at least, cannot be made fully adequate to the idea; for the principle of unity in all objects and subjects cannot be properly represented as one object among others. But, at the same time, it is also true that in some sense the whole is involved in every part of the universe, and therefore any part of it may for a time be taken as a type of the whole. * * * When the spiritual cannot yet be separated from the natural, it is of the highest importance that the natural object which represents the spiritual should be, as it were, transfigured by the imagination, so that it may, so far as possible, symbolically take the place of the spiritual."*

Viewed in this light how significant is the worship paid to Sivalinga in the great temples that burst so magnificently on the sight of the travellers all over the south of India, must become apparent to all who have a

* Dr. E. Caird's "The Evolution of Religion," vol, 1. p. 227.

right-thinking mind. I cannot pursue the treatment of this topic farther in a short preface like this. For a detailed explanation of the origin and meaning of the Sivalinga-worship the reader is referred to my Tamil lectures on "The Image-worship" and "Sivalinga" and to my English lecture on "The Conception of God as Rudra."

Now, as to the second entity of the Saiva Siddhanta: "The aggregate of all Souls." From the tiniest and the most simple unicellular organism called *protoplasm* to the highest and the most complex organism called man there exist from all eternity countless individual souls each having a distinct character of its own and each undergoing different degrees of development in accordance with its nature, capacity and effort. All these souls are not the principles created out of nothing according to some religions, nor are they the splintered pieces of God itself according to some other religions, nor do they constitute so many evolved centres of unintelligent matter according to some material sciences, nor could they be pure fictions imagined in the infinite absolute according to some rank idealism. On the other hand they are as eternal as God and not even a single soul could, by any known or unknown power or process, be reduced into nothing nor could any one of them be transmuted into any other of the group. According to the Saiva Siddhanta, and "the pluralistic, as according to the Leibnizian view," says Dr. James Ward in his remarkable *Gifford Lectures*, "all the individuals there are have existed from the first and will continue to exist indefinitely."* And the same authority, like the Siddhanta holds tenaciously to the view that "individuals who have no 'doubles,' whose like all in

* The Realm of Ends. p. 204.

all we never shall meet again,"* In upholding the eternal reality of individual souls Dr. F. C. S. Schiller has said even more emphatically as follows:

"The ultimate self-existence of spirits, the doctrine that existences are many, spirits uncreated, uncaused, that are and ever have been and can never cease to be, is the only metaphysical ground for asserting the immortality of the individual. And this metaphysical ground we have secured by the preference given to Pluralism over Monism."†

Now, as regards the third principle the impure and dark *Anavam*, what the Saiva Siddhanta says is in the words of Dr. F.C.S.Schiller this: "Evil was potentially existent in the world" and "the world was created in order to remedy this pre-existent and precosmic defect."‡ If all had been perfect eternally like God, creation is unnecessary, and it may even be mischievous, like the mischievous actions of some wild boys who take pleasure in throwing stones on innocent animals and even on grown-up persons. But such does not seem to be the case since all souls have defects in various grades and degrees which with the help of creation they strive and struggle to remove. This supreme purpose of creation cannot be in the least understood, unless you recognize the potential existence of the evil principle called *Anavam* in the Saiva Siddhanta. Of this evil principle Prof. Henry Drummond the great scientist and theologian writes:

"There is a natural principle in man lowering him, deadening him, pulling him down by inches to the mere

* The Realm of Ends, p. 18.

† Riddles of the Sphinx, 2nd edition. p. 403.

‡ Ibid. p. 434.

animal plane, blinding reason, searing conscience, paralysing will." *

So far as my knowledge of various religions and various systems of philosophy goes, I venture to say that I have not come across any other religion or philosophy in which this root-cause of creation, the pre-existence of the evil principle is recognized and explicitly mentioned as in the system of Saiva Siddhanta. Of course, there is a hint of it in the first chapter of the Book of Genesis in the Old Testament as has been so penetratingly pointed out by Dr. F.C.S. Schiller, but it has unfortunately escaped the notice of almost all commentators on the book.

Now, let us turn to the fourth category; the twofold deeds good and bad. Every life from amoeba upwards is endowed with intelligence and this enables all organisms from the lowest to the highest to respond to the impressions proceeding from surrounding objects and perform certain functions either in opposition to, or in concurrence with, those impressions. In answering thus to outside calls the lower organisms learn to repeat what is favourable at first to the maintenance of their own life and afterwards to the maintenance of the life of their own offspring. The first act of every living being meets with great resistance offered by both the inside and outside things, that is, by its own body and by the things external to it. All the products of matter do not yield readily to the will of an intelligent being, unless it exercises its intelligence constantly and devises newer and newer means to bend them to its will. In this way it learns that not one act but many acts of which the every succeeding one is more intelligently per-

* Natural Law in the Spiritual World, cheap ed., p. 29.

formed than the preceding one, are necessary for achieving the conquest over matter.

It is such repeated actions of living beings that are collectively called *Karmas* or *Vinai* in Saivism; or in the language of psychology *habits*. As we observe the infinite grades of lives, and the infinite degrees of intelligence, we are led to believe that no man who gains an insight into the nature and evolution of individual souls can at a bound conclude that the life of a soul can become perfect in a single birth when even the duration of which varies infinitely from a moment to an age.

Further, the actions of living beings acquire moral value only after they ascend to human existence in the scale of life. Therefore it seems most unreasonable to assert that the lower lives will become extinct after they have passed through a single existence and before they have reached the higher stages at which their actions acquire moral worth. Even after reaching the human stage souls do differ so widely among themselves in the amount of intelligence they exhibit that, here too, perfection is not attainable by all in a single birth. And so before attaining to the stage of perfection, it is reasonable to hold with the Saiva Siddhanta that all souls must accumulate habits after habits only by passing through myriads of bodily existences in this world and in others that are distant from ours. As has been put by Dr. James Ward, "At any rate 'metempsychosis' in some form seems an unavoidable corollary of thorough-going pampsychism, so long as we look broadly at the facts of life as a whole."*

Come we now finally to the fifth and the sixth categories, the pure and the impure Mayai. Modern science

* The Realm of Ends, p. 213.

has discovered that the world of our experience is ultimately resolvable into protons and electrons. The impure Mayai is the direct material cause of the universe, while the pure: the protons and electrons, constitutes only indirectly so. The reason for this twofold classification of Mayai is this. The souls buried, as it were, in coarse and foul impurities require equally coarse substances to be cleansed of their impurities; whereas the highly developed souls rising above the filth require only the help of finer substances to raise them still higher. For we see plainly before our eyes the mental powers of individual souls devoloping in different degrees in different souls without any limit being set to them. In proportion to the mental development of souls, matter which serves as its vehicle also becomes rarified in different degrees. In the words of Dr. Schiller, "The spiritualization of Matter is displayed also in its relations to spiritual beings. As in the course of evolution these become more harmonized with the Divine Will, Matter the expression of that Will, becomes more and more harmonized with the desires of spiritual beings."* I need then hardly say that the doctrine of Mayai as held by Saivism is in entire harmony with the discoveries of modern science.

To all those who seek after an exact knowledge of these six eternal verities, it must be very gratifying to note as above that the recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines only of the Saiva Siddhanta and not of any other religion or philosophy.

---

* Riddles of the Sphinx, p, 298,

உ

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்தஞானபோதம்

சைவசமய மாட்சி

இந்நிலவுலகத்திலே பரந்து விரிந்து கிடக்கும் எண்ணிறந்த மக்கட் பகுப்பினராலும் எண்ணிறந்த வகையவாக வைத்துக் கைக்கொள்ளப்பட்டுவருஞ் சமயங்கள் அல்லது மதங்கள் எண்ணிறந்தனவாய் இருக்கின்றன. அவைகளுள்ளே நமது சைவசமயமும் ஒன்ருயிருக்கின்றது. நம்முடைய அனுபவத்திற்கு அகப்பட்ட மதங்களையும் சைவ சமயத்தையும் இரண்டு பக்கத்தே வைத்து நாம் நடுநின்று நிறுத்துப்பார்க்குமளவில் நமது சைவசமயமே அவ்வெல்லா மதங்களினும் பெருமை மிக்கதாய்க் காணப்படுகின்றது. இனி நமது அனுபவத்தில் வராத வேறு மதங்களில் ஏதேனும் சைவசமயத்தை ஒத்ததாகவேனும், அல்லது அதனின் மிக்கதாகவேனும் இருத்தலாகாதோ வென்ருல், அதனைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பாம். ஏனைய மதங்களில் ஏதேனும் ஒன்று சைவசமயத்தின்கட் காணப்படும் எல்லாக் கொள்கைகளும் உடையதாய் இருக்குமாயின், அது வேறு பெயரால் வழங்கப்படுமாயினும் கொள்கைகளிற் சிறிதும் வேறுபடாமையால் அதனையுஞ் சைவசமயமென்றே கோடல் இழுக்காது. இனி அப்பிற மதங்களுள் ஏதேனும் ஒன்று சைவசமயத்தில் இல்லாத அரிய பெரிய கொள்கைகள் உடையதாய் இருத்தலும் ஏலாத

தோன்றும்; என்னையெனின், உலகத்திலுள்ள எல்லா மதங்களும் ஒரே முழுமுதல் அறிவுப் பொருளாகிய கடவுளையும், சிற்றறிவுடைய உயிர்களையும், அறிவில்லாத உலகத்துச் சடப்பொருள்களையும் ஆராயும் முத்திறப்பட்ட ஆராய்ச்சியில் அடங்குவனவே யல்லாமல், இம் மூன்றில் அடங்காத ஒரு மதம் எங்கும் இல்லை யென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததேயாம். இவ்வுண்மை கடைப்பிடித்தே

" சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி யாருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே "

என்னுந் திருமொழியும் எழுந்தது. கடவுள் உலகம் உயிர் என்னும் இம் முப்பொருள்களையும் பற்றி எழுந்த பலதிறப்பட்ட கொள்கைகளும், அக்கொள்கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆராய்ச்சிகளும், அவற்றுட் பொருந்துவன இவை பொருந்தாதன இவை என்னும் பகுத்தறிவு நிகழ்ச்சியும், பொருந்துவனவற்றைத் தெளித்துரைத்து உண்மை முடிபு காட்டுஞ் சித்தாந்தமும் ஆகிய இவையெல்லாம் நமது சைவசமயத்தின் கண்ணே விளங்கிக் கிடத்தலால், எல்லாமதங்களும் நமது சைவசமயத்தின் கண்ணே அடங்கத் தான் எதினும் அடங்காதாய் வீறி நிற்றலிற் சைவசமயம் ஒன்றே எல்லாவற்றினுஞ் சிறந்த உண்மை மதமாமென்று நாட்டப்படும்; இது பற்றியே தாயுமான சுவாமிகளும்,

" இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி
யாதுசமயமும் வணங்கும் இயல்பதாகி "

என்றும்,

"இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவ மழகிதந்தோ" என்றும், "சைவசமயமே சமயம்" என்றும் அருளிச்செய்வா ராயினர்.

இனிச் சைவசமயமே எல்லாச் சமயங்களினும் மேம்பட்ட சிறப்புடைத்தாம் என்பதனை ஒருசிறிது வகுத்து ஆராய்ந்து பார்ப்போமாக. முதலாகக் கடவுளைப் பற்றி ஆராய்ந்தறிந்த வகையிலும் அம்முழுமுதற் பொருளுக்குப் பெயர்வைத்து வழங்கும் முறையிலும் சைவசமயமே ஏனை எல்லாச் சமயங்களினும் மேம்பட்ட சிறப்புடைத்தாய்ப் பொலிகின்றதென்பதனை மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டுவாம். சிற்றறிவுடையனவாய் உலகத்தின்கட் காணப்படும் எல்லா உயிர் வகைகளும் துன்பத்தை விலக்கி இன்பத்தைப்பெறும் முயற்சி ஒன்றிலே மட்டும் கருத்தூன்றி நிற்கின்றன. உயிர்கள் எல்லாவற்றிற்கும் முதன்முதல் அநுபவத்திற்கு வருவது துன்பமே யல்லாமல் வேறில்லை; பகுத்தறிவு இல்லாச் சிற்றுயிர்கள் முதற் பேரறிவுடைய மக்கள் ஈறான எல்லாவுயிர்களும் உடம்புகளிற்புகுந்து இந்நிலவுலகத்திற் பிறந்தவுடனே தம் அகத்துள்ள பசித்தீயினால் துன்புறுத்தப்படுதலை நம் கண்ணெதிரே காண்கின்றோம் அல்லேமோ? பின்னர் அப்பசித்தீயானது தாம் உட்கொள்ளும் உணவால் தணிந்தவுடனே மகிழ்ந்து இன்புறுதலையுங் காண்கின்றேம் அல்லேமோ? இதனால் உயிர்களுக்கு முதல் அநுபவமாய் நிற்பது துன்பமென்றும், அது நீங்கு முகத்தாற் சிறிதுநேரம் நிற்கும் பின் அநுபவமாய் வருவது இன்பம் என்றும் இனிது தெளியப் பெறுகின்றேம். பாருங்கள்! நங் கட்புலனுக்கு எட்டா மிகச் சிறிய புழுக்களுள்ளும் இத்துன்ப நீக்கமும் இன்பப் பேறும் எவ்வளவு முயற்சியோடும் எவ்வளவு சுறுசுறுப்போடும் இடையறாது நிகழ்ந்து வருகின்றன! கூரிய ஓர் ஊசிநுனையிற் றங்கிய ஒருசிறு நீர்த்துகளைப் பெருக்கக் கண்ணாடியின் உதவிகொண்டு பார்க்குமிடத்து, அதில் அளவிறந்த புழுக்கள் பலவேறு வகையான வடிவுடையனவாய் உலவுதலும், அவற்றுள் வலிவாலும் வடிவத்தாலும் பெரியனவாய் உள்ள புழுக்கள் அவற்றாற் சிறிய புழுக்களைப் பிடித்துத் தின்ன மிகவும் பரபரப்போடு உலவித்திரிதலும், அங்ஙனம் உலவும் அவற்றுள் ஒன்று ஒன்றை இரையா

கப்பிடித்த அளவிலே மற்றொன்றும் அவ்விரையைப் பிடித்தற்கு வந்து அதனோடு சண்டையிடுதலும், அச் சண்டையிலே வெற்றிபெற்ற புழு தன்னிரையைத் தின்று பசி நீங்கி இன்புற்று நிற்றலும், இங்ஙனமே பசி தீர்ந்து இன்புற்றபின் ஆணும் பெண்ணுமாயுள்ள அவை ஒன்றையொன்று மருவிக் களித்தலும் கண்டு, இங்ஙனங் கண்ணுக்கு எட்டா நிலையிலுள்ள சிறு புழுக்கள் மாட்டுங் காணப்படும் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமே அறிவினும் நாகரிகத்தினும் மேலவராகக் கருதப்படும் மக்களிடத்தும் அவரினுஞ் சிறந்த தேவர்களிடத்தும் அடுத்தடுத்து நிகழ்வதுங் கண்டு கருதுங்கால் எல்லா உயிர்களும் துன்ப நீக்கத்தையும் இன்பப்பேற்றையுமே அவாவி நிற்கின்றன என்பது புலப்படவில்லையா?

அற்றன்று, அறிவிற்சிறிய விலங்கினங்கள் மட்டுமே துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் விரும்புகின்றனவன்றி, அறிவிற் பெரிய மக்களுந் தேவரும் அவற்றை விரும்புகின்றிலராய் அறிவு விளக்கத்தையே நாடிநிற்கின்றன ரெனின்; ஒருநாள் முழுதும் மெய் வருந்தப் பாடுபடுகின்றவர்களும், தமது உழைப்பினாற் பெற்றபொருளைக் கொண்டு பசிப்பிணியைப் போக்கி இன்புற்றும், காமப்பிணியைப் போக்கத் தம் மனைவியைக் கூடிக்களித்தும் வாழ்ந்து வருகின்றார்கள்; பலவாண்டுகளாகக் கலைஞானங்களை மிக வருந்திக் கற்றுப் பெரும் பொருள் ஈட்டுகின்றவர்களும் தமது பசித்துன்பத்தைப் போக்கித் தம்மனையாளோடுகூடி இன்புற்று வருகின்றார்கள். வேறு இன்னும் எந்தவகையான முயற்சியைச் செய்பவர்களைப் பார்த்தாலும், அவர்கள் எல்லாரும் பசி, காமம் என்னும் இவ் இருவகைத் துன்பத்தையும் போக்கி இன்புறும் நோக்கத்திலே உறைத்து நிற்கக் காண்கின்றோமல்லது பிறிதில்லையே. அங்ஙனமன்று, அறிவுடையார் சிலர் பசி காமம் என்னும் இவ்விரண்டன் பொருட்டாகவன்றி அறிவு நூல்களைக் கற்று அறிவு நிரப்பும் அம்

முயற்சியில் மட்டும் உறைந்து நிற்கக் காண்கின்றோமே எனின்; அங்ஙனம் அவர் அறிவுநூற்கல்வியில் முயல்வதூஉம் அந்நூல்களைக் கற்குங்காலத்தும் கற்றறியும் பொருள் நுட்பங்களைத் தேருங்காலத்தும் தம்மகத்தே விளைந்து தம்மை விழுங்கும் பேரின்பப்பேற்றின் பொருட்டாகவே யல்லது வேறில்லையென்பது தெற்றென அறியப்பட்ட உண்மையேயாகும்.

அற்றேல், அறிவு பெரிதோ மற்று இன்பம் பெரிதோ வெனின்; எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடி நிற்கும் இயல்புடையன வென்பதை மேலே விளக்கிக் காட்டினமாதலாலும், அறிவுவிளக்கத்தின் பயனெல்லாம் இன்பப் பேருகவே முடியக் காண்கின்றேமாதலாலும் அறிவினும் இன்பமே பெரியதூஉஞ் சிறந்ததூஉமா மென்பது இனிது பெறப்படும். எனவே, இன்பவழிப்பட்டு நிற்பதாகிய பத்தி மார்க்கமே அறிவின் வழிப்பட்டு நிற்பதாகிய ஞான மார்க்கத்தினுஞ் சிறந்ததாமென்பதூஉம் இதுகொண்டு முடிக்கப்படும். அவ்வாருயினும், ஞானமும் பத்தியும் ஒன்றையொன்று பிரிந்திராவாய் ஒன்று காரணமாயும் மற்றென்று அதன் காரியமாயும், ஒன்று அறிவாயும் மற்றையது அனுபவமாயும் பிணைந்து நிற்குந் தன்மையவாய் விளங்கும். இதனை ஓர் எடுத்துக் காட்டால் விளக்கிக்காட்டுவாம். தேனூறிப் பழுத்துக் குலைகுலையாய்த் தொங்குங் கனிகளையுடைய ஒரு தேமா மரத்தின்கீழ் ஒருவன் நாடோறும் இருந்தாலும், அவன் அம் மரத்தின் பழம் மிக்க சுவையுடையவென்றும் அவற்றை உண்பதனுல் பசிநீங்கி நலமுண்டாமென்றும் அறிந்திலனுயின், அவன் அங்கிருந்தே பசியால் துன்புற்று இறப்பன்; இனி வழிச் செல்லும் அறிவுடையான் ஒருவன் அப்பழத்தின் அருமை அறிந்து, வேண்டுமட்டும் அவற்றைப் பறித்துப் பசி தீர உண்டு இன்புற்று வாழ்குவன். இவற்றுல் அறியாமையுள்ளவளவும் அதனை யுடையானுக்குத் துன்பமே நிகழும் என்பதூஉம், அது நீங்கி அறிவு நிகழப்பெறுவானுக்கு அவ்வறிவால் இன்பமே விளையும் என்பதூஉம் உள்ளங்கை

நெல்லிக் கனிபோல் தெள்ள விளங்குகின்றன வல்லவோ? அங்ஙனம் அறிவால் இன்பம் உண்டாதலை விளக்கிய இவ் வெடுத்துக்காட்டில் தேமாங்கனியின் அருமையை ஒருவன் அறிந்துநின்ற நிலை போல்வதே ஞானமார்க்கமாகும்; அம் மாங்கனியின் அருமையை அறிந்த அளவிலே அதனைச் சுவைத்து மகிழும் இன்பம் பிறவாமல், அதனைப் பறித்துப் பிழிந்து அதன் சாற்றை நாவிலிட்டுச் சுவைத்த பின் மட்டுமே அவ்வின்பந் தோன்றுதல்போல ஞான மார்க்கத்தால் அறியப்பட்ட பொருளை அறிந்த அளவிலே இன்பந் தோன்றாமல் பத்திமார்க்கத்தால் அனுபவித்துக் காணும் உண்மைக்காட்சியிலேதான் இன்பம் விளையுமா மென்பதும் இனிது புலப்படும். இனி ஒருபொருளின் அருமையை அறிந்தவன் அதனை அனுபவியாது விடா னாகலின், ஞானமார்க்கத்திற் சென்றவன் பத்திமார்க்கத்திற் செல்லாதிரான் என்பதுந் துணியப்பட்ட பொருளாம். ஆகவே, அறிவின் வழிப்பட்டுநின்ற ஞானமார்க்கம் இன்ப வயப்பட்டுநின்ற பத்திமார்க்கத்தினைப் பயக்குங் காரண மாய் நிற்கப், பத்திமார்க்கமானது அதன் காரிய அனுபவ நிலையாய் அதனினுஞ் சிறப்புடைத்தாய் விளங்குமென்பது பெறப்பட்டது. இம்முறை சிற்றறிவு சிற்றின்பங்களை யுடைய பெத்தான்மாக்களிடத்தும், பேரறிவு பேரின்பங்களை யுடைய முத்தான்மாக்களிடத்தும் பிறழாது காணப்படு வதே யாகும் என்று இவ்வாற்றால் இன்பப்பேறே எல்லா உயிர்களுக்கும் முடிந்த நிலையா யுள்ளதென்பது காட்டப் பட்டது.

அங்ஙனமாயின், சிற்றறிவுடைய உயிர்கள் அவாவும் இன்பத்திற்கும், பேரறிவுடைய மக்களும் முனிவரும் அவாவும் இன்பத்திற்கும் வேறுபாடு என்னையெனின்; இன்பம் அறிவின்காரியமாய்த் தோன்றுவதென முன்னரே விளக்கிக்காட்டினமாகலின், அவ்வின்பம் தனக்குக் கார ணமாயுள்ள அறிவின் தரத்திற்கு ஏற்பப் பெரிதாயுஞ் சிறிதாயும் நிலையுளதாயும் நிலையிலதாயும் பல திறப்பட்டுத் தோன்றுமென்பதும் அதுகொண்டு தெளியப்படும்.

உயிர்கள் உலகத்துப் பொருள்களின் சேர்க்கையானும், தம்மையொத்த உயிர்களின் சேர்க்கையானும் இன்பம் எய்தக் காண்கின்றோம். உலகத்துப் பொருள்கள் அறிவில்லாதனவும் நிலையில்லாதனவுமாய்ப் போதலின் அவற்றின் சேர்க்கையாற் பிறக்கும் இன்பமும் நிலையில்லாமல் அழிந்து போதலுடன் தானழிந்தபின் துன்பத்தையும் விளைவிக்கின்றது. இனி உயிர்களெல்லாம் சிற்றறிவினவாயும் நிலையில்லாத உடம்புகளில் மாறிமாறி வருவனவாயும் இருத்தலின் அவற்றின் சேர்க்கையாற்றோன்று மின்பமும் நிலையின்றி அழிதலுடன் பின்னர்த் துன்பத்தையும் வருவிக்கின்றது. என்றும் அழியாது நிலைத்துநிற்கும் பேரின்பத்தையே அடைய வேண்டும் என்னும் நோக்கத்தையுடைய உயிர்கள் அப்பேரின்பத்தைத் தருதற்குரிய பேரறிவுப் பொருளை நாடாமல், மின்னல்போலத் தோன்றித் தோன்றிச் சிற்சில நொடியில் மாய்ந்துபோகும் சிற்றின்பத்தைத் தந்து பின் துன்பத்தையே பயக்கும் உலகத்துப் பொருள்களையும் சிற்றுயிர்களையும் நாடுதல் தமக்குள்ள சிறிய மயக்கவறிவின் பான்மையினாலன்றோ? சிற்றறிவால் வருவது சிற்றின்பமும் பேரறிவால் வருவது பேரின்பமும் ஆகும். சிற்றறிவானது தனக்கு எட்டிய சிறுபொருளையே நாடும்; பேரறிவானது எல்லா அறிவும் எல்லா இன்பமும் நிறைந்த பெரும்பொருளையே நாடும். சிற்றறிவால் நாடப்படும் சிறு பொருட் சேர்க்கையாற் சிற்றின்பமும், பேரறிவால் நாடப்படும் பெரும்பொருட் சேர்க்கையாற் பேரின்பமும் வருதல் இயல்பேயன்றோ? விலங்கினங்களின் அறிவு பகுத்துணர்வோடு கூடாமல், உலகத்துப் பொருள்களைமட்டும் அறிவிக்குங் கருவிகளான மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளோடு இயைந்து நிகழ்தலின், அவை தமக்குப் பசி எடுத்தகாலத்து இரைதேடித் தின்று பசிநீங்கி இன்புற்றும் உறங்கியும் சிற்சில நேரங்களில் ஆணும் பெண்ணுமாய் மருவியும் அவ்வளவோடு தமது காலத்தைக் கழித்துவிடுகின்றன. இங்ஙனம் விலங்கினங்களின் அறிவு புறப்பொருள்களைப் பற்றிய புற அறிவாய் மிகச் சிறிதாய் இருத்தலின் அச்

சிற்றறிவால் அவையடையும் இன்பமும் மிகச் சிறிதாய்க் கழிகின்றது.

இனி மக்களாய்ப் பிறந்த நம்மனோர்க்குள்ள அறிவு புறத்தேயுள்ள உலகத்துப் பொருள்களை மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறி வாயிலாக அறிவதுடன், அங்ஙனம் அறிந்தவற்றைத் தமது அகத்தே கொண்டு போய் வைத்து இது நல்லது இது தீயது எனவும், இஃது இதனை ஒக்கும் இஃது இதனை ஒவ்வாது வேறும் எனவும் பகுத்துணரவல்லதாயும் இருத்தலின், விலங்கினங்களின் அறிவைவிட எத்தனையோ மடங்கு பெரிதான இவ்வகப்புற அறிவால் வரும் இன்பமும் அச்சிற்றுயிர்கள் எய்தும் இன்பத்தினும் எத்தனையோ மடங்கு பெரிதாய்த் திகழ்கின்றது. பசி எடுத்த காலத்துமட்டும் இரைதேட முயன்று, பசி ஒழிந்த பின் வாளாது உறங்கிக் கழியும் விலங்குகள் பலவற்றைப்போல் ஆகாமல், அப்பசித்துன்பத்தை நீக்க முயலும்போதும் வருங்காலத்தை நாடி உழைக்கும் மக்கள் அறிவின் மேன்மையைப் பாருங்கள்! விலங்குகளிற் பெரும்பாலன நாளைக்கு என் செய்வேம் என்னுங் கவலை சிறிதுமே இல்லாதனவாம். மக்களோ நாம் முதுமைவந்த காலத்து வருந்தாது இருந்து உண்ணல் வேண்டுமே என்னும் வருங்கால அறிவுடையராய் இளம்பருவத்தே ஆனமட்டும் முயன்று வேண்டும் பொருளைத் தொகுத்துக் கொள்கின்றார்கள்; அதுமட்டுமேயோ, தமக்கு மட்டுமே வேண்டுமென்று பொருள் தொகுத்துக்கொள்ளாமல் தமது இன்பத்திற்கு உதவியாய் நிற்கும் மனைவி மக்கள் பெற்றார் உற்றார் நண்பர் முதலாயினார்க்கு வேண்டுமளவும் பொருள் தொகுத்துக் கொள்கின்றார்கள்; அங்ஙனம் பொருள் தொகுக்குமிடத்தும் பலர்க்கும் பயன்படுங் கைத்தொழில் உழவு வாணிகம் முதலிய முயற்சிகளிற் புகுந்து தாம் பயன்பெறுதலல்லாமலும் பிறரையும் பயன்பெறுத்து கின்றார்கள். இவ்வாறு விரிந்த அறிவுகொண்டு தாம் இன்புறுங்காலத்து அதனாற் பிறர்க்கும் இன்பம் விளைதலால் அவ்வின்பத்தைக் கண்டு மக்களாயினார்க்கு மேலு

மேலும் இன்பமே விளையா நிற்கும். "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்" என்ற திருமொழிப்படி பிறர் அடையும் இன்பத்தைக் கண்டு இங்ஙனந் தாமும் மகிழும் மகிழ்ச்சி விலங்குகளுக்கு உண்டோ சொல்லுமின்! இன்னும் மக்களிற் கற்றவராயுள் ளோர் ஏனைக் கற்றறிவில்லார் எய்தும் இன்பத்தினும் மிகச் சிறந்த இன்பம் எய்துகின்றார். கல்லாத மாந்தருக் கும் கற்றறிவுடைய நல்லாருக்கும் அகத்தும் புறத்தும் அறிவு நிகழுமாயினும், அவ்வறிவு கற்றவரிடத்து நுணுகி விரிந்து பெருகிப் பேரின்பந் தருதல்போலக் கல்லாத வருக்குத் தரமாட்டாதாகும்; இதுபற்றியே தெய்வப்புல மைத் திருவள்ளுவ நாயனாரும் "கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினுங், கொள்ளா ரறிவுடை யார்" என்று அருளிச் செய்தனர். பொது அறிவினை யுடையார் மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் புறப்பொருள்களை ஆய்ந்தறிந்து அறிவு பெருகி மிக்க இன்பம் அடையமாட்டுவாரல்லர்; விலங்குகளைப்போல் உண்டு உறங்கிக் கலந்து அவ்வள விலே மகிழ்ந்து ஒழிவர். கல்வியறி வுடையாரோ உல கத்துப் பொருள்களின் பலவகைத் தோற்றங்களையும் அவற்றின் அரிய அமைவுகளையுங் கண்டும், இனிய ஓசை களையும் இசைப்பாட்டுக்களையுங் கேட்டும், பல வகைப்பட்ட சுவைகளையும் நறுமணத்தையுங் கவர்ந்தும், மெல்லென்ற பொருள்களைத் தொட்டும், இவற்றோடு மனவறிவாற் பல கலைஞான நூல்களை ஓதியுணர்ந்தும் ஏனைப் பொது அறி வுடையார்க்கு எட்டாத ஓர் அரிய இன்பத்தைப் பெறுவர். கல்வியறிவில்லாதவர் மக்களுள் விலங்குகளேயாவர்; இவ் வுண்மையை உணர்த்துதற்கன்றோ தமிழ்மறையும் "விலங் கொடு மக்க ளனையர் இலங்குநூல், கற்றாரோ டேனை யவர்." என்று கூறுவதாயிற்று.

இனி இத்துணைப் பெரிய கல்வியறிவினை யுடைய வரும் நிலையில்லாத உலகத்துப் பொருள்களையும் நிலையில் லாத சிற்றுயிர்களையும் அவற்றின் நுட்பங்களையும் முற்ற வுணர்ந்து, அதனாற் பெருகிய சிறப்பறிவாற் சிறப்பாகிய

இன்பத்தை அடைகின்றாரென்றாலும், அவரால் ஆராயப்பட்டனவும் நிலையில்லாத சிறு பொருள்களேயாய்ப் போதலின் அவற்றை அறிந்த அக்கற்றோரறிவும் சிறியதாய் அவ்வறிவால் வந்த இன்பமும் சிறியதாய் ஒழிய, அவரைப்பற்றிய அறியாமையும் முற்றும் நீங்காதாய் நிற்க, அவ்வறியாமை வாயிலாக வருந் துன்பமும் அவரைவிட்டு நீங்காமற் பிறவிகடோறும் அவரையும் துன்புறுத்தியபடியாகவே தொடர்ந்துவரும். ஆ! கல்வியால் எத்துணைப் பெரியவராயினும், அவர் உலகத்துப் பொருள்களைப் பற்றியும் தம்மையொத்த சிற்றுயிர்களைப்பற்றியுமே தமதறிவை இயங்கவிடுவார்களாயின், அவர் ஏனையோர்க்கு எட்டாத ஒரு சிறந்த இன்பத்தை அடைந்தாலும், அவ்வின்பமுங் கடைசியிற் சிற்றின்பமேயாய் நிலையாது கழியப் பின்னர் அவர் பெருந்துன்ப வயத்தராயே பிறவிகளிற் பட்டு உழலுவர்! இதுபற்றியன்றோ செந்நாப்போதாரும் "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்." என்று அருளிச் செய்வாராயினர். இனி இக்கற்றோரினும் மேம்பட்ட முனிவரரோ உலகத்துப் பொருள்களின் நிலையாமையினையும் சிற்றுயிர்களின் சிற்றறிவியல்புகளையும் இனிது உணர்ந்து அவற்றின்கட் சிறிதும் பற்றில்லாமல் எல்லாப் பொருள்களினும் பெரியதாய், உயிர்ப்பொருள் உயிரில்பொருள் என்னும் எல்லாவற்றினும் நுண்ணியதாய், எல்லா அறிவுகளினும் மேலானதாய பேர் அறிவினையுடையதாய், இங்ஙனம் பேரறிவுடையதாய் இருத்தலின் அவ் வறிவோடு பேரின்பமும் உடன் நிகழப்பெறும் பேரின்ப நிலையமாய், என்றும் நிலைபேறுள்ள அழியா முழுமுதற் பொருளாய் விளங்காநின்ற ஒப்புயர்வில்லா ஒரு தனித்தலைமைப் பெருங் கடவுளையே அறியும் பேரறிவுகொண்டு அப்பேரறிவோடு ஒருங்கு நிகழும் பேரின்பப் பாற்கடலிற் றிளைத்துப் பேரின்பவுருவாய் நிலைதிரியாது அமர்ந்திருப்பர். இங்ஙனம் முனிவரரால் அடையப்பட்ட இன்பமானது எல்லையற்ற பேரின்பக் கடலாய், எல்லா உயிர்களுங் கடைசியாக எய்துதற்குரிய முடிந்த பதமாய் விளங்கும்.

என்று இதுகாறுங் கூறியவாற்றாற் புழுமுதல் முனிவரா ஈறான எல்லா உயிர்களும் துன்பநீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையுமே அவாவி முயன்றாலும், அவ்வுயிர்கள் எல்லாம் தத்தமக்கு அறிவு எட்டியவரையிலே உலகத்துப் பொருள்களைப்பற்றியும் தம்மையொத்த சிற்றுயிர்களைப் பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலான கடவுளைப் பற்றியும் நின்றமையால், அவ்வுயிர்கள் மாட்டுத் தோன்றிய இன்பமும் பலதிறப்பட்டதாயிற்று.

இனி உலகத்திலுள்ள எல்லாவுயிர்களும் இன்பப் பேற்றினையே முடிந்தபதமாக அவாவுதல் உணர்ந்து, உலகத்திலுள்ள சிறந்த சமயங்கள் எல்லாம் நிலையில்லாத ஏனைச் சிற்றின்பங்களைப் பெறுவதிற் கருத்தூன்றல் ஒழிந்து, நிலையான கடவுளின் பேரின்பத்தைப் பெறுக வென அறிவுறுப்பவாயின. இங்ஙனமே நமது சைவ சமயமும் அறிவுறுத்துதல் சைவசமயாசாரிய சுவாமிகளான **மாணிக்கவாசகப் பெருமான்.**

"வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

என்றும்,

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

என்றும் அருளிச்செய்தவாற்றாற் றெளியப்படும். உலகத்திற் சிறந்த ஏனை ஆத்திகசமயங்கள் அறிவுறுப்பது போலவே, நமது சைவசமயமும் இங்ஙனம் அறிவுறுத்திடுமாயின் இதிற்போந்த சிறப்பு என்னையென்று பலர்க்கும் ஐயம் நிகழாமற் போகாது. ஆகவே அதனையும் ஆராய்வாம்.

எல்லா வுயிர்களும் இன்பப் பேற்றினையே முடிந்த பதமாக வைத்து விரும்புதலாலும், இன்பவுருவாய் விளங்குதலே கடவுளின் சொரூப இலக்கணமாகிய உண்மை நிலையாக இருத்தலாலும், அக்கடவுளைக் குறித் துப் பேசுங்காலத்தும் அவரை அழைக்குங் காலத்தும் இன்பம் என்னும் பொருளைத் தரும் பெயர்களிட்டு வழங்கு தலே எல்லாரும் செயற்பாலதாகிய பெருங்கடமையாகும். அஃதேன் என்றால், ஒரு பெயரைச் சொல்லும்போது அப் பெயரினாற் குறிக்கப்படும் பொருள் நினைவுக்கு வருதலா னும், அப்பொருள் நினைவுக்கு வரவே அந்நினைவின் வயப் பட்ட நம்முயிர் அவ்வண்ணமாகவே நிற்குமாதலானும் என்பது. ஆனந்தம், இன்பம், அன்பு, அருள் என்னுஞ் சொற்களை வழங்குங்கால், அச்சொற்களாற் சுட்டப்படும் இன்பம் என்பது நம்நினைவில் எழ, நம் உயிர் அவ்வுணர் வின்பாற்பட்டுத் துன்பத்தைவிட்டு இன்பவுருவாயே விளங்கும். ஆகவே, கடவுளை இன்பப் பெயரிட்டு அழைத் தலே மாட்சி உடைத்தாம் என்பது இனிது புலப்படும்.

இனி உலகத்திற் சிறந்த ஆத்திகமதங்கள் கடவுளை எவ்வெப் பெயர்களால் வழங்கிவருகின்றன வென்று ஆராயுமிடத்து, அவற்றுள் ஒருசில அவரை எல்லாம் வல்லவர் என்னும் பெயரினாலும், வேறு சில அவரை எங்கும் நிறைந்தவர் என்னும் பெயரினாலும், மற்றுஞ் சில அவரை எல்லாத் தலைமையுமுடையவர் என்னும் பெயரி னாலும், ஏனைச் சில அவரை எல்லாங்கடந்தவர் என்னும் பெயரினாலும், மற்றைச் சில அவரைப் பெரியதிற் பெரியவர் என்னும் பெயரினாலும், இன்னுஞ் சில அவரை ஒளியுரு வினர் என்னும் பெயரினாலும், மற்றும் பல பலவாற்றாலும் வழங்குகின்றனவே யல்லாமல் அவை அவரை இன்பவடி வினர் என்னும் பெயரால் வழங்குவதைக் காண்டல் அரி தினும் அரிதாம். அறியாமையிற் கிடந்து துன்பத்திற் சுழலும் சிற்றுயிர்களான நாம் அத்துன்பத்தினின்றும் விலகி என்றும் அழியா அவரது பேரின்பத்தைப்பெறுதல் ஒன்றிலேமட்டுங் கருத்துடையோமாதலால், நமது கருத்

துக்கும் நோக்கத்திற்கும் இணக்கமாய் வேண்டப்படாத அவருடைய மற்றத் தன்மைகளைப் பேசி எமக்கு ஆவ தென்னை? அவர் எல்லாம் வல்லவராதலைப் பேசுதலால் எமக்கு என்? அவர் எங்கும் நிறைந்தவர் என்பதனுல் நாம் பெற்றதென்? அவர் எல்லாத் தலைமையுமுடையவர் என் றுரைத்தலால் எமக்காவதென்னை? அவர் எல்லாங்கடந் தவரென்று நினைத்தலால் நாம் எய்துவது யாது? அவர் பெரியதிற் பெரியவர் என்று கூறுதலால் நாம் பெற்றபே றென்னை? அவர் ஒளியுருவினர் என்றும் மற்றும்பல வியல்பினரென்றும் நினைத்தலால் நமக்கு வருவது யாது? நாம் அவர்பாற் பெறவேண்டுவன துன்பநீக்கமும் இன்ப ஆக்கமுமே யல்லவோ? இங்ஙனங் கூறுதல்கொண்டு நாம் முற்சொல்லிய பெயர்களால் அவரை வழங்கலாகாதென்று கருதினேம் என எண்ணற்க. அங்ஙனம் அவர் தம் வியத் தகும் இயல்புகள் பலவற்றையுங் கூறுதலாற் போந்த இழுக்கு ஒன்றுமில்லை என்றாலும், துன்பத்தைப்போக்கி இன்பத்தைத்தரும் இன்பவுருவினர் என்று அவரை வழங் குதலே நாம் கடைத் தேறுவதற்கு வழியாதலால் அப் பெயரிட்டு அழைத்தலே நமக்கு இன்றியமையாத கடமை யாம். இவ்வரிய பெரிய உண்மையை எம்போன்றார்க்கு அறிவுறுத்துதற் பொருட்டாகவே **மாணிக்கவாசகப் பெருமான்,**

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின்
வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி உள்ளவா
காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே திருப்பெருந்
துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த **இன்பமே!**
என்னுடை **அன்பே!"**

என்று அருளிச் செய்ததூஉம், இம்முடிபு முழுதும் ஒருங்கு அனுபவித்துணர்ந்த **திருமூலயோகிகள்,**

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே."

என்று அருளிச் செய்ததூஉம் என்க.

ஆத்திகமதக் கொள்கைகள் ஒன்றுக்கும் இணங்காத நாத்திகசமயிகளுங்கூட 'எல்லையற்ற அன்பின் உருவே கடவுள்' என்று மொழிந்தால் அதனை உடனே தழுவிக் கொள்வர். அஃதெதனாலெனின், எல்லாம் வல்லுதல் எங்கும் நிறைதல் முதலான அவர் தம் மற்றை இயல்புகள் மக்களாகிய நம்மனோர் அறிவுக்கும் அனுபவத்திற்குஞ் சிறிதும் எட்டாதனவாகலின், அவ்வறிவுக்கும் அனுபவத்திற்கும் வராதனவெல்லாம் பொய்யென்றுரைக்கும் அந் நாத்திகசமயிகளிடத்து அவற்றைச் சொல்லிக் கடவுள் ஒருவர் உண்டென்று நாட்டுதல் ஒருவாற்றானும் ஏலாத தொன்றும்; அங்ஙனங் கூறுதலைவிடுத்து நமதறிவுக்குப் புலனாயும் நமதனுபவத்திற்குப் பொருளாயும் விளங்கும் அன்பு அல்லது இன்பத்தின் எல்லையற்ற வடிவே கடவுள் என்றுரைப்பேமாயின், எல்லா வுயிர்கட்கும் அனுபவமா யுள்ள அதனை மறுக்கமாட்டாமையின் அவர் அதற்குடனே இணங்குவர். இங்ஙனங் கடவுள் உண்டென்பார் இல்லையென்பாரான எத்திறத்தாரானும் மறுக்கலாகாது தழுவப்படும் முடிந்தவுண்மையா யிது விளங்குதலைத் தெற்றென வுணர்ந்தே மாணிக்கவாசகப் பெருமானும் திருமூல நாயனாரும் அங்ஙனங் கடவுளை "ஈறிலாப் பதங்களியாவை யுங்கடந்த இன்பமே என்னுடை அன்பே" எனவும் "அன்பே சிவமாவது" எனவும் முறையே அருளிச்செய்தனர்கள். சைவசித்தாந்தத்திற்குப் பிரமாண முதனூலாகிய சிவஞானபோதத்தும்,

"அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
அருளு மவனன்றி யில்லை—அருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து."

என்று அருளே கடவுளாதல் வலியுறுத்துச் சொல்லப் பட்டமை காண்மின்கள் !

இனி உலகத்தின்கண் உள்ள ஆத்திகசமயங்களுள் ஒன்றேனும் கடவுளை இன்பப்பெயரிட்டு அழைத்திலது என்றது ஒக்கும்; மற்று நமது சைவசமயம் அவையெல்லா வற்றினும் மாட்சியுடைத்தாயின், அதன்கட் கடவுளுக்கு இன்பப்பெயரே சிறப்பாக வழங்கல் வேண்டுமாலெனின், அதனை ஒருசிறிது விளக்குவாம்.

நமது மதத்திற்குச் சைவம் என்னும் பெயர் வந்தது எதனால் என்று ஆய்ந்துபார்க்குங்கால் நமது கொள்கை சிவசம்பந்தம் உடையதாதல்பற்றியே அப்பெயர் பெறுவ தாயிற் றென்னும் உண்மை விளங்காநிற்கும்; இதனை லன்றோ சிவனருள் பெற்ற சிற்றம்பல நாடிகள்,

"தெய்வஞ் சிவனே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்றான்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி."

என்று அருளிச்செய்வாராயினர். சிவம் என்னுஞ் சொல்லை வடமொழி என்று எடுப்பினுந் தமிழ்மொழி என்றெடுப்பி னும், அது மங்கலம் சுகம் பாக்கியம் பேரானந்தம் என்னும் இன்பப்பொருளையல்லாமல் வேறுபொருளைத் தரக் காண் கின்றிலேம்; அது வடமொழியில் இங்ஙனம் இன்பப் பொருளையே தருமாறு நைஷதசரிதம், இரத்தினாவளி, கிராதார்ச்சுனீயம், இரகுவமிசம் முதலான வடமொழி நூல் களில் அஃது அப்பொருளே தந்துவருதலாற் றெளியப் படும்; அது தமிழிற் செந்நிறமென்றும் செவ்விது என்றும் பொருள்படும் சிவ செம் என்னும் பகுதிகளோடு ஒற்றுமைப்பட்டு அவ்வின்பமென்னும் பொருளைத் தருமாறு தமிழ்நூற்பயிற்சியால் நன்குணரப்படும். இங் ஙனம் ஆனந்தம் அன்பு இன்பம் என்னும் பொருளையன்றி வேறுபொருள் தராத சிவம் என்னுஞ் சொல் இன்ப வுருவாயே விளங்கும் முழுமுதற்கடவுளுக்கு முதன்மைப் பெயராக வைத்து நமது சைவசித்தாந்தத்தில் வழங்கப்

பட்டுவரும் அருமைபெருமையை என்னென்று கூறுவேம்! யாம் அறிந்தமட்டில் உலகத்திலுள்ள வேறெந்த மதத்திலும் இங்ஙனங் கடவுள் இன்பப்பெயரால் அழைக்கப் படுதலைக் கண்டிலேம்! சிவம் என்னும்மொழி சொல்லாலும் பொருளாலும் இன்பம் ஒன்றையே குறித்தல்பற்றியன்றே அருந்தவச்செல்வரான திருமூலர் "அன்பே சிவமாவதி யாரும் அறிகிலார்" என்று அவ்வாறு தெளிவுறுத்தி அருளிச்செய்தார்! எல்லையற்ற அன்பின்வடிவே சிவமாயிருத்தல்பற்றி யன்றே அச்சிவத்தோடு இயைபுற்ற நமது சைவசமயத்திலே எல்லாவுயிர்களிடத்தும் அன்புபாராட்டி ஓருயிரையுங் கொல்லாது புலான்மறுத்து ஒழுகுவானைச் சைவன் என்று எல்லாரும் அழைக்கின்றார்! வைணவர், புத்தர், கிறிஸ்துவர், மகமதியர் முதலான பிறசமயத்தவர்களிலும் புலால் உண்ணாதவர்கள் 'நாங்கள் புலால் தின்கிறதில்லை. சைவமாகிவிட்டோம்' என்றன்றே தம்மைச் சிறப்பித்துச் சொல்லிக்கொள்கின்றார்கள்! இங்ஙனம் உலக வழக்கானும் நூல்வழக்கானுஞ் சைவம் என்பது உயிர்களிடத்துச் செல்லும் அன்பினையும் கடவுளிடத்துச் செல்லும் அன்பினையும் விளக்கி விளங்கும் அருமை பெருமையினையும், இன்பவுருவாய் ஒளிரும் முழுமுதற்கடவுளை அவ்வின்பப் பொருளையே தரும் சிவம் என்னுஞ் சொல்லாற் பண்டைக் காலந்தொட்டு வழங்கிவரும் விழுப்பத்தினையும் நடுநிலை திறம்பாது ஆய்ந்துணரவல்லவர் எவரேனும் சைவசமயமே ஏனை எல்லாச்சமயங்களினும் மாட்சிஉடையதென்று கூற முன்வராதிருப்பரோ? அறிவுடையீர் சொல்லுமின்! நாத்திகர் ஆத்திகர் முதலான எல்லா மதத்தவராலும் தழுவற்பால தாகிய இவ்வரியபெரிய கொள்கையினையுடைய நமது சைவமானது கீழ்ப்பட்ட நிலையிலுள்ள ஒரு சிறுமதமாதலின்றி எல்லாமதங்களையுந் தன்னுள் அடக்கித் தான் அவற்றின் மேலாய் விரிந்து திகழும் நிறைந்த இயல்பினை உடையதென்று சொல்லுவதற்கு அறிவுடையோர் எவரேனுங் கூசுவரோ? ஐயன்மீர் ஆராய்ந்து சொல்லுமின்! அழியாத பேரின்பத்தைப் பெறவேண்டும் என்னும் விழைவுமிக்க பெரியோரெவரேனும் அவ்வின்பப்

பொருள்படும் சிவம் என்னுஞ் சொல்லால் நம் ஆண்டவனை அழைக்கக்கூசுவரோ? இன்பத்தை வெறுத்துக் கொடுந்துன்பக்கடலில் அமிழ்ந்தி அறியாமையில் உழலும் உயிர்கள் அவரைச் சிவம் என்னும் பெயரால் அழைக்கக் கூசுவராயின் அஃதவர் தீவினைப்பயனாவதன்றி வேறென்னை? இது குறித்தன்றோ திருமூலநாயனாரும்

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே"

என்று அத்தீவினையாளர்க்கு இரங்கி அருளிச் செய்தனர்கள். இன்னும் இச்சிவ என்னும் மொழியின் உயர்வை உணர்த்துதற்பொருட்டாகவே, பொருள்வகையால் வேதங்களுட் சிறந்த எசுர்வேதமானது தனது நெஞ்சமாக விளங்கும் சதருத்திரீய மந்திர நடுவிலே இச்சிவ என்னும் இரண்டெழுத் தொருமொழியைப் போற்றிவைத்துக் காப்பதாயிற்று. இதுநிற்க.

இனி உயிர்களுக்குப் பேரின்பத்தை ஊட்டும் அருட்பெருங்கடவுளான நஞ்சிவபெருமான், அவ்வுயிர்களைப் பற்றிவருத்தும் துன்பத்தை முற்றும் ஒழித்தே தனது இன்னருளை வழங்குவனாகலின், இன்பத்தைத் தருதலோடு துன்பத்தைப போக்குதலும் அம்முழுமுதற்கடவுளுக்குரிய உதவிச்செய்கையின் இயல்பாம். உயிர்களுக்கு இன்பத்தைத் தந்தருளுங் கடவுள் அவ்வுயிர்களிடத்துத் தொன்றுதொட்டே முனைந்துநிற்கும் துன்பத்தை நீக்கியல்லது அதனைத் தருதலாகாமையான், அங்ஙனந் துன்பத்தைப் போக்கும் அவரது பேருதவிச் செய்கையை மறவாது நினைந்து, அவரை அப்பெயரால் அழைத்தலும் நம்மனோர்க்கு இன்றியமையாத கடமையாம். மேலும், அறியாமையில் அகப்பட்டு வருந்தும் நாம் இன்பத்தைப் பெறும்முன் நம்மை இடையறாது வருத்திவருந் துன்பத்தைப் போக்கிக் கொள்ளவே விருப்பமுற்றிருத்தலால், நமக்கு அவ்வுதவி

யைச்செய்யும் நம் ஆண்டவனைத் துன்பத்தை அழிப்பவன் என்று அழைத்தலிலேதான் அவா மிகும். தொழுநோய் கொண்டு உடல் அழுகி மிகவருந்தும் ஒருவன் முதலில் அந்நோயைத் தீர்க்கும் மருத்துவனையே நாடி நிற்றல் போலவும், ஆற்றின் பெருவெள்ளத்தில் அகப்பட்டு நிலை தடுமாறி அலைப்புண்டுபோம் ஒருவன் தன்னை அதனி னின்றுமெடுத்துக் கரையேற்றுவானையே தேடிக்கிடத்தல் போலவும், சுற்றிஎரியுந் தீநடுவே நின்று துடிக்குமொருவன் தன்னை அத்தீயினின்று மீட்பான் உதவியையே விழைந்து அலறுதல்போலவும் ஆணவமலமென்னும் பெரும் பாந் தள்வாயி லகப்பட்டு வருந்தும் மன்னுயிர்களான நாம் நம்மை அதனினின்று விடுவிக்கும் முதல்வன்றன் பேருதவி யினையே அவாவி நிற்கின்றேம்; ஆதலால், அன்பர்களே. எல்லாம்வல்ல அம்முதல்வனைத் துன்பந்துடைப்பவன் என்று அழைத்தலே நாம் அத்துன்பத்தினின்று விடுவிக் கப்படுதற்கும், அதனையே விழைந்துநிற்கும் நமது உயிரி னியற்கைக்கும் மிக இயைந்ததாகும்.

இனி இத்துணைச் சிறந்த கடவுளின் உதவிச் செய் கையை இனிது விளக்கி அதனை நமது நினைவில் எழு விக்கும் பெயர்கள் வேறு மதங்களிற் கடவுளுக்குச் சொல் லப்பட்டிருக்கின்றனவா என்று நாம் ஆராய்ந்து பார்த்த மட்டில், அவைகளில் அவை இருக்கக் கண்டிலேம்; அல்லது அவற்றுள் எதிலேனும் அப்பெயர் இருக்கு மாயின் அது நமது சைவசமயமே என்று பாராட்டி அக மகிழ்தற்குரியேம். மற்று நமது சைவசமயத்தின்கட் கட வுளைத் துன்பந்துடைப்பவன் என்று குறிக்கும் பெயர்கள் உளவோ எனின்; சிவபெருமானுக்குரிய அருமைத் திருப் பெயர்களிற் பல அப்பொருளையே தருவனவாம் என்று அறிமின்கள்! வடமொழி வேதங்களில் மிகப் பழையதான இருக்குவேதம் எங்கணும் நஞ் சிவபெருமானுக்குப் பெய ராக எடுத்தாளப்பட்டுவரும் உருத்திரன் என்னும் பெயர் ஒன்றே நாங்கூறுவதன் உண்மையை நாட்டுதற்குப் போது மான சான்றாகும். உருத்திரன் என்னும் இச்சொல் துன்

பத்தை ஓட்டுபவன் என்றும் இருளை அறுப்பவன் என்றும் பொருள்படுமென வேதங்களுக்குப் பாஷியம் எழுதின சாயனாசாரியாராலே நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. இதனைப்போலவே அரன் வைத்தியநாதன் என்னுஞ் சொற்களும் துன்பத்தை யழிப்பவன் ஆணவநோயைப் போக்குபவன் எனப்பொருடந்து சிவபெருமானுக்கே பெயர்களாக வழங்கி வருகின்றன. இப்பெயர்களுக்கு ஏற்பவே இருக்குவேதமானது, "பாட்டுக்களுக்குத் தலைவரும் வேள்விகளுக்குத் தலைவரும் நோய் நீக்கும் மருந்துகளை வைத்திருப்பவருமான உருத்திரரிடமிருந்து அவரது மங்களகரமான பிரீதியை நாடுகின்றோம்." என்றும்,

"இரண்டு கால்களும் நான்கு கால்களும் உள்ள எங்கள் பசுக்களுக்கு நலம் உண்டாதற்பொருட்டும், இந்த ஊரிலுள்ள எல்லா உயிர்களும் நன்றாக உணவு ஊட்டப்பட்டு நோயினின்று நீங்கியிருத்தற் பொருட்டும் வீரர்களுக்கு ஆண்டவரும் சுருண்ட சடைமுடியையுடையவரும் வலியோருமான உருத்திரருக்கு இந்த வழுத்துரைகளைச் சேர்ப்பிக்கின்றோம்." என்றும்,

"ஓ உருத்திரரே, யாங்கள் செய்யும் வணக்கங்களாலும், தகுதியற்ற எங்கள் வழுத்துரைகளாலும், வலியோரே எங்கள் தாழ்ந்த வழிபாடுகளாலும் உமக்கு நாங்கள் சினத்தை உண்டாக்காதவர்களா யிருக்கவேண்டும். உம்மிடத்திலுள்ள மருந்துகளால் எங்கள் வீரர்களை எழுப்புவித்தருளும். மருத்துவர் எல்லாரினும் நீரே மிகப்பெரிய மருத்துவரென்று கேள்விப்படுகின்றேன்." என்றும், "நோயை நீக்கும் உருத்திரர் தம் உருத்திர கணங்களோடும் எம்மிடத்துப் பிரீதியுடையராய் இருப்பாராக." என்றும்,

"அடியார்க்கு எளியராயிருக்கின்ற நீர் ஆயிரம் மருந்துகளை வைத்திருக்கின்றீர்." என்றும் உருத்திர மூர்த்தியை வழிபடும் இடங்களிலெல்லாம் அவரை எல்லா நோயும் போக்கும் வைத்தியநாத ரென்றே கிளந்தெடுத்துக் கூறுகின்றது. இங்ஙனம் மிகப் பழையதான இருக்கு

வேதங் கூறுமாறு போலவே, இதற்குப் பின் எழுந்த வேதங்களும் உபநிடதங்களும் நம்பெருமானை வைத்திய நாதனென்றே வலியுறுத்திக் கூறா நிற்கின்றன.

இனி இங்ஙனந் துன்பத்தை நீக்குதலும் இன்பத்தைக் கொடுத்தலுமாகிய உதவிச் செயல்கள் இரண்டும் நம் ஆண்டவனிடத்து ஒருங்கு அமைந்து கிடக்கும் பான்மையினை உணர்த்துதற் பொருட்டாகவே அவ்விருக்கு வேதமானது பத்தாவது மண்டிலத்தில் உருத்திரன் சிவன் என்னும் இவ்விரண்டு அருமைத் திருப்பெயர்களையும் ஒன்று சேர்த்து ஒரு கடவுட்பெயராகவே கூறுவதாயிற்று.

அன்பின் மிக்க எம் அருமை நேசர்களே, புழு முதல் மக்கள் தேவர் ஈறான எல்லாவுயிர்களும் தம்மை இயற்கையாகவே பிடித்து வருத்திவருகின்ற அறியாமைத் துன்பத்தை நீக்குவித்துக்கொள்ளல் வேண்டியும், என்றும் அழியாது நிலைபெறும் பேரின்பத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டியும் மிக விரும்பி, அங்ஙனம் அவற்றைத் தமக்குச் செய்து தரவல்ல முழுமுதற் கடவுளை வழிபட்டு வருகின்றார்களாதலின், அவ்வுயிர்களுக்கு அவர் வேண்டியவாறே அவர் துன்பத்தை நீக்கி இன்பத்தைத் தரும் நிலையில் அருள்கனிந்து விளங்கும் ஆண்டவனை அந்நிலைக்குப் பொருந்தவே உருத்திரனென்றும் சிவனென்றும் அழைத்தலும் வழங்கலும் எத்துணைச் சிறந்தனவாயிருக்கின்றன! இதனால், இவ்வுண்மையை முற்றும் உணர்ந்து இவ்வுண்மைக்கு இயையவே ஒழுகும் நமது சைவசமயமானது, இவ்வுண்மையை உணராத ஏனைச் சமயங்கள் எல்லாவற்றினும் மிக உயர்ந்த மாட்சியுடைத்தாய்ப் பொலிதல் வெள்ளிடைமலைபோல் விளங்கவில்லையா? உருத்திரன் சிவன் என்னும் இவ்வருமைப் பெயர்களைக் கேட்டவளவிலே இவ்வுண்மைகளை உணரப் பெறாத சிலர் இவை ஒரு மதத்தின் தெய்வத்தைச் சுட்டுதலால் இவை நாம் தழுவற்பாலனவல்லவென்று விரைந்து கூறுகின்றார்கள்; அந்தோ! இவர்கள் அறியாமை இருந்த

வாறென்னை! என்னை! அவர்கள் கூறுமாறு ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு தெய்வமா இருக்கும்! ஒரே கடவு ளன்றோ உள்ளவர்? இது,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே"

என்று திருமூலரும்,

"ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கோருப தேசமிதே."

என்று பட்டினத்தடிகளும் வற்புறுத்தி யருளிச்செய்த வாற்றால் இனிது அறியக்கிடக்கின்றதன்றோ? இங்ஙனம் எல்லா மதங்களுக்கும் ஒரே கடவுளே முதல்வராயிருக்க இவ்வுண்மையை மறந்து, உருத்திரன் சிவன் என்னும் பெயர்கள் ஒரு சமயத் தெய்வத்தையே குறிக்கின்றன வென்று கற்றவராகத் தம்மை நினைத்திருப்போர் சிலர் சொல்வது வியப்பினும் வியப்பே! எப்பொருளையுங் கடந் தவர் என்னும் பொருளைத் தரும் 'கடவுள்' என்னுஞ் சொல்லையும், ஒளிவடிவினர் என்னும் பொருளைத் தரும் 'தெய்வம்' என்னுஞ் சொல்லையும், இவைபோன்ற வேறு சில சொற்களையும் இறைவனுக்குப் பெயராக வைத்து வழங்குவதிற் குற்றங்காணாத அக்கற்றவர் சிலர் துன்பத்தை நீக்குபவன் என்னும் பொருளைத் தரும் உருத்திரன் என் னுஞ் சொல்லையும் இன்பவுருவினர் என்னும் பொரு ளைத் தரும் 'சிவன்' என்னுஞ் சொல்லையும் அவ்விறை வற்குப் பெயராக வைத்து வழங்குவதில் மட்டும் மனங் கோணுதல் அவரது அறிவின் கோணலையே தெரிவிப்ப தாமன்றி மற்றென்னை? அற்றன்று, கடவுள் தெய்வம் முதலான சொற்கள் எல்லாரானும் பொதுப்பட வழங்கப் படும் பெயர்கள்: உருத்திரன் சிவன் என்னுஞ் சொற்கள் சைவர்களெனப்படும் ஒரு சாராரால் மாத்திரம் வழங்கப்

படுவன; ஆகலின், அவற்றை வழங்காமைபற்றி இழுக்கென்னை யெனின்; உயர்ந்த முழுமாணிக்கம் ஒன்றன் மதிப்பும் ஏற்றமும் அவற்றை அறிந்தார் சிலர்க்கன்றி எல்லார்க்கும் புலப்படாமையின், அம்மாணிக்கத்தை யாம் மதியேம் என்று பேசும் பேதைமாக்கள் சொல்லுக்கும் அக்கற்றவர் சொல்லுக்கும் வேற்றுமை ஏதுங் காண்கிலேம். கொடுநோயால் வருந்தும் ஒருவன் அந்நோய் தீர்க்கும் அரியமருந்தை வைத்திருக்கும் வல்லமருத்துவர் வந்தால் நீர் தரும் மருந்தின் றன்மையும் உயர்வும் நும்மனோர் சிலர்க்கன்றி ஏனை எல்லார்க்குந் தெரிந்தன அன்மையின் அதனை யான் உண்ணேனென்று மறுத்து வீணே உயிர்துறக்கும் புன்மைக்கும் அக்கற்றவர் தம் பிறவிப்பயனை இழக்குந் தன்மைக்கும் வேறுபாடு சிறிதுங் காண்கிலேம். எல்லாராலுந் தழுவப்பட்டதனையே யாமுந் தழுவுவேம் என்று சொல்லுதலினும் மிக்க அறியாமை வேறொன்றில்லை. அரிய பெரிய வுண்மைகள் அறிவின் மிக்க சிலர்க்கே விளங்குமல்லாமல், அவை எல்லார்க்கும் விளங்குவனவல்ல. அவ்வுண்மைகள் எல்லாம் எல்லார்க்கும் ஒரு தன்மையவாய் விளங்கிடுமாயின் நம் மக்கட் பரப்பினருட் காணப்படும் இத்தனை வேறுபாடுகளும், இத்தனை மதவேறுபாடுகளும், நடையுடை பாவனை ஒழுக்க வேறுபாடுகளும், பிறவும் வரக் காரணமில்லையே. ஆகையால், என் அருமை நேசர்களே, சிலரால் தழுவப்பட்டன வென்று நல்லவற்றைக் கைவிடுதலும், பலராற்கொள்ளப் பட்டனவென்று தீயவற்றைக் கைப்பற்றுதலும் அறிவுடையோர்க்குச் சிறிதும் ஆகாதனவாம். மற்று எவரிடத்தே எது காணப்படினும், எவர் எது சொல்லினும் அவ்வவற்றின் றன்மைகளை ஆராய்ந்து நல்லவற்றைக் கைக்கொண்டு நலமுறுதலே அறிவுடையோர் செயற்பாலதாம் பெருங் கடமையாகும். இதுபற்றியன்றோ நந் **தெய்வப்புலவர்,**

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்று அருளிச் செய்தனர்.

இங்ஙனம் என்னதாம் சொல்லினுஞ் சொல்லிக் கொள்க, சைவசமயத்திற் சொல்வன ஒருசாரனவா யிருத்தலின் யாம் அவற்றைத் தழுவுதற்கு உடன்படே மென்று கூறுவாருளராயின், அஃதவர் விருப்பம். கடவுளை இன்பப்பெயரிட்டு அழைக்க வேறெந்தச் சமயத்திலுங் காணேம் சைவம் ஒன்றிலேமட்டுந்தான் அது காணப்படு தலின், யாம் அதனைத் தழுவுதற்கு ஒருப்படேம், அதற்கு மாருகக் கடவுளைத் துன்பவுருவினர் என்றுதான் அழைக்க முந்துவேம் என்று அக்கற்றறிவினர் கூறுவ ராயின் அஃதவர் விருப்பம்; துன்பத்திற் கிடந்து உழல்வே விரும்பும் அவர் தீவினைக்கு நாம் இரங்குதலே செயற்பால மல்லது வேறென் செயவல்லேம்! எல்லாம் வல்லுதல், எங்கும் நிறைதல், எல்லாங்கடத்தல் முதலான கடவுளின் மற்ற இயல்புகள் உயிர்களாகிய நந்தம் அறிவுக்கும் அனுபவத்திற்குஞ் சிறிதும் அணுகாதனவா யிருத்த லாலும், அவர் எல்லா இன்பமும் அன்பும் இன்பமும் அருளும் உடையராய் இருத்தல் ஒன்றே நமக்கு நேர் அனுபவமா யிருத்தலாலும், பேரின்பத்தையே அவாவும் நமக்கு அப்பேரின்பத்தை அருளும் இன்பவுருவினரான அவர் நமது ஆணவ மலத் துன்பத்தை முதலிற் றுடைத் தருளும் பேருதவிச் செய்கை யுடையரா யிருத்தலாலும் அவர்தம் விளக்கமான அவ்வரும்பெருந் தன்மைகளை வாழ்த்தியும் நினைந்தும் வழுத்தியும் பேறுபெறுதற்குரிய நாம் அவற்றை இடையருது நம் நினைவில் எழுப்புவிக்கும் உருத்திரன் சிவன் என்னும் பெயர்களால் அவரை வழங்கக்கடவேம் என்றும், இங்ஙனம் வழங்கும் அரிய பெரிய உண்மை சைவ சமயத்திலன்றி வேறெதினுங் காணப்படாமையால் இதுவே ஏனை எல்லாச் சமயங் களினும் மாட்சியுடைத்தென உணரப்பெற்றேம் என்றும் எல்லாரும் உறுதிகொண்டு அகமகிழல் வேண்டும். இது நிற்க,

இனி உயிர்களின் துன்பத்தைத் துடைத்து இன் பத்தை அருளும் இன்பவுருவினராய் நிற்குங் கடவுளின்

உண்மைத்தன்மை எல்லா மதத்தவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றுயினும், அது சைவசமயத்திற்கே உரிய உரிமைப் பெரும் பொருளாய் நிலைபெறுமென்பதனை ஒரு சிறிது விளக்கிக் காட்டுவாம். உயிர்களுக்கெல்லாந் துன்பத்தைப் போக்கும் முதல்வர் தாம் துன்பமில்லாதவராய் இருப்பரென்பதூஉம், துன்பநீங்கிய வுயிர்கட்குப் பேரின்பத்தை அருளுமவர் தாம் பேரின்ப வுருவினராயே வயங்குவரென்பதூஉம் அறிவுடையார்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்கிக் கிடப்பவும் அவற்றைத் தெளிய வுணர்ந்து நிலைப்படுத்திக்கொள்ளமாட்டாத மற்றை மதத்தவருள் ஒரு சாரார் தமது கடவுள் தாயின் கருப்பையுட் டங்கித்தங்கிப் பிறந்துபிறந்து பலவகை அவதாரங்கள் எடுக்குமெனவும், அங்ஙனம் அவதாரங்கள் எடுத்து உழலுங்காலத்துத் தாய்தந்தையர் உறவினர் பகைவரால் துன்புறுத்தப்பட்டும், மனைவியைப் பறிகொடுத்தும், மக்களை இழந்தும், மாற்றுரோடு போராடியும், ஒருவன் சொல்வழிப்பட்டுத் தனக்குப் பகைவன் அல்லாதவனைக் கொன்று அழிவழக்குப் பேசியும், தன் மனைவியைக் காட்டகத்து ஏவியும், ஒருவன் கைப்படையால் அடிபட்டு இறந்தும் இங்ஙனமெல்லாந் துன்புற்று வருந்தும் எனவுங் கூறுவர்; இங்ஙனங் கூறுமிவர் இன்ப வுருவினராய் விளங்குங் கடவுளை அறிந்தாராவரோ சொல்லுமின்!

இனி மற்றை ஒரு சாரார் தமது கடவுள் இன்னதென்று சொல்லப்படாவாறு தன்னிடத்துத் தோன்றிய மாயையாற் கட்டப்பட்டுத் தன்னைமறந்து அறிவில்லாத சிறுசிறு பொருள்களாயும் சிற்றறிவுடைய உயிர்களாயும் மாறிப் பிறப்பிறப்புத் துன்பங்களில் அகப்பட்டுச் சுழலுமெனக் கூறுநிற்பர். இவ்வாறு கூறுமிவர் ஒரு காலத்தும் நிலைதிரியாது எல்லையற்ற பேரின்ப வுருவினனாயே விளங்கும் முதல்வனைக் கண்டாராவரோ சொல்லுமின்! இங்ஙனமே தமது கடவுளருக்குத் துன்ப நுகர்ச்சியைக் கற்பிக்கும் ஏனை எல்லாச் சமயங்களும் இப்போது

நாம் வகுத்துச் சொல்லிய இவ்விரண்டு கூற்றுள்ளே அடங்குமாதலின், அவ்வொவ்வொரு சமயங்களுந் தாந் தாம் தனித்தனியே தமது கடவுளருக்கு ஏற்றிச் சொல்லும் துன்ப நுகர்ச்சியை விரித்துக் கூறுதுவிடுகின்றேம். இப்புறச்சமயிகள் தங்கடவுளருக்குச் சொல்லும் துன்பநிகழ்ச்சிகளைக்கொண்டே அவர்களுள் யாரும் எல்லையற்ற இன்பவுருவினராய்ப் பொலியும் முழுமுதற் கடவுளின் உண்மைத்தன்மையை உணர்ந்தார் அல்லரென்பதூஉம், அவர்களாற் கடவுளராக மயங்கி வணங்கப்படுபவர்கள் ஒருகாலத்து நம்மைப்போற் சிற்றறிவு உடைய உயிர்களாய் இருந்தவர்களேயாவரென்பதூஉம் திண்ணமாய் உணரப் பெறுகின்றேம். ஆகவே, என் அருமை நேசர்களே, நமது சைவசமயம் ஒன்றே கடவுள் தாம் துன்பமில்லாதவராய் உயிர்களின் துன்பத்தைப் போக்கித் தாம் என்றும் எல்லையற்ற இன்பவுருவினராய் விளங்கி உயிர்களுக்குப் பேரின்பத்தை அருளும் இயல்பினரென்னும் உண்மையை உணர்ந்ததாயிற்று; இவ்வுண்மை சைவசமய நூல்களெங்கும் பிறழாமல் வலியுறுத்தப்பட்டிருத்தலையும், சிவபெருமானுக்குப் பிறப்பு இறப்புத் துன்பங்கள் யாண்டுஞ் சொல்லப்படாமையினையும்,

> "எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
> சொல்லாற் றெளிந்தேம்நஞ் சோணேசர்—இல்லிற்
> பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
> டிறந்தகதை யுங்கேட்டி லேம்."

என்றும்,

> "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
> மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
> வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
> ஆதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே."

என்றும் போந்த அருமைத் திருமொழிகளால் இனிதுணர்ந்து களிப்பேமாக. எனவே, கடவுள் இன்பவுருவினர் உயிர்களின் துன்பத்தைத் துடைப்பவர் என்னும் உண்மை

சைவசமயம் ஒன்ருனேமட்டுங் காணப்பட்டு அவரை உருத்திரசிவன் என்று அது வழங்கினமையால் நிலை பெறுத்தப்பட்டதாகலின் நமது சைவசமயம் ஒன்றே ஏனை எல்லாமதங்களினும் மேலான மாட்சியுடைத்தாமென்பது எம்மால் ஒருசிறிது விளக்கப்பட்டது. இன்னும் இதன் மாட்சியை விளக்கும் அரும்பெரும் பொருள்கள் பலவிருப் பினும் அவையெல்லாம் ஈண்டு விளக்கியதுகொண்டு இனிதறியப்படுமாகலின் இதனை இவ்வளவோடு நிறுத்து கின்ரும்.

இந்துசமய உண்மைகள்

இப்பரதமாகண்டத்தில் தொன்றுதொட்டு நடை பெற்று வருகின்ற சாருவாகம், பௌத்தம், சமணம், மாயா வாதம், வைஷ்ணவம், சைவம் என்றற்றொடக்கத்துச் சமயங்களெல்லாம் இந்துசமயங்களென்று பெயர்பெறு கின்றன. இவைதம்மை ஒழிய வேறு 'இந்துசமயம்' எனத் தனியே வழங்குவது ஒன்று உண்டோ என ஆராய்ச்சி செய்வாருள் ஒருசாரார் அத்தன்மையது ஒன்றில்லை என முடிவுரை யுரைக்கின்றார்கள். தாமரை, முல்லை, நீலம், சண்பகம் முதலியவற்றின் வேறாகப் பூ வென்பது ஒருபொருள் இல்லாமைபோலவும், குயில் மயில் புறா அன்னம் கோழி முதலியவற்றின் வேறாகப் பறவை என்பதொன் றில்லாமைபோலவும், மான் மரை ஆ ஆடு எருமை குதிரை முதலியவற்றின் வேறாக விலங்கென்ப தொன் றில்லாமைபோலவும் முற்குறிக்கப்பட்ட சாருவாகம் முதலிய சமயங்களை ஒழிய வேறு இந்து சமயம் எனப்படுவ தொன் றில்லையென்பதே அவர் கருத்தாம்.

இனி அவருரைக்கும் அவ்வுரை பொருந்துமோ வென்று உண்மையான் ஆழ்ந்து ஆராயுமிடத்து அது பொருந்தாதென்பது புலனாகாநிற்கும். தாமரை, முல்லை முதலியவற்றின்வேறாகப் பூவென்பதொருபொருளும், குயில் மயில் முதலியவற்றின்வேறாகப் பறவை என்பதொரு பொருளும், மான் மரை முதலியவற்றின்வேறாக விலங்கு என்பதொரு பொருளும் இல்லாமை உண்மையாயின் அவை தம்மைப் பூ பறவை விலங்கு என வேறு பொதுப் பெயரான் வழங்குதல் என்னை? தாமரை, முல்லை என்னுஞ் சிறப்புப்பெயரே அமைவதாகவும் அவற்றைத் தாமரைப்பூ முல்லைப்பூ எனப் பொதுப்பெயருஞ் சேர்த்துக்கூறுதல் என்னை? தாமரை முதலான பொருள் உலகத்தில்லாமலே அழிந்துபோயினும், பூவென்னும் பொருள் எல்லரானும் இனிதறியக் கிடக்குமன்றே? அல்லது வேறுசில புதுப்

பூக்கள் தோன்றுமாயினும் அவையும் பூவெனப் பெயர் பெறுதல் திண்ணமேயன்றோ? இதனுற் பொருள்களின் அருவநிலை உருவநிலை என்னும் இரண்டும் இனிது பெறப் படுவனவாம். தாமரை முல்லை முதலான சிறப்புப்பொரு ளெல்லாம் கட்புலனுக்கு விளங்கித்தோன்றும் உருவுடைப் பொருளாயிருக்கின்றன. பூ வென்னும் பொதுப்பொருளோ அங்ஙனங் கட்புலனுக்கு விளங்குவ தன்ருய் மக்கள் மன வறிவாற் கருதியுணரப்படுவதா யிருக்கின்றது. பலதிறப் பட்ட பூக்களையும் பறவைகளையும் விலங்கினங்களையும் மனத்தால் தொகுத்துப்பார்த்து ஆயுமிடத்து அப்பூக்க ளெல்லாவற்றிற்கும் பொதுவான சில தன்மைகளும் அப்பறவைக ளெல்லாவற்றிற்கும் பொதுவான சில தன்மை களும் அவ்விலங்கினங்க ளெல்லாவற்றிற்கும் பொதுவான சில தன்மைகளும் இனிதறியப்படுகின்றனவாகலின், அத் தன்மைகளாற்றிரண்ட அருவப் பொதுப்பொருளே உரு வுடைய அச் சிறப்புப் பொருளுக்கெல்லாம் நிலைக்களனு மென்பது தெளியப்படும். சுண்ணமும் மஞ்சளுங் கூடிய வழிச் செவ்வண்ணம் உண்டாதல்போலப் பூவென்னும் பொதுக்குணப் பொருளில் வேறு சில சேர்ந்து தாமரை முதலான சிறப்புப்பொருள்கள் தோன்றுகின்றன. சிறப்புப் பொருளையெல்லாம் பகுத்தால் அவை தனித்தனிப் பொதுப்பொருளாய் நிலைபெறும். சிறப்புப்பொரு ளெல்லாம் அழிவெய்தும்; பொதுப்பொருள் அழிவெய்தமாட்டா. அன்னம்பட்டர் முதலான தருக்கநூலாரும் சாதிப் பொதுத்தன்மை என்றும் உளதாமென்பர். இக்காலத்து இயற்கைப்பொருள் நூலாரும் பொருள்களைப் பகுத்துக் கலப்புச் சிறப்புப் பொருளெல்லாம் அழியுமென்றும், கலவாத தனிப்பொருளெல்லாம் என்றும் உளவாமென்றுங் கூறுவர். எனவே சாருவாகம் பௌத்தம் முதலியவற்றின் வேருய் இவற்றிற்கெல்லாம் பொதுவான விரிந்த இலக்கண முடைத்தாய் விளங்கும் இந்துசமயம் என்பதொன்று தனியே உண்டென்பதூஉம், அங்ஙனம் பொதுவான அதன் கோட்பாடுகள் சில மிகுந்துங் குறைந்தும் வேறு சில உடன்சேர்ந்தும் சாருவாகம் முதலிய மற்று அச்சமயங்

களெல்லாம் தோன்றி நடைபெறுகின்றன வென்பதூஉம் நன்குபெறப்படும். ஆகையால், இந்துசமயம் என்பது பண்டைக்காலந்தொட்டு நடைபெறுகின்ற உண்மைச் சமயமேயல்லது பிறர் கூறுமாறுபோல் இல்லாததொன் றன்று. இவ்விந்துசமயத்தின் பிரிவுகளான சாருவாகம் பௌத்தம் சமணம் மாயாவாதம் வைஷ்ணவம் சைவம் முதலிய சிறப்புச் சமயங்களெல்லாம் அழிந்தொழியினும், அன்றி வேறுசில சமயங்கள் புதிதே முளைப்பினும் இவற்றிற்கெல்லாம் பொதுவாக விரிந்து இவைதம்மை யெல்லாம் தன்கண் அடக்கிக் கொண்டிருக்கும் இயல் புடையதான இந்துசமயம் என்றும் உள்ளதாயே விளங்கும்.

இனி இப்பெற்றித்தாகிய இந்துசமயத்தின் கோட் பாடுகள் யாவையோவெனிற்; காணப்பட்ட இவ்வுலகி னுக்குக் காணப்படாத முழுமுதற்கடவுள் முதலாய் உள்ளதென்பதும், அஃது அருவமாயும் உருவமாயும் இவையல்லவாயும் இருக்குமென்பதும், அஃது என்றும் உளதாய் அறிவாய் இன்பமாய் இருப்பதாகலிற் 'சச்சிதா நந்தம்' எனப்படும் என்பதும், அஃது அருவமாய் வழுத்தப் படுதலே யன்றியும் எல்லார்க்கும் வணங்குதற்கு எளிதான உருவத்திருமேனியுடன் விக்கிரகத்தின்கண்ணும் வைத்து வழிபடப்படுமென்பதும், அதனை அறிந்து வழிபடுதற்குரிய உயிர்கள் அறிவுடன் என்றுமுள்ள பொருள்களாய் எண்ணிறந்தனவாய் இருக்குமென்பதும், இவ்வுயிர்கள் தொன்றுதொட்டே அறியாமை வயப்பட்டிருக்கின்றன வாகலின் இவைகள் அவ்விறைவனை வழிபடுமாற்றல் தூய்மை எய்தி அவனோடு ஒற்றுமைப்பட்டு இன்பநுகரு மென்பதும், இவைகள் அறிவு முதிர முதிர ஒருபிறப்பை விட்டு மற்றொரு பிறவியிற் செல்லுமென்பதும், இங்ஙனம் இவற்றிற்குரிய பிறவிகள் பலவாய் எண்ணிறந்தனவாகு மென்பதும், இவ்வுயிர்கள் முற்பிறவியிற் செய்தவினை பிற்பிறவியில் வந்து அவைகளால் நுகரப்படு மென்பதும், இவ்வுயிர்களுக்கு உடம்பாயும் கருவிகளாயும் இடங்களாயும்

நுகர்பொருளாயுமிருந்து பயன்படுகின்ற அறிவில்லாத சடப்பொருள் என்றும் உளதாமென்பதும் இதற்கு உரிய கோட்பாடுகளாம். இக் கோட்பாடுகளனைத்தும் இவ் விந்தியநாடெங்கும் தழுவப்பட்டு வருகின்றன. இவ்விந் தியநாடு எங்கணுமுள்ள மக்கள் பெரும்பாலார் கடவுள் உண்டென்பதில் இயற்கையிலேயே நம்பிக்கையுடையரா யிருக்கின்றனர். அதனை உருவத்திருமேனியில் வைத்து வணங்கும் விக்கிரகவழிபாடும் இமயமலையுச்சிமுதற் குமரி முனை வரையிலும் பரந்து காணப்படுகின்றது. அவரவர் நுகரும் இன்பதுன்பங்களுக்கு அவரவரே உரியர் பிறர் உரியராகார் என்று நாடோறும் வழங்குஞ் சொற்களைக் கேட்டலால், உயிர்கள் பலர் என்னும் உணர்ச்சியும் இவ்விந்தியநா டெங்கும் பரவிக் கிடக்கின்றது. யான் துன்பப்படுதற்கு என்னுடைய அறியாமையே காரணம் என்று இங்குள்ளார் எல்லாரும் கூறுதலால், உயிர்களுக்கு அறியாமை இயற்கையே உள்ளதென்பதும் இவ்விந்தியா விற்கே உரியகொள்கையாம். இப்பிறப்பில் யான் அறஞ் செய்தால் மறுமையில் நற்பிறவியடைவேன், இப்பிறப்பில் யான் மறஞ்செய்தால் மறுமையில் யான் தீப்பிறவி யடைவேன் என்று பலருங் கூறுதலால் அடுத்தடுத்துப் பிறவிகள் வருமென்பதும் இங்குள்ளார்க்கு உடன்பாடா கின்றது. ஒருவன் துன்புறுங்காலத்து இஃது யான் முன்செய்த வினைப்பயன் என்று அடுத்தடுத்து வழங்கக் காண்டலால் இருவினை உண்டென்பதும் மற்றிவர்க்கு உடன்பாடாகின்றது. 'உள்ளது போகாது இல்லது வாராது' என்னும் பழமொழி நாடோறுங் கேட்கப்படு தலால் இவ்வுலகம் மாயையிற்றோன்றிய தென்பதும், அம்மாயை அறிவில்லாதாய் என்றும் உள்ள உண்மைப் பொருளாமென்பதும் இந்தியர்க்குக் கருத்தாகின்றன. 'யான் என் அறியாமை விலகிக் கடவுளின் அருளுக்குத் தகுதியாவேனோ' என்று ஆங்காங்குப் பலருங் கூறுதலால் 'வீடுபேறு' என்பது அறியாமை நீங்கப்பெற்று முதல்வன் அருளோடு ஒற்றுமைப் படுதலேயா மென்பது இவர் கொள்கை யாகின்றது. நண்பர்காள்! இங்ஙனம் இக்

கொள்கைகள் இவ்விந்தியநாடெங்கும் பரவி வழங்குதல் நம்மனுபவத்திற் காணப்படுதலால் இவை தாம் இந்து சமயம் எனப்படுதற்குப் பொருந்துவனவா மென்பது தெற்றென விளங்கும்.

இனி இந்துசமயப்பிரிவான மேற்கூறிய சமயங்களி லெல்லாம் இக்கொள்கைகள் சில குறைந்தும் வேறு சில கூடியும் வேறுவேறு பெயர் பெற்றுநிற்றலைக் காட்டுவாம். காணப்படுவதாய் அறிவில்லாத பருப்பொருளான இவ் வுலகம் உள்பொருளேயாம் என்னும் அதன் கொள்கையை மட்டும் வற்புறுத்திக் கடவுளும் உயிரும் இருவினையும் இல்லை என்று கூறுவதே சாருவாகமதமாம். இது

"பூதமதி னென்றுபிரி யப்புல னிறக்கு
நீதியினி னிற்பனந டப்பனவு முற்போல்
ஓதும்வகை யாகியுறு காரியமு லந்தால்
ஆதியவை யாமிதனை யறிவதறி வாமே"

என்றும்,

"இப்படி யன்றிக் கன்ம முயிரிறை வேறுண் டென்று
செப்பிடு மவர்க்கு மண்ணோர் செய்திடுங் குற்ற மென்னோ
ஒப்பிலா மலடி பெற்ற மகனொரு முயற்கொம் பேறித்
தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி னாரே"

என்றும் அவர் கூறுமாற்றால் அறியப்படும். அறிவென்பது நான்கு பொருட் கூட்டத்தின் விளைவாய் உண்டாவ தென்னுஞ் சாருவாகர் போலாது, சடப்பொருளின் வேறாக அறிவாகிய புத்தி ஒன்றுண்டென்று மட்டுங் கூறிக் கடவுளும் உயிருமில்லையென்பதே பௌத்தமதமாம், இதில் அறிவும் அறிவில்லாத சடமும் வேறென்னும் இந்துசமயக் கொள்கை வலியுறுக்கப்படுதல் காண்க.

இனிச் சடப்பொருளும் அதனின் வேறாகிய அறிவும் அவ்வறிவினையுடைய உயிரும், அவ்வுயிரோடியைந்துவரும் இருவினைகளும் உள்ளனவென்று மட்டும் வற்புறுத்திக் கடவுள் இல்லையெனக் கூறுவதே சமணமதமாம்.

தாமே ஒன்றுகூடி அறிவைத் தோற்றுவித்த உறுப்புகள் பின் நோய்வாய்ப்பட்டு அவ்வறிவை யிழந்ததென்றல் யாங்ஙனம் பொருந்தும்? அதுவேயுமன்றி அறிவில்லாப் பொருள்களான அவை தாமே ஒன்று சேருமாறு யாங்ஙனம்? காந்தம் இரும்பைத் தன்மாட்டு வலித்துக்கொள்ளுதல் போல நான்கு பூதங்களும் ஒன்றையொன்று வலித்துக்கொண்டு ஒருங்குகூடின வெனின்; காந்தம் இரும்பை வலித்துக்கொண்டால் பின் தானே அதனை விடமாட்டாது; அதுபோல நான்கு பூதங்களும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டால் பின் அவை தாமே பிரியமாட்டா; அங்ஙனம் பிரியாவாகவே அக்கூட்டுறவிற்றோன்றும் அறிவும் அழியாதாய் என்றும் விளங்கிக்கொண்டிருத்தல் வேண்டும். சிறிய காந்தக்கல்லால் வலித்துக்கொள்ளப்பட்ட இருப்பூசி பின் ஒரு பெரிய காந்தக்கல்லை எதிர்ப்படின் அதனால் இழுக்கப்பட்டு அச்சிறிய கல்லை விடுதல் போல, நாற்பூதக் கூட்டுறவும் வேறொன்றாற் கலைக்கப்பட்டு முற்றோன்றிய அறிவு அழியுமெனின்; அந்நான்கு பூதத்தினைத் தவிரப் பிறிதொன்று உண்டென்பது சாருவாகருக்கு உடம்பா டல்லாமையால் அந்நான்கு பூதக் கூட்டத்தினையுங் கலைக்க வல்லதான பிறிதொன் றுண்டென்றல் அவர்க்குப் பொருந்தாதாகும். அற்றன்று, அந்நான்கு பூதங்களுள் ஒன்று ஒரு காலத்து மிக வலியுடைத்தாயெழுந்து ஏனையவற்றின் கூட்டுறவை அழிக்கு மென்று கோடுமாகலிற் பிறிதொன்று வேண்டேமெனின்; முன் அம்மூன்று பூதங்களோடும் ஒன்றுசேருங்காலத்து மற்றை அந்நான்காம் பூதத்திற்கு அவ்வலிமை எங்கேபோயிற்று? முன் வலிசுருங்கிய பொருளே பின் வலிமிகுதியு முடைத்தாமெனின்; அவ்வாறு முன் சுருங்குதற்கும் பின் அது பெருகுதற்குங் காரணம் என்னை; அஃது அதற்கு இயற்கையாமெனின்; அங்ஙன முரைப்பின் ஒன்றே இயற்கையாக வேண்டு மல்லது தம்மில் மாறுபட்ட இருதன்மைகள் ஒரு பொருட்கட் டோன்றுமெனல் சாருவாகர் மதத்திற்கே இழுக்காய் முடியும்; என்னை? இன்று ஒரு சிறிய ஊசியை மட்டும் இழுக்குங் காந்தக்கல் நாளை ஒரு பெரிய இருப்புத்

தூணை இழுக்குமெனல் வேண்டும்; இன்று பதினைந்து மணங்கு சுமக்கும் ஒரு கோல் நாளைப் பதினாயிரம் மணங்கு சுமக்குமெனக் கூறல் வேண்டும்; இன்று பத்தரைமாற் றுரைகண்ட ஒரு பொற்கட்டி நாளை இருபதுமாற்றுரை காணுமெனக் கூறல்வேண்டும். அங்ஙனங்கூறிற் சாரு வாகர் கூறும் இயற்கை மதம் முற்றும் போலியாய் முடியு மாதலின், கருவிகள் தாமே ஒன்றுகூடி அறிவைத் தோற்றுவிக்குமென்றலும் பின்னொருகாற் பிரிந்து அதனை அழிக்குமென்றலும் எவ்வாற்றானும் பொருந்தா. இனிச் சடத்தினியல்பையுஞ் சித்தினியல்பையும் சிறிது ஆராய்ந்து பார்ப்பார்க்கும் அஃதொன்றினொன்று தோன்றுமெனல் பொருந்தாமை நன்கு விளங்கும். சடப்பொருளெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டும், பின் தாமே பிரியமாட்டா, பிறி தொன்று இயக்கினால் இயங்குந் தாமே இயங்கமாட்டா. கருவேலம் பிசினுங் கருங்கற் பொடியும் ஒருங்கு ஒட்டும் பின்பிரியா, காந்தம் இருப்பூசியைத் தானே இழுத்துத் தன்னோடொட்டுவிக்கும் பின் அதனை விடுதல் செய்யாது, பந்தை எறிந்தால் ஓடும் தானே ஓடமாட்டாது. மற்று அறிவுப் பொருள்களோ தாமேயும் இயங்கும் பிறிதொன் றனையும் இயக்கும், தாமேயும் அறியும் பிறிதொன்றனையும் அறிவிக்கும். சிற்றெறும்பு தானேயும் இயங்குகின்றது தானே இயங்காப் பனைவட்டுச் சிறுதுண்டினையும் இழுத் துச் செல்கின்றது; புருக்கள் தாமேயும் பறக்கின்றன தங் குஞ்சுகள் பறக்கும்படியும் கற்பிக்கின்றன. இவ்வாற்றால் அறிவில்லாச் சடத்தினியல்பும் அறிவுடைய சித்தினியல் பும் தம்முள் முற்றும் மாறுபட்டுக்கிடத்தலால் அது நாற் பூதக்கூட்டுறவிற் றோன்று மென்றல் ஒருவாற்றானும் பொருந்தாது. ஆகவே அறிவுஞ் சடமும் வேறுவேறென் னும் இந்துசமயக் கொள்கையே பொருத்த முடைத்தாதல் இனிது பெறப்பட்டது; இப்பெற்றி நன்குணர்ந்த அரு ணந்தி சிவாசாரியரும்,

"அறிவு பூதம தென்னின் வேறு புறத்த றிந்தமை கண்டிலஞ்
செறிவு தானுட லத்தெ னிற்சவ மான போதுட றேருமோ

குறிகொ ளாதுடல் வாயு வானது கூடி டாமையி னென்னினீ
பிறித ராதுயிர் நிற்க ஞானமு றக்க மென்பிற வாததே.''

"அறிவு டற்குண மென்னி லானையை தாதியந்தமெ றும்பதா
முறுமு டற்பெரி தானவற்றினு தித்தி டும்பெரி தாகவே
சிறுவு டற்செறி ஞான முஞ்சிறி தாயி டும்பரி ணுமமும்
பெறுமு டற்சிறி தாவ தென்பெரி தாவ தென்சில பேசிடே''

என்று அவற்றின் வேறுபாடு நன்கு தெரித்தோதினர்.

உயிர்

இனிப் பௌத்தர் மதம்பற்றி இவ்வுடம்பும் இவ்வுடம் பின்வேருய் எல்லாவற்றையும் அறிவதாகிய அறிவும் உண்டு எனக் கொள்வதல்லது, இவ்வறிவின் வேருகிய உயிர் ஒன்றுண்டெனக் கூறல் பொருந்தாதெனின்; அற்றன்று, அறிவென்பது ஐம்பொறிகட்கும் புலப்படுவ தன்ருய்த் தனியனுபவ அளவாய் உள்ள தொன்ரும். யானிதனைக் கண்டறிந்தேன், அதனைக் கேட்டறிந்தேன், இதனைச் சுவைத்தறிந்தேன், அதனை முகந்தறிந்தேன், அதனைத் தொட்டறிந்தேன், மற்றிதனை எண்ணியறிந்தேன் என்ற வழியெல்லாம் அறியப்பட்ட பொருளும் அதனை அறிந்த அறிவு நிகழ்ச்சியும் எவ்வகை இயைபுடையன? பொருள் இயைபா? பண்பியைபா? பொருளியைபாயின் இந்நிலவுலகத்தில் நிற்கும் எனக்கும் இதற்கு மிகவுஞ் சேய்த்தாயுள்ள செக்கர் வானத்திற்கும் எங்கே தொடர் புளது? மற்றுப் பண்பியைபு என்று உரைப்பின் அது பொருந்தும். ஞாயிறு வான் வெளியில் ஓரிடத்திருப்ப அதன் ஒளி யாண்டும் விரிதலானும், ஒரு கற்ருர் ஓரிடத் திருப்ப அவரது புகழ் யாண்டும் பரவுதலானும் பண்பை யுடைய பொருள் ஓரிடத்தே யிருந்ததாயினும் அதன்பண்பு அவ்விடமட்டில் வரையறைப்படாது மேலும் மேலும் விரிந்து செல்லும் இயல்பினதாய்க் காணப்படுகின்றது. செக்கர்வான் விசும்பிற் பெருஞ் சேய்மைக்கண்ணே காணப்படுவ தொன்ருயினும் அதன் பண்பான சிவப்பு

நிறம் தன்னைச் சூழ விரிந்து நிறைந்திருக்கும் வெளியின் நுண்ணிய அணுக்களை அசைத்து அம்முறையே கண்ணின் மேற்பரப்பிற் சென்றுதாக்க, அங்கே நிறைந்து நிற்கும் அறிவானது அதனைப் பற்றுகின்றது. இனம் இனத்தையே பற்றும் என்னும் வழக்கால் பண்பு வடிவான சிவப்பு நிறத்தை யறிகின்ற அறிவும் பண்பு வடிவாகவே யிருக்கவேண்டு மென்பது துணியப்படும். இங்ஙனந் துணியப்படவே சிவப்பு நிறஞ் செக்கர்வானத்தை விட்டு வேறு தனித்து நில்லாமை போலப் பண்புவடிவான அறிவும் தான் றனித்துநில்லாதாய்ப் பிறிதொரு பொருளைப் பற்றியே நிற்கும். அப்பொருள் யாதோவெனின் அதுவே உயிர் என்று பெறப்படும் என்க.

இன்னும் இவ்வறிவு உயிர்க்கு ஒரு பண்பாமென்பது 'நான் அறிந்தேன்' 'என் அறிவு' என்னும் வழக்கில் நான் என்பதொரு பொருளும், அதனோ டொற்றுமைப்பட்ட அறிதற்பண்பும் பெறப்படு மாற்றால் இனிது துணியப் படும். 'அறிவு' பண்பாதலன்றிப் பொருளாயின் அவ் வாறதனை வழங்குதற்கு வேறொருவாற்றானும் ஒரு காரணம் பெறப்படுவதில்லை என்க. ஆகவே, பௌத்தர் கூறுமாறு அறிவு ஒரு பண்பிப்பொருளாக மாட்டாதென்பதும், அதனையுடைய உயிர் வேறு தனியே யுளதென்பதும் இனிது பெறப்படுகின்றன.

"உருவாதி கந்தங்க ளைந்துங் கூடி யொருவன்வே
றொருவனிலை யென்றுரைக்கும் புத்தா.
உருவாதி யைந்தினையு முணர்பவர்யா ரென்ன
வுணரும்விஞ் ஞானமென்றாய் ஞான முணர்ந் தவரார்
உருவாதி பொருள்காட்டித் தனைக்காட்டுஞ் சுடர்போ
லுணர்வுபிறி தினையுணர்த்தித் தனையுணர்த்து
உருவாதி பொருளினையுஞ் சுடரினையுங் காணு [மென்னின்
முலோசனம்போ லுணர்வுபொரு ளுணர்பவன்வே
றுண்டே"

என்ற சிவஞானசித்தித் திருவாக்கும் இதனை வலி யுறுத்தும்.

இனி ஏகான்மவாதிகள் மதம்பற்றி அறிவுடைய உயிர் ஒன்றே உடம்புகடோறும் வேறுவேருய்க் காணப் படுகின்றதென்றும், குடங்கடோறும் வேறுவேருய்த் தோன்றும் திங்களின்வடிவு அக்குடங்கள் உடைந்தவழி யில்லையாய்த் திங்கள் ஒன்றுமே நிலைபெறுதல் போல இவ் வுடம்புகளெல்லாம் போயவிடத்து உயிர் ஒன்ருகவே யிருக்கு மென்றுங் கூறுவதே பொருந்து மென்னின்; அற்றன்று, திங்களினிடத்துக் காணப்படும் ஒளிவடிவும் வட்டவடிவும் அதன்நிழல்களெல்லாவற்றிலுங் காணப் படுதல் போல ஓருயிரினிடத்துக் காணப்படும் அறிவுஞ் செயலும் ஏனை உயிர்களிடத்துங் காணப்படுதல் வேண் டும். அங்ஙனமன்றி அவை ஒவ்வொருவரிடத்தொவ்வொரு வாருய்ப் பல திறப்பட்டு நிகழக் காண்டலால் உயிர் ஒன்றே யென்னுமுரை ஒருசிறிதும் பொருந்தாது. அற்றன்று, நீரின் அசைவாற் றிங்களின்நிழலும் அசைவதுபோற் ருேன்றினும் திங்களுக்கு அவ்வசைவு வராமை போல, உடம்பின் வினைகளால் உடம்பினுள்ளிருக்கும் உயிர் துடக்குறுதல்போற் ருேன்றினும் ஒன்றேயாகிய அவ் வுயிர்க்கும் இயற்கையில் அவ்வினைத்துடக்கு இல்லையா மெனின்; ஈண்டு இவ்வுவமை பொருந்தாது. உயிரின் சேர்க்கையின்றி உடம்பு ஒருவினை செய்ய அவ்வினை உயிரின்கட் பற்றுவதாயினன்றே நீரினசைவையும் அது பற்றுந் திங்களின் நிழலையும் அவ்வா றுவமை கூறலாம்? உயிரின் சேர்க்கையில்லா வுடம்பு சிறிதாயினும் வினை யின்றிக் கிடத்தல் பிணவுடம்பின்கண் வைத்து இனி தறியப்படுதலால், உடம்பினுல் உயிர் துடக்குறுமென்றல் யாங்ஙனம் பொருந்தும்? இஃதுண்மையா னுணர்ந்த சைவ சித்தாந்த முதலாசிரியர்,

"அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுட னீயல்லை மற்று"

"கண்டறியு மிவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே
உண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
லுள்ளதா முண்டிவினை யூண்"

என்றருளிச் செய்தார். நாலடியாரிலும்,

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தெடுக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்"

என்றிவ்வுண்மை தெருட்டப்பட்டது காண்க. ஆகவே, உடம்பினைத் தொழிற்படுத்துவது உயிரேயல்லது உயிரினைத் தொழிற்படுத்துவது உடம்பன்றாம். அன்றாக, உயிர்கள் பலவாயும், பல திறப்பட்ட வினை நுகர்ச்சிகளுடையவாயும் இருக்குமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் பெறப்படுவதாம். ஆதலால், அவர் கூறும் ஏகான்மவாதம் ஒரு சிறிதும் பொருந்தாது.

வினை

அற்றேலஃதாக, இனி உயிர்கட்கு வினை உண்டென்பது எவ்வாறு துணியப்படுமெனின்; தாய்வயிற்றிற் கருக்கொண்டு பிறக்கும் மகவு எவ்வகைக் குற்றமுமுடையதன்றாகவும், ஒன்று தான்பிறந்த குடும்பத்தால் மிக வறுமைப்பட்டுப் பெருந்துன்ப மெய்துதலும், மற்றொன்று தான் பிறந்த குடும்பத்தால் மிக்க செல்வ வளம் பொருந்தி இடையறாது இன்பந்துய்த்தலும், ஒன்று நல்லறிவுடைய தாய்ப் பலராற் பாராட்டப்படுதலும், பிறிதொன்று தீயவறிவுடையதாய்ப் பலரால் இகழப்படுதலும், ஒன்று கலையறிவு நிரம்பிப் பெரிய புலவோனெனப் பாராட்டப்படுதலும், ஏனையொன்று அஃதின்றிப் பெரும்பேதையென இகழப்படுதலும் என்னையென்று சிறிது ஆராய்ந்து பார்ப்பி

இவ்வகையான பல வேறுபாடுகளுக் கெல்லாம் இன்றி யமையாததான காரணம் ஒன்றிருத்தல் வேண்டுமென்பது போதருமன்றே? அக்காரணந்தான் யாதோவெனின், அஃதுயிர்களுக்குப் பண்டுதொட்டே அமைந்து கிடந்த வினையே யல்லது பிறிதில்லை யென்க. இவ்வுண்மை யுணர்ந்தே பெரியாரும்,

"பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மன்றே"

என்று அருளிச் செய்தனர்.

முற்பிறவி பிற்பிறவி

இனி இப்பிறவியில் நிகழும் நிகழ்ச்சிகொண்டே உயிர் கட்கு முற்பிறவியும் பிற்பிறவியு முண்டென்பது துணியப் படும். இன்று இந்நூல் தோன்றுதலும் பயிலப்படுதலு மாகிய நிகழ்ச்சி யெல்லாம் இதற்கு முற்பட்ட நாளில் யாம் இதனை இயற்றிய செயல்களின் பயனும் அல்லவோ? இன்று நடைபெறும் இதன் பயிற்சியெல்லாம் இனிவரும் நாட்களிற் சைவசித்தாந்தம் மிகவுந் தழைத்தோங்கவும் அதனால் எல்லாரும் பேரறிவும் பேரின்பமு மெய்தவும் பயன்படும் அல்லவோ? இதற்கு முன்னாட்களில் தன் னுடம்பின் கூறுபாடறிந்து அதற்கியைய உண்ணவேண் டும் உணவின் வரைகடந்து வேறு பல புதிய உணவுகளைத் தான் வேண்டியபடியெல்லாம் உண்டான் ஒருவன் அப்போது அதன்பயன் அறியாது பின் பத்துநாட் கழித்து இன்று வயிற்று நோயால் வருந்தும்போது இது முன் வரம்புகடந் துண்ட வுணவால் வந்ததென் றறியாது "இஃது எனக்கு எங்ஙனம் வந்தது? எங்ஙனம் வந்தது"

என்றெண்ணி எண்ணித் துயர் உறுகின்றான். பின் மருத்துவனை வருவித்து மருந்து ஊட்டப் பெறுங்கால் அவ்வூட்டப் பெற்ற அந்நேரத்தே யாயினும் அன்றி அந்நாளே யாயினும் நலம் பிறவாவிடினும், அஃதுண்ட பின்னேரத்தேனும் பின்னாளேனும் நோய்தீர்ந்து நலமெய்தல் கண்டாமன்றே? இங்ஙனமே யாம் இப்பிறவியில் இன்பதுன்ப நுகருங்கால இப்பயன்களைத் தந்த வினைகள் முற்பிறவியில் அமைந்து கிடந்தன வென்பதனை மறந்தோமாயினும், அவை உளவாதல் ஒருதலையேயாம். இனி முற்பிறவியிற் செய்த தீவினைகளால் இப்பிறப்பில் எய்துந் துன்பங்களை அறிவொழுக்கத்தானும் அன்பொழுக்கத்தானுந் துடைத்துக்கொண்டால் இனிவரும் பிறவியில் இன்புறுதல் ஒருதலையாமன்றோ?

அற்றேலஃதாக, முற்பிறவியிற் செய்தவினை இப்போதொரு சிறிதாயினும் நினைவுகூரக் கூடவில்லையேயெனின்; நன்றுசொன்னாய், 'நுங்கள் இல்லத்தில் நேற்றிரவு கறித்த கறியுங் குழம்பும் யாவை?' என்று உசாவினால் அவற்றை மறந்து விடைபகரத் தெரியாமல் விழிப்பார் நம்மனோரில் எத்தனைபேர் உளர்! நேற்று நீங்கள் காலைமுதல் மாலை வரையிற் செய்தனவெல்லாம் சொல்லுக வென்றால் அவை சொல்லத்தெரியாது விழிப்பார் எத்தனைபேர் உளர்! அஃதிருக்க, முற்றும் நினைவுகூரக் கூடாவிடினும் முந்நாளிற்செய்த சிலவற்றையேனும் பின்நாளில் நினைவுகூர்கின்றோமேயெனின்; நீவிர் குழவிப்பருவத்துச் செய்தன ஒருசிலவேனும் இம்மனிதப் பருவத்து நினைக்கமாட்டாமல் முழுதும் மறக்கின்றமையால் 'யான் குழவியா யிருந்திலேன்' எனக்கூறல் அமையுமோ? காலம் நீள நீள மறதியும் நீளும்; காலத்தினாற் றோன்றும் மாறுதல்கள் கணக்கிறந்தன. இன்றைக்கிருந்த ஒருபொருளின் நிலை நாளைக்கு அவ்வாறே காணப்படுவதில்லை. நாளை இருப்பது மற்றை நாள் காணப்படுவதில்லை. ஆ! காலத்தினாற் செய்யப்படும் புதுமைகள் என்னே! என்னே! ஒருவனைக் குழவிப் பருவத்தில் வைத்துப் பிடித்த படமும், மனிதப் பருவத்தில்

வைத்துப் பிடித்த படமும், முதுமைப் பருவத்திற் பிடித்த படமும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், அம்மூன்று உருவும் மூன்றுவேறு மனிதவுருக்களாய்த் தோன்றுமே யல்லது ஒன்ருய்த்தோன்ரு. ஆ! ஒவ்வொருநொடியும் மனத்தினுங் குறிக்கப்படாத அத்தனைவிரைவாய் எத்தனை எத்தனை மாறுதல்கள் நிகழ்கின்றன! இந்நிலவுருண்டையானது ஒருநொடியிற் பதினெட்டரைமைல் விழுக்காடு ஒருமணி நேரத்தில் ஆயிரத்துநூற்றுப்பத்து மைல் இடம் சுழன்று செல்வதைப் பாருங்கள்! இவ்வளவு விரைவாய்ச் சென்றும் இதன் இயக்கமும் மாறுதலும் நமக்குப் புலப்படுகின் றனவா? இல்லையே. இங்ஙனம் ஒவ்வொருநொடியும் மனத்தினும் மிக்குச்செல்லும் அத்துணை விரைவுடன் நடைபெறும் மாறுதல்களின் இயல்புணர்ந்தே பௌத்தரிற் கணபங்கவாதிகளென ஒரு சாரார் தோன்றினர். சூறைக் காற்றினிடையிலகப்பட்ட இலவம் பஞ்சுபோல், மிக விரைந்து நிகழும் இம் மாறுதல்களின் இடைக் கிடந் துழலும் நம் உயிர்கள் அவற்றை முறைமுறையே மறந்து விடுதல் இயற்கையேயாம். இங்ஙனம் மறக்கப்படுவது பற்றி ஒருபொருளினிருப்பு இல்லையென்று மறுக்கப்படுதல் சிறிதும் பொருந்தாதாகலின், இப்பிறப்பிற கேதுவான முற்பிறவியும் அவற்றிற்செய்த வினைகளும் உண்டென்பது தேற்றமேயாம். இனி இப்பிறவியிற் செய்யப்படும் வினைகள் அளவிறந்தனவாகலின் இவற்றின் பயனைத் துய்த்தொழித் தற்கு மேலும் மேலும் பிறவிகள் இடையருது தோன்று மென்க. வினைகள் உளவாங்காறும் உடம்பு ஒழியாது; இதுபற்றியே முற்றத்துறந்த பட்டினத்தடிகளும்,

“ வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந் [தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதம்நினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்ரு
லுனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே ”

எனவும்,

"அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடி யேனுமறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே"

என்று திருவாய்மலர்ந் தருளினார்கள்.

இனி இவையெல்லாம் பொருந்துமாயினும், முற்பிறவி உண்டென்பதற்கு மட்டுங் காட்சியளவையின் வைத்துச் சில குறிப்புகள் காட்டல் வேண்டுமெனின்; அவையுஞ் சிறிதுகாட்டுவாம். தாய்வயிற்றை யகன்று பிறந்த மகவினை எடுத்துப் பாலூட்டப் புகுங்கால் உலகப்பழக்கஞ் சிறிது மறியா அம்மகவு வாய்கூட்டிக்கொங்கையை இழுத்துப் பால்உண்ணல் கண்டாமன்றே? அஃதங்ஙனமுண்ண எவ்வாறு கற்றது? என்றூராயின் அது முற்பிறவியில் அங்ஙனம் வாய்கூட்டியுண்ட பழக்கத்தால் வந்ததேயாம் என்பது நன்கு புலப்படும். இதுவொன்றோ, இன்னும் அம்மகவு மக்கள்முகத்தைப் பார்த்து நகையாடத் தெரியாப்பொழுதே உறங்குங்காலத்துப் பாலொழுகும் வாய்விரித்து நகைப்பதுங் கண்டாமன்றே? அஃது அங்ஙனம் யாரைக் கண்டு நகைக்கின்றது? கனவில்நகைக்கு மென்னின்; நாமெல்லாம் நனவிற்றோன்றியதைக் கனவிற் காண்கின்றோம்; நனவிற்காணப்படாதன கனவிற்றோன்று மாயின் அவை முற்பிறவியின் றோற்றமா மன்றோ? நனவின் பழக்கம் சிறிதுமில்லாத அம்மகவுக்கு நனவுங் கனவும் ஒன்றே யன்றோ? ஆனால், நனவில் வெளியுலாவுகின்ற அதனறிவு கனவில் உள் உலவாநிற்ப, அவ்வாறுலவுங்கால் முற்பிறவியிற் கூடிய பழக்கங்கள் சில அதற்கு நினைவிற் றோன்ற அங்ஙனம் நகையாடுகின்றது. ஆகலின், குழவிப் பருவத்துயிர்கள்மாட்டுக் காணப்படும் நிகழ்ச்சிகொண்டே முற்பிறவி யுண்டென்பது நாட்டப்படுதல் காண்க.

கடவுள்

இனி இருவினையே தன்னைச்செய்தோன் அறிவிற் பதிந்துகிடந்து பின்னை அவன் தன்னை நுகர்ந்து ஒழித்தற் பொருட்டு உடம்பினைத்தோற்றுவிக்கும், இதற்கு வேறொரு கடவுள் வேண்டாமெனக் கூறும் சமணர்மதம் பற்றிக் கடவுள் ஒன்றில்லையெனக் கூறினுல் வரும் இழுக்கென்னை யெனின்; வினை என்பது தொழிலாகும். வினை தன்னைச் செய்தானை விட்டுப் பிரிந்திராத துண்மையேயாயினும், அவ்வினையே இவ் வுடம்பினைத் தோற்றுவிக்குமெனல் பொருந்தாது; என்னை? அஃதோர் அறிவில்லாத நிகழ்ச்சி யாகலி னென்க. அற்றன்று, வினைதானே உடம்பினைப் படைப்பதன்று, அது தன்னையுடைய உயிரின் துணை கொண்டு அதனைப் படைக்குமெனின்; அறிவின்றி வினை வயப்பட்டுக்கிடக்கின்ற ஓருயிர்தானே தன்வினையை நுகர்ந் தொழித்தற்பொருட்டு ஒருடம்பைப் படைக்குமென்றல் யாங்ஙனம்? அங்ஙனம் படைக்கவல்லதாயின் முன்எடுத்த வுடம்பையே விடாதிருக்க அமையுமன்றோ? இறப்புவருங் காலத்து அவ் வுடம்பை விடவேண்டுமேயென நினைந்து நினைந்து அஃது இரங்குதல் என்னை? இவ்வாறு வினை அறி விலதாகலிற் றானே ஒருடம்பைத் தோற்றுவியா தாகலா னும்,வினைசெய்த உயிர் அறிவின்றி வலியிழந்து கிடத்தலால் அதுதானும் அதனைப் படைத்துக்கொள்ள மாட்டாமை யானும், இவையிரண்டினவேறாக உடம்பைப் படைக்க வல்லது பிறிதொன்று வேண்டுமென்னும் ஒழிபளவை யாற் கடவுளே அதனைப் படைக்குமெனபதும், அது தானும் இவ்வுலகுயிர்க்கு முதலாயுளதா மென்பதும் பெறப்படும்; இஃதுணர்ந்த பெரியாரும்,

"அநாதியே லமைவின் றென்னின் மலமாயை கன்ம மணுச்சிவன்
அநாதிகன் மமணுக்கள் செய்யவறிந்து கன்ம முடற்செயா
அநாதிகா ரியமா முடற்க ளசேதனம் மணுயா வறிந்
தநாதியா தியமைக்க வேண்டு மமைப்பி ஞேடு மநாதியே"

என்றருளிச் செய்தனர்.

இனி மாயாவாதிமதம் பற்றிக் கடவுள் ஒன்றே அருவாயுளதென்றும், ஏனையுருவுடை உலகம் முதலா யினவும் உயிரும் அதன்கட்பொய்யாய்த் தோன்றுகின்றன வென்றும், உண்மையான் உணர்ந்தவழிக் கடவுள் ஒன்று மட்டுமே பெறப்படு மென்றும் உரையாமோவெனின்; தோன்றுவதொரு தோற்றம் மெய்யே யாயினும் பொய்யே யாயினும் தோன்றப் பெறுவதனுல் அஃதோர் உருவ முடைத்தாதல் வேண்டுமன்றே? கடவுள் அருவப் பொருளாமென முற்கூறிப் பின் அதன்கண் உரு வுடைப்பொருளெல்லாம் பொய்யாய்த் தோன்றுமென்றன் முன்னெடுபின் மலைவாமன்ருே! காணப்படுகின்ற இவ்வுல குயிர்களைக்கொண்டே காணப்படாத கடவுளை யறிய வேண்டியிருத்தலிற், காணப்படுமிவற்றை யெல்லாம் வெறும் பொய்ப் பொருளென் ருெழித்தாற் பின் காணப் படாத கடவுளைமட்டும் மெய்ப்பொருளென்று துணிந்து உரைத்தற்கு வேருெரு வாற்ருனும் ஒருகாரணம் பெறப் படாமையானும், உலகத்துப்பொருள் அழியாது என்றும் உளதாம் என்னும் இயற்கைப் பொருணூற் கொள்கை யோடு அது முரணுதலானும் அங்ஙனங் கூறுதல் பொருந்தாதென்க.

இன்னும் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் அருவ மாகமட்டும் இருக்குமென் ருெரு வரையறை கட்டிச் சொன்னுல் அஃதுருவமாகின்ற ஆற்றலில்லாததென்று கொள்ளப்படு மாகலானும், அருவமாகிய வெளி உயிர் முதலியவற்ருேடொப்ப ஒன்றெனக் கொள்ளப்படுமல்லது வேறு தனியியல்பு உடையதாகா தாகலானும் அதுவும் பொருந்தாது. இவ்வுண்மை

"உலகினிற் பதார்த்த மெல்லா முருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்றென் ருகா நின்றவந் நிலையே போல
அலகிலா வறிவன் ருனு மருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்ருய்க் கூடுவன் குறித்தி டாயே"

என்னுந் திருமொழியால் இனிது விளங்கும்.

மக்கள் உயிரின்நிலை அறிவும் உணர்வும் என இரு திறப்படும். அறிவைப் பார்க்கிலும் உணர்வே சிறந்ததாம். அறிவு உருவத்தைப்பற்றி நிகழும், உணர்வு அஃதின்றியும் நிகழும். உயிரின் அறிவாற் பற்றப்படாத அருவவியலுடைய முழுமுதற்கடவுள் அன்பு என்னும் உணர்வு நிலையாற் பற்றுதற்கெளியனாய் ஓர் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து அருள்புரிவனாகலின் இறைவற்கு அருவத்திருமேனிமட்டு முண்டென்றல் இழுக்காம். இது,

" விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே "

என்ற தமிழ்மறையானும்,

"ஆத்மாந மரணிம் கருத்வா ப்ரணவஞ் சோத்தராரணீம்
த்யாந நிர்மத நாப்யாஸாத் தேவம் பச்யேந்நிகூடவத்
திலேஷு தைலம்ததிநீவ ஸர்பி ராபஸ்ரோதஸ்
ஸ்வரணீஷு சாக்நி "

என்னும் வடமொழி உபநிடத மறையானும் இனிது பெறப்படும்.

அற்றேற் கடவுள் உண்டென்று இங்ஙனம் ஆராயும் அறிவா லஃதறியப்படுவதில்லை யாயின், இவ்வாராய்ச்சிகளெல்லாம் வெறும்போலியாய் முடியும் போலுமெனின்; அற்றன்று, அறிவால் ஆராய்வதெல்லாம் கடவுள் உண்டென்பதனை உறுதிப் படுத்துதற்கே யன்றி அதன் உண்மை யுணர்தற் கன்று. அழகிற் சிறந்த மடந்தையின் உறுப்பிலக்கணங்களை அறிந்து மகிழ்வது அறிவு நிலையாய்ப், பின் அவளோடு இணங்கி இன்ப நுகர்ந்தறிவழிதல் உணர்வு நிலையாதல்போல இறைவனுண்டென்று மட்டும் ஆராய்ந்தறிதல் அறிவின்பயனென்றும், பின் அவனோடொருமித்துப் பேரின்பத் தழுந்தல் உணர்வின் பயனென்றுந் தேறப்படும். ஆகையால் அறிவுக்கு

விளங்காத இறைவன் அன்பாற் கரைந்துருகித் தேம்பும் அன்பர் உணர்வுக்கு விளங்கித்தோன்றி அருள்புரிவனுகலின் அவற்கு உருவமுண்டென்பதொருதலையாம். இது

"இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால்
நல்லாய் உளவாமானீர் நீழல்போல்—இல்லா
அருவாகி நின்றுனை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றுனே லுற்று"

என்னுஞ் சிவஞானபோதத் திருமொழியானும்,

"ருதம் ஸத்ய பரப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் சங்கரம் நீலலோகிதம்"

என்னும் நரசிம்மதாபினியுபநிடதத்தானும் பெறப்படுதலுடன்

"நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்யவர்ணய ஹிரண்யரூபாய ஹிரண்ய பதயேம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோ நம:"

என்னும் மந்திரம் இறைவற்குப் பொன்வண்ணம் பொற்றேள் முதலியன கூறுதலானும், மண்டல பிராமணமும் இவ்வாறே

"பஞ்சவக்த்ரம் உமாஸஹாயம் நீலகண்டம்
ப்ரசாந்தம் அங்குஷ்டமாத்ர புருஷ:"

என்று கூறுதலானும், கைவல்யோபநிடதம் நெஞ்சத் தாமரையிற் பெருவிரல் அளவினனுய் ஒளிவிளக்க முடையோனுய் உறையும் முதற்பொருளை வழிபடுமாறு கூறுதற் கெழுந்து

"ஹ்ருத்புண்டரீகம் விரஜம்"

என்று நிட்களோபாசனை சகளோபாசனை யென்னும் அருவ வழிபாடும் உருவ வழிபாடும் உடன்வகுத்துக் கூறுதலானும் தெளிவாகப் பெறப்படும். இதனுல் இறைவர்க்கு உருவவழிபாடு சொல்லியபாகனுஞ் சிறிதும் உபநிடதங்களுட்

காணப்படாதென்று பிரம சமாஜத்தார் கூறுவதூஉம் போலியாதல் காண்க.

இனி வைணவர்கூறுமாறு இறைவனுக்கு உருவ மட்டு முண்டென்று கூறுமோவெனிற்; கூறும்; என்னை? அங்ஙனம் வரையறுத்துக் கூறின் அஃது அருவமாதற் குரிய ஆற்றல் உடையதன்றெனவும், உருவுடைப் பொருள் களான நிலன் நீர் தீ வளி என்னும் இவற்றுள் ஒன்றாய் ஒழியுமெனவுங் கூறப்படு மாகலினென்க.

என்றிங்ஙனங் கூறியவாற்றால் இந்துசமயம் எனப் படுவது இமயமுதற் குமரியீறாக யாண்டும் பொதுவாய்ப் பரவிவழங்கும் பொதுக்கொள்கைக ளாதலாலும், இக் கொள்கைகளுட் சிலசில வெடுத்து வற்புறுத்து அவை தம்மை மட்டுங் கைக்கொண்டுவரும் சாருவாகம் பௌத்தம் முதலிய சமயங்கள் இந்துசமயப் பிரிவாய்ச் சிறியனவாய் அதன்கண் அடங்குதலும், இந்துசமயப் பொதுக் கொள்கைகள் விரிந்த இலக்கண முடையவாய் இவற்றை யெல்லாம் தம் அகத்தே யடக்கி விரிதலும், இக்கொள்கை கள் எல்லாவாற்றானும் பொருத்த முடையவாய் விளங்கலும் அறிவுறுத்தப்பட்டன.

இனி இவ்விந்துசமயம் எனப்படுவ தியாதென்று உண்மையான் ஆராயும்வழி அதுவே **சைவசித்தாந்தம்** என்னும் வேறு பெயரான் வழங்கப்படுவதென்பது இனிது புலப்படாநிற்கும்.

சடமாகிய உலகமும் சித்தாகிய அறிவும் வேறு வேறா மென்பதும், அறிவுடைப்பொருள் உயிராமென்பதும் சித்தாந்தத்தின் கொள்கைகளாம்; இதற்கு மேற்கோள் :

" அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லாம்
அசத்தாகு மெய்கண்டா ஞயின்—அசத்தலாய்
நீரி லெழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரினவை யின்றாமா றெப்பு''

இவ்வுயிர் இருவினைகளுட்பட்டுப் பிறப்பிறப்புக்களிற் சுழன்றுகொண்டு இயற்கையே அறியாமையுடைத்தாய் மாயையால் அறிவுவிளங்கப் பெற்று வரும் சித்துப் பொருளா மென்பது.

"அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய தாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய தாகிப் பசுவென நிற்கு மான்மா"

"மாயையின் வயிற்றுண் மன்னி வருஞ்செயன் ஞானமிச்சை
யேயுமிக் கலாதி மூன்றா லேகதே சத்தி னேய்ந்திங்
காயுமுக் குணங்க ளந்தக் கரணங்க ளாதி யெல்லாங்
காயபந் தங்களாகிக் கலந்துட னிற்கு மான்மா"

"சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலாயுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ
மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா"

என்னுஞ் சிவஞானசித்தித் திருமொழிகளான் நன்கு துணியப்படும். இதன் கண்ணே வினைகளும் முற்பிறவி பிற்பிறவிகளு முண்டென்பது இனிது பெறப்படுதல் காண்க.

இனிக் கடவுள் என்பது சிற்றுயிர்களின் வேறாய் எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா ஆற்றலும் எல்லா இன்பமும் ஒருங்குடையதா யிருக்குமென்பதும், அஃது அருவாய் உருவாய் அருஉருவாய் இவையும் அல்ல வாய்த் தோன்றுமென்பதும், அஃது உலகுயிர்களுமாய் அவற்றின் வேறுமாய் அவற்றினுள்ளுமாய் இரண்டற நிற்கும் என்பதும்,

"குறித்த தொன் றாக மாட்டாக் குறைவில தாதலானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமை யானும்,
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளினாலே"

"அருவமோ வுருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோர் உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்
அருவமும் உருவா ரூப மானது மன்றி நின்ற [னில்
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே"

"உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமலனாகி நின்றனன் நீங்கா தெங்கும்"

என்னுஞ் சிவஞானசித்தித் திருமொழிகளான் உணர்க. இதுகாறும் கூறியவாற்றாற் சைவசித்தாந்தந் தவிரப் பிறிது எந்தச் சமயமும் இந்துசமயம் என்னும் பெயர்க்கு உரியதாகாமை காண்க. ஓம் சிவாயநம:

—:(o):—

ஓம்

சமரச சன்மார்க்கம்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

—திருக்குறள்.

'சமரச சன்மார்க்கம்' என்னுஞ் சொற்றொடர் 'எல்லாரையும் ஒற்றுமைப்படுத்தும் உண்மைநெறி' என்று பொருள் படுவதாகும். எல்லாரும் ஒன்றுபட்டு அளவளாவும்படி செய்யும் சன்மார்க்கமானது அவர் எல்லாருந் தழுவத்தக்க ஒரு பேருண்மையை இனிதெடுத்து விளங்க அறிவுறுத்துவதாகும். 'உண்மை' என்பது பொருள்களில் என்றும் நிலைபேறுயுள்ள இயற்கையேயாம். உலகத்துப் பொருள்கள் அளவிறந்தனவாய் இருத்தலோடு, அவை ஒவ்வொன்றுந் தத்தமக்கே உரிய சிறப்பியல்புகளும் உடையவாய் இருக்கின்றன. ஒரு பொருளின் உண்மைத் தன்மை மற்றொரு பொருளின் உண்மைத் தன்மையின் வேறாகவே காணப்படுகின்றது. பொன்னின் தன்மை வெள்ளியின் தன்மையின் வேறாகவும் இவை யிரண்டின் தன்மை செம்பின் றன்மையின் வேறாகவுங் இருக்கின்றன. மா, புளி, பனை, தென்னை முதலிய மரங்களும் வேறு புற் பூண்டுகளும் தனித்தனி வெவ்வேறு தன்மைகள் உள்ளனவா யிருக்கின்றன. மானும் புலியும் ஆவும் எருமையும் கழுகும் பருந்தும் கிளியுஞ் சிவலும் குயிலும் மயிலும் தனித்தனியே ஒன்றினொன்றெவ்வா இயல்புகள் வாய்ந்தனவாய் இருக்கின்றன. மக்களிலும் ஒருவருடைய குறி குரல் சாயல் செயல்கள் குறிப்புகள் முதலியனவெல்லாம் மற்றொருவர் தம் குறி குரல் சாயல் செயல்கள் குறிப்புகள் முதலியவற்றின் வேறாகவே இருக்கின்றன, ஓரினமான பொருள்களுள்ளும் ஒன்றற்கொன்று வேறான தன்மைகள்

உண்டென்பதை ஒரு மானைப்போற் பிறிதொருமான் இல்லாமையும் ஒருமகனைப்போல் மற்றொருமகன் இல்லாமையும் நுணுகி அறிபவர் எவரும் அறிந்து கொள்வர். ஆகவே, எவ்வெப்பொருளை ஆராயப் புகினும் அவ்வப் பொருள்களின் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்வதே மெய்யறிவு மேன்மேல் விளங்கப் பெறுதற்கு வாயிலாம் என்க.

இனி உலகத்துப் பொருள்கள் எல்லாம் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளாற் காணப்படுவனவாய் அறிவில்லாத பொருள்களுமாய் இருக்கின்றன. இப்பொருள்கள் ஒவ்வொன்றன் தன்மையையும் அறியப் புகுந்தால், அவற்றின் எல்லை காண்பதற்கு நமக்குக் காலமும் இல்லை, ஆற்றலும் இல்லை. அல்லது அளவிறந்த காலம் உயிரோடிருக்கும் வகைதெரிந்துகொண்டு, அவை முழுதும் ஒருங்கே உணர்ந்தாலும், அறிவில்லாத அப்பொருள்களின் உணர்ச்சியால் நாம் அடையும் பயன் என்னை? ஏதும் இல்லையன்றோ? நீண்ட காலம் உயிரோடிருந்து இப்பொருள்களை அறிவேமென்பார்க்கே இவற்றால் ஏதும் பயன் விளைவதில்லையாயின், சில் வாழ்நாளும் பல் பிணியும் உடைய நம்மனோர் இவற்றை அறிவதனால் யாது பெறப்போகின்றார்? 'உமிக்குற்றிக் கைசலித்தது' போல அவ்வெறு முயற்சியால் விளைவது பெருவருத்தமேயல்லால் வேறு பயன் சிறிதுமில்லையென்க. ஆகையால், நமது உலக வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களைமட்டும் நாம் சிறிதுநேரம் ஆராய்ந்து, மற்றை நேரங்களையெல்லாம் மிக உயர்ந்ததோர் அரிய பெரிய உண்மையை ஆராய்தலிலேயே பயன்படுத்தி வருதல் வேண்டும்.

இனி உலகத்துப் பொருள்களுள் எல்லாம் ஒன்றை நோக்க ஒன்று சிறியதாய் இருத்தலால் அவற்றைப்பற்றிய உண்மைகளும் சிறிய உண்மைகளாய் இருக்கின்றன. இப்பொருள்களின் தன்மைகளை அறியுங்கால், இவை

பலவேறு வகைப்பட்டுக் கிடத்தலால், இவற்றை யுள்ள வாறு உணரப்பெருமல் மக்கள் பெரிதும் பிழைபட்டுப் போகின்றனர். ஒரு தொகுதியாயுள்ள மாங்கனிகளுள் ஒன்றைச் சுவைத்து அதன் இனிமையை அறிந்து மகிழ்ந்தவன், அத் தொகுதியிலுள்ள மற்றக் கனிகளும் அங்ஙனமே யிருக்குமென வாங்கிப் போய் அவற்றைச் சுவைத்துப்பார்க்க அவையெல்லாம் புளிப்பாயிருக்கக் கண்டு ஏமாந்து வருந்துதலைக் காண்கின்றேம் அல்லேமோ? உலகத்துப்பொருள்களைப் பற்றிய உண்மைகள் ஒன்றிஞென்று இயையாது பெரும்பாலும் வேறுவேருய்த் தனித்து நிற்றலால், இவைசிறிய உண்மைகள் என்றும் இவற்றை அறியும் அறிவு சிற்றறிவு என்றும் சொல்லப்படுகின்றன.

இனி இச்சிற்றறிவு உள்ள வரையில் உயிர்களுக்குத் துன்பம் விலகாது. பேரின்பத்தை அடையவேண்டுமென்னும் நோக்கம் எல்லாஉயிர்களிடத்தும் இருத்தலால், அதனைப் பெறுதற்குவாயிலான பேரறிவு நிகழ்ச்சி இன்றியமையாது வேண்டற்பாலதாகும். சிற்றுயிர்களான நம்மிடத்துப் பேரறிவு நிகழவேண்டுமாயின், அது மிகப் பெரியதாகிய ஓர் உண்மையினை அறியும்வகையால் மிகுந்து நிகழுமாறு செய்வித்தல் வேண்டும். உலகத்துப் பொருள்கள் எல்லாம் ஒருதொடர்பு படாது தனித்தனி வேறுவேறு சிறு பொருள்களாய் இருத்தலோடு அறிவில்லாதனவுமாய்க் காணப்படுதலானும், உயிர்கள் அறிவுடையனவாய்க் காணப்படினும் அவை சிற்றறிவுஞ் சிறுதொழிலும் பிறப்புப் பிணிமூப்புச் சாக்காடுகளும் உடையனவாய்த் துன்பக்கடலுட் கிடந்து உழல்வனவாய் நிலைமாறி வருதலானும் இவற்றை யறியும் அறிவெல்லாம் சிற்றறிவுகளாகவே முடியும். ஆனதனுல், எங்கும் ஒரே தொடர்புடைய முழுமுதற் பெரும் பொருளாய் விளங்குங் கடவுளை அறியும் அறிவே வேறுபாடில்லாத பேரறிவாகுமென்பது துணியப்பட்ட பொருளாம். கடவுள் எல்லையற்ற பெரும்பொருளாதலால் அதனுடைய தன்மையும் எல்லையற்ற பெருந்தன்மையாகும்; அப் பெருந்தன்மையின்

இயல்பை உள்ளவாறு உணர்தலே ஒரு பேருண்மையாகும். இந்தப் பேருண்மையை உணர்ந்தவர்களுக்கு, உலகத்துப் பொருள்களைப்பற்றிய சிறிய உண்மைகள் எல்லாம் தாமாகவே விளங்கும், இவ்வுண்மையை உணரும் பேரறிவு வாய்க்கப் பெற்றவர்களுக்கு எவ்வகைத் துன்பமும் வர மாட்டா. இது பற்றியே,

> " இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்றும்,

> " பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார் "

என்றும் **தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர்** அருளிச் செய்தார். அது நிற்க.

அங்ஙனமாயினும், கடவுள் என்று ஒரு பெரும் பொருள் உண்டென்பதற்கு அடையாளம் என்னையெனிற் கூறுவாம். அறிவில்லாத பருப்பொருள்கள் மட்டுமே கண் முதலிய பொறிகளுக்குப் புலனுகும். அறிவில்லாத பொருள்களினும் மிக நுண்ணியவாயிருப்பன பொறிகளுக்குப் புலனுகா; கல்லும் மண்ணுந் தண்ணீரும் நம்முடைய பொறிகளுக்குப் புலனுவது போலக் காற்றும் வெளியும் நமக்குப் புலனுவதில்லையே. இன்னும் அறிவும் அறிவுடைய உயிரும், அறிவில்லாத நுண்பொருள்களைப் பார்க்கிலும் இறப்ப நுண்ணிய பொருள்களாய் இருத்தலால், அவை நமது பொறியுணர்வுக்குச் சிறிதும் புலப்படமாட்டா என்பதை நாம் சொல்லவேண்டுவ தில்லை. என்ருலும், அறிவுடைய உயிர்ப்பொருள்களை நாம் தெரிந்து கொள்வதற்கு அறிவில்லாத பருப்பொருள்கள் கருவியாயிருந்து நமக்குப் பேருதவி புரிகின்றன். இந்த உலகமும் இந்த உடம்பும் இல்லையானல் நமக்கேதேனும் அறிவுவிளங்குமா? அதனைக் கூர்ந்து நினைத்துப் பாருங்கள்! ஒருவனுடைய உயிரின் இருப்பையும் அதன் தன்மையையும் யாம் எங்ஙனம் உணர்கின்றேம்? அவன் உடம்பிற் காணப்படும்

செயல்களையுங் குறிப்புகளையுங் கொண்டன்றோ? ஒருவன் ஓவியம் எழுதுவதில் வல்லவன் என்றும், ஒருவன் நெய்தற்றொழிலில் வல்லவன் என்றும், ஒருவன் கல்வியில் வல்லவன் என்றும் எங்ஙனம் அறிகின்றேம்? ஓவியத்தில் எழுதப்பட்ட வடிவங்களின் அழகைக் கண்டும், நெய்யப்பட்ட ஆடையின் நுட்பத்தைக் கண்டும், எடுத்துச் சொல்லும் சொற்களின் சிறப்பைக் கண்டும் அவ்வவர் திறங்களை இனிது தெளிந்து மகிழ்கின்றேம். இங்கே ஓவியமும் ஆடையும் சொற்களும் ஆகிய அறிவில்லாப் பொருள்களின் உதவியால் அறிவுடைய உயிர்களின் மேன்மையை உணரப்பெற்றேம். இங்ஙனமே, எல்லாவற்றிற்கும் நிலைக்களமான பேரறிவுப் பொருளாய் மிக நுண்ணியதாய் விளங்கும் கடவுளினுடைய பேரறிவையும் பேராற்றலையும் இவ்வுலக அமைப்பிற் கண்டு கண்டு மகிழ்ந்து வருகின்றேம். கடவுளை அறிவிக்கும் அடையாளங்கள் அத்தனையும் அறிவில்லாத இவ்வுலகத்துப் பொருள்களிலே நன்கு அமைந்து கிடக்கின்றன. இது பற்றியன்றோ **திருவள்ளுவநாயனாரும்,**

> " அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே யுலகு "

என்று உலகத்தை அடையாளமாக வைத்து இறைவனுடைய இருப்பை அறிவுறுத்திய தூஉம் என்க.

ஆகவே, உலகத்துப்பொருள்களை அறியும் அறிவையே முடிவாக வைத்துக்கொள்ளாமல், அவ்வறிவு எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருள் நிலையைக் காட்டும் அடையாளங்களாம் என்றுட்கொண்டு இறைவனோடு ஒன்றுபட்டு நிற்றலே மக்கட் பிறவியினாற் பெறும் பெரும்பேறும்.

இனி இங்ஙனம் அறியப்பட்ட இறைவன் எல்லா உயிர்களிடத்தும் ஒரே தன்மையான பேரன் புடையனாயிருக்கின்றா னென்பது அவன் செய்துவரும் அரும்பெருஞ் செயல்களால் இனிது விளங்குகின்றது. நாம் உறங்கிக்

கிடக்கும்போது எவ்வகையான அறிவுஞ் செயலுந் தோன்ருமல் ஒரு பேரிருளிற் புதைந்துகிடந்ததை விழித்த பின் அறிகின்றேம் அல்லமோ? இவ்வாறே இவ்வுலகமும் உடம்பும் இல்லாமல் இருளிலேயே அழுந்திக் கிடந்தோமாயின், கடவுள் இன்னதென்றும் உயிர்களாகிய நமது நிலைமை இன்னதென்றும் நமக்குச் சிறிதேனும் புலப்படுமா? புலப்படாதே. நமதறிவு விளங்குதற்கு உதவியாய் நிற்கும் இவ்வுடம்புடன் கூடி நிற்பதனல் அன்ருே நாம் இவையெல்லாம் அறியப் பெறுகின்றேம்? இவ்வுடம்போடு கூடியவிடத்தும், இவ்வுலகம் இன்றி எங்கும் வெறு வெட்டவெளியா யிருந்தால் நமக் கேதேனும் அறிவு விளங்குமா? நமது அறிவு விளக்கத்திற்கு இன்றியமையாக் கருவிகளான இவ்வுடம்பையும் உலகத்தையும் வெறும் பொய்ப்பொருள்கள் என்று சொல்வோர் கடவுளின் படைப்புத்தொழிலேயே பொய்யென்று இகழ்ந்தவர் ஆவர்; ஆதலால் மெய்ப்பொருள்களான இவற்றை உள்ளவாறு உணரஉணர இவற்றினிடத்தே கடவுளின் பேரன்பின் அடையாளங்களைப் பிறழாமற் கண்டுவருகின்ருேம். இவையனைத்தையும் கடவுள் எதற்காகப் படைத்தார்? நமக்கு அறிவினை எழுப்பி இன்பத்தைக் கொடுத்தற் கன்ருே? இறைவன் எல்லாம் உடையவராகவும் இரக்கம் உள்ளவராகவும் இருத்தலால் நம்மிடத்து ஏதேனும் ஒன்றைக் கைம்மாருகப் பெற்றுக்கொள்ளுங் குறிப்பில்லாமலும், நாம் கேளாமலும் தாமாகவே இவற்றைப் படைத்துக் கொடுக்கிருர் என்பதற்கு ஐயம் ஏதேனும் உண்டோ? நாம் கேளாதிருக்கவும், நம்மிடத்தினின்றுங் கைம்மாருகப் பெற்றுக்கொள்வது ஒன்று இல்லாதிருக்கவும் அவர் தாமாகவே இத்தனை பேர் உதவிகளையும் நமக்குச் செய்து வருவதை எண்ணிப் பார்க்குங்கால் அவருடைய அன்புக்கு அளவே இல்லை என்பது இனிது பெறப்படுகின்றதன்ருே? அவர் அன்பே உருவாக விளங்குகிருர்; இவ்வுண்மை எல்லாருங் கடைப்பிடித்தற் பொருட்டே,

" அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்

அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே ''

என்று முழுத்தவம் மிக்க திருமூலநாயனர் திருவாய் மலர்ந்தருளியதும்,

" அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது ''

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் அருளிச் செய்ததும் என்க.

இங்ஙனம் சொல்லுதற்கு எட்டாப் பேர் இரக்கம் வைத்து நம்மையும் நம்மினுந் தாழ்ந்த உயிர்களையும் பாது காத்து அறிவு விளக்கி இன்பத்தை ஊட்டிவரும் இறைவனை அறிந்து அவன் அருள்வழிச் சார்ந்து அவன்றன் உண்மைநிலையை அடைந்து இன்ப வுருவாய் விளங்க வேண்டுவதுதான் எல்லாருக்கும் நோக்கமா யிருக்கின்றது. ஆனாலும், கடவுளை அடையவேண்டுமாயின் அக்கடவுளைப் போன்ற தன்மை நம்மிடத்தும் உண்டாகவேண்டும். தீயவரைச் சேர்பவர்கள் அத்தீயவர்கட்குரிய இயல்புகளுடையவரா யிருக்கவேண்டும். நல்லவரைச் சேர்பவர்கள் அந்நல்லவர்கட்குரிய இயல்புகள் உடையவரா யிருக்க வேண்டும். அவ்வவரோடு ஒத்த இயைபு இல்லையானல் அவர் தமக்குள் நேசம் உண்டாகமாட்டாது; அதுபோலவே, கடவுளைச் சாரவேண்டுவார்க்கு அவரோடு ஒத்த இயல்பு இன்றியமையாது வேண்டற்பாலதாகும். இனிக் கடவுளிடத்துள்ள இயல்பு பேர்இரக்கமும் பேரன்பும் பேரருளுமேயாமென்பது தெளிவாக விளங்குதலால், அவரைச் சாரவிரும்பும் நாமும் அவரிடத்துள்ள அவ்வுயர்ந்த தன்மைகளை நம்பால் தோற்றுவித்துக் கொள்ளல் வேண்டும்; நம்மைப்போன்ற மக்களிடத்து மட்டுமேயன்றி, நம்மினுந் தாழ்ந்த எல்லா உயிர்களிடத்தும் நாம் பேர்இரக்கம் வைத்து ஒழுகுதல் வேண்டும். மற்ருேர் உயிர் துன்புறுவதைக் கண்டும், அது நம்மினுந் தாழ்ந்த உயிர்தானே என்று இரக்கங் காட்டாது வன்னெஞ்சம் பூண்டு நடத்தல் மிகப்பொல்லாததாகும். கடவுளைவிட எத்தனையோ கோடிமடங்கு நாம் தாழ்ந்தவர்

களா யிருந்தும், அவர் நம்மைக் கண்டு, ஓ! இவர்கள் நம் மினும் மிகத் தாழ்ந்தவர்கள் நாம் இவர்களைக் கருதற் பாலம் அல்லம்' என்று வன்னெஞ்சம் வைத்து வாளா இருக்கின்றனரா? இல்லையே. ஒரு நொடிப்பொழுதேனும் அவர் வாளா இராமல் நமக்குவேண்டிய நலங்களை யெல் லாம் உதவி நம்மைத் துன்பத்தினின்றும் தூக்கியெடுத் துக்கொண்டே வருகின்றாரன்றோ? நம்மால் மிகப் புல்லிய வாகக் கருதப்படுகின்ற சிறிய புழுவிற்கும் உடம்பைப் படைத்துக் கொடுத்திருக்கின்றார்; நமக்கும் நம்மினும் மிக்க தேவர்களுக்கும் உடம்புகளைப் படைத்தருளி யிருக்கின்றார். அவர் தாம் குறித்த காலம்வரையில் அச்சிற்றுயிர்களை அவ்வுடம்புகளில் வைத்துப் பாதுகாத்து வருகின்றார்; நம்மையும் அங்ஙனமே பாதுகாத்து வருகின்றார்! இனி அக்காலமுடிவில் அவ்வுடம்புகளைச் சிதைத்து அழிப்பது போலவே நம்முடம்புகளையும் அழிக்கின்றார். எவன் எந்த வுடம்பைப் படைத்தானோ அவனே அதனை அழித்தற்கும் உரியவன் ஆவன். நாம் ஒரு சிறு புழுவின் உடம்பைக் கூடப் படைக்க வல்லவர்களாய் இல்லாதபோது, நாம் எந்த உடம்பையேனும் இரக்கமின்றி அழிக்கக் கனவிலும் நினைக்கலாமா? அங்ஙனமாயின் இரக்கமுள்ள கடவுள் மட்டும் தாம் படைத்த ஓருயிரின் உடம்பைப் பின் இரக்க மின்றி அழிக்கலாமோ வெனின்; தன் புதல்வனுக்குத்தான் அமைப்பித்துக் கொடுத்த சட்டை அவனால் அணியப் பட்டுப் பழுதாய்ப் போனபிறகு, அதனைக் களைந்து வேறொரு நல்ல புதியசட்டை செய்வித்துக் கொடுக்குந் தந்தையைப்போல, நம் பெருமானும் தான் ஓருயிர்க்குப் படைத்து உதவிய உடம்பாகிய சட்டை பழுதாய்ப் போனமை கண்டு வேறொரு நல்ல புதிது கொடுக்கவே அதனை நீக்கினுகையின் அஃதவன் இரக்க இயல்பின் உயர்வையே புலப்படுத்துகின்றதல்லாமல் அது மாறு பட்டதெனச் சிறிதும் உணர்த்துகின்றிலது. ஆகவே, நாம் எந்த உயிரின் உடம்பையுஞ் சிதைத்தலும் ஆகாது, சிதைத்து அதன் ஊனை உண்டலும் ஆகாது. அவ்வா றன்றிக் கன்னெஞ்சங்கொண்டு ஓருடம்பை அழித்து

அதன் ஊனை உண்பவர்கள், இரக்க இயல்பை இழத்த லோடு, கடவுளுக்கு மாருய் அவருடைய படைப்பின் நோக்கத்தையுங் கெடுத்தலால், அவர்கள் ஒருகாலத்தும் இறைவனுடைய அருளைப் பெறவேமாட்டார்கள் என்பது திண்ணம்; எக்காலத்தும் அவர்கள் துன்பத்தீக்கடலுட் பட்டுக் கரை காணுது வருந்தித் தவிப்பர்கள்.

இனி, மக்களாய்ப் பிறந்த நாம் எல்லாம் நம்முள் இடையருத பேரன்பு பாராட்டி நடத்தல் வேண்டும். கடவுள் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் உடையவரா யிருத்தலோடு அவற்றினிடத்தே பேரன்பும் வைத்திருக் கின்ருர். நாமும் அதுபோலப் பேரன்பு உடையவர்கள் ஆனுற்ருன் கடவுளை அணுகமுடியும். பகுத்தறிவில்லா உயிர்களிடத்து இரக்கமாகிய அன்பும், பகுத்தறிவுள்ள மக்களிடத்து எல்லையற்ற அன்பும் வைத்து நடந்தால் நாம் கடவுளின் உண்மைப் புதல்வர்கள் ஆவம். ஒருவன் தன் னுடன்பிறந்தாரினும் தன்னைப் பெரியனுக எண்ணி இறு மாந்து, அவரை இகழ்ந்து, அவர் துன்பங்களைப் பாராது ஒழுகுவனுயின் அவன் தந்தை அவனை விரும்புவாரா? அது போலவே, ஒரேகடவுளின் மக்களாகிய நாமும் நம்முள் அன் பின்றி நம்மையே நாம் பெரியராக எண்ணிப், பிறர் துயர் களையாது இறுமாந்து நடப்பமாயின், நம் முழுமுதற் றந்தையாகிய கடவுளும் நம்மைக் கண்டு பெரிதும் அரு வருப்படைவர் என்பது உண்மையே யாம். அன்புக்குப் பகைமையாவது தன்னையே யுயர்வாக நினைக்கும் இறு மாப்பு ஒன்றேயாம். இறுமாப்பு உடையவனைக் கண்டு எல்லாரும் வெறுப்படைவதை நாம் நாடோறுங் கண்டு வருகின்ருேம். இறுமாப்புடையவர்களுக்கு எவரிடத்தும் அன்பில்லாமையையும் நாம் கண்டுவருகின்ருேம். எல்லாம் வல்ல இறைவனே தன்னுயர்வைத் தான் சிறிதும் பாராமல், கடைப்பட்டவர்களான நம்மிடத்தும் சிற்றுயிர் களிடத்தும் அன்பும் இரக்கமும் வைத்து உதவிபுரிந்து வருவதை நாம் நன்ருகத் தெரிந்திருந்தும், உயர்வு சிறிது மில்லாத புல்லர்களான நாம் நம்மை உயர்வாகக் கருதி நம்மனேரிடத்து அன்பின்றி நடத்தல் எவ்வளவு

பேதைமை! மலமும் செந்நீரும் அழுக்குஞ் சளியும் குடரும் நிணமும் வழியும் புழுப்பாண்டங்களாகிய மக்கள் தம்முள் ஒருவர் தம்மை உயர்வாகவும் பிறரைத் தாழ்வாகவும் நினைந்தொழுகுதலினும் பிறிதோர் அறியாமை உண்டோ சொல்லுமின்! ஒருவரிடத்துத் தகாத செயலும், தாழ்ந்த நடையும் இருக்கக்கண்டால் அவரிடத்து இரக்கமும் அன்பும் மிகுதியும் வைத்து, அவரைத் திருத்தித் தம்மோடொப்ப வைத்து நலம் பாராட்டி அன்பினால் அளவளாவுதலே நாம் செயற்பாலதாம்; அங்ஙனம் செய்தல் ஒன்றே நாம் இறைவன் திருவருளைப் பெறுதற்கு ஏற்ற வழியாகும். பிறர் துன்பத்தால் வருந்துவதைப் பார்த்தவிடத்து உடனே அவர் துன்பத்தை நீக்க முயலுவதே நமது கடமையா யிருக்க, அதனைச் சிறிதும் நினையாது தமது நலத்தையே பேணுதல் எவ்வளவு கொடுமை!

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போற் போற்றாக் கடை"

என்ற **திருக்குறளின்படி** அங்ஙனங் கொடுமை செய்து நடப்பவர் கற்றவரேயாயினும் அவர் அறிவில்லாக் கயவரே யாதல் உண்மை. வந்த விருந்தினர் பசியோடு புறத்தே வருந்தியிருக்க, அதனை நினையாது அகத்தே தம் பாழ் வயிறு நிரம்பச் சோற்றையிட்டு மகிழ்வோர் மக்கட் பிறப்பின் சென்றும் எண்ணப்படுவரோ?

"விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

என்னுந் **தெய்வப்புலவர் திருமொழி**யால் விருந்தினரைப் புறத்தே வைத்துண்ணுதலினும் அறக்கொடியது வேறில்லை யென்பது தெளிந்தாம் அல்லமோ? பிறப்பளவிலே தம் மனம்போனவாறு உயர்வு தாழ்வுகளைக் கற்பித்துக்கொண்டு ஒருவரோடொருவர் அன்பின்றிப் பகை கொண்டு இறுமாந்து நடத்தல் மக்கட்பிறப்பின் பயனையும் இறைவன் திருவருட் பேற்றையும் இழத்தற்கே வழியாம் என்க.

இனி நம்மினுந்தாழ்ந்த கூன் குருடு சப்பாணி மாட்டார் முதலியோரிடத்தெல்லாம் இரக்கமும் அன்புங் காட்டுவதோடு, அன்பின் முதிர்ச்சியான அருளுங் காட்டுதல் வேண்டும். அவர்களிடத்து ஏதொன்றனையும் எதிர்பாராமல் அவர்கட்கு இன்றியமையாது வேண்டும் எல்லா உதவிகளுஞ்செய்து அவர்களைத் தூயராக்குதல் வேண்டும். அவர்கள் தாம் முற்பிறவிகளிற் செய்த தீவினைப் பயத்தால் உறுப்புக்கள் குறைந்தும் வலிவிழந்தும் பிறந்து வருந்துகின்றமையால், அவர்போல் நாமும் நடந்தால் நமக்கும் அவ்வாறே குறைந்தபிறவிகள் வரும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு நினைந்து பார்த்து, அவரிடத்தெல்லாம் அருள் கனிந்து ஒழுகுதல் வெண்டும், 'அவர்களைக் குறைவுள்ள தாழ்ந்த பிறவியினும், என்னைக் குறைவில்லாத உயர்ந்த பிறவியினும் வைத்தது வினையே யாகையால், யாம் அவர்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிலேம்' என்று உரைப்பவர்கள், தம்மை அவர்கள் நிலைமையில் வைத்துப்பார்த்தால் உடனே தமது எண்ணத்தை மாற்றிவிடுவார்கள். தாம் ஒருவர் வீட்டுப் புறந்திண்ணையிற் காதடைத்து நாவறண்டு நெஞ்சுலர்ந்து பசித்துக் களைத்துக் கிடக்கும்படி நேர்ந்தகாலத்துத், தம்மை அவ்வீட்டாரேனும் பிறரேனும் ஏனென்று கேளாதும் பாராதும் போவராயின் அங்ஙனம் வினைப்பயனை மேலெடுத்துப் பேசின அவர் ஏதுதான் நினைப்பர்! அவர்கள் கேளாதும் பாராதும் போனதும், தாம் எவராலும் பேணப்படாது வறிதே வருந்திக்கிடந்ததும் எல்லாம் வினைப்பயன் என்று எண்ணிக் கிடப்பரோ? கிடவார் அன்றே. தாம் வினைப் பயனால் வருந்தினாலும், அதனால் விளையும் வருத்தத்தைத் திருவருளுதவி கொண்டு நீக்கும் நல்லோர் துணையை நாடியே இருப்பர். ஒருவர் ஓர் ஆட்டை அறுப்பது கண்டு 'அவர் அதனைத் தமது உணவுக்குக் கொல்கின்றார்; அஃது அதன் வினை; நாம் அதனை விலக்கக் கடவம் அல்லம்' என்று வாளா இருந்தவர் தம்மை ஒரு புலி பிடிக்க வருங்காலத்துப் பிறர் அதனைக் கண்டு விலக்காது 'இப்புலிக்கு இரையாக வேண்டுவது இவர் வினை

யாதலின், இதனை யாம் விலக்கற்பாலம் அல்லம்' என்று கூறிப் போவராயின், அது கண்டு அவர் நெஞ்சம் பதையாது வாளா இருக்குமோ? இராதன்றே. ஆகையால், வினையினால் நேரும் தீய செயல்களைத் தமது தூய அறிவினாலும் திருவருட்டுணையினாலும் முயன்று விலக்க முந்தும் நல்லோர் அருட்டன்மை உண்மைச் சிவ குணமாம் என்று தெளிந்துகொள்ளல் வேண்டும். இவ்வாறு இரக்கமும் அன்பும் அருளும் எல்லையின்றி மிகப் பெற்றோர் களங்கம அற்ற தூய உயிர்களாய் இவ்வியல்புகளுக்குத் தூய நிலைக்களனான சிவத்தாற் பற்றப்பட்டு அச் சிவத்தில் அழுந்திச் சிவவடிவாய் நிலைமாறாமல் நிற்பரென்பது திண்ணம்.

இவ்வாறு இறைவனது உண்மைப் பெருநிலையை இனிதுணர்ந்து, அவ்வுணர்ச்சி வலியால் இரக்கமும் அன்பும் அருளும் முதிருமாறு இவ்வுலகத்தின்கண் உள்ள எல்லா வுயிர்களையும் இறைவற் கிருப்பிடமாய்க் கண்டு பழகவே எல்லாரும் துன்பத்தின் நீங்கிப் பேரின்பத்தின் வைகுவர். இதுதான் எத்திறத்தவரும் உடன்பட்டுத் தழுவுதற்குரிய 'சமரச சன்மார்க்கம்' என்னும் முடிந்த பேருண்மை நெறியாம் என்க.

ஓம்

கடவுளுக்கு அருளுருவம் உண்டு

அன்பர்கள் சிலர் கடவுளுக்கு உருவம் இல்லை யென்றும், மக்களுக்குரிய கண் கால் முதலிய உறுப்புக் களின் வடிவங்களை அவர்க்கேற்றிக் கூறுதல் குற்றமா மென்றும் கூறுகின்றார்கள். ஆயினும், கடவுளின் உண்மை நிலையை நுணுகி ஆராயுங்கால் அவர்க்கும் உருவம் உண்டென்பது புலனாகின்றது. உருவமென்னுஞ் சொல்லைக் கேட்டவளவானே அதனைக் கடவுளுக்குக் கற்பித்தல் வழுவாமென்று நினைத்தலாகாது. உருவம் மூன்று வகைப்படும்; அறிவில்லாத கல், மண், நீர், நெருப்பு முதலியவற்றின்கண் அமைவதூஉம், அறிவோடு கூடிய உயிர்களுக்கு இருப்பிடமான பலவகை உடம்புகளில் அமைவதூஉம், இவற்றிலெல்லாம் மேலதான அறிவின் கண் அமைவதூஉம் என மூன்றும்.

அறிவில்லாப் பொருள்களில் அமைந்த உருவமானது அப்பொருள்கள் கலங்கலாய் நின்ற நிலையைவிட்டு ஓர் ஒழுங்குபட்டவிடத்தே உளதாவதாம். வடிவு தெரியாமல் நின்ற நீராவியானது குளிரால் இறுகி நீராய் இறங்கும் போது வடிவுடையதாகின்றது. நுண்ணிய அழல்உருவா யிருந்த ஆவியிலிருந்து இந்த நிலவுலகமும் ஞாயிற்று மண்டிலம் திங்கள் மண்டிலம் முதலியனவும் உருவாய்த் திரண்டு தோன்றிய பின்னர்த் தாம் அவை மக்களும் பல் லுயிர்களும் உயிர்வாழ்தற்கு இடமாய்ப் பயன்படுவவாயின. இங்ஙனமே ஆவியாயிருந்த எல்லாப் பொருள்களும் உரு வாய்த்திரண்டு வெளிப்பட்ட பின்னரே அவை பயன் பெரிதுடையவாதல் தேறற்பாற்று.

இனி அறிவுடைய உயிர்கட்கு இருப்பிடமான பல திறப்பட்ட உடம்புகளும் ஆவிவடிவில் நின்றக்கால் உயிர் களுக்குப் பயன்படாதனவாய் இருந்தமையும், அவை ஓர்

ஒழுங்குபட்டு உடம்புகளாய்த் தோன்றியபின்னர் அவ்வுயிர் களுக்குப் பெரிதும் பயன்படுவனவாய் அமைந்தமையும் உணரற்பாலனவாம். ஆறறிவுடைய மேலான மக்கட்பிறவி யெடுத்த நம்மனோர் தத்த முடம்புகளில் இருந்து வாழாரா யின் அவரெல்லாம் அறிவு விளங்கப்பெறுவரோ? மக்க ளுடம்பி லமைந்த கண் செவி முதலான உறுப்புக்கள் எத்துணை வியப்பான உருவ அமைப்போடு பொருந்தி மக்கள் அறிவு விளக்கத்திற்கு உதவியாய் நிற்கின்றன! இவ் வுருவ அமைப்புகளும், உடம்புகளும், இல்லாதொழியின் மக்கள் அறிவு நிலை என்னும் என்பதனை நாம் எடுத்துச் சொல்லுதலும் வேண்டுமோ? கண் பழுதான குருடனும், காது கேளாத செவிடனும், வாய் பேசாத ஊமனும், கை கால் குறைந்த முடவனும் எவ்வளவோ அறிவு விளக் கத்தை யிழந்து எவ்வளவு துன்புறுகின்றூர்கள்! இதனுல் உருவ அமைப்புகள் திருத்தமாய் முதிர முதிர மக்கள் அறிவும் முதிரு மென்பதும் புலனுகின்றதன்றே?

இனி அறிவின்கண் அமைந்த உருவத்தின் மேன்மை யும் ஒரு சிறிது ஆராய்தல் வேண்டும். தாயின் கருப்பை யிலிருந்து பிறந்து மகவுக்கு உள்ள அறிவின் நிலைமையை நினைத்துப்பாருங்கள்! அதன் அறிவு எவ்வளவு மழுக்க மடைந்திருக்கின்றது! அந்த நிலையில் அதற்கும் அறிவில் லாக் கல்லுக்கும் வேறுபாடு மிகச் சிறிதேயாம். கல் ஏதொரு முயற்சியு மில்லாதுகிடக்க அம்மகவோ வாய் திறந்து அழுதலும் பால் பருகுதலும் ஆனமுயற்சி உடைய தாய் இருத்தலே அது கல்லின் வேறுபட்டதன்மை உடையதென்று நமக்கு அறிவிக்கின்றது. அக்காலத்தில் எதனையும் நினைக்கவாவது அறியவாவது உணரவாவது அது வல்லதன்று. அங்ஙனமிருந்த அம்மகவு பசியால் உந்தப்பட்டுப் பால்பருகியும், அப்பாலைத் தரும் அன்னையை அறிந்தும், அதன்பின் தந்தையையும் உலகத்துப் பல பொருள்களையும் படிப்படியே அறிவதாகியும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறுகின்றது. அங்ஙனம் அதன் அறிவு மழுங்கியிருந்த நிலைக்கும் விளங்கிவரும்

நிலைக்கும் வேறுபாடு என்னையெனின்; அழுக்குப்படிந்த கண்ணாடியில் ஏதோர் உருவமும் தோன்றாமைபோல மகவின் அறிவில் ஏதோர் உருவமும் தோன்றா திருந் தமையே மழுங்கிய நிலையென்றும், இனி அஃது உலகத் துப்பொருள்களை அறிய அறிய அப்பொருள்களின் வடிவத் தோடு ஒத்த உருவம் அதன் அறிவின்கண் விளைதலின் அதுவே அதன் அறிவுவிளங்கும் நிலையென்றும் பகுத் துணர்ந்துகொள்ளல் வேண்டும். எனவே, அறிவில் உருவங்கள் தோன்றாதிருந்த வரையில் அவ்வறிவு மழுங்கிக் கிடக்குமென்பதும், அவ்வுருவங்கள் தோன்றத் தோன்ற அவ்வறிவு மிகுதியும் விளக்கமுடையதாமென் பதும் இதுகொண்டு அறியற்பாலனவாம். எவனுடைய அறிவு திருத்தமான உருவங்கள் மிகுதியும் உடையதா கின்றதோ அதுவே மிகச் சிறந்த அறிவாய்த் திகழ்கின் றது. ஆதலால் அறிவும் ஓர் ஒழுங்குபட்ட உருவமுடைய தாய்த் திகழத் திகழ அதுவும் மிகச் சிறப்பெய்துமாறு உணரற்பாற்று.

இங்ஙனமாக அறிவில்லாப் பொருளும், அறிவுள்ள உயிரோடு கூடிய உடம்பும், மக்கள் அறிவும் உருவுடையன ஆகஆக நிரம்பவுந் திருத்தமுற்றுப் பயன்படுதலும் விளக்க மெய்துதலும் நமது வழக்கத்தில் மறுக்கப் படாத உண்மையாய் இனிது அறியப்படுதலின், உருவம் பெற்றி ருத்தல் குற்றமாமென்று கூறுவது பொருந்தா உரையாம். அறிவுப் பொருளிலும் அறிவில்லாப் பொருளிலுங் காணப் படும் உருவங்களே குற்றமில்லாதனவாய்ப் பயன்மிக உடை யனவாய் விளங்குமாயின் பேரறிவுப் பொருளாய் எல்லாம் வல்லதாய் உள்ள கடவுளிடத்தே காணப்படும் உருவம் குற்றமுடையதாகுமோ? நன்கு ஆராய்ந்து பார்மின்கள்! இனி அறிவில்லாப் பொருள்களிற் காணப்படும் உருவங் களைக் காட்டினும் அறிவுள்ள உயிரோடு சேர்ந்த உடம்பு களிற் காணப்படும் உருவங்கள் சிறந்தனவாய் இருத்தல் போலவும், உடம்புகளிற் காணப்படும் உருவங்களைக் காட்டி னும் உயிர்களின் அறிவிற் காணப்படும் உருவங்கள் மிகச்

சிறந்தனவாய் இருத்தல் போலவும் பேரறிவுப் பிழம்பான இறைவனிடத்தே காணப்படும் உருவங்கள் மிகமிகச் சிறந் தனவாய் இருக்கு மென்பதை யாம் உரைத்தலும் வேண் டுமோ? அங்ஙனமாயின் உருவுடைப் பொருள்கள் எல்லாம் சில காலத்துள் அழிந்து போதலைக் காண்கின்றேமாதலின் அதுபோல் உருவுடைய கடவுளும் அழியு மென்பது பெறப் படுமே எனின்; அங்ஙனமன்று. அறிவில்லாப் பொருள் களிலுள்ள உருவம் மட்டும் அழிவுபெறுமே யல்லாமல், அறிவின்கண் உள்ள உருவம் ஒரு ஞான்றும் அழிவுறாது. சிற்பவித்தையிற் றேர்ந்த ஓர் அறிஞன் சலவைக் கல்லிற் செதுக்கித் திரட்டிய ஓர் அழகிய உருவம் அழிந்துபோ மாயினும், அதற்குமுதலாய் அவன் அறிவில் நின்ற உரு வம் ஒரு ஞான்றும் அழிவதில்லை. அவன் தன் அறிவின் கண் அமைந்த அவ்வுருவத்திற்கு இசையச் சலவைக் கல்லின்கண் அதுபோன்ற எத்தனையோ வடிவங்களை அமைக்கமாட்டுவான். இங்ஙனம் வல்லவனுன அவ்வறிஞ னின் அறிவுருவம் ஒரு ஞான்றும் அழியாமையை நன் குணர்ந்தவர்கள் கடவுளின் அருளுருவம் அழியுமென்று கூற ஒருப்படுவார்களோ? ஆதலாற் கடவுளின் அருளுரு வம் ஒரு ஞான்றும் அழியாத தொன்றாகலின் உருவங்க ளெல்லாம் அழியுமெனப் பொதுப்படக் கூறுதல் ஒரு சிறி தும் பொருந்தாததொன்றாம்.

இனி உருவுடைய அறிவில்லாப் பொருள்கள் அழிந்து போதல் உருவத்தினுல் வந்த குற்றமன்று, அவை பருப் பொருள்களாய் இருத்தலினுல் அழிகின்றன என்றும், அவையும் நுணுகிய நிலையை அடைந்த வழி அறியாமல் இருக்குமென்றும் கடைப்பிடித்தல் வேண்டும். அறிவின் கட் காணப்படும் உருவம் என்றும் அழியாமல் ஒரே தன் மையாய் நிற்க, அறிவில்பொருளின்கண் உள்ள உருவமே அழியும் வகையை உற்றுணர வல்லார்க்கு அஃது அவ்வப் பொருளின் தன்மையால் நேர்ந்ததன்றி உருவத்தினுல் நேர்ந்ததன்றென்பது தெள்ளிதிற் புலனும். அறிவு மிக நுணுகிய இயல்பினதாகலின் அதன்கண் உருவம் என்றும்

அழியாத இயல்பிற்றும்; அறிவில் பொருள் பருப்பொருளாதலின் அதன்கண் உருவம் அழியும் இயல்பிற்றும் நிற்றல் நுண்ணுணர்வின ரெல்லார்க்கும விளங்கற் பாலதேயாம்.

இனி, உலகத்திலிலுள்ள அறிவில்லாப் பொருள்களும், அறிவுடைய உயிர்ப்பொருள்களும் உருவங்களைப் பெற்றது தத்தம் முயற்சியினால் அன்று. என்னையெனின், அறிவில்லாப்பொருள்கள் தாமாகவே ஓர் உருவத்தை அமைத்துக்கொள்ளமாட்டா. அறிவுடைய சிற்றுயிர்களோ தாம் உருவங்களைப் பெறுதற்குமுன் அறிவுமழுங்கிக் கிடந்தமையால் அவைகளும் உருவங்களைச் செய்து கொள்ளமாட்டா கலங்கிய நிலையில் ஏதோருருவமுமின்றி இருந்த எல்லாப் பொருள்களும் உருவங்களைப் பெறுதற்கு ஒரு பேரறிவின் உதவி இன்றியமையாத தென்பது சிறிது ஆய்ந்துணரவல்லார்க்கும் இனிது விளங்கும். அதனால் அத்தகைய பேரறிவு வாய்ந்த கடவுளொருவர் உண்டென்னும் உண்மை ஐயமின்றித் துணியப்படுவதாகும். இவ்வுலகத்திற் காணப்படும் எல்லா உருவங்களுக்கும் முதல் கடவுளுடைய அறிவின்கண் உண்டென்பதும் இது கொண்டு முடிக்கப்படும். ஓவியக்காரன் வரையும் ஓவியங்களின் உருவங்களுக்கெல்லாம் முதல் அவன் அறிவின்கண் அமைந்திருத்தல் போலவும், சிற்பம் வல்லான் ஒருவன் அமைக்கும் பாவைகள், உருக்கள், கட்டிடங்கள் முதலானவற்றின் வடிவங்கட் கெல்லாம் முதல் அவன் அறிவின்கண் அமைந்துகிடத்தல் போலவும், காவியங்கள், கதைகள், அறிவுநூல்கள் முதலியவற்றிலெல்லாம் உள்ள உண்மைகளின் வடிவங்களுக்கு முதல் அவற்றை இயற்றிய புலவனறிவின்கண் விளங்கி நிற்றல் போலவும், இவ்வுலகுயிர்களிற் காணப்படும் எல்லாவடிவங்களுக்கும் முதல் கடவுள் அறிவின்கண் உண்டென்பது திண்ணமாம். பருப்பொருளிற் காணும் வடிவங்கள் சிலபல காலத்துள் அழிந்துபோதல்போல அறிவுப்பொருளில் அமைந்த உருவங்கள் அழியாது எஞ்ஞான்றும் நிலைபெற்றிருக்கு

மென்பது மேலே காட்டப்பட்டமையின், கடவுள் அறிவின் கண் உள்ள எல்லையற்ற உருவங்கள் அத்தனையும் ஒரு காலும் அழியமாட்டாவென்று கடைப்பிடிக்க. பிரெஞ்சு தேயத்திற் புகழ்பெற்று வயங்கிய இயற்கை நூற்புலவர் **பாரடக்** என்பார் நுண்ணிய பொறிகள் பலவற்றின் உதவி கொண்டு பல்லாண்டுகளாக ஆராய்ந்து கண்ட முடிபுகளும் அறிவுக்கு உருவமுண் டென்பதையும், அஃது ஏனை உருவங்களைப்போல் அழியாது என்றும் நிலைபேருயுளதாமென் பதையும் இனிது நாட்டுகின்றன. இவைகளை எல்லாம் ஆராய்ந்துபாராமற் கடவுளுக்கு உருவமில்லையென எளிதிற் கூறிவிடுவது அறிவு வளர வேண்டுவார்க்கு முறையாகாது. அதுகிடக்க.

இனி, உலகத்தின்கட் காணப்படும் எல்லாப் பொருள்களின் வடிவங்களும் — அவை எத்துணை இழிந்தனவாயினும் அன்றி எத்துணை உயர்ந்தனவாயினும், அவை எத்துணைச் சிறியனவாயினும், அன்றி எத்துணைப் பெரியனவாயினும்—எல்லாம் மக்களாலாவது, ஏனை உயிர்களாலாவது அன்றி அறிவில்லாப் பொருள்களாலாவது தாமாக அமைக்கப்பட்டன வல்லவே! அவையெல்லாம் முழுமுதற் கடவுளின் அறிவால் ஆக்கப்பட்டன வல்லவோ? அவ்வறிவால் ஆக்கப்பட்ட அவ்வடிவங்கள் அத்தனைக்கும் முதலான நுண்ணிய உருவங்கள் அதன் அறிவின்கண் அமைந்துகிடப்பனவல்லவோ? ஒரு கண்ணாடியின் பக்கத்தேயுள்ள பொருள்களின் வடிவங்களோடொத்த வடிவங்கள் அக்கண்ணாடியின்கண் விளங்கித் தோன்றுதல் போல இறைவனது பேரறிவாகிய பெருங் கண்ணாடியின் எதிரேயுள்ள எல்லாப் பொருள்களின் வடிவங்களையும் ஒத்த அருள் உருவங்கள் அதன்கண் விளங்கித் தோன்றுமல்லவோ? ஆதலால், மக்கள் உலகத்திலுள்ள எந்தப் பொருளைக் கடவுளாக நினைந்து வணங்கினும் அவ்வணக்கம் அப்பருப்பொருள் உருவத்தின்கட் செல்லாதாய், அதற்கு முதலான இறைவனது அருட் பொருள் உருவத்தின்கட் செல்லுமென்பதும், அங்ஙனஞ்

செல்லவே அவர்க்கு அவ்விறைவனருள் கிடைக்குமென் பதும் உறுதியாம். கடவுள் அருளின்கண் எல்லா உரு வங்களும் உண்டென்பதற்குக்,

"குறித்ததொன் றாக மாட்டாக் குறைவில துதை லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுத லிலாமை யானும்
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மல னருளி னாலே."

என்னும் **சிவஞானசித்தியார்த்** திருமொழியே சான்றாம்.

எந்த வடிவில் வழிபடுவார்க்கும் இறைவனருள் உண் டென்பதற்கு,

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாமே."

என்னும் **திருநாவுக்கரசு நாயனார்** திருமொழியே சான்றாகும்.

இனிக் கடவுளுக்கு உருவமில்லையென்றும், அவர் அருவமாகவே இருப்பாரென்றும், அவர் குணமற்றவ ரென்றும், அதனால் நிர்க்குணோபாசனையே சிறந்ததென் றும் நன்றாய் ஆய்ந்துபாராமற் கூறுஞ்சொற்கள் பொரு ளற்ற புன்மொழிகளாய் இருக்கின்றன. ஏனெனிற், பேரறிவுப் பொருளாகிய அதற்கு அறிவும், பேருட்பொரு ளாகிய அதற்கு அருளும், பேரின்பப்பொருளாகிய அதற்கு இன்பமும், பெருவல்லமைப் பொருளாகிய அதற்கு வல்ல மையும் அரிய பெரிய குணங்களாயிருக்க அதனைக் குண மற்ற நிர்க்குணப்பொருள் என்பது எவ்வாறு பொருந் தும்? குணமில்லாத பொருள் எங்கேனும் உண்டா? குண மில்லாதது பொருளாகுமா? என்று இங்ஙனமெல்லாம் சிறிதாயினும் ஆராய்ந்து பார்க்கவல்லார்க்கு நிர்க்குணம் நிர்க்குணோபாசனை முதலிய சொற்களெல்லாம் பொருளில் லாத வெற்றாரவார உரைகளேயாம் என்பது தெளிவாக விளங்கும். அங்ஙனமாயின், அறிவு நூல்கள் சிற்சில இடங்களிற் கடவுளை நிர்க்குணர் என்றோதுவது ஏனெனிற், சத்துவம், இராசதம், தாமதம் என்னுந் தூய வல்லாப் பருப்பொருட்குணங்கள் மூன்றும் அவரிடம்

இல்லையென்பதை உணர்த்துதற் பொருட்டாகவே அங்ஙனம் அவை ஒவ்வோரிடங்களிற் கூறுகின்றனவல்லாற் பிறிதில்லையென்பது சிவஞானபோதமாபாடியத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

இனிக், கடவுள் பேரறிவுப் பொருளென்பது முடிக்கப்பட்டதனாலும், அவ்வறிவும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களின் வடிவங்களையும் உண்டுபண்ணியதொன்றாகையால் அவற்றை உண்டுபண்ணுதற்கு முன்னும் பின்னும் எப்போதும் அவர் அறிவின்கண் அவற்றிற்கு முதலான எல்லா உருவங்களும் உண்டென்பது பெறப்படுதலானும் கடவுள் அருவாய் இருப்பரென்னு முரையும் வெற்றுரையே அல்லது பிறிதன்று. அங்ஙனமாயின் அறிவுநூல்களில் அவர் அருவமென்றும் ஒவ்வோரிடங்களிற் கூறப்படுதல் என்னை யெனின், மக்களுடைய ஊனக் கண்களுக்கு அவருடைய அருளுருவம் புலப்படமாட்டாதாகலின் அவ்வாறு சொல்லப்பட்டதென்க. அருட்கண்ணுடையார்க்கு அவன் அருளுருவம் விளங்கித் தோன்றுமென்பதற்குத் திருஞானசம்பந்தப் பெருமான் ஏதும் அறியாக் குழவிப்பருவத்தே அவன்றன் திருவுருவத்தைக் கண்டு பாடியதும்,

"அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே"

என்ற திருநாவுக்கரசுகளின் அருமைத் திருமொழியுமே போதிய சான்றாமென்க.

என்று இத்துணையுங் கூறியவாற்றால், உருவமானது பெரிதும் பாராட்டற்பாலதே யன்றி இழிக்கப்படத்தக்கதன்றென்பதும், அறிவுவிளக்கமெல்லாம் உருவத்தைப்பற்றியே நிகழுமாதலால் அஃது அழியாத உருவ அமைப்புடையதாகவே நிலைபெறுமென்பதும், உலகின்கட் காணப்படும் எல்லா வடிவங்களின் தோற்றத்திற்கும் நிமித்தகாரணமான கடவுளின் எல்லையற்ற அறிவின்கண் எல்லா உருவங்

களும் உண்டென்பதும், கடவுள் அருட்குண முடையராயும் அறிவுருவ முடையராயும் விளங்குவரல்லது நிர்க்குணமாயும், அருவாயும் இருப்பரல்ல ரென்பதும், எவ்வெவர் எவ்வெவ் உருவிற் கடவுளை வழிபடினும் அவ்வவர்க்கு அவ்வவ் உருவிற்கேற்பக் கடவுள் தமது அருளை வழங்குவ ரென்பதும் எடுத்துக் காட்டப்பட்டன.

சீவகாருணியம்

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவிலும்பொய்,
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே"

'சீவகாருணியம்' என்பது இரண்டு சொற்களால் ஆகிய ஒரு சொற்றொடராகும். இதனைப் பிரித்தால் சீவ என்றும் காருணியம் என்றும் இரண்டு சொறகள் பெறப் படும். இனிச் சீவர்கள் என்பன யாவையோ வென்றால்; தொட்டால் அறியும் ஓர் அறிவுமட்டும் உடைய புல் மரம் செடி கொடி முதலியனவும், தொட்டால் அறிவதோடு நாவினாற் சுவைக்கும் சுவையுணர்வும் உடைய ஈரறிவு உயிர்க ளான நத்தை சங்கு கிளிஞ்சில் முதலியனவும், தொட் டறிந்து நாவாற் சுவைத்தலோடு மூக்கால் நாற்றத்தை யுணரும் மூவறிவு உயிர்களான கறையான் எறும்பு ஈசல் முதலியனவும்' தொடுதலுஞ் சுவைத்தலும் முகருதலும் என்னும் உணர்வுகளோடு கண்ணாற் காணும் அறிவு முடைய நான்கறிவு உயிர்களான நண்டு தும்பி வண்டு தேனீ முதலியனவும், தொடுதல் சுவைத்தல் முகருதல் காணல் என்னும் நான்குணர்வுகளோடு காதாற் கேட்டுணரும் அறிவும் உடைய ஐயறிவு உயிர்களான விலங்குகள் பறவை கள் காட்டு மிருண்டிகள் முதலியனவும், தொடுதல் சுவைத்தல் முகருதல் காண்டல் கேட்டல் என்னும் ஐந்தறிவுகளோடு நல்லதிது தீயதிது என்று பகுத் துணரும் மனவுணர்வும் உடைய ஆறறிவு உயிர்களான மக்களும் என்று சொல்லப்பட்ட இந்த ஆறுவகையில் அடங்கிய உயிர்கள் அத்தனையுமேயாம்.

இனிக் 'காருணியம்' என்பது அருள் அல்லது இரக்கம் என்னும் பொருளைத் தருவதாகும். இவ்விரக்கம் என்னும் உயர்ந்த இயல்பானது இது நல்லது இது தீயது

என்று பகுத்துக் காணும் உணர்ச்சி வாய்ந்த மக்களிடத்து மட்டும் காணப்படுகின்றதே யல்லாமல், மக்கள் அல்லாத மற்ற ஐவகை உயிர்களிடத்துங் காணப்படுகின்றிலது. அவ் ஐவகை உயிர்களுள்ளும் மிகவும் கீழ்ப்படியில் உள்ள புல் மரஞ் செடி கொடிகள் முதலான ஓர்அறிவு உயிர்கள் இருந்த இடத்தைவிட்டு நகராதனவா யிருத்தலாலும், அவற்றின் செய்கை இன்னதென்று விளங்காமையால் அவற்றின் இயல்பும் இன்னதென்று புலப்படாமையாலும் அவற்றைப்பற்றி நம்மால் ஆராய்ந்து பார்த்தல் முடியாது. இவற்றைத் தவிர மற்ற நகர்ந்துசெல்லும் உயிர்களெல்லாம் தம்முடைய பலவகைப்பட்ட செய்கைகளால் தமக்குள்ள பலவகைப்பட்ட தன்மைகளையும் நமக்கு நன்கு வெளிப்படக் காட்டுகின்றன. இவைகள் பசியெடுத்த காலங்களிலெல்லாம் தம்மினுங் கீழ்ப்பட்ட உயிர்களைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்று அவற்றின் உடம்பைச் சிதைத்துத் தின்னுகின்றன! கோழி குருவி கொக்கு நாரை முதலிய பறவைகள் தாம் பசியெடுத்தபொழுது பூச்சி புழு மீன் முதலான தம்மினுஞ் சிறிய உயிர்களை இரக்கமின்றிக் கொன்று தின்னுகின்றன! நரி ஓநாய் புலி கரடி அரிமா முதலான விலங்கினங்களோ தமக்குப் பசியுண்டானபோது மான் மரை ஆடு மாடு முதலான அமைதியுள்ள உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனைக் கிழித்துத் தின்பதோடு, மாந்தர்களையுங் கூடச் சிற்சில பொழுதுகளிற் கொலை புரிந்து அவர்கள் உடம்பை உணவாக உண்டுவிடுகின்றன! இவ்வலிய பறவைகளும் விலங்குகளுமேயன்றி, மிக மெலிய உயிர்களான் தவளை பல்லி சிலந்தி ஈப்புலி முதலியனவும் தம்மினுஞ் சிறிய பூச்சிகளைப் பிடித்துத் தின்னுகின்றன! ஆகவே, இரக்கவியல் யென்பது மக்கள் அல்லாத மற்றை உயிர்க்கூட்டங்களிற் பெரும்பாலும் இல்லை யென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்குகின்றதன்றோ?

இனி இவ்விரக்கமென்பது எந்த உயிர்களிடத்து இல்லையோ அந்த உயிர்கள் எல்லாம் கொடிய வன்னெஞ்ச

மும் கொலைத் தொழிலும் உடையனவாய் இருக்கின்றன. இரக்கம் எந்த உயிர்களிடத்து இருக்கின்றதோ அந்த உயிர்கள் இனிய மென்னெஞ்சமும் எல்லாரும் விரும்பத் தக்க இனிய செய்கையும் உடையனவாய் இருக்கின்றன. இதனாலேதான் இரக்கம் இல்லா உயிர்களின் தன்மையை விலங்கின்றன்மை என்றும், இரக்கம் உள்ள உயிர்களின் றன்மையைக் கடவுட்டன்மை என்றும் வழங்கிவருகின் றோம். இனி மக்களின் இயற்கையோ இவ்விரண்டிற்கும் நடு நிற்கும் தன்மைவாய்ந்ததாய் இருக்கின்றது. பசிநோய் தீரும்பொருட்டுக் கொடிய வன்னெஞ்சம் உடையராய்ப் பிற உயிர்களிடத்துச் சிறிதும் இரக்கம் இன்றி அவற்றைக் கொலைசெய்து அவற்றின் ஊனைத் தின்பவர்கள் விலங்கின் றன்மையை அடைகின்றார்கள். தமக்குக் கடும்பசி உண் டான காலத்தும் தம்முயிர்போல் மன்னுயிரை எண்ணி அவற்றிற்குச் சிறிதுந் தீங்குசெய்யாமல் தமக்குக் கிடைத்த காய் கனி கீரை கிழங்கு பயறு முதலியவற்றை உணவாகக் கொண்டு எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் வைத்து ஒழுகுபவர்கள் கடவுட்டன்மையை அடைகின்றார்கள். எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்களுக்குந் தலைவரும் தாய்தந்தையருமாய் விளங்கும் முழுமுதற் கடவுள் அள விறந்த இரக்கம் உடையவராய் இருக்கின்றார். அங்ஙனம் அளவிறந்த இரக்கம் உடையவரான கடவுளை அடைந்து அவரது பேரின்பத்தை நாம் நுகருதற்கு நாமும் அவர் போல் அளவிறந்த இரக்க இயல்பாகிய கடவுட்டன்மையை அடைதல்வேண்டும். எவர்கள் மென்மையான இனிய இரக்க இயல்பு உடையவராகின்றார்களோ அவர்களுக்கே எல்லாம்வல்ல ஆண்டவன் அருள்புரிவான் என்பது அருட் பெருஞ் செல்வரான **தாயுமானசுவாமிகள்**,

“ கல்லால் எறிந்துங்கை வில்லால் அடித்துங் கனிமதுரச்
சொல்லாற் றுதித்துநற் பச்சிலை தூவியுந் தொண்டரினம்,
எல்லாம் பிழைத்தன அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே.”

என்னும் செய்யுளிற் கொல்லாவொழுக்கம் உடையவர்க்கே

இறைவன் நேர்நின்று அருள்புரிவான் என்று கூறியவாற்றானும், திருவருட்பிரகாச வள்ளலாரான **இராமலிங்க சுவாமிகள்**

"வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும்
இந்திரிய மவைகலந்துள் இயங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே."

என்னும் அருட்பாவினுல் கொலைத்தொழி லில்லாதவர்களின் உடம்பு உயிரெல்லாம் இறைவன் கலந்துநின்று பொலிகுவான் என்று கூறிய வாற்றானும் நன்கு விளங்கும்.

இன்னும் பேர்இரக்க வியல்பான கொல்லாமை உடையவர்களுக்கு எல்லா நல்லியல்புகளுந் தாமேவந்து பொருந்து மெனவும், அஃது இல்லாதவர்களுக்கு எல்லாத் தீய தன்மைகளும் மேன்மேற் கிளைத்தெழுந்து அவர்களைக் கொடிய விலங்கினங்களாக்கி விடுமெனவும் இனிது விளக்கும் பொருட்டே நம் **தாயுமான சுவாமிகள்,**

"கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்அக்
குணம் ஒன்றும் ஒன்றிலேன்பாற்
கோரம்எத் தனைபட்ச பாதம் எத்தனைவன்
குணங்க ளெத்தனை கொடியபாழ்
கல்லாமை எத்தனை அகந்தைஎத் தனைமனக்
கள்ளம் எத்தனை உள்ளசற்
காரியஞ் சொல்லிடினும் அறியாமை எத்தனை
கதிக்கென் றமைத்த அருளிற்
செல்லாமை எத்தனைவிர் தாகோஷ்டி என்னிலோ
செல்வ தெத்தனை முயற்சி
சிந்தைஎத் தனைசலனம் இந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலா

அல்லாமை எத்தனை அமைத்தனை உனக்கடிமை
ஆனேன் இவைக்கும் ஆளோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே.''

என்றும்,

''கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.''

என்றும் அருளிச் செய்தனர்களாயின் கொல்லாவொழுக்க மாகிய தெய்வத் தன்மையின் மேன்மையையும், கொலை யொழுக்கமாகிய விலங்கின் றன்மையின் தாழ்மையையும் நாம் விரித்துச் சொல்லுதலும் வேண்டுமோ?

பாருங்கள், விலங்கின்றன்மையாகிய கொடுந் தன் மைகள் நம்மிடம் உண்டாகும்போது நாம் விலங்குகளாய் விடுதலோடு, நம்மைச் சேர்ந்தவர்களையும் விலங்குகளாக்கி விடுகின்றோம். நாம் மற்றவர்களிடம் சினங்கொண்டு உரத்துப்பேசினால், அவர்களும் நம்மேற் சினங்கொண்டு உரக்கப்பேசுகிறார்கள்; உடனே அதனை மாற்றி அன்புடன் அமைதியாகப் பேசுவோமாயின் அவர்களும் உடனே தமது சினத்தைவிட்டு அன்புடன் அமைதியாகப் பேசுகின் றார்கள்; இன்னும் தமக்குரியவர்களை இழந்து ஆற்றாமல் வாய்விட்டு அழுபவர்களைச் சிறிது நேரம் பார்த்துக்கொண் டிருந்தோமாயின் நமக்கும் ஆற்றாமையால் அழுகை வரு கின்றதன்றோ? உடனே அவர் அவ்வழுகையை நிறுத்தி வேறொரு மகிழ்ச்சியான தொன்றை நினைந்து சிரிப்பாராயின் அவரை அப்போது கண்டு நமக்குஞ் சிரிப்பு வருகின்ற தன்றோ? இங்ஙனமே இரக்கமற்ற கொடிய கொலைத் தொழிலையும், அதனால் வரும் புலால் உண்ணுதலையும் நாம் பழகி வருவோமாயின் இரக்க மற்ற கொடிய விலங்குகளாகிய புலி கரடி சிங்கம் முதலியவற்றின் றன் மையை நாம் அடைவதோடு நம்மைச் சேர்ந்தவர்களும் நம்மைப் பார்த்து அக்கொடிய இயல்பை அடையும்படி செய்து விடுவோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் பிறவுயிரைக் கொன்றதனால் வரும் புலாலைத் தின்று பழகுவாராயின்; அவரோடு சேர்ந்த அக்குடும்பத்தா ரெல்லாரும் அவரைப்போற் புலாலையுண்டு கெட்டுப்போவர். கலப்பாலிற் குற்றிய ஒரு சிறு பிரைத்துளியானது அப் பால் முழுவதையுங் கெடுத்துத் தயிராக்குவது போலவும், ஒரு சிறு தேளின் கொடுக்கில் உள்ள கடுகளவு நஞ்சானது ஒருவர் உடம்பில் உள்ள செந்நீரிற் கலந்த அளவானே அஃது அவர் உடம்பு எங்கும் பரவி அவரை மிகவும் வருந்தச்செய்வது போலவும், ஓரிடத்திற் றோன்றிய அழுகற் பிணநாற்றமானது நெடுகப் பரவித் தான் பரவிய இடமெல்லாம் தன் நாற்றமே நாறும் படி செய்வது போலவும் தீய பழக்கம் உள்ளோர் சேர்க்கையினால் அவர்களைச் சேர்ந்தவர்கள் பலரும் அவரைப்போல் தீய பழக்கம் உடையவ ராகின்றார்கள். இது பற்றியே,

"கொலையிலான் உதவும் அன்னங் கூறிற்பேர் அமுதமாகும்
கொலையுளான் உதவும் அன்னங் கூறிற்பேர் விடமதாகும்
புலையர்தம் மனையில் உண்போன் புலையனு மாறுபோலக்
கொலைஞர்தம் மனையில் உண்போன் கொலைஞனே ஆவனன்றே"

என்னுந் திருமொழியும் எழுந்தது.

இனி நல்ல நிலத்தைச் சேர்ந்த மழைத் தண்ணீரானது பால்போல் இனிதாயிருத்தல் போலவும், பூவோடு கூடிய நார் அப்பூவின் நறுமணத்தைப் பெறுதல்போலவும், பொற்கலத்தில் நிரப்பிய ஆவின்பால் மிகவும் தூய தாய்ச் சுவையுடன் விளங்குதல் போலவும், அருளும் இரக்கமும் வாய்ந்து எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி எதற்குந் தீங்கு செய்யாது புலாலுணவு நீக்கியொழுகும் நல்லார் ஒருவரின் சேர்க்கையால் அவருடன் சேர்ந்தவர் எல்லாரும் அவர்போல் இரக்கம் நிரம்பி நலஞ் சிறந்து ஒழுகுவர்; இதுபற்றியன்றோ **தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,**

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

" மனநலன் நன்குடைய ராயினுஞ் சான்ரோர்க்கு
இனநலன் ஏமாப் புடைத்து,"

என்றும், அருந்தவ நோன்பிற் றலே சிறந்து நின்ற பட்டி னத்துப் பிள்ளையார்,

" நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலேயுள தோஅக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை வாகச்சி ஏகம்பனே "

என்றும் அருளிச் செய்தனர்கள்.

இங்ஙனம் இரக்கமாகிய அருளறத்தை எவர்கள் மேற் கொண்டு ஒழுகுகிருர்களோ அவர்கள் அவ்வருள் உருவாய் விளங்குவதோடு தம்மைச் சேர்பவர்களேயும் அருளுருவம் அடையச் செய்வார்கள். இன்னும் இவ்வருளறத்தைக் கைப்பற்றிக்கொண்டு எவர்கள் மாருமல் ஒழுகுகிருர்களோ அவர்களிடத்திலே எல்லாம்வல்ல ஆண்டவன் திருவருளானது நிறைந்து ததும்பி வழியாநிற்கும். எவர்கள் அவ்வாண்டவன் திருவருள் விளக்கத்தை அடையப் பெறுகிருர்களோ, அவர்களிடத்தில் நோயுங் கவலேயுந் துன்பமும் இறப்புமாகிய இருள்கள் நில்லாமல் மறைந்தொழியும். எவர்கள் இத்துன்ப இருளினின்றும் விடுபடுகின்ருர்களோ அவர்கள் எல்லாச் செல்வமும் எல்லா நலமும் எல்லா இன்பமும் ஒருங்கேபெற்று இம்மையில் நெடுங்காலம் இனிது வாழ்ந்து, மறுமையிலும் இறைவன் திருவடிப் பேரின்பத்தில் திளேத்து இறுமாந்திருப்பர்.

இனி, இரக்கமும் அன்பும் அருளும் உடையவர்களுக்கே இறைவன் அருள்புரிகுவான் என்றும், அவர்களிடத்து மட்டுமே அவன் விளங்கித் தோன்றுவான் என்றும், அம்மெல்லிய தன்மைகள் இல்லாருக்கு அவன் அருள் வழங்குதலும் அவர்களிடத்துத் தோன்றுதலும் சிறிதும் இல்லேயென்றுங் கூறியதென்னே யெனின்; இரக்கமே இரக்கத்தை இழுக்கும், அன்பே அன்பைக்

கவர்ந்துகொள்ளும், அருளே அருளை விளங்கச்செய்யும்; ஒளிவிளக்கம் வாய்ந்த பளிங்குப் பாறையிலே கதிரவன்ஒளி விளங்குமேயன்றி, விளக்கம் இல்லாத கருங்கல்லிலே அவ்வொளி விளங்குமோ சொல்லுங்கள். அன்பும் இரக்கமும் உடையவர்களைக் கண்டால் நமக்கு அன்பு உண்டாகின்றதோ சினமுங் கொடுமையும் கொலைத்தொழிலும் உடையவர்களைக் கண்டால் நமக்கு அன்பு உண்டாகின்றதோ சொல்லுங்கள். அன்புடையவர்களைக் கண்டால் மிகுந்த மனமகிழ்ச்சியும், சினமுங் கொடுமையும் உடையவர்களைக் கண்டால் அச்சமும அருவருப்பும், கொலைத்தொழில் உடையவர்களைக் கண்டால் நடுக்கமும் திகிலும் அல்லவோ அடைகின்ருேம்! நம்மைப் பெற்றவர்களாய் இருந்தாலும், நம்மோடு கூடப் பிறந்தவர்களாயிருந்தாலும், நமக்கு நெருங்கிய உறவினராயிருந்தாலும் எவர் கொடுந்தன்மையுங் கொடுஞ் செய்கையும் உடையரோ அவரைக் காணும்போதெல்லாம் ஐயோ! நாம் எவ்வளவு அருவருப்பும் அச்சமும் நடுக்கமும் அடைகின்ருேம்! நமக்கு எந்த வகையிலும் உரியவர்கள் அல்லராயினும் எவரிடத்து இரக்கமும் இனிய செய்கையும் காணப்படுகின்றனவோ ஆ! அவரிடத்து நாம் நம்மை அறியாமலே எவ்வளவோ அன்பும் எவ்வளவோ மகிழ்ச்சியுங் கொள்ளப் பெறுகின்ருேம்! இனி இரக்கமும இனிய செய்கையும் உடையவர்களைக் கண்டால் பூனை நாய் குருவி காக்கை முதலிய சிற்றுயிர்களும் அச்சம இன்றி மகிழ்வோடு அவர்கள் பால் அணுகுகின்றன. அருட்டன்மை உடையவர்களைத் தேள் பாம்பு புலி கரடி அரிமா முதலான தீய உயிர்களும் துன்பஞ் செய்வதில்லையென்றும், அவர்களுக்கு அடங்கி நடந்து விலகிப்போகுமென்றும் நல்லோர் உரைக்கக் கேட்டிருக்கின்ருேம். பல வரலாறுகளிலும் கற்றறிந்திருக்கின்ருேம்.

இவ்வாறெல்லாம் மக்கட்பிறப்பினரான நமக்குள் எவர் அன்பும் இரக்கமும் உடையரோ அவரிடத்தே மற்றவர்களும் அன்பும் உருக்கமும் உடையராகின்றனரென்ருல், மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்களுங்கூட அவரிடத்து

அன்பினால் இழுக்கப்பட்டு அமைந்து நடக்கின்றன வென்றால், எல்லையற்ற பேரன்பிற்கே ஓர் உறைவிடமாய் உள்ள இறைவன் அவர்களிடத்தில் விளங்கித் தோன்றுவான் என்பதை நாம் எடுத்துச் சொல்லுதலும் வேண்டுமோ? எல்லையற்ற அன்பும் இன்பமுமே இறைவனுக்கு உண்மையான வடிவமா மென்பதையும் அவ் அன்புருவினையும் இன்புருவினையும் இடையறாது நினைந்து தாமும் அன்பும் இன்பமுமாய் இருப்பவர்கள் அவ்விறைவனுருவாய் விளங்குவர் என்பதையும் **திருமூல நாயனார்** அருளிச் செய்த

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தியாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

என்னுந் திருமந்திரத் திருமொழியும், **மாணிக்கவாசகப் பெருமான்** அருளிச் செய்த

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை யன்பே."

என்னுந் திருவாசகத் திருப்பாட்டும் நன்கு அறிவுறுத்துகின்றன வல்லவோ?

அங்ஙனம் அன்புருவாயும் அருளுருவாயும் இரக்கவுருவாயும் விளங்காநின்ற நம் ஆண்டவன் தன்போல் அன்பும் அருளும் இரக்கமும் நிரம்பித் திகழாநின்ற உயிர்களிடத்து மட்டுமே குடிகொண்டு தோன்றுவான் என்னும் உண்மை இப்போது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்குகின்றதன்றோ?

"அன்பினுள் ளான்புறத் தான்உட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே."

என்னுந் திருமந்திரத் திருப்பாட்டும் இதற்குச் சான்றும் அன்றோ?

இனி இறைவன் இரக்கமும் அன்பும் அருளும் உடையான் என்பதை எதனால் அறிகின்றோம் என்றால், அவன் மிகப் புல்லியவாய சிற்றுயிர்களுக்கும் வியப்பான உடம்புகளைப் படைத்துக்கொடுத்து, அவற்றின் வழியாக அவைகளின் அறியாமையைப் போக்கி, அறிவை விளக்கி, இன்பத்தை ஊட்டி, அவைகளை எண்ணிறந்த பிறவிகடோறும் பாதுகாத்து வரும் பேருதவிச் செய்கையினால் நன்கு அறிகின்றோம். பாருங்கள்! நாம் அறியாமையிற் கட்டுண்டு நமக்கு வேண்டுவது இன்னதுதான் என்று தெரிந்து கேளாமலிருந்த காலத்தும், அவன் நமக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் விரும்பிக் கொடுத்தனன் அல்லனோ? நாம் நம் தாயின் கருப்பையிலே கருவாய்த் தங்கியிருந்த காலத்து நமக்கு வேண்டுவது இதுதான் என்று தெரிந்து கேட்கும் அறிவுடையேமாய் இருந்தனமா? சிறிதும் இல்லையே. அப்பொழுதும் அவன் நமக்கு ஓர் ஒப்பற்ற துணைவனாய் இருந்து மலப்பை சிறுநீர்ப்பைகளால் நெருக்குண்டு இறவாமலும் அகட்டுத் தீயினால் வேகாமலும் நம்மைப் பாதுகாத்து, உணவிற்பிரித்த மிக மெல்லிய பாலை ஊட்டிப், பத்துத் திங்கள்காறும் சிறிது சிறிதாக நம்மை வளரச்செய்து, பின் நிரம்பவும் வியக்கத்தக்கதாக நம்மை இவ்வுலகிற் பிறப்பித்து, அதன் பின்னும் ஓரிமைப் பொழுதும் இடைவிடாது பலவகையானும் நம்மைப் பாதுகாத்துவரும் நம் அப்பன் பேருதவிச் செய்கைக்கும் பேரிரக்கத்திற்கும் ஓர் எல்லையுண்டோ! நாம் கேளாதிருக்கவும் நமக்கு இத்தனை யுதவியுஞ் செய்துவரும் நம் ஐயனுக்கு நாம் ஏது கைம்மாறு செய்தோம்! அன்றி ஏது கைம்மாறு தான் செய்யமாட்டுவோம்! நமக்கு மட்டுமா நம்மினும்

எத்தனையோகோடி மடங்கு தாழ்ந்த அளவிறந்த சிற்றுயிர் களுக்கும் அவன் எத்தனை வகையான உடம்புகளை அமைத்துக் கொடுத்து அவைகளை யெல்லாம் பதப்படுத்தி வருகின்றான்! ஒரு நாளில் நாம் எவ்வளவோ எறும்புகளை, எவ்வளவோ பூச்சிகளை, எவ்வளவோ புழுக்களை அறிந்தும் அறியாமலும் அழித்துவிடுகின்றோம். ஆனால் அழித்த அச்சிற்றுயிரின் உடம்பை மறுபடியும் நம்மாற் படைக்க முடியுமா! ஓர் ஈயின் இறக்கை ஒடிந்தாலும் ஓர் எறும்பின் கால் முறிந்தாலும் அவற்றைத் திருத்திச் செப்பனிட நம்மாலாகுமா? நம்முடைய உடம்பிலுள்ள உறுப்புகளில் ஏதேனும் ஒன்று பழுதுபட்டால் அதைத் தானும் நாம் ஒழுங்கு செய்து அமைத்துக்கொள்ளக் கூடுமா? இங்ஙனம் நம்மாலும் பிறராலும் சிறிதும் செய்யலாகாத உடம்பின் அமைப்புகளையெல்லாம் ஒவ்வொரு நொடியுந் தவறாமல் இழைத்துவரும் எம்பெருமான் அருட்டிறங்களை யெல்லாம் பேதையேன் என் ஒரு நாவால் எங்ஙனம் புகழ்வேன், எவ்வாறு விரித்துரைப்பேன்!

அருமை மிக்க நேயர்களே! இத்தனை யிரக்கமுமுள்ள எம்பெருமான் அருளைப் பெற வேண்டும் நாம் அவனைப் போல் எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம் பூண்டு ஒழுகினாலன்றி, அவன் நம்மை அணுகமாட்டான். மக்களாயினும் மற்றைச் சிற்றுயிர்களாயினும் எல்லாம் நம் இறைவனுக்கு அருமைப் பிள்ளைகளே யாதலால், ஒரு தாய் வயிற்றிற் பிறந்த மக்களைப்போல் நாம் எவ்வுயிர்களிடத்தும் அன்பு பாராட்டி ஒழுகுதல் வேண்டும். ஒரு தந்தைக்குப் பிறந்த மக்களுள் ஒருவன் வலியவனா யிருந்தால், அவன் தன்னினும் வலிகுறைந்த சிறுபிள்ளைகளை அடித்து வருத்தலாமா? அங்ஙனஞ் செய்தால் அவன் தந்தை அவன்மேற் சினந்து அவனை ஒறுப்பான் அல்லனோ? இங்ஙனமே, எல்லாம்வல்ல கடவுளாகிய முதற்பெருந் தந்தைக்கு அருமைப் புதல்வர்களாம் உரிமை வாய்ந்த எல்லா உயிர்களும் தம்முள் நேசமும் அன்பும் இரக்கமும் பூண்டு நடத்தல் இன்றியமையாத கடமையாம்; இந்தப் பெருங்கடமையை நினையாமல், மக்களாகிய நாம் அறிவினும் உடம்பினும் வலி

வுடையவர்களாய் இருத்தல்பற்றி, நம்மினும் அறிவும் வலியுங் குறைந்த மெலிய உயிர்களைக் கொலைபுரிந்து அவற்றின் ஊனைத் தின்றால் அதனைக் கண்டு நம் அப்பன் நம்மேற் பெரிதுஞ் சினந்துகொண்டு நம்மைக் கொடுந் துன்பத்துக்கு உள்ளாக்குவானென்பது திண்ணம்; இது குறித்தே அறிவுக் களஞ்சியமான **திருமூல நாயனர்,**

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடி காரர் வரிகயிற் ருற்கட்டிச்
செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே."

என்றும்,

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே."

என்றும் திருவாய்மலர்ந் தருளினர். நம்மைப்போலவே நம் முழுமுதற்றந்தைக்கு இனியவாய் நம்மோடொத்த பிறப்பினவாகிய உயிர்களின் உடம்பைச் சிதைத்து அவற்றின் ஊனை உண்பதனால் வரும் தீவினைக்குரிய பயனை நாம் இந்தவுடம்பை விட்டுச் சென்றபின், நம்மை நிரயத்திலே தள்ளி. வருத்துவதால் மட்டும் விளைவித்துப் பின் நம்மை விட்டுவிடுவான் என்று நினையாதீர்கள்! நாம் இந்தவுடம்போடு கூடியிருக்கும் இந்தப் பிறவியிலேயே, பெருவாரிக் காய்ச்சல் அம்மை கக்கற்கழிச்சல் நச்சுக் காய்ச்சல் சூலை நீரிழிவு தொழுநோய் வயிற்றுளைச்சல் முதலான எண்ணிறந்த நோய்களையும், வறுமை கவலை சண்டை அரசர்போர் நிலஅதிர்ச்சி முதலான தீங்குகளையும், பேய் பிடியுண்டல் புலிகோட்படுதல் நச்சுயிர்களால் தீண்டப்படுதல் கிறுக்குப்பிடித்தல் முதலான பொல்லாங்குகளையும் ஏவி நம்மைப் பெரிதுந் துன்புறுத்தி ஒறுப்பான் என்பதற்கு நம் சமயாசிரியரான **சுந்தரமூர்த்தி நாயனர்** அருளிச் செய்த

"குற்றொருவரைக் கூறைகொண்டு
கொலைகள் சூழ்ந்தகளவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைகள்
இம்மையேவருந் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்
மறவாதொழி மடநெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி
புறம்பயந்தொழப் போதுமே."

என்னுந் திருப்பாட்டே சான்றாகும்.

இன்னுங் கொல்லாதவர்களைக் கொல்லச் சொல்லியும், புலால் தின்னாதவர்களைப் புலால் தின்னச் சொல்லியுங் கட்டாயப் படுத்தினவர்கள் எவர்களோ அவர்களும், மற்றவர்கள் சொல்லுக்காக அஞ்சி ஏழை உயிர்களைக் கொல்பவர்களும், அவற்றின் ஊனைத் தின்பவர்களும் அங்ஙனமே ஆண்டவனால் ஒறுக்கப்படுவாரென்பது.

"கொன்றி லாரைக் கொலச்சொல்லிக் கூறினர்
தின்றி லாரைத் தினச்சொல்லித் தெண்டித்தார்
பன்றி யாய்ப்படி யிற்பிறந் தேழ்நர
கொன்று வார்அரன் ஆணையி துண்மையே."

என்றும்,

"கொலையஞ் சாதொரு வற்கஞ்சிக் கொன்றுளோர்
சிலர்சொல் லஞ்சிப் புலாலினைத் தின்றுளோர்
நிலைய தாய்நர கத்திடை நிற்பரென்
றலகில் நூன்மறை ஆகமம் ஓதுமே."

என்றும் **காசிகண்டம்** கூறுதலின் ஓர் உயிரைக் கொல்லும்படி ஒருவரை ஏவுவதும் அதன் ஊனைத் தின்னும்படி ஒருவரைக் கட்டாயப்படுத்துவதும் பெருந்தீவினையாய் முடியுமென்று அறிந்து கொள்ளுங்கள். தீங்கற்ற உயிர்களை ஒருவர் கொல்லப் போகையில் அதனை வேண்டாமென்று தடுத்தலும், அவற்றின் ஊனைத் தின்பவர்களை அது செய்யலாகாதென்று மறுத்தலும் மிகப் பெரிய நல்வினையாகுமென்றும் உணர்ந்து கொள்ளுங்கள்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே."

என்றபடி எல்லா வுயிர்களையும் நம்முயிர் போல் எண்ணி அளவிறந்த இரக்கத்தோடு நடக்க நாம் இடைவிடாது முயன்று வருவதோடு அம்முயற்சியில் வழுவாதிருக்குமாறும் நாம் இறைவனை வழுத்தி வருதல் வேண்டும். நம் உடம்பில் ஒரு முள்ளுக் குத்தினாலும் ஒரு கத்தி வெட்டுப் பட்டாலும் நாம் எவ்வளவு துன்பத்தை அடைகின்றோம்! அத்துன்பம் பொறுக்க மாட்டாமல் எவ்வளவு வாய்விட்டுக் கதறுகின்றோம்! நம்மை ஒரு கொடியவர் கோலால் அடிக்க வரும்போதும், வாளால் வெட்ட வரும்போதும் நாம் எவ்வளவு பதை பதைத்துப் பெருந்திகிலோடு அவருக்குத் தப்பிப்பிழைக்க ஓடுகின்றோம்! இங்ஙனமே ஆடு மாடு கோழி கொக்கு பன்றி மீன் முதலான உயிர்களெல்லாம் தம்மை ஒருவர் கொல்ல வரும்போது எவ்வளவு நடுக்கத்தோடு அஞ்சி ஓடுகின்றன! அந்தோ! அவற்றிற் பல எவ்வளவு துன்பத்தோடு வாய் விட்டுக் கதறி அழுகின்றன! அவற்றின் கழுத்தை இரக்கமில்லாக் கொடிய மாக்கள் கத்திகொண்டு அறுக்கையில் அவைகள் எவ்வளவு துடிதுடிக்கின்றன! எவ்வளவு ஓலமிட்டுக் கூவுகின்றன! ஆ! அவற்றின் துன்பத்தை நினைக்கையில் எம் நெஞ்சம் நீராய் உருகுகின்றதே! அந்தோ! தீவினை! வாயற்ற அவ்வேழை உயிர்களை மடிக்கும் தீவினை எத்தனை பிறவிகள் எடுத்தாலும் விடாது. தாய்மார்களே, உங்களில் எத்தனை பேர் இவ்வேழை உயிர்களைக் கொன்று உங்கள் ஆடவர்களுக்கு அவற்றை உணவாகச் சமைத்து வைக்கின்றீர்கள்! நீங்கள் இக்கொடிய செய்கையைச் செய்யாதுவிட்டால் நீங்கள் அந்நல்வினையால் நம்ஐயன் அருளைப் பெறுவதோடு, நுங்களைச் சேர்ந்த ஆடவர்களுக்கும் நீங்கள் பெரியதொரு நல்வினையையும் பெருநலத்தையும் தேடிக்கொடுப்பீர்கள்! பெண்மக்களாகிய நும்மாலே தாம் உலகம் சீர்திருந்தவேண்டும். ஆவதும் அழிவதும் எல்லாம் பெண்களாலேதாம். நுங்களில் எத்தனைபேர் அறியாமையிற்கிடந்து, ஊன் தின்னாத நுங்கள் ஆடவர்களையும்

நோய்வருமென்று சொல்லி அச்சுறுத்தி, ஊன் தின்னச் செய்து விடுகின்றீர்கள்! ஐயோ! இக்கொடுந் தீவினைக்கு நீங்கள் எப்படித் தப்பிப் பிழைப்பீர்களோ அறியேன்! முன்னெல்லாம் அறியாமையாற் செய்த பிழையை, அறிவு தெரிந்த இனிமேலாயினும் நினைந்து இரக்கமுற்று, நம் இறைவனுகிய தந்தையிடம் சொல்லி மன்னிப்புக்கேட்டு, இனி எந்த வுயிர்க்குந் தீங்கு செய்யாமல், எல்லா வுயிர்க ளிடத்தும் அன்பும் இரக்கமும் பூண்டு ஒழுகுதல் வேண்டும்.

"கொல்லா விரதம் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே."

என்னும் **தாயுமான சுவாமிகள்** திருமொழிப்படி, கொல்லா வொழுக்கத்தின் மேன்மையை நம்மைச் சேர்ந்தவர்கள் எல்லார்க்கும் நன்ருக எடுத்துச் சொல்லி எல்லாரையும் அன்பும் இரக்கமும் உடையவர்களாகச் செய்து அதனுல் கடவுட்டன்மையை நாம் அடைந்து நம் ஐயனுடைய திரு வருளைப் பெறுதல் வேண்டும்.

இரு சைவவிளக்கங்கள்

சைவமென்பது யாது? அச்சைவத்தினை விளக்கிய இரண்டு விளக்கங்கள் யாவை? என்று ஆராயப்புகு கின்றமையின் இதற்கு இத்தலைப் பெயர் புனைந்துவைக்கப் பட்டது. இந்த நிலவுலகத்திலே பிறந்து இருந்து இறந்து போகின்ற உயிர்களுள்ளே சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து உணர்ச்சிகள் மட்டும் வாய்ப்பப் பெற்று இவ்வைந்துணர்வுகளினும் மேம்பட்டு இவை தம்மையெல் லாம் நல்லதிது தீயதிது என்று பகுத்தறியும் சிறப்பறிவு பொருந்தப்பெறாத விலங்கினங்களை யொழித்து மிக அரி திலே கிடைத்த மக்கட் பிறவியினை யுடையவர்களுக்கெல் லாம் இப்பகுத்துணர்வால் இவ்வுலகத்திற் பெறப்படாத ஓரரும்பெரும் பொருள் கையகத்தே இருக்கக் காண்கின் றேம். இப்பருப்பொரு ளுலகத்திற் பருப்பொருண் முயற்சி யால் தொகுத்துக் கொள்ளப்படும் பெருங்குவியலான பெரும்பொருளெல்லாம் இப்பருவுடம்பு இப்பருப்பொரு ளுலகத்தில் நடைபெறுங்காறும் ஒரு சிலர்க்கு மட்டும் ஒவ் வொருவகையாற் பயன்பட்டு அழிவெய்தி மறுமையிற் செல்லும் அறிவுருவான உயிர்க்குச் சிறிதும் பயன்படுவ தின்றாய் ஒழியும். இது,

"தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங் கேமண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே."

என்று அகப்புறப் பற்று முற்றும் விட்ட பெருந்தவத் தோரான பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப் பாட்டான் இனிது விளங்கும். இத் தன்மைபதான பருப் பொருட் செல்வம் போலாது, உயிரின் அறிவாகிய களஞ் சிய அறையிலே வைத்துப் பாதுகாக்கப்படுவதாய், அழி யுந்தன்மைத்தான உடம்பை மட்டும் வளர்த்தற்கு உதவி

யாம் பருப்பொருட் செல்வம் போலாது உயிரின் அறிவாகிய உடம்பை வளர்த்தற்கு மிக இயைந்த பொருளாய் விளங்கும் சமய உணர்ச்சியானது நாகரிக மில்லாதார் முதல் நாகரிக முடையார் ஈருன எத்திறத்தவர்க்கும் பொதுமையின் நிகழக் காண்கின்றோம்.

இனி இந்தச் சமயம் என்னுஞ் சொல்லாற் பொழுது, அல்லது காலம் என்னும் பொருள் பெறப்படுகின்றது. ஐம்பொறி உணர்வுகளும் ஒருகாலத்து ஒருங்கு சேர்ந்து ஐம்புலன்களையும் ஒருங்கு நுகராமையால், அவ்வைம் பொறிகள் ஒவ்வொன்றன் வாயிலாய்த் தனித்தனியே சென்று அவ்வவற்றை அறிகின்ற உயிரானது அவ்வவற்றை அங்ஙனம் தனித்தனியே அறியும் பலபொழுதுகள் உடையவாகின்றது. இவ்வாறு காலத்திஞல் வரையறுக்கப்படுதல் ஓரிடத்தே மட்டும் அறிவு விளங்கும் உயிருக்கன்றி எங்கும் அறிவு விளங்கும் இறைவனுக்கு இல்லையாம். அசைவுடைய பொருள்களுக்கே காலமும் இடமும் உண்டாம். ஓரிடத்துமட்டும் நிற்கு மியல்புடைய சாத்தன் என்பான் கங்கைக்கரையி லிருந்தான் என்ற வழி இறந்த காலமும் காவிரிக்கரையி லிருக்கின்றான் என்னும் வழி நிகழ் காலமும், குமரித்துறையிலிருப்பான் என்புழி எதிர்காலமும் கங்கை, காவிரி, குமரி என்னும் இடங்களும் பெறப்படுகின்றன. இங்ஙனங் கால வேறுபாடுகளும் இடவேறுபாடுகளும் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய உயிர்களுக்கே உள்ளன வாதல் தெற்றென விளங்கும். இனி அச்சாத்தன் என்பவன் அவ்வாறு சிற்றறிவும் சிறுதொழிலுமில்லாது எங்கும் உள்ள அறிவுப் பொருள் என்று நினைக்கக்கூடுமாயிற் கங்கை, காவிரி, குமரி முதலான எல்லா இடங்களிலும் அசைவின்றி ஒரே காலத்துள்ள அவனுக்கு அங்ஙனங் கால வேறுபாடும் இட வேறுபாடும் ஒருவாற்றானும் சொல்லல் ஏலாதென்க. நேற்றும் இன்றும் நாளையும் கங்கை, காவிரி, குமரி என்னும் எல்லா இடங்களிலும் ஒருங்கு இருப்பானை நோக்கி இவன கங்கைக்கரையி லிருந்தான், காவிரிக்கரையி லிருக்கின்றான், குமரித்துறையி லிருப்

பான். என்று வழங்குவோமாயின் அஃது உண்மைக்கு மாருய் எல்லாராலும் நகையாடற் பாலதாய் முடியும். எவ்வாறெனின் எங்குமுள்ள விசும்பை நோக்கி இது கங்கைக்கரையிலிருந்தது எனவும், இது காவிரிக்கரையி லிருக்கின்ற தெனவும், இது குமரித்துறையி லிருக்குமெனவுங் கூறுவார் உலகில் இல்லையன்றே! அதுபோல எங்கும் நிறைந்திருக்கின்ற எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளுக்குக் காலமும் இடமும் இல்லை; அவன் காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டவனுவன்; அவன் அவற்றின் புறம்பே மட்டும் இருப்பான் அல்லன்; அவற்றின் உள்ளும் புறம்பும் அவற்றின் மேலும் நிறைந்திருப்பன் என்க. இது பற்றியன்றே **தாயுமான சுவாமிகள்**.

“ அங்கிங்கெனுதபடி யெங்கும் ப்ரகாசமாய்”

என்று திருவாய் மலர்ந்தருளியதூஉம், **அருணந்தியடிகள்**,

“ உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற் ருேன்றி யொடுங்கிடு மென்று மோரார்
உலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரார்
உலகினுள் ஒருவனென்ப ருருவினை யுணரா ரெல்லாம்”

என்று கட்டளையிட் டருளியதூஉம் என்க. ஈசாவாசியோபநிடதமும்* “ஒன்ருயுள்ள கடவுள் அசையாததாய் மனத்தைக் காட்டினும் விரைவானது; தேவர்களும் அதனை அணுவதில்லை; முற்ருெட்டே அஃது எல்லாவற்றினையுங் கடந்து நிற்பது; அது நிலையாயிருந்தே விரைந்தோடும் இவைகளாற் பற்றப்படாமல் இவற்றைக் கடந்து நின்றது; காற்ருனது அதனிடத்திருந்து வினைகளைத் தாங்குகின்றது.” என்றும் “அஃது அசைவது, அஃது அசைவதும் அன்று; அது சேயது, அஃது அணிமையிலும் உள்ளது; அஃது இதன் எல்லாவற்றின் உள்ளும் உள்ளது; அஃது இவ் வெல்லாவற்றின் புறம்பும் உள்ளது.” என்றும் கூறுகின்றது. ஆகவே, சிறுபான்மை இலக்கணந் தீண்டப்பெருத கடவுளை யொழித்து அவ்

*ஈசாவாசியோப நிடதம், ௪, ௫.

விலக்கணந் தீண்டப்பெறுகின்ற சிற்றுயிர் ஒன்றே கால வேறுபாடு பொழுது வேறுபாடுகள் உடையதென்பது துணியப்படும்.

இனி ஏகான்மவாதங் கூறுவார் மதம்பற்றிக் குடங்க டோறும் உள்ள நீரின்கட் டோன்றுந் திங்களின் நிழல் அந்நீரின் அசைவாற் றானும் அசைவதுபோற் றோன்றினும் உண்மையான் நோக்குமிடத்து அவ்வசைவு அதற்கு இல் லாமை போல உடம்புகடோறுங் காணப்படுகின்ற கடவு ளின் றோற்றமாகிய சிற்றுயிர் ஐம்பொறிகளின் இயக்கத் தாற் றானும் அசைவதுபோற் றோன்றினும் அஃதியற்கை யில் அங்ஙனம் அசைவதில்லை யென்று உரையாமோ வெனின்; அது பொருந்தாது. எம்முடைய உடம்பி லுள்ள மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் அவ்வைம் பொறிகளும் பிறிதொன்றன் உதவியை வேண்டாது தாமே இயங்குவனவாயின் அவை எப்போதும் இயங்கிக் கொண்டே யிருத்தல் வேண்டும்; நனவிலன்றிக் கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்பொடுக்கம் என்னுங் கீழ்நிலை நான்கினும் அவை யியக்கமின்றிக் கிடத்தலானும், இனி, நனவிலேயும் அவை இயங்குங் காலத்து ஐந்தும் ஒரு காலத்து ஒருபொருளை அறியமாட்டா என்பது அழகிய தொரு பொருளை உற்றுக்காணுமிடத்துச் செவியொன் றைக் கேளாமையினும், இனிய ஓர் இசையைக் கேட்டு அறிவு அதன் வழிப்பட்டு நின்றுழிக் கண் ஒன்றைக் காணா மையினும் வைத்து அறியக்கிடத்தலானும், இனி யிப் பொறிகள் ஐந்தினும் பற்றறப் பிரிந்து மனம் ஒன்றை நாடும் வழி அவை இயங்காது வறிது நிற்றலானும் அவ் வைந்துந் தாமே இயங்கக் கடவுளின் றோற்றமாகிய உயிர் அசைவின்றி யிருக்குமென உரைத்தல் ஏலா தென்க. உயிர் மனத்தைப்பற்ற மனம் பொறிகளைப்பற்றப் பொறிகள் புலன்களைப்பற்றி நடைபெறுகின்றன என்பதே உண்மை யாம். இஃது அருணந்தியடிகள்,

"அறிவதைம் பொறியே யென்னின் உறக்கத்தி னறியாவாகும்
அறிவது மொன்றொன் றாக வொன்றொன்று யறிவதென்னின்

அறிவுகள் ஒன்றை யொன்றங் கறிந்திடா வைந்தை
[யுங்கொண்
டறிவதொன் றுண்ட தான்மா வைம்பொறி யறிந்திடாவே"

என்றருளிச் செய்த சிவஞானசித்தித் திருச்செய்யுளான் நன்கறியப்படும்.

மேற்கூறியவாற்றால், உயிர் ஐம்பொறிகளோ டுடனாய் நின்று புலன்களைப் பற்றும்வழி அஃது ஓசையை யறியும் பொழுதும், ஊற்றினை யறியும் பொழுதும், உருவினை யறியும் பொழுதும்; சுவையினை யறியும் பொழுதும், நாற்றத்தை யறியும் பொழுதும் தனித் தனியே உளவாகா நிற்கின்றன. இனி இவ்வைம்பொறி உணர்வு நிகழ்ச்சிகள் ஒருங்கு உள் வழியும் உயிர்கள் ஒரு சிலர்க்கு ஏனைப் பொறி உணர்வு களினும் நாற்றவுணர்விற் பெருவிருப்புண்டாய்ப் பலதிறப் பட்ட நறிய மணங்களை நுகர்தலிலே இன்பஞ் செல்லும்; அவர் அம்மணவுணர்வினையே மிகுதியும் பாராட்டிப் பேசுவர். வேறு சிலர்க்குச் சுவை யுணர்விற் பெருவிருப் புண்டாய்த் தித்திப்புப் புளிப்புக் கார்ப்புக் காழ்ப்புக் கைப்பு உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவைமிக்க உணவுகளைப் பல திறத்தாற் சமைத்துச் சுவைத்தலிலே இன்பம் செல் லும்; அவர் அச்சுவையுணர்வினையே மிகுதியும் பாராட்டிப் பேசுவர். இவ்வாறே சிலர்க்குக் காட்சியுணர்விலும் வேறு சிலர்க்கு ஊற்றுணர்விலும் மற்றுஞ் சிலர்க்கு இசை யுணர்விலும் பெருவிருப்புண்டாய் மற்றை யுணர்வுகளை யிழித்துப் பேசுவர். இங்ஙனம் அவரவர் தத்தமக் கியைந்த வற்றை மிகவும் பாராட்டி அவ்வவற்றையே உயர்த்துப் பேசுங் காலங்களும் உணர்வு வேற்றுமையாற் றோன்றும் பொழுது வேறுபாடுக ளென்றே தெளியப்படும். இனி "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்ற திருக்குறளின்படி இவ் வைம்பொறி யுணர்வுகளுள்ளும் இயற்கையிலே மிகச் சிறந்த தியாது? என்று நடுவு நிலையால் ஆராய்ந்து பார்க்கப் புகுவானுக்கு ஓசையுணர்வே சிறந்ததென்பது இனிது விளங்கும். உயிரின் சிற்றறிவை விரிவுசெய்து

விளக்குதற்கு இன்றியமையாது வேண்டப்படும் அறிவு நூற் கேள்விகளெல்லாம் செவிக் கருவியினையே துணையாகக் கொண்டு நடைபெறுகின்றன வாகலின் அச்செவிக் கருவியினுள் எமைந்த ஓசையுணர்வே ஏனைப் பொறியுணர்வுகளினெல்லாம் சிறந்ததென்று துணியப்படும். இதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும்,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்"

என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அற்றேல், இவ்வைம்பொறியுணர்வின் வழிப்பட்ட உயிரின்பொழுது வேறுபாடுகளை யெல்லாம் சமயங்கள், மதங்கள் என்று வழங்காமை என்னையோ வெனின்;

"வளத்திடை முற்றத்தோர் மாகில முற்றுங்
குளத்தில்மண் கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை யோடென்று வைப்பர்
உடலுடைந் தாலிறைப் போதும்வை யாரே"

எனவும்,

"எரியெனக் கென்னும் புழுவோ
வெனக்கென்னு மிந்தமண் ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ
வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக்
கென்னுமிந் நாறுடலைப்
பிரியமு டன்வளர்த் தேனித
னாலென்ன பேறெனக்கே"

எனவும்,

"முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு பிடிசாம்பராய் வெந்து" எனவும் எழுந்த திருப்பாட்டுக்களின்படியே இன்னநேரத்தில் மாய்வதென் றறியப்படாதவாறு சடுதியிலே மாய்ந்தொழியும் இம்மக்களுடம்போடு அவ்வைம்பொறியான் வரும் இன்பநுகர்ச்சிகளும்

இறந்தொழிதல் காணப்படுதலாலும், இங்ஙனம் இடை யிடையே யழிந்தொழியும் அவ்வின்பநுகர்ச்சிகள் சிற்றுயிர் களைக் கடைத்தேற்றுதற்கு ஒரு சிறிதும் பயன்படாமை யாலும் அவற்றையெல்லாம் வெறுத்துப் புறத்தே செல்லும் நம் அறிவினை அகமுகமாக உள்ளிழுத்து,

"நானு ரென்னுள்ளமார் ஞானங்களா ரென்னை யாரறிவார்" என்ற அருமைத் திருமொழியின்படி ஆ! நான் யார்? பலப்பல வேறுபாட்டோடும் பெரிதும் வியப் புறத்தக்கவாறாய் அமைந்திருக்கும் இவ்வுலகங்கள் யாவை? இவற்றிடையில் யான் வந்து பிறந்ததேன்? பிறந்து பல வகைத் துன்பங்களுக்கு உள்ளாகி மிக வருந்தும்போதும் அவற்றை யிடையிடையே மறந்து நான் எப்போதும் இவ் வுலகத்தில் இருப்பது போல் நினைப்பதேன்? என் மனைவி மக்கள் சுற்றத்தார் பிறர் என்னுமிவர்க்கும் எனக்குமுள்ள தொடர்பு என்னை? மற்றையோ ரிடத்தெல்லாம் யான் அன்புடையனாய் ஒழுகாது என் மனைவி மக்களிடத்தே மட்டும் யான் அளவிறந்த அன்பு பூண்டு ஒழுகுவது என்னை? யான் இறக்குங்காலத்து அவர் அவ் விறப்பினை நீக்குவரா? யான் பிறக்குங்காலத்து அவர் அப்பிறப்பினை நீக்குவரா? யான் துன்புறுங்காலத்து அவர் அத்துன்பத் தைப் போக்குவரா? இவர்களெல்லாம் ஐயோ! எம்மைப் போலவே துன்புறுகின்றார்கள், பிறக்கின்றார்கள், இறக்கின் றார்கள்; சாவார்க்குச் சாவாரும், துன்புறுவார்க்குத் துன் புறுவாரும் துணையாவ தியாங்ஙனம்? ஐயோ! இப்பிறப்பி னுந் துன்பத்தினும் எவ்வாறு நீங்குவேன்! இறக்கவேண் டுமே என்பதனை நினைக்குங் காலத்து என்னெஞ்சம் பகீ ரென்று துணுக்குறுகின்றதே!

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்" என்ற மேலோர் திருமொழி இடையறாது என்னுள் ளத்திற் றோன்றி என்னை வருத்துகின்றதே! என்று இவ் வாறெல்லாம் உயிரினறிவானது உள்மடங்கி ஐம்பொறி களின் குறும்பையெல்லாம் ஒடுக்கிக் கொண்டு தனது நிலையை ஆய்ந்து பார்க்குங் காலந்தான் உயிர்களுக்கு என்

றும் மாறுது நிகழும் சமயமாதலின் இங்ஙனம் நினைவு நிகழும் சமயமே சமயம் அல்லது மதம் என்று ஆன்றோரான் வழங்கப்பட்டது.

முன்னே காட்டியபடி எங்ஙனமாஞல் நமது உணர்வானது ஐம்பொறிகளின் வழிப்பட்டு நடைபெறுங் காலத்து அதுவதுவாய் நின்று புலன்களை நுகர்ந்து தான் மிகவிரும்பிய தொன்றனை அதன்மேற் சென்ற பற்ருல் உயர்த்துப் பேசுகின்றதோ அங்ஙனமே நமதறிவால் ஆராய்ந்து காணப்படுகின்ற மெய்ப்பொருள் உணர்ச்சிகளுள்ளும் நாம் மிக விரும்பியதொன்றனை நமதுள்ளம் சிறந்தெடுத்துக் கூருநிற்கின்றது. அறிவு நிரம்ப வில்லாது தாழ்ந்த நிலைக்கண்ணராய் நிற்கின்ற உயிர்கள் பொருள்களைப் பிரித்துப் பிரித்து ஆயும்போது அவர்கள் அறிவு மேற்பட்ட பொருள்களிற் செல்லாமையால் மண் புனல் அனல் கால் என்னும் நாற்பொருளே மெய்யென்றும், இந்நாற்பொருட் கூட்டத்திற் ருேன்றிய இவ்வுலகமும் உடம்புமே மெய்யென்றும் உட்கோடலால் உலகாயதமதம் தோன்றுவதாயிற்று. இவ்வாறே இவர்க்கு மேற்பட்ட நிலையிற் சென்ருரால் இந்திரியான்ம வாதமும், இவர்க்கு மேற்பட்ட பதத்திற் சென்ருரால் அந்தக்கரணான்ம வாதமும், இவர்க்கும் மேற்பட்டாராற் பிராணான்ம வாதமும், இவர்க்கும் மேற்பட்டாரால் விஞ்ஞானான்ம வாதமும், இவர்க்கும் மேற்பட்டாராற் சீவப்பிரம வாதமு மெனப் பலப்பலவான மதங்களும், பலப்பலவான பொருளாராய்ச்சிகளும் பலதிறப்பட்டுத் தோன்றின. இவற்றுள் ஒன்றே மெய்ந் நிலையாய்ப் பெறப்படுமாயினும் ஏனையவெல்லாம் பொய்யென்று கழிக்கப்படாமல் அம்மெய்ந்நிலையினைப் பயப்பதற் குரிய படிவழி நிலைகளாய் நிலைபெறுவனவாம். மேலே காட்டியவாறு சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்பொறியுணர்வுகளுள் ஓசையுணர்வே ஏனை எல்லாவற்றினும் மிகச் சிறந்ததாயினும் அவை யொவ்வொன்றும் ஏனையதன் வளர்ச்சிக்கு வாயிலாய்ப் பயன்படுதல் போலவும், மக்கட் பிறவியினுள் குழவிப் பருவம் பிள்ளைப்பருவம் இளமைப் பருவம் முதுமைப்

பருவம் என்பனவற்றுள் முதுமைப் பருவமே அறிவுமிகச் சிறந்ததாயினும் அதனை எய்துதற்கு ஏனை மூன்று பருவங்களும் ஒன்றற்கொன்றுதவியாய் இன்றியமையாது வேண்டப்படுதல் போலவும், மெய்ந்நிலைச் சித்தாந்தமாய் முடிக்கப்படும் ஒரு மெய்ச்சமயத்தினைச் சென்றடைதற்குரிய பேரறிவினைப் பயத்தற்கு மிகத் தாழ்ந்த பதத்திலே தோன்றிய சிற்றறிவுச் சமயமுதல் எல்லாம் ஒன்றற்கொன்றுதவியாய்ப் பெரிதும் பயன்படுத லுடையவாம். கடவுளும் உயிரும் இல்லையென்று சொல்லும் நாத்திகமத முதற்கொண்டு உயர்ந்த வேதாந்த சித்தாந்த முடிநிலைப் பெரும் பொதுச் சிறப்புண்மைப் பொருளாயுள்ள மெய்ச்சமயங் காறுமுள்ள எல்லா உயிர்கட்கும் இறைவன் திருவருட் பேறு உண்டென்பது துணிபொருளேயாமென்க. இது தமிழ் மறையுள்,

"விரிவிலா வறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாமே"

என்று பெறப்பட்டமையானும், தமிழ் ஆகம சித்தாந்தத்துள்,

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்"

என்று வலியுறுத்தப்பட்டமையானும் இனிது விளங்கும்.

இனி இப்பெற்றிப்பட்ட மெய்ப்பொரு ளாராய்ச்சிப் படிகளையெல்லாம் கடந்து மேல்நிலைக்கண்ணே சென்றானுக்குக் கீழ்நிலைக்கண் ணுள்ளனவெல்லாம் பொருளல்லனவாய்த் தோன்றுமாகலின் அதுபற்றி அவன் இகழப்படுவானல்லன். அம் மேனிலைக்கண்ணே நின்று பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு,

"சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வொளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர் கண்டாரச் சுருதிக்கட் டூக்கமே."

என்றபடி எவ்வகைச் செயலுமில்லாத தூயசோம்பராய்ப்

" பூதமுங் கரணம் பொறிகளைம் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமுங் கடந்த வெளியிலே நீயு
நானுமாய் நிற்குநாள் உளதோ
வாதமுஞ் சமய பேதமுங்
கடந்த மனோலய வின்பசாகரனே,
ஏதுமொன் றில்லேன் யாதுநின் செயலே
யிறைவனே ஏக நாயகனே."

என்றவாறு எல்லாம் இறைவன் செயலே தஞ்செயலாய்க் கொண்டாராய் உள்ள மெய்யுணர்வுடையாருக்கு ஏனைய வெல்லாம் வெறும் போலிகளாய் ஒழிதல் பொருத்தமேயாம். அங்ஙனம் அவர்க்குத் தோன்றுதல் பற்றி அவர் மற்றைச் சமயங்களை இகழ்ந்தார் எனத் திரித்துணர்ந்து அவரைப் புறம்பழித்தல் பொருந்தாதாம். அதுநிற்க,

இனி இங்ஙனம் மெய்ப்பொருளாராய்ச்சியின்பொழுது வேறுபாடுகளாய்த் தோன்றிய பல்வகைச் சமயங்களுள் முதற்கண் ஆராய்தற்பொருட் டெடுத்துக் கொண்ட சைவம் என்பது மிக உயர்ந்ததோர் அறிவினையுடைய ஒரு சான்றோன் தனது சிற்றறிவுத் தன்மையை விட்டுப் பேரறிவினனாய் நின்று சிவம் என்னும் முழுமுதற் பெரும்பொருளைத் தலைப்பட்டு நின்ற நிலையாம். இது,

" தெய்வஞ் சிவனே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்தமென்றான்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி "

என்ற திருச்செய்யுளான் அறியற்பாலதாம். இங்கே சிவம் என்று எடுத்தோதப்பட்ட பொருள். அசுத்த மாயையிற் றோன்றிய சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குண வழிப்பட்ட மும்மூர்த்திகளுள் ஒன்றன்று. அது, "அவஸ்தா த்ரிதயாதீதம் துரீயம் ஸத்ய சித்ஸுகம், ப்ரஹ்ம விஷ்ண்வாதி பிஸ்ஸேவ்யம் ஸர்வேஷாம் ஜநகம் பரம் ஈசாநம் பரமம் வித்யாத்ப்ரேரகம் புத்திஸாக்ஷிணம்" என்று போந்த பஞ்சப்பிரமோபநிடத மறையானும்,

"தேவர்கோ வறியாத தேவதேவன்" என்னும் திருவாசக மறையானும் அறியற்பாலதாம். இன்னுமிது,

" சிவனொ டொக்குந் தெய்வம் தேடினுமில்லை.'

என்னும் திருமந்திரத்தானும் உணரப்படும். சிவம், பிரமம், கந்தழி யென்பன ஒரு பொருட்கிளவிகள். இவற்றுட் கந்தழி என்பது ஆசிரியர் தொல்காப்பியனாற் சிவம் என்பதனோடொத்த சொல்லாக வைத்துக்

" கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்று திருவாய்மலர்ந்தருளப்பட்டதென இதற்குரை கண்ட நச்சினார்க்கினியர் "கந்தழி என்பது ஒருபற்று மற்று அருவாய்த் தானேயாய்த் தத்துவங்கடந்த பொருள்" எனக் கூறி, இதனியல்பை மாணிக்கவாசகசுவாமிகள் உய்த்துணரவைத்து,

" உற்றவாக்கையி னுறுபொருள் நறுமல
ரெழுதரு நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொற் றெளியாமே
அத்தனண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே."

என்று திருவாய் மலர்ந்தருளிய அருமைத் திருப்பாட்டினை எடுத்துக்காட்டி 'என்று அதனை உண்மையான் உணர்ந்தோர் கூறியவாற்றா னுணர்க' என்று அடிகளின் மெய்யுணர்வின் பான்மையினையும் கிளந்தெடுத்துரைத்தார். உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரே திருவாதவூரடிகளை 'அதனை உண்மையான் உணர்ந்தோர்' எனச் சிறந்தெடுத் துரைத்தமையாற் கந்தழியினியல்பை அத்திருமொழியே இனிது விளக்குவதென்பது பெற்றாம்.

பொருள்களாவன *மண் புனல் அனல் விசும்பு என்னும் ஐந்து பருப்பொருள்களும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து நுண்ணிய பொருள்களும், கை கால் வாய் எருவாய் கருவாய் என்னும் ஐந்து தொழிலுறுப்புகளும், மனம் அறிவு நினைவு முனைப்பு என்னும் நான்கு அகக்கருவிகளும், காலம் பிறழாநிகழ்ச்சி கலை நினைப்பு விருப்பு மகன் மாயை என்னும் ஏழு உணர்வு நிகழ்ச்சிப் பொருள்களும், தூய நினைவு தலைமை அருள்நிலை அன்னை அத்தன் என்னும் ஐந்துசிவநிலையப் பொருள்களுமான முப்பத்தாறுமாம். இது முப்பத்தாறு பொருள்களுங் கடந்த பேரறிவுப்பொருள் யாது அது கந்தழியென்பார் 'தத்துவங்கடந்த பொருள்' என்றும், உருவுடைப் பொருளெல்லாம் நிலையிலவாகலிற் படைக்கப்படும் உருவுடைப்பொருளன்று அக்கந்தழியென்பார் 'அருவாய்' என்றும், இம்முப்பத்தாறு பொருள்களும் அப் பெரும்பொருளையின்றி இயங்கமாட்டாவாகலின் அவற்றுள் நின்று அவற்றை இயக்கியும் தான் தாக்கற்று நிற்குமென்பார் 'ஒருபற்று மற்று' என்றும் நச்சினார்க்கினியர் இனிது விளக்கி யருளினர். இவரெடுத்துக்காட்டிய திருவாசகத் திருச்செய்யுள் இக்கந்தழியாம் பெரும் பொருளியல்பை விளக்குமாறு யாங்ஙனமெனின்; 'உற்ற வாக்கையின் உறுபொருள்' என்பது இறைவன் பொருள்

---

* மண் புனல் அனல் கால் விசும்பு என்பவற்றைப் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்றும், மெய் வாய் கண் மூக்குச் செவி என்பவற்றைத் தொக்கு சிங்குவை சட்சு ஆக்கிராணம் சோத்திரம் என்றும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றை ரசம் ரூபம் பரிசம் சத்தம் கந்தம் என்றும், கை கால் வாய் எருவாய் கருவாய் என்பவற்றைப் பாணி பாதம் வாக்கு பாயுரு உபத்தம் என்றும்; மனம் அறிவு நினைவு முனைப்பு என்பவற்றை மனஸ் புத்தி சித்தம் அகங்காரம் என்றும், காலம் பிறழாநிகழ்ச்சி கலை நினைப்பு விருப்பு மகன் மாயை என்பவற்றைக் காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என்றும், தூயநினைவு தலைமை அருள்நிலை அன்னை அத்தன் என்பவற்றைச் சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்திசிவம் என்றும் வடநூலார் வழங்குப.

களுள் அருவாய் நிற்றற்கும், 'நறுமலரெழுதரு நாற்றம்' என்பது அவன் உயிர்களுள் அருவுருவாய் நிற்றற்கும் உவமைகளா எழுந்தன. உடம்பினுள் ளிருக்கும் உயிர் தனக்கென ஓர் உருவின்றித் தான்சார்ந்த உடம்பே தனக் குருவாய்க்கொண்டு நிற்கின்றது. அங்ஙனம் நிற்குமிடத் துத் தான் வேறு உயிர் வேறு என்னும் வேற்றுமை தோன்ருவாறு சாத்தா, கொற்ரு என உடம்புக்கிட்ட பெயரால் அழைக்கும்வழித் தான் ஏன் என்கின்றது. அங் ஙனம் நிற்பினும் உடம்பு உடம்பே, உயிர் உயிரே, உடம்பு உயிராகாது, உயிர் உடம்புமாய் அதனின் வேறுமாய் நிற் கும். உடம்பு தானே இயங்காது உயிர் இயக்கிஞல் இயங்கும், உயிர் தானேயியங்கும் உடம்பினேயும் இயக்கும். இதுபோல் இறைவன் உலகங்களுட் கலந்து நிற்கும் வழித் தான் வேறு உலகம் வேறு-என்னும் வேற்றுமை தோன்ரு வாறு ஒருமையுற்று நிற்கும். இவ்வாறு ஒன்ருய் நிற்றல் பற்றியே 'விசுவம் பிரஹ்மா' என்னும் சொற்ருெடரும், "உலகேழெனத் திசைபத்தெனத் தாஞெருவனுமே, பல வாகி நின்றவா தோணேக்க மாடாமோ" என்னுந் தமிழ் மறைச் செய்யுளும் எழுந்தன. இங்ஙனம் ஒன்ருய் நிற்பினும் இறைவன் இறைவனே, உலகம் உலகமே; உலக மிறைவ ஞகாது, இறைவன் உலகமுமாய் அவற்றின் வேறுமாய் நிற்பன். உலகம் தானே இயங்காது இறைவன் இயக்கி ஞல் இயங்கும்; இறைவன் தானேயும் இயங்குவன் பிற வற்றையும் இயக்குவன். இங்ஙனமெல்லாம் ஒற்றுமை பூண்டு நிற்பினும் அவன் அதஞற் சிறிதும் வேற்றுமைப் படுவானல்லன். அது 'நறுமலரெழுதரு நாற்றம்போல்' என்னும் உவமையால் விளக்கப்பட்டது. மலர் முகையாய் இருந்துழி அதனுள் அருவாய் இருந்த மணம் அது நாள் முதிர்ந்து மலர்ந்தவிடத்து அதனுள்ளும் புறம்புமாய்ப் புலப்பட்டு நிறைந்து தான் அம்மலரைப் பற்றிக்கொண்டு நிற்பினும், தான் அம்மலராற் பற்றப்படாது அதனேயுங் கடந்து பரம்பித் தன் பரப்பினுள்ளே அம்மலரையும் ஒரு பால் அடக்கிக்கொண்டு வேற்றுமையும் வேற்றுமையின் மையு மாகிய ஓர் ஒற்றுமை இலக்கணத்தோடு அதிற்

சிறிதுந் தாக்கின்றி நிற்றல்போல, இறைவன் ஆணவமல வழிப்பட்டுக் குவிந்து நின்ற உயிரினுள்ளே அருவாய் இருந்து பின் அம்மலத்தடை நீங்கி அது விரிந்தவழி அம் முழுமுதற் பேரறிவு அதன் உள்ளும் புறம்புமாய்ப் புலப் பட்டு விளங்கி, அத் தூயவுயிரை அங்ஙனம் பற்றி நிற்பி னும் தான் அதனாற் சிறிதும் பற்றப்படாது அதனையுங் கடந்து பரம்பித் தனது அருள்வெளிப் பரப்பிலே அவ்வுயி ரையும் ஒருபால் அடக்கிக்கொண்டு வேறுமாய் ஒன்றுமாய் வேறல்லா வியைபுற்று அதில் சிறிதுந் தாக்கின்றி நிற்கு மென்க. இங்ஙனம் அறிவுப்பொருள் அறிவில்பொருள் என்னும் இருவகை உலகத்தினும் வேற்றுமையின்றி அரு வுருவாய்த் தன்னியல்பிற் சிறிதுந் திரிவின்றித் தானேயாய் நிற்கும் இறைவனியல்பை இவ்வுண்மைத் திருமொழி 'உற்றவாக்கையி னுறுபொருள் நறுமலரெழுதரு நாற்றம் போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என்று இனிது விளக்கினமையும், இவ் வுண்மையினை ஆசிரியர் **நச்சினார்க்கினியர்** காட்டினமையும் பெரிதும் நினைவுகூரற் பாலனவாம்; இவ்வுண்மை,

> " பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
> சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
> ஓவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
> நாவி யணைந்த நடுத்தறி யாமே.''

என்ற திருமொழியானும் விளக்கப்பட்டமை காண்க.

இங்ஙனம் கந்தழி, பிரமம் என்னும் சொற்களால் எடுத்தோதப்பட்ட சிவம் என்னும் எப்பொருளுங் கடந்த பெரும்பொருளை ஆராய்ந்த நேரமே சைவசமயம் என்று உணரற்பாற்று. அற்றேல் அப்பெரும் பொருளை யாதானு மொரு பெயரால் வழங்கியிடாமற் சிவம் என்னுஞ் சிறப்புப் பெயரால் வழங்குவித்தல் என்னையெனின்; வேதாகம உப நிடத ஷடதரிசன புராணேதிகாசமாகிய எல்லாம் சிவ என்னும் இரண்டெழுத்திலே அடங்குகின்றன. யாங்ஙன மெனின், இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும்

வேதம் நான்கில் அதர்வணம் என்பது முதன்மூன்றின் மந்திரத் தொகுப்பேயாதலால் அஃதவற்றில் அடங்கப்பெறும். ஆகலினாற்றான் அமரநிகண்டுடையார் அம் மூன்றனையுஞ் சுட்டி வேதங்கள் 'த்ரயீ' என வழங்கப்படுமென்றனர். அம் மூன்று வேதங்களுள் நடுநின்ற எசுர் "தஸ்ய யஜுரேவசிர", என்றமையால், ஏனை யிரண்டிற்கும் முகம்போல நிற்குஞ் சிறப்பு வாய்ந்ததாம். இது மாந்திரமெனவும் பிராமணம் எனவும் இருவேறு பகுதியினதாய் விளங்கா நிற்கின்றது. இவற்றுள் மாந்திரப் பகுதி மறித்தும் ஏழு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுச் சம்மிதாகாண்டம் என்னும் பெயருடைத்தாய்ச் சிறந்து விளங்குவதாம். இனி இச்சம்மிதாகாண்டம் ஏழினுள்ளும் நடுக்காண்டமே பெரிதுஞ் சிறப்புடைத்து. இனி இந்நடுக்காண்டமும் ஏழு சங்கிதைகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள்ளும் நடுநின்ற சங்கிதையுள் திருவுருத்திரத்தின் கண்ணே சதருத்ரீயம் விளங்கா நிற்ப, அச் சதருத்ரீயத்தின் இடையிலே விளங்கும் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்துக்களின் நடுவில் ஒளிர்ந்துகொண்டிருக்கும் 'சிவ' என்னும் மொழியால் வேதமும் வேதத்தைச் சார்ந்த கலைகளும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகையால், இச் சிவவென்னும் மொழி பிரமமென்னும் மொழியாற் குறிக்கப்படும் பெரும்பொருட்குச் சிறப்புப்பெயராம் என்பது தெளியப்படும். இன்னும் இதனை விரிப்பிற் பெருகுமாதலால் இத்துணையின் அமைந்து, எடுத்த பொருண்மேற் றொடர்ந்து செல்வாம்.

இவ்வாறு சைவம் என்னும் மெய்ப்பொருளை ஆராய்ந்தநிலை எப்பொருளுங் கடந்த பெரும்பொருட் சிவத்தில் தலைப்பட்டு நிற்குங் கழிபெருஞ் சிறப்புணர்ந்தன்றே **தாயுமான சுவாமிகள்,**

"சைவசமயமே சமயம்" என்று கட்டளையிட்டருளினர். பிற சான்றோரும் "சைவத்தின்மேற் சமயம் வேறிலை" என்று கூறினர். மற்றைச் சமயங்களெல்லாம் சைவத்திற் குரிய படிவழிகளாய், நம்மாற் பாராட்டப்படுந் தன்மையவாய் நிற்றலின் அவை சைவசமயிகளான நம்மனோரால்

புறம்பழிக்கற்பாலன வல்லவாம். வேதமென்னும் மரத்தில் இலையும், தளிரும், அரும்பும், மலரும், பிஞ்சும், காயுமாய் மற்றைச் சமயங்களெல்லாம் நிற்ப, வேதாந்தம் என்பது அதன் முடிவிற் பழமாய்ப் பழுத்துத் "தானென" தன்மை யாய்நிற்ப, அதனைப் பிழிந்து எடுத்த சைவசித்தாந்தம் "தானென்னுந்" தன்மையாய் நிற்கு மென்பதனைக் குமரகுரு பர சுவாமிகள் "நீயே, வேதமென்னும் பாதவம் வளர்த் தனை" என்பதனால் நன்றருளிச் செய்தனர்.

இங்ஙனம் சைவசமயத்தினால் அறிவுறுத்தப்படும் சிவம் எல்லாப் பொருளுங் கடந்ததாய் உண்மையறிவின்ப வடிவாய் எல்லா ஆற்றலுமுடையதாய் எல்லாவற்றையு மறிவதாய்ப், பிறப்பிறப்புக்களிற் படாத தூய அருண் மேனியு முடையதாய்த் திகழ்வதென்று அறிமின்கள்! இவ்விலக்கணங்களெல்லாம் ஒருங்குடைய அப்பெரும் பொருளைச் சிவம் என்றழைக்க நுங்கட்கு விருப்பமில்லை யாயின் நாராயணன் என்றழைமின்கள்! பிரமனென்றழை மின்கள்! புத்தனென்றழைமின்கள்! அருகனென் றழை மின்கள்! எப்பெயரிட்டு எவ்வெவ்வாறு அழைப்பினும் அப்பெயரெல்லாம் அவற்குப் பொருந்தும். வெறும் பெய ரிலே நுங்கட்குப் போர் நிகழ வேண்டாம். எங்கும் உள்ள கடவுள் ஒருவனே. இது தெருட்டுதற்கே திருமூலரும் பட்டி னத்தடிகளும்,

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனு
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே"

என்றும்,

"ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கோருப தேசமிதே"

என்றும் அருளிச்செய்த உண்மைகளைக் கடைப்பிடித்து ஒழுகுமின்கள்! நம்முடைய நாடு மத ஒற்றுமையின்மையால் நாளுக்குநாள் மழுக்கம் அடைகின்றது. சைவத்தின் முடிபுகள் எல்லாச் சமயங்களுக்கும் பொருத்தமாவனவாம். இதனை நீங்கள் செவ்விதின் மனம் பொருத்தி எல்லாரும் ஒற்றுமையாய் வாழ்மின்கள்!

இத்தன்மையவான மத ஒற்றுமையும் அருள் ஒழுக்கமும் சைவத்தின் சிறப்பான உண்மைகளாம் என்பதனையே சைவசமயாசிரியருள் முதல்வரான திருஞான சம்பந்தப் பெருமானும், சைவசித்தாந்த ஆசிரியருள் முதல்வரான மெய்கண்ட தேவரும் அறிவுறுத்தினர்கள். இரு சைவ விளக்கங்களான இவ் வாசிரியன்மார் இருவருள் ஞானசம்பந்தப்பெருமான் இற்றைக்கு ஆயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளின் முன்னே சீர்காழி என்னும் ஊரிலே தோன்றியும், மெய்கண்டதேவர் இற்றைக்கு அறுநூற்றைம்பது ஆண்டுகளின் முன்னே கம்பரை வைத்துப் பாதுகாத்து இராமாவதாரம் பாடுவித்த வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப பிள்ளை மகளார் மணிவயிற்றிற் றோன்றித் திருவெண்ணெய்நல்லூரில் அமர்ந்தும் சைவத்தின் அரிய பெரிய உண்மைகளை எல்லா மக்களும் உணர்ந்து உய்யும்படி காட்டி நந்தாமணி விளக்கங்களாய்த் திகழ்ந்தனர். ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று விளக்கங்களும் புறத்தே உலகத்திற் பரவிய இருளை விலக்கி எம்முடைய ஊனக்கண்களை மட்டும் விளக்குகின்றன. மற்று இந்நந்தாமணி விளக்கங்களான ஆசிரியன்மார் இருவருமோ எம் அகத்தே பரவிய ஆணவவல்லிருளை ஓட்டி எம் ஞானக்கண்களைத் திறப்பித்துச் சிவபெருமான் திருவருட்பேற்றைப் பெறுவிக்கின்றனர். ஞானசம்பந்தப் பெருமானும் மூன்றும் ஆண்டிலே சிவனருள் நிரம்பப்பெற்றார். மெய்கண்ட தேவரும் மூன்றும் ஆண்டிலே சிவனருள் நிரம்பப் பெற்றார். ஞானசம்பந்தர் தம் மூன்றும் ஆண்டிலேயே வழுத்துரை வடிவான திருப்பதிகங்கள் கட்டளையிட்டு மறைவழியை விளக்கியருளினார், மெய்கண்டதேவர் தாமும் மூன்றும்

ஆண்டிலே எழுத்தியல்வடிவான சிவஞான போதங் கட்டளையிட்டு ஆகமவழியை விளக்கியருளினர். மறைமொழி சூத்திரம்போலப் பொருட்சுருக்கமுடைத்தாய்ப் பொதுவுற நிற்பது; ஆகமம் அச்சூத்திரத்திற் குரைபோலப் பொருட் பெருக்கமுடைத்தாய்ச் சிறந்து நிற்பது. இது,

'வேதமொடாகமம்' என்னுந் திருமந்திரத்தானும் உணரப்படும். அவை யிவ்வாறிரண்டா யிருப்பினும் பொருண்முடிபால் ஒன்றேயாமென்பது சைவ பாடியகாரரான நீலகண்டர் "வயந்து வேதசிவாகமயோர்ப் பேதம்" என்றுரைத்தமையால் விளங்கும். இது போல, ஞானசம்பந்தர் திருமொழியான மறையும், மெய்கண்ட தேவர் திருமொழியான சிவஞான போதமும் பொருளறிவுறுக்கு முறையால் இருதிறப்படினும் பொருண்முறையால் ஒன்றேயாமென்பது பெறப்படுமென்க. அதுநிற்க அவ்விருவருங் குழந்தைகளாயிருந்த பொழுதிலே தமிழ்மறையுந் தமிழ்ஆகமமும் தோன்றியமுறைமை நனிமறைந்த பொருள்களை உள்ளடக்கி நிற்கின்றது. காம வெகுளி மயக்கமென்னும் மும்மல வலியுஞ் சிறிதுந் தோன்றப்பெறாத காலங் குழந்தைப் பருவமேயாம். அப்பருவ மொன்றே மிகவுந் தூயவான வேதசிவாகமங்கள் தோன்றுதற்குரிய தாகலின் அப் பருவத்திலேதான் அவர்க்கு அவை தோன்றுவவாயின. இன்னும் அவர்க்கு மூன்றும் ஆண்டிலே அவை தோன்றின என்பதனால் பதிபசுபாசம் என்னும் மூன்றிற் பசுபாசநிலை கழன்று பதிநிலையில் நின்றபொழுது அப்பதிமொழிகள் தோன்றினவென்றும், அவர் அப்போது சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்றியல்புகளிற் றாமத இராசதங்களைக் கடந்து தூயசத்துவத்திலே நின்றனரென்றும், தூயது தூவாதது இரண்டுங் கலந்தது என்னும் மும்மாயையுட் பின்னிரண்டனையுங் கழித்துத் தூயமாயையிலே நின்றனரென்றும் அறிதல் வேண்டும். இன்னும் ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு இறைவன் அம்மையப்பராய் எதிர்தோன்றி அவரை அழுகைதீர்ப்ப அம்மையார் அருமைத் திருமுலைப்பாலைப்

பொற்கிண்ணத்திற் பிள்ளையார்க்கு ஊட்டினர் என்பதனல், அம்மையப்பரை ஒருங்கி நினைக்கும் உறைப்பினலே பாம்பு சுழன்ருற்போலச் சுரித்துக் கொண்டிருக்கின்ற தூயமாயை யென்னுங் குண்டலிசத்தியானது சிவவழலாற் கண் விழித்து நாதத்தின்மேற் கண்ணதான அமிழ்தத்தைச் சென்றுபற்ற அப்பொழுது ஒழுகும் அவ்வமிழ்த ஊற்றைப் பருகித் தூயசிவத்திலே சுட்டுணர்வற்றநிலை கூடிநிற்குமாறு உணர்த்தப்பட்டபடியாம். எதிர்தோன்றிய அம்மையப்பரே உள்ளம்ஒருங்கி நினைக்கும் சக்தி சிவமாம். அவ்வுறைப்பின் கட்டோன்றும் சிவவனலே பொன்னெளியாம்; பொன் தீயின் கூறென்பது அளவை நூற் புலவரான அன்னம்பட்டர்க்கும் உடன்பாடு. அப்பொன்னெளியோடு கூடிய கிண்ணத்தின் வட்டவாய்வடிவே சுழன்றிருக்குங் குண்டலியாற்றலாம். அக்கிண்ணத்திற் கறந்தூட்டப்பட்ட திருமுலைப் பாலே நாதத்தின் மேற்கண்ணதான திங்கள் மண்டிலத்தினின்றுருகி ஒழுகும் பேரின்ப அமிழ்த ஊற்ரும். அவ்வமிழ்த ஊற்றைப் பருகி ஒருபது நாடியினும் நிறைக்கவே ஒருபஃ தின்னேசைகளுங் கேட்குமாகலின் அவ்வொருபஃதின்னெலி விளக்கமே ஞானசம்பந்தப் பிள்ளையார் அருமைத் திருவாய் மலர்ந்த திருப்பதிகங்களாம். தூவா மாயையிற் ருேன்றும் தூவா எழுத்தொலி வடிவான ஏனையோர் மொழிகள் போலாது, ஞானசம்பந்தப் பிள்ளையார் திருமொழிகள் பரவயிந்தவத்தின் கண்ணே தோன்றிய ஓங்கார விளக்கமாகும். இதனை அறிவுறுத்தற்பொருட்டே பிள்ளையார் தம்முடைய முதற்பதிகத்தின் முதலிலே "தோடுடைய செவியன்" என்று கட்டளையிட்டு முதற் கண்ணே ஓங்காரத்தை நிறுத்தி யருளினர். இவ்வாறே மெய்கண்டதேவர் தம் சிவஞானபோதத் திருமொழியுஞ் சுத்தவயிந்தவத்திற் ருேன்றிய பரநாத வொலிகளாம். இன்னும் இவற்றின் நுட்பங்களெல்லாம் நல்லாசிரியனை யடைந்து அவனறிவுறுக்கும் அறிவுரைவாயிலான் அறியற் பாலன வாகலின் அவற்றை யினி இங்கு விரியாது விடுக்கின்ரும்.

இதுகாறுங் கூறியவாற்ருல் முதலிற் சைவமென்பது யாது என்று ஆராயப் புகும்வழி அவ்வறிவு அழிந்து போகும் பொருள் போலாது அழியாப் பொருளாய் எல்லா உயிர்கள் மாட்டுந் தொன்று தொட்டே உள்ளத்திற் பதிந் திருக்குமா மென்பதும், சமயம் என்பது பொழுது, காலம், அவசரம் என்று பொருள்படுவதாகலிற் காலத்திஞலும் இடத்திஞலும் வரையறுக்கப்படுதல் சிறுபான்மை அறிவு விளக்கமுடைய உயிருக்கன்றி முற்றறிவு விளக்கமுடைய முதல்வற்கு இல்லையாமென்பதும், உயிரும் இறையும் என இரண்டில்லை முழுமுதற் பொருளே ஐம்பொறி அசைவால் உயிர்போலத் தோன்றுகின்றதென்று கூறும் ஏகான்ம வாதவுரை உயிரின் அறிவியக்கமின்றி ஐம்பொறிகள் இயங்கமாட்டா என்று காட்டப்படுவதனுல் மறுக்கப்படுத லின் அது பொருந்தாதாமென்பதும், இங்ஙனம் உயிர் ஐம்பொறிகளின் வாயிலாய்ப் புலன்களை உணருங் காலங்க ளெல்லாம் அதற்குத் தனித்தனியே ஒவ்வொரு பொழுது களாமென்பதும், அங்ஙனம் உணரும் வழியும் உயிர்க்கு யாதானுமொரு பொறிவழிவரும் இன்பத்திலேயே விருப்பம் மிக்குப்படு மென்பதும், அங்ஙனமெல்லாம் மிக்குச் செல்லு கின்ற உயிரின் பொழுது வேறுபாடுகளைச் சமயங்கள் என்று வழங்காமை அவை உடம்போடு உடன் அழிதலி ஞலேயா மென்பதும், உண் முகமாகச் செல்லும் அறிவா ராய்ச்சியே சமயமாவதற் குரித்தாமென்பதும், அவ்வாறு செய்யப்படும் உண்முக அறிவாராய்ச்சியும் பல திறப்படு கின்றன வென்பதும், அவையே உலகாயதம் முதலிய பெயர்களான் வழங்கப்படலாயின வென்பதும், அவை யொவ்வொன்றும் பயன்படுத லுடையனவே யல்லது பயனற்றனவாகா வென்பதும், இதுவே முடிநிலையிலுள்ள சைவத்தின் பொதுநிலை உண்மையா மென்பதும், இனி அம்முடிநிலைக்கண் உள்ளார்க்குக் கீழ்நிலைகளி னுள்ளன போலியாகத் தோன்றுதல் குற்றமாகா தென்பதும, இனிச் சைவமென்பது சிவத்தைய பொருளாக உடையதென் பதும், சிவமென்பது தொல்காப்பியர் நச்சிஞர்க்கினியர் மணிவாசகப் பெருமான் முதலிய பேரறிவாளரால் விளக்கப்

பட்ட்படி எப்பொருளுங் கடந்த அருவப் பொருளாமென்பதும், இத்தகைய முழுமுதற்பொருளை ஆராய்ந்தறிந்த நிலையே சைவசமயமா மென்பதும், அம் முழுமுதற்பொருளைச் சிவம் என்று வழங்குதலே பண்டை மறை முதலான தொன்னூற் கருத்தாமென்பதும், இப் பெற்றியதான அம் முதற்கடவுளுண்மையை ஒரோ ஒருகால் வேறு வேறு பெயரிட்டு வழங்கினும் அது சைவத்திற்கு இழுக்காவதில்லை யென்பதும், இங்ஙனம் பொதுநிலையுண்மையும் அருளறமும் விளக்கவந்த இரண்டு சைவ விளக்கங்கள் **திருஞானசம்பந்தப் பெருமானும் மெய்கண்டதேவருமாவ**ரென்பதும், இவர் இருவரும் வியத்தகும் அருட்பிறப்பினராம் என்பதற்கு அவர் வரலாறுகளிலுள்ள உட்பொருள்களே சான்றுமென்பதும் இதன்கண்ணே தொகுக்கப்பட்டன.

திருவுருவ வழிபாடு

அறிவிலுருவமாகக் காணப்படும் இப்பருப்பொருளுல கம்போற் காணப்படுவதுமன்றாய், அறிவிலருவப் பொருள் களாகிய வளியும் வானும்போ லுணர்ந் துரைக்கப்படுவது மன்றாய், அறிவுள்ள உயிர்ப்பொருள்போ லறிந்துணரப் படுவதுமன்றாய்க், காண்பதற்கெல்லாம் அப்பாலாய்க் கேட்பதற்கெல்லாம் அப்புறமாய், உரையளவு சென்று முடி விடங்கடந்ததாய் மனவுணர்வு சென்று பற்றுதற்கு ஏலா தாய், அறிவினுளறிவாய், உயிரினுள் உள்ளுயிராய், எல்லா வுலகங்களும் எல்லா உயிர்களும் தனது அருள்வெளிப் பரப்பின்கண்ணே மடங்கி யடங்கிக்கிடப்ப அவற்றின்மேல் விரிந்து சென்று முடிவிட மறியப்படாத பெரும் பரப்புடை யதாய், அறிவும் இன்பமுமாம் வடிவ வுண்மைப்பொரு ளாய், எல்லா ஆற்றலும் உடையதாய்ப் பேரின்பம் நிரம்பித் ததும்பும் பெருங்கடலாய்ப், பேருட் களஞ்சிய மாய் விளங்கும் முழுமுதற் கடவுளைச் சிறுகிய அறிவுஞ் சிறுகிய தொழிலும் சிறுகியறிந்ததனையும் மறந்துமறந் தறிதலும் மயங்கியறிதலுமுடைய சிற்றுயிர்கள் உணர்ந்து வழிபடுதல் கூடாமையால், அருட்பெருங்கடலாகிய அவ் விறைவன் தன்னை யவ்வுயிர்களுணர்ந்து வழிபட்டு உய்யும் பொருட்டு ஒரொரு காலங்களி லோரோரிடங்களில் ஓரோ ரன்பர்க்குக் கன்றை நினைந்துவரும் புனிற்றாப் போலவும், விறகின்கட் பிறந்த தீப்போலவும், மோரின்கட் டிரண்ட வெண்ணெய் போலவும், வித்தின்கட் பிழிந்தெடுத்த எண்ணெய் போலவும் வெளிப்பட்டு அவர்க்கு அருள் செய்த அருட்டிருக்கோலங்களை மெய்யன்புடையராகி மன வொருமைப்பாடு கொண்டு நினைந்து நாவுரை குழறக் கண்ணீருங் கம்பலையுந் தங்குறிப்பின்றியே நிகழ வழி பட்டுச் சிற்றறிவுத்தன்மை விட்டுச் சிவவறிவுத் தன்மை பெற்று நலமுறுதற்கு வாயிலான நன்முறைதான்

திருவுருவவழிபாடாகும். இங்ஙனம், விறகின்கண் மறைந்து கிடந்த தீ அவ்விறகினை ஒன்றோடொன்று தேய்த்துக் கடைந்த வழி அதிற்றோன்றி நின்றவாறு போலவும், பாலின்கண் மறைந்து அளாவி நிறைந்த நெய் அதனைக் காய்ச்சிக் கடைந்தவழி யதன்கண் வெளிப்பட்டு நின்ற வாறு போலவும், யாண்டும் பரந்து நிற்கும் இறைவன், உயிரினைக் கீழ்க்கோலாகவும் ஓங்காரவுணர்ச்சியை மேற் கோலாகவுங்கொண்டு அன்பென்னுங் கயிறுகட்டி யிழுத் துக் கடையவே வெளிப்பட்டுத் தோன்றிநின் றருள்புரிவ னென்பது பற்றியே,

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"

என்னுந் தேவாரத் திருப்பாட்டும்,

"இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்த வாகாய நீர்நிலந்தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்த தோருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்டின்றே"

எனவும்,

"சோதியாய்த் தோன்று முருவமே யருவாமொருவனே
சொல்லுதற்கரிய, வாதியே"

எனவும் போந்த திருவாசகத் திருமொழியும்,

"நிறுத்திடு நினைத்தமேனி நின்மல னருளினாலே"

என்னுஞ் சிவஞானசித்தித் திருப்பாட்டும்,

"ஆத்மாநம் அரணிம் க்ருத்வா ப்ரணவஞ் சோத்தராரணிம்
ஜ்ஞாநநிர்மத நாப்யா ஸாத் பாசந்தஹதி பண்டித:"

என்னுங் கைவல்லியோபநிடதத் திருமொழியும்,

"ஸ்வதேஹமரணிம் க்ருத்வா ப்ரணவஞ் சோத்ராரணிம்
த்யாநநிர்மத நாப்யா ஸாத் தேவம் பச்யேந் நிகூடவத் ||
திலேஷுதைலம் ததிநீவ ஸர்பிராபஸ் ஸ்ரோதஸ் ஸ்வரணீஷு சாக்நி: ஏவ மாத்மாத்ம நிஜாயதே ஸௌஸத்யே நைநம் தபஸா யோநு பச்யதி || ஸர்வவியாபிந மாத்மாநம் க்ஷீரே ஸர்பி ரிவார்பிதம்"

என்னுஞ் சுவேதாசுவதரோபநிடதத் திருமொழியும் எழுந்தன.

இங்ஙனங் காணவுங் கருதவும் வாராத முழுமுதற் பெருங்கடவுளைக் காணவுங் கருதவும் எளிதாகிய உருவத் திருமேனியிற்கொண்டு வழிபடுந் திருவுருவ வழிபாட்டின் இயல்பு அறியமாட்டாத வேறு சமயத்தார் சிலர், இந்துக்கள் இழிந்ததாகிய விக்கிரகாராதனை செய்து இறைவனுடைய பெருஞ்சினத்துக்கு ஆளாகின்றனர் என்று இழித்துச் சொல்லா நிற்பர். ரோம், கிரீசு, எகிப்து முதலிய நாடுகளிலுள்ளவர்கள் செய்யும் விக்கிரகாராதனை போல்வதன்றி இந் நாவலந்தீவின்கண் உள்ள நன்மக்கள் செய்து போதரும் திருவுருவ வழிபாடு, ஆழ்ந்த கருத்துடையதாய் முதல்வன் ஓரோர் அன்பர் பொருட்டு ஓரொருகாலங்களில் மேற்கொண்டு வந்த அருட்டிருவுருவ வழிபாடாகலின், அது மெய்யன்புடையார் மெய்ம்மையான் வழிபடுதற்குரிய மேம்பாடுடைத்தாம். பிறநாடுகளிலுள்ள மக்கள் இறைவன் அங்ஙனம் திருமேனிகொண்டு அருள்செய்யுந் திருக்கோலங்களை ஒருகாலத்துங் கண்டறியாமையின் அவர் தாந்தாம் அறிந்தவாறே ஒவ்வொரு சித்திரப்பாவைகளை அமைத்துக்கொண்டும், பூனை, பாம்பு, சுண்டெலி, முதலை முதலிய உயிர்களின் வடிவங்களை நிறுத்திக்கொண்டும் வழிபட்டு அவ் அறிவில் உருவப்பொருள்களின் கண் அன்புடையராய் இறைவனை யறிந்து வழிபடுதற்குரிய நல்வினையாளராய் வர்ழுவாராயினர். அப்பிற நாடுகளினும் ஒவ்

வொரு காலங்களில் அபரஞானப்பேறு கைவந்தவர்களாகிய தீர்க்கதரிசிமார் சிலர் தோன்றி ஆங்காங்குள்ள மக்கள் உய்யும்பொருட்டாக நல்லொழுக்க முறைகளையும் அபரஞான வுண்மைகளையும் அறிவுறுத்துவந்தாரென்பதை அவரவர் தேசசரிதங்களானும் சமய நூல்களானும் அறிந்துள்ளோமாயினும், அத்தீர்க்கதரிசிமா ரெல்லாம், இறைவனுடைய திருக்கோலங்களை நேரே கண்டு வழிபடுதற்குரிய நல்வினைப்பேறும் பரஞான முதிர்ச்சியும் உடையராகாமையால், அவர் தமக்கு அவ்விறைவன் வான்முகிலில் மறைந்துநின் றருள்செய்தனனென்றும், அடவிகளிலும் மலைக்குகைகளிலுந் தாம் இயங்கிக்கொண்டிருந்த காலங்களில் இறைவன் தம்மோடு உரையாடிய ஞானஒலி கேட்டாரென்றும் அவர் சமய நூல்களிற் சொல்லப்பட்டதன்றி, அவ் விறைவனே யுருவங்கொண்டு அவர் கண்ணெதிரே தோன்றி யருள்செய்தானென்றும் அவ்வாறு அருள் செய்த முதல்வன் திருவடையாளங்களிவை என்றுங் குறிப்பிடப்படாமையான் அவரெல்லாம் இறைவன்றன் அருட்கோலங்களைக் கண்டு வழிபடும் முறைமை யறியாராயினர். அங்ஙனம் அறியமாட்டாத அபரஞான தீர்க்கதரிசிமார் கூறிய அறிவுரைகளைக் கடைப்பிடித்தொழுகிய மக்கள் அவர் கூறிய நன்னெறிப் பொருள்களை மனம்பொருந்த அமைத்து அவற்றின் வழிநடந்து, இறைவனை உண்மையான ஒரு திருவுருவத்தின் வைத்து வழிபடும் முறைமை தமக்கு விளங்காமையால் தமக்கு விளங்கியவாறெல்லாம் வேறு பிறவுருவங்களை அவ்விறைவன் அருளுருவங்களாகப் பிறழக்கொண்டு அவை தம்மையே வழிபடுகின்றனர். இனி இந்நாவலந் தீவினராகிய நன்மக்களோ இறைவன் ஒவ்வோர் அன்பர்பொருட்டு ஒவ்வொரு காலங்களிற் கொண்ட அருட்கோலங்களாகிய சதாசிவன், மகேசுரன், அம்மையப்பர், காளி, துர்க்கை, உமை, பிள்ளையார், முருகன், வைரவன் முதலியவற்றையே உண்மையான் வழிபடுகின்றனர். அங்ஙனம் வழிபடப்படுவனவாகிய அருட்கோலங்கள் தாமும் மெய்யன்புடையார்க்கன்றி யேனையோர்க்கு எளிவந்து விளங்குவன அல்லவாகலான், அவை

வெளிவந்து அருள் செய்யப்பெற்ற மெய்யன்பர் தாங்கண்ட வாறே அவ்வருட்கோல அடையாளங்களை அன்புததும்பி வழிய அறிவுவடிவாய் விளங்குந் தம் திருமொழிகளால் வகுத்துக் கூறிய முறைபற்றி மக்களெல்லாருந் தாமும் உய்யுநெறி தேடல் வேண்டிக் கல்லினாலுஞ் செம்பினாலுந் திருவுருவங்கள் அமைத்து அவற்றை மறைபொருள் நுட்பங்களொடு கட்டப்பட்ட திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி வருகின்றனர். இனி, இவ்வாறு இவர் வழிபடும்போதெல்லாம் கல்லினாலுஞ் செம்பினாலும் அமைக்கப்பட்ட பருப்பொருள் வடிவான அத்திருவுருவங்கள், அவ் வடையாளங்களையுடைய அறிவுப்பொருள் வடிவான அருட்கோலங்களை நினைவூட்டி, அவ்வருட்கோல வழிபாட்டின்கண் அவர் அறிவைப் பதியச் செய்து அவருக்கு உறுதிதருதலான் அது திருவுருவ வழிபாடு என்று வழங்கப்படுகின்றது. இனிப் பிறநாடுகளிலுள்ள மக்களுக்கு உருவ வருட்கோலங்கொண்டு இறைவன் அருள் செய்ததில்லை யென்பது மேலே இனி தெடுத்து விளக்கிக் காட்டினேமாதலால், அவர் தமக்குத் தோன்றியவாறெல்லாங் கற்பித்துக்கொண்ட பருப்பொருள் வடிவங்கள் தம்மை முதலாகவுடைய அறிவுப் பொருளுருவ வருட்கோலங்களை அவர்க்கு நினைவிலெழுப்பவும் அவரறிவை அவற்றின்கட் பதியுமாறு செய்யவும் மாட்டாதொழியும். ஒழியவே, அவர் கல்லானுஞ் செம்பானுமியற்றிய வடிவங்களிற் செய்யும் வழிபாடெல்லாம் அவ்வடிவங்களைக் கடந்து அறிவுருவ இறைவன் அருட்கோலத்தின்கட் செல்லாவாய் மடங்கி அப்பருப்பொருள் வடிவங்களின் கண்ணேயே செல்லுதலால் அவை **விக்கிரகாராதனை** என்று வழங்கப்படுகின்றன. இங்ஙனம் இந்நாவலந் தீவினராகிய நன்மக்கள் செய்து போதரும் திருவுருவ வழிபாடாகிய கடவுள் வழிபாடும், புறநாடுகளிலுள்ளவர்களாகிய மக்கள் மேற்கொண்டொழுகும் விக்கிரகாராதனையாகிய விக்கிரக வழிபாடுந் தம்முள் வேறுபாடுடையவாதல் உணராது இரண்டனையும் ஒன்றுபடுத்தி அவ்வாற்றால் நம்மனோர் மேற்கொண்டு

செய்யுந் திருவுருவ வழிபாடாகிய நன்முறையை இகழுதல் பொருந்தாது.

மேலும், நாவலந் தீவினராகிய நம்மனோர் பகலவனை வழிபடும்போது அவனை ஓருடம்பாகவும், **பர்க்கன்** என்னும் பெயரோடு கூடிய இறைவனை அவ்வுடம்பினுள் ஓர் உயிராகவுங்கொண்டு தொழுவர். பிறர் அங்ஙனங்கொள்ள அறியாமற் பகலவனையே கடவுளாகக்கொண்டு வணங்குவர். நம்மனோர் நிலவினை வழிபடும்போது அதனை ஓர் உடம்பாகவும், **சோமன்** என்னும் பெயரோடுகூடிய இறைவனை அதனுட்பரம்பிய முழுமுதற் பொருளாகவுங்கொண்டு வழிபடுவர். பிறரோ நிலவையே கடவுளாகத் துணிந்து தொழுவர். நம்மனோர் இவ்வூனுடம்பின்கண் ஓருயிர் இருப்பதுபோல அவ்வுயிரின் கண்ணும் **பசுபதி** யென்னும் முதல்வன் உளனென்றுகொண்டு வணங்குவர். பிறரோ அவ்வுயிரையே கடவுளெனத் துணிந்து வழிபடுவர். இவ்வாறே மண், புனல், அனல், கால், வான் என்னும் ஐம்பெரும் பொருள்களையும் அவ்வைம் பெரும் பொருள்களின் தொகுதியாக விளங்கும் இவ்வுலகினையும் இறைவனுக்கு உடம்புகளாகத் துணிந்து அம்முறையாலவற்றை வழிபடும் நன்மக்கள் வழிபாட்டினியல்பு உணராது, அவை தம்மையே கடவுளெனப் பிறழ உணர்ந்து வழிபாடு புரியும் ஏனையோரொடுங் கூட்டி அவரை யிகழ்வார் உண்மையறியாதவ ராவரென் றொழிக. இதுபற்றியன்றே ஆங்கிலநாட்டிற் புகழ் பெற்று விளங்கிய **மாக்ஸ்மூலர்** *'ஜர்மானிய தொழிற்சாலைச் சிதர்துண்டுகள்' என்னும் முதற்புத்தக முகவுரையில், 'நாவலந் தீவினரால் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே, ரோம் முதலிய நாடுகளில் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே, முன்னையதிற் கடவுளின் உடம்புகளாக விக்கிரகங்கள் வணங்கப்படுகின்றன. பின்னையதில் விக்கிரகங்களே அவ்வாறு வணங்கப்படுகின்றன; இங்ஙனமாயின் இந்துமக்களை நாங் குறை கூறுதலென்னை?" என்னும் பொருள் தருமாறு எழுதுவாராயினர். இன்னும்,

*Chips from a German workshop, Vol 1.

அவர் கடைசியாக வெளியிட்ட தமது *'இந்தியர் ஆறு தத்துவக் கொள்கைகள்' என்னும் புத்தகத்தில் **திவ்விய தாஸ்தத்தர்** என்பவர் எழுதிய: "ஒன்றை அறிவதற்குச் சொற்களும் பொருள்களும் அடையாளங்களாக இடர்ப்படுகின்றன; சொல் அடையாளங்கள் செவியுணர்வுக்குக் கருவியாகின்றன; பொருள்கள் கண்ணறிவிற்குக் கருவியாகின்றன, இவையே இவையிரண்டற்கும் வேற்றுமை. சொல் அடையாளங்களாகிய மொழிகளைப் பயன்படுத்தலில் எந்தச் சமயவாதியும் ஐயுறுதற்கு இடம்பெருதபோது, இறைவனை வழிபடுதற்குக் கருவியாகிய பொருளடையாளங்களை ஐயுறுதல் என்னை?" என்பதனை எடுத்துக் காட்டித் தம் துணிபு நிலையிட்டனர். இவ்வாறு உண்மையாக ஆராய்ந்து பார்க்க வல்லார்க்குச் சைவ நன்மக்கள் பண்டைக்காலந் தொட்டுக் கைக்கொண்டொழுகும் நன்முறையாகிய திருவுருவ வழிபாடு ஏனைச்சமயிகள் கொண்டு போற்றும் விக்கிரகாராதனைபோல்வதன்றென்பதூஉம், அது பலவேறு வகைப்பட்ட உண்மை நுண்பொருட் பரப்பெல்லாந் தன்னகத்தடங்கக்கொண்டு இறைவனை எளிதிலுணர்ந்து வழிபட்டு உயிர்கள் வீடுபேற்றின்பம் பெறுதற்கு ஏதுவாகிய நிலயமாமென்பதூஉம் இனிதுவிளங்கும்.

இனி மேலே, காட்டியவாறு ஏனைநாடுகளில் அபர ஞானப்பேறுற்றுத் தோன்றிய தீர்க்கதரிசிகளுக்கு முழுமுதற்பெருங் கடவுள் உருவமாகத் தோன்றி அருள் செய்யவில்லை என்றும், இந்நாவலந்தீவிலுள்ள திருத்தொண்டர்களுக்கு உருவ அருட்கோலங் கொண்டு எழுந்தருளிவந்து அருள்செய்தாரென்றுஞ் சொல்லிய பகுதியில் ஐயம் நிகழாமைப் பொருட்டு அதனை மீண்டெடுத்து விளக்கி ஒரு சிறிது வலியுறுப்பாம்.

இனி, இறைவன் உருவவருட்கோலங் கொண்டு தமக்கு அருள்செய்த முறைமையினையும், அங்ஙனம் அருள் செய்யும் வழி இறைவன் கொண்ட திருவுருவ அடையாளங்களையுங் கண்டு அறிந்து அன்பு வெள்ளம் தம்மகம்

---

* Six Systems of Indian Philosophy.

நிறைந்து துளும்பி வழியப் பாட்டுக்களி லமைத்து வழி பட்ட திருத்தொண்டர் வரலாறுகளை, ஆங்கில மொழியிற் பற்பல நாட்டு வரலாறுகளையும் ஒத்துநோக்கிப் பார்க்குஞ் சிறந்த புலவரும் பிறரும் உண்மையாமெனத் துணிந்து தழுவி யொழுகுகின்றனர். இறைவன் றமக்குச் செய்த அருண்முறையைத் தாமே தம் பாட்டுக்களில் வேறு ஏதொரு குறிப்புமின்றி அவ்விறைவனை வழிபடுதல் ஒன்றே குறித்து அமைத்துப் பாடுதலா லங்ஙனம் அவர் சொல்லுந் தம்முடைய வரலாற்றுக் குறிப்புகளை அப்புலவோர் உண்மையாமெனக் கொண்டு ஒழுகக் கடமைப்பட்டவ ராயினர்.

இனி; அவருள் ஒரு சாரார் இங்ஙனம் மெய்யன்புடைய திருத்தொண்டர் தாமே கண்டு கூறும் இறைவன் அருண் முறையைப் பொய்யென்று ஒழித்துவிடுதற்குக் கூடாமையால், அவ்வடியவர் கண்ட அவை யெல்லாம் உருவெளித் தோற்றங்க ளாவனவன்றிக் கடவுள் தாமே எழுந்தருளி வந்து அவர்க்கு அருள் செய்தனவாகாவென வும் உரைத்து எதிர்வழக்குத் தொடுக்கின்றனர். அவர் சொல்லும் அவ்வுருவெளித் தோற்றவியல்பை ஓர் எடுத் துக் காட்டின்கண் வைத்து விளக்கிக் காட்டுவாம். இராம னுடைய வடிவ வழகைக் கண்டு விரும்பி அவனால் துன்புறுத்தப்பட்டுத் திரும்பிப் போகிய சூர்ப்பநகை தன் மூத்தோனாகிய இராவணனைக் கண்டு அவனுக்குச் சீதை யின் பேரெழிலை விரித்து உரைப்ப, அதனைக்கேட்டு அவள் பாற் பெரிதும் விழைவுகொண்ட அவ் விராவணனுக்குத் திங்களைப் போற் றெளிந்து விளங்கு சீதையின் முகமும், அம்முகத்திற் குழைச்செவியளவுங் கிழித்துச் செல்லுங் கரிய பெரிய வரிகடை யொழுகு விழிகளும், முல்லை முகை போற் குமிழ்த்த மூக்கும், பவளத்தை அறுத்துக் கடைந்து திரட்டி வைத்தாற் போலும் செவ்வாயும், அவ்வாயினகத்தே முத்துவரிசைபோல் திகழும் பற்களும், பளிங்குபோல் தெளிவாகிய கன்னங்களும், கரிந்து சுரிந்து நீண்டுகிடக்கும் மயிர்க்கற்றையும், பிற உறுப்புகளும் தன்விழியெதிரே

தோன்றக் கண்டு மெய்ம்மறந்த களிப்புடையனாகித் தன்னருகே நின்ற தங்கையை அழைத்து, 'இதோ தோன்றும் இவள்தானோ சீதை என்பாள்?'' என்று வினவினானென்றும், அதற்கு அவள், தான் இராமன்மேற் கழிபெருங் காதல் கொண்டிருந்தமையால் தன்னெதிரே தோன்றிய அவ்விராமனது உருவெளித் தோற்றத்தைக் கண்டு 'செந்தாமரைக் கண்களும் செங்கனிவாயும் பரந்து திணிந்த மார்பும் முழங்கால் தடவுந் தடக்கைகளும் உடைய இவனே அவ் விராமனென்பா' னென்று மறுமொழி தந்தாளென்றும் இராமாயணங் கூறுநிற்கும். இவ்வாறு தோன்றிய உருவெளித்தோற்றங்கள் அவ்வவர் காதன் மிகுதியால் தோன்றியனவாகையால் அவை உண்மையாகவே வெளிப்பட்ட அருட்கோலங்க ளாகமாட்டா; இதுபோலவே, முழுமுதற்பெருங் கடவுளிடத்திற் றமக்கு நிரம்பிய அன்பின் பெருக்கால் அவ்வடியவர்தாம் கண்ட உருவெளித் தோற்றங்களை உண்மையா மெனக்கொண்டு தஞ்செய்யுட்களில் அமைத்துப் பாடினாராகலான், அவர் கண்ட அத்தோற்றங்கள் இறைவன் கொண்ட அருட்கோலத் திருவுருவங்களா மென்று துணிந்துரைத்தல் யாங்ஙனமெனின், கண்ணுக்கு மட்டுமே தோன்றி ஏனைப் பொறிகளுக்குப் புலனாகாத தோற்றங்களாயின் அவை நீர் கூறுமாறு பொய்யாயொழிந்திடும். அவ்வாறன்றிக் கண்ணினாற் காணப்படும் உருவமும், செவியினாற் கேட்கப்படும் ஓசையும், மூக்கினாற் கவரப்படும் இனிய மணமும், கையினாற் பற்றப்படும் வடிவமுங்கொண்டு பொருள் விளங்கச் சொற் சொல்லுதலும் நகுதலும் இயங்குதலுமுடைய தோற்றங்களாயின், அவையெல்லாம் நீர் கூறுமாறு உருவெளித் தோற்றங்களாதற்கு ஒருவாற்றானும் ஏலாவாய், இறைவன் அவ்வன்பர்க்கு அருள் செய்தற்பொருட்டுக் கொண்ட அறிவுருவ அருட்கோலங்களே யாமென்பது இனிது துணியப்படும். அற்றன்று, அவ்வடியவர் தமக்குள்ள அளவிறந்த அன்பின் மிகுதியால் தம்மெதிரே தோன்றும் அவ் வுருவெளித் தோற்றங்களை நிற்பன போலவும் நடப்பன போலவும் பேசுவன போலவுஞ் சிரிப்பனபோலவும் பிற செய்வனபோலவு

மெல்லாங் காண்பாராயினரெனின்; அதுகிடக்க, இங்ஙனம் விஞ நிகழ்த்தும் நீவிரும் நிற்பீர்போலவும் நடப்பீர்போல வும் பேசுவீர்போலவுஞ் சிரிப்பீர்போலவும் உண்பீர் போல வும் உடுப்பீர்போலவுந் தோன்றுகின்றமையின், நீவிரும் அங்ஙனம் பொய்யா யொழிந்திடுவீர் போலுமெனக் கடாவு வார்க்கு மறுமொழி கூறலாகாமையான் அவ்வாறு உலக வியற்கையொடு மாறுபட்டுவிஞதல் போலியாமென்றொழிக.

இனி, இங்ஙனங் காட்டிய அளவைமுறை கொண்டு, தமக்கெதிரே தோன்றும் உருவம் ஐம்பொறிகளானும் உணரப்படும் பெற்றியுடையதாயின் அஃது உருவெளித் தோற்றமாவதின்றி, மெய்ம்மை வடிவுடைய தேவ வடிவமா மென்பது நன்று வலியுறுக்கப்பட்டதாயினும், இத்தென் றமிழ் நாட்டிலுள்ள திருத்தொண்டர்க்கு வெளிப்பட்ட அக்கோலங்கள் அங்ஙனம் ஐம்பொறியானும் உணரப்படும் அருட்கோலங்களா மென்பது அவ்வடியவர் திருச்செய்யுளி னின்றே எடுத்துக்காட்டி நுமது மேற்கோளை நிறிஇக் கொள்க என்பார் மகிழ்வுறல் வேண்டி அதுவுந் தந்து விளக்குவாம்.

மதுரைமாநகரிற் பாண்டியன் அவைக்களத்தில் தெய்வப்புலவராய் அமர்ந்திருந்த ஆசிரியர் நக்கீரனர், ஆலவாய்க்கடவுள் எழுதிய *“கொங்குதேர் வாழ்க்கை” என்னுஞ் செய்யுட்குக் குற்றஞ்சொல்ல, அக்குற்றத்தைக் களைந்துகொள்ளும் பொருட்டும், அச்செய்யுளின் மெய்ம் மைப்பொருள் அவர்க்கு அறிவுறுத்தும் பொருட்டும் இறைவன் உருவ அருட்கோலந் தழுவி வந்து அவர்க்கு அதனை உணர்த்தியும், அவரதனை உணராமல் தாஞ்சொல் லிய குற்றத்தை நிறுத்தப் புகுந்தவழி, இறைவன் அவரது செருக்கை அடக்கி அவரைத் தூய்மை செய்தருள எழுந்த இரக்கத்தால் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து விழிப்ப, அதனினின்றுங் கிளர்ந்து தம்மைச் சுடும் அனலைப்

* குறுந்தொகை

பொறுக்கமாட்டாமல், மக்களுருவங்கொண்டு வந்த அப் பெருமானை அறிந்து தம் பிழையைப் பொறுத்தருளும்படி நக்கீரனார் அவ்விறைவனைக் குறையிரந்தியற்றிய **திருவெழு கூற்றிருக்கை** என்னுஞ் செய்யுளில்,

"சிறியேன் சொன்ன வறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய வண்ணல்
பாதஞ் சென்னியுட் பரவுவன் பணிந்தே"

எனவும், அத் 'திருவெழுகூற்றிருக்கை' இறுதிவெண் பாவில்,

ஆல வாயி லமர்ந்தாய்—தணிந்தென்மேன்,
மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
யையுறவொன் றின்றி யமர்ந்து"

எனவும், **பெருந்தேவபாணியில்,**

"புத்தியு நீயே முத்தியு நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே, யதனாற்
கூட லாலவாய்க் குழக னாவது
அறியா தருந்தமிழ் பழித்தன னடியே
னீண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே"

எனவும், அதன் இறுதியிலுள்ள வெண்பாவில்,

"விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தே னடியேன்- விரைந்தென்மேற்
சீற்றத்தைத் தீர்த்தருளுந் தேவாதி தேவனே
யாற்றவுநீ செய்யு மருள்"

எனவுந் தாமே, தமக்கு உண்மையறிவிக்கும் பொருட்டு இறைவன் உருவத் திருக்கோலங் கொண்டு வந்தானென் பதூஉம், அவ்வாறு வந்த இறைவன் அருட்டிறத்தைத் தாமறியாது பிழைசெய்தா ரென்பதூஉம், அதன்மேல் இறைவன் விழித்த நெற்றிக்கண் நெருப்புத் தம்மைச்

கூடவே அவ் விறைவனைத் தாமறிந்து கொண்டா ரென் பதூஉம் நன்ருக எடுத்து மொழிந்திட்டார். இங்ஙனம் எடுத்து மொழிந்ததூஉம் பிறரை வஞ்சித்தன் முதலிய ஏதுவானன்றி இறைவனை என்பெல்லாம் நெக்கு நெக் குருகி நெஞ்சம் நெகிழ்ந்து கரைய வழிபட்டு அவன் அருளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டேயா மென்பது பொது வறிவுடையார்க்கும் இனிது விளங்கும். இங்ஙனம் இறைவன் உருவவருட்கோலந் தழீஇ வந்து நக்கீரனுர்க்கு அருள் செய்த வியத்தகு முறையை எவர்தாம் உருவெளித் தோற்றமென் றுரைக்க ஒருப்படுவார்? எந்த நிரீசுரவாதி தாம் இதனை மறுக்கவல்லராவர்? அவ்வாறவர் பொய் யென்று மறுக்க விரும்பினுல் இவற்றிற்கெல்லாம் வேறு யாதுதான் வழிசொல்ல மாட்டுவார்?

இன்னும் ஒன்று காட்டுவாம். உலகமெல்லாம் புகழ்ந் தேத்துஞ் சைவத்திருவாளராகிய மாணிக்கவாசகர் தாம் அமைச்சராயிருந்துழிப் பாண்டியன் தந்தபொருள் கைக் கொண்டு குதிரைகொள்ளும் பொருட்டுச் சென்ற வழியிற் கிட்டிய திருப்பெருந்துறைப் பூங்காவிற் சிவபெருமான் ஓர் அந்தணர் வடிவங்கொண்டு மாணவர் பலர் புடைசூழ விருந்து தம்மை ஆண்டு கொண்டு அருள் செய்த முறையைத் திருவண்டப் பகுதியில்,

"என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
யறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்"

எனவும், போற்றித்திருவகவலில்,

"அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையை"

எனவும், ஆனந்தாதீதத்தில்,

"ஈறிலாதநீ யெளியையாகிவந் தொளிசெய்
மானுடமாக நோக்கியுங்

கீறிலாத நெஞ் சுடைய நாயினேன்
கடைய னுயினேன் பட்ட கீழ்மையே ''

எனவும், திருவம்மானையில்,

". செங்க ணெடுமா லுஞ் சென் றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையா
னங்கண னந்தணனு யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய் ''

எனவும், அருட்பத்தில்,

" நீதியே செல்வத் திருப்பெருந் துறையி
னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே ''

எனவும், பிரார்த்தனைப்பத்தில்,

" கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன் ''

எனவும், பின்பு அவ் விறைவனுணை வழிநின்று பாண்டிய னிடத்திற் றிரும்பச் சென்று தாம் அங்கிருந்துழிக் குறிப் பிட்ட நாளிற் சிவபெருமான் நரிகளைப் பிடித்துக் குதிரை களாக்கிக்கொண்டு ஒரு குதிரை மேற்கொண்டு தாமும் பாண்டி நாடு அடைந்து அவ்வரிய அருட்டிருக்கோலங் காட்டி யருள்செய்த அருட்டிறத்தைத், திருவேசறவில்,

" ஒருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே ''

எனவும், கீர்த்தித்திருவகவலில்,

" அரியொடு பிரமற் களவறி யொண்ணுன்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று ''

எனவும்,

"மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக ளுகிய கொள்கை"

எனவும்,

"அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்"

எனவும், **திருவம்மானையில்,**

"சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானுய்"

எனவும், **திருப்பொன்னூசலில்,**

"சாலவமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மீகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்"

எனவும், **அன்னைப்பத்திற்,** சட்டையிட்டுக் குதிரைமேல் வந்தாரென்பது தோன்ற,

"பள்ளிக்குப் பாயத்தார் பாய்பரி மேல்கொண்டென்
னுள்ளங் கவர்வரா லன்னே யென்னும்"

எனவும், **திருப்பாண்டிப்பதிகத்தில்** அங்ஙனங் குதிரைமேல் உருவவருட்கோலங் கொண்டு வந்த இறைவனுர் திருவுருவத்தையே தாம் நினைந்துருகினமை இனிது புலப்படத்,

"தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனு
ரொருவரை யன்றியுரு வறியாதென்ற னுள்ளமதே"

எனவும்,

"பாரின்ப வெள்ளங் கொளப்பரிமேற் கொண்ட பாண்டியனு
ரோரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை யுள்ளங்கொண்டார்"

எனவும்,

"பரவிய வன்பரை யென்புருக் கும்பரம் பாண்டியனுர்
புரவியின் மேல்வரப் புந்திகொளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாமறி யார்மறந்தே"

எனவும், பின்னர் அடிகளைப் பாண்டியன் வைகையாற்றில் நிறுத்தி நலிந்தவழி இறைவன் அவரை அந்நலிவு தீர்த்தற் பொருட்டு விடுத்த வெள்ளப்பெருக்கினால் வைகையாற் றின்கரை யுடைந்து நீர் பெருகுதலை அரசனுணர்ந்து அக் கரையை ஊரிலுள்ளார் அனைவருங் கட்டும்பொருட்டு நிலனளந்து கொடுப்ப, அங்ஙனந் தங்கடங்கட்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலங்களிற் கரைகோலிக்கொண்டு ஊரி லுள்ளாரெல்லாரும் முயன்றுகொண்டிருக்கையில், உற வினர் யாருமின்றித் தனியளாய்ப் பிட்டுவிற்கும் பொரு ளைக்கொண்டு தன் வயிறு நிரப்பி அந்நகரில் உறைந்து கொண்டிருந்தவளும், ஆலவாய்க் கடவுளிடத்திற் பெருகிய மெய்யன்புடையளும், முதிர்ந்த ஆண்டினளுமான ஒரு பிட்டுவாணிச்சி தனக்கு அரசனளந்திட்ட கரைநிலத்தைத் தானே திருத்திக் கட்டமாட்டாமையானும் தனக்காகக் கூலியின்றித் தொழில் செய்வாரைப் பெறாமையானும் பெரிதும் வருந்தி ஆலவாய்க் கடவுளிடஞ் சென்று அழுது குறையிரப்ப, அவள் குறையினைச் செவிமடுத்த அருளுரு வினனான பெருமான் ஓர் ஒட்டனைப்போல் வடிவங்கொண்டு போந்து 'அம்மே! கூலிக்கு ஆள்வேண்டுமோ?' என்ன, அவள் 'அப்பா! நான் கூலி கொடுக்கப் பொருள் சிறிது மில்லாத வறுமையுடையேன்; நாடோறும் பிட்டுவிற்று அதில்வரும் சிறியதோர் ஊதியப் பொருளைக்கொண்டு வயிறுவளர்க்கின்றேன்; தீவினையேன் என் செய்வேன்!' என்ன, அவன் 'அம்மே! நீ சுடும் பிட்டில் உதிர்ந்துபோகும் பாகங்களையேனும் எனக்குக் கூலியாகக் கொடுக்க ஒருப் படுவையேல் உனக்காகத் தொழில் செய்வேன்' என் றுரைப்ப, அம்முதியோள் பெரிதும் அகமகிழ்ந்து 'அப் பனே! அவ்வாறே தருவேன், நீ தொழில் செய்துவா' என்ன, அவர் அவ்வாறே தொழில் செய்வதுபோல் மாயஞ் செய்து இடையிடையே யவளிடஞ் சென்று அம்மே! எனக்கு நிரம்பவும் பசிக்கின்றது; உதிர்ந்த பிட்டுணவு கொடு' என்று கேட்டுப் பெற்றுண்டு பிச்சனைப்போற் கூத் தாடிக்கொண்டு கரைகோலாது நாளைப்போக்க, அன்று

மாலேயில் அரசன் ஊரார் கரைகோலியதனைக் காணவந்து எல்லார்க்கும் அளந்துவிட்ட நிலந் திருத்தப்பட்டிருத்தலேயும் பிட்டுவாணிச்சிபங்கு அங்ஙனந் திருத்தப்படாதிருத்தலேயுங் கண்டு வெகுண்டு அதனைத் திருத்தவந்த கூலியாளாகிய ஒட்டனைத் தன் கையிலிருந்த பிரம்பாலடித்தலும், அவ்வடி அடித்தவனுகிய பாண்டியனை யுள்ளிட்டு அசையும்பொருள் அசையாப்பொருளாகிய எல்லாவற்றின் மேலும் உறைப்ப, ஒரு கூடை மண்ணால் அக் கரையைத் திருத்தி ஒட்டவடிவங் கொண்டுவந்த இறைவன் மறைந்து சென்ற அருட்டிறத்தை நினைந்து நினைந்துருகி அவ்வரசன் பக்கத்தில் அமைச்சராயிருந்து நேரிற்கண்ட மணிவாசகப் பெருமான் தம் **கீர்த்தித்திருவகவலில்,**

" ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளியபரிசும் "

எனவும், **திருவம்மானையில்,**

" மண்சுமந்து கூலிகொண் * டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய் "

எனவும், **திருப்பூவல்லியில்,**

" திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

எனவும், **திருக்கழுக்குன்றப்பதிகத்தில்**

" பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்டநேர்பட வந்திலாத சழக்கனே னுனைச்சார்ந்திலேன் "

எனவுந் தாமே தமது திருவாயால் அவ்வருட்பாட்டு முறையினையும், இறைவன் தம் பொருட்டுத் தாங்கிவந்த உருவ வின்ப வருட்கோல மரபினையும், அவ்வருட்கோலங் கொண்டு வெளிப்பட்ட பெருமான் நிகழ்த்திய திருவிளை

* 'அப்பாண்டிய வரசனாலடிபட்டு' என்று பொருளுரைக்க.

யாடன் மாட்சியினையும் விதந்து பலமுறை யெடுத்தோதி யருளியவாறு காண்க. ஐம்புலன்களுக்கும் ஆரநுகர்ச்சி யாம்படி திருக்கோலந்தாங்கிக் காணவுங் கருதவும் உரைப் பவும் வாராத தன்பெருமைத் தன்மைகளைத் தன் அன்பர் பொருட்டுக் காணவுங் கருதவும் உரைப்பவுமெல்லாம் எளி வந்தனவாக்கி வெளிவந்த முதல்வன்றன் பேரருட்டிறத்தை அன்பு நிறைந்த தூய வுள்ளத்தோடு ஆராயலுறுவார்க்கு, அவ்விறைவன் உருவமும் அருவமும் அருவுருவமுமாகிய எல்லா நிலையும் எய்தவல்ல எல்லா ஆற்றலுமுடையவனு மென்பது நன்கு புலப்படும். இங்ஙனம் விரிவாயெடுத்துக் காட்டிய உண்மை யருண்மொழிகளையும் அந்த அருண் மொழிகளாற் பெறப்பட்ட உண்மையருட்கோல வியல்பு களையும் உண்மை வரலாறுகளிற் பழகிய எவர் தாம் தழு வாது ஒழிவர்? அல்லதூஉம், உலகவியற்கைக்கு மாறுக நடப்பன வொன்றுமில்லாமையால், *அற்புதங்கள் அல் லது புதுமைகள் நிகழ்ந்தனவென்று உரைத்தல் வெறும் பொய்யேயாமென்று வாய்ப்பறையறைந்து திரியும் **பிரமசமா சத்தார்** இவற்றிற்கெல்லாம் யாது சொல்லவல்லார்?

இனி இங்ஙனந் தோன்றும் இறைவன் அருட்கோல வியல்பு உணரமாட்டாது, அவைதம்மை †எண்ண முதிர்ச் சியா னிகழ்ந்த உருவெளித் தோற்றங்களா மென்பார் தெளிந் துறுதிகூடுமாறு இன்னும் ஒன்று காட்டுவாம். ‡மக்களென்பார் எக்காலத்தும் எவ்விடத்தும் ஒருவரோ டொருவர் உறவு உரிமை பூண்டு வாழும் இயல்பினரேயாம். இவ்வாறு உறவுரிமை கொண்டு வாழு மியல்பினராகிய மக்கள் ஒருவரொருவரோடு அளாவளாவி வாழும் முறை யினால் அறிவு முதிர்ச்சியடைந்து உலகியலறிவும் கடவு ளுணர்ச்சியு முடையராகின்றனர். அவ்வாறன்றி ஒவ் வொருவரும் பிறவி முதற்கொண்டு அளவளாவுதலின்றித் தாந்தாம் தனித்திருந்து வளர்ந்து வருவராயின் அவரெல்

---

* Miracles.

† Imagination ‡ Man is a social being.

லாம் அறிவு சிறிதுமிலராய் விலங்கினங்களைப்போல் உழன்று திரிவர். இதற்கு எமது குழந்தைப் பருவமே சிறந்த எடுத்துக்காட்டாம். யாம், தாய்வயிற்றை யகன்று வெளிப்பட்ட காலத்தில் எம்மறிவு ஒரு சிறிதும் விளங்காது கிடந்தேம். அங்ஙனங் கிடந்தகாலத்தில் எம்முடைய உள்ளமானது, உலகவுருவ வண்ணங்கள் எதிர்தோன்றுத மாசற்ற பளிங்கு போலவும் முத்திரையிடப்படாத மெழுக் குருண்டை போலவும் இருந்தது. மனமென்னுங் கண் ணுடியில் அவை விளங்காது ஒழியவே, அக்கண்ணுடியின் அப்பக்கத்தேயிருந்து அவற்றைக் காணும் உயிரும் அறிவு விளங்கப் பெருது கிடந்தது. அப்போது இறைவன் எமதுடம்பைப் பல்வகை யுண்டிகளால் வளர்த்து அதன் வழியே கொண்டுபோய் எமக்கு அறிவு·விளங்கச் செய்யும் பொருட்டுத் தான் இரக்கத்தான் எம்மகத்தேவைத்த பசித் தீயானது எம்மைவருத்த அதற்காற்றுது யாம் வாய் திறந்து அழ அதனைக் கண்டு அன்புடையளாகிய அன்னை எம்மை எடுத்துப் பாலூட்டினுள். விலங்குகளோ தாம் பிறந்தவுடனே அங்ஙனந் தாயினுதவியும் வேண்டாது தாமேயறிந்து தாய்முலை யுண்ணுகின்றன. இவ்வாறுவிலங்கு களைக் காட்டிலும் அறிவு விளங்கப்பெருது கிடந்த யாம் பயிற்சி வழியால் எம் மனம் சிறிது உலகவுருவத்தைப்பற்ற அதன் புறத்தேயிருந்த எம்மறிவு சிறிது விளங்கி, எமக்கு முலைதருவாள் இவளென்று சிறிதுகாலமெல்லாம் அறிந்து, அதன்பின் அங்ஙனந்தருவாளுந் தாயென்றறிந்து, அவள் அவ்வாறு தருதலும் பசியெடுத்து யாம் அழுதலாலென் றும் அறிந்து, அதன்பின் யாம் உண்ணுவதும் பால் என்று அவள் பன்முறை யுரைப்பதனு லறிந்து, அதன்பின் எம் அன்னையையும் எம்மையும் பாதுகாப்பவனெல்லாந் தந்தை யென்பதும் அவள் அறிவிப்ப அறிந்து இவ்வாறு முறை முறையே எம்மறிவு விளங்கப்பெறுவேமாயினேம். இதனுல், எமக்கு அறிவு விளங்குதற்கு ஏதுவாயிருந்த முதன் முயற்சி பசி ஒன்றேயாம் என்பதூஉம் இனிது பெறப் படும். இனி இங்ஙனம் அறிவு வளருந்தோறும் யாம் புதுவ

தாக அறிந்தது அறிவாகவும், முதலில் எழுந்த பழைய வறிவு எமக்கு அறியாமையாகவுங் காணப்பட்டன. இது பற்றியே, ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு"

என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இனி இங்ஙனங் குழவிப்பருவ முதற்கொண்டு முறை முறையாய் எமக்கு அறிவு விளங்கப் பெறுவதே உலக வியற்கை. அவ்வியற்கைக்கு மாறாக யாம் பத்து ஆண்டில் அறியவேண்டுவனவற்றை முதல் ஆண்டிலேயே ஒருங்கறிந்திடுவோமாயின், அங்ஙனமறிதலை ஆன்றோர் * தெய்வத் தன்மை என்று தம்முள் வழங்குவர். மேலும், உலகியலுணர்ச்சியும், அவ்வுணர்ச்சியில்லாமையாற் பாவனை செய்யும் ஆற்றலும் வாய்ப்பப் பெறாத எமது குழவிப் பருவத்தே வியப்புடைத்தாய புதுக்கோலமொன்றைக் கண்டு அதன் உண்மையைப் பொருள் விழுப்பந் தோன்றப் பலவாறு புனைந்து செய்யுட்களானும், சிறந்த மேற்கோளுரைகளானும் விரித்துப் பேசிடுவேமாயின், அதனைப் பொய்யென்றும் பாவனையென்றும் உருவெளித் தோற்றமென்றும் எவரேனுஞ் சொல்ல ஒருப்படுவரோ? ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருப்படவேமாட்டார். இங்ஙனம் எமது செந்தமிழ் நாட்டில் நிகழ்ந்த அரும்பெரும் புதுமை யொன்றனை எடுத்துக் காட்டி நிறுவி, அவ்வாற்றால் திருவுருவ வழிபாட்டு நன்முறையின் உண்மைத் தன்மை காட்டுவாம்.

சீகாழியென்னுந் திருநகரிற் சிவபாதவிருதய ரெனும் அந்தணப் பெரியார் ஒருவர் ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்தார். அக்காலத்திற் சமணசமயிகள் யாண்டும் பெருகி வந்தனர். அச்சமண

* Divinity; Precocity.

சமயிகள் கொல்லாமைமுதற் சிறந்த அறநெறிகளைப் பிறழா மனவெழுச்சியுடன் கைக்கொண்டு அங்ஙனந் தாங் கைக்கொண்ட அச்சிறந்த அறத்தின் மாட்சியை மக்க ளெல்லார்க்கும் எடுத்துக் கூறி அவர்க்கெல்லாம் உள்ளக் கவர்ச்சியை எழுப்பி அவ்வாற்றாலவரைத் தம்மதத்திற்குத் திருப்பிக்கொண்டு செல்வாராயினர். இங்ஙனஞ் சிலநாளெல் லாஞ் செல்ல அச்சமணசமயம் யாண்டும் பரந்து விரிவ தாயிற்று. தஞ்சமயம் இவ்வாறு எங்கும் பரவவே மற்றைச் சமயங்களைப் பின்பற்றி யொழுகுவோர் தொகை சுருங்குவ தாயிற்று. சமணம் பௌத்தம் முதலிய அச்சமயங்களை யொழித்து ஒழிந்த சைவம், வைரவம், பாசுபதம், சாத்தம், கௌமாரம், காணுபத்தியம் முதலிய சமயங்களெல்லாம் தெய்வம் ஒன்றுண்டெனக்கொண்டு வழிபடுவனவாம். சமணம் பௌத்தம் என்பனவோ அறவொழுக்கங்களிற் சிறந்தன சில கைப்பற்றி ஒழுகும் அவ்வளவேயல்லது, அவை தெய்வம் ஒன்று உண்டெனக்கொண்டு வழிபடும் மெய்ச்சமயங்களல்லவாம். மற்று அவை தெய்வமில் லென்று உரைக்கும் பொய்ச்சமயங்களே யாம். ஆங்கிலப் புலவர் சிலர்; கௌதமர் கடவுள் வழிபாட்டைக் குறிப்பிட் டாயினும், கடவுளைக் குறிப்பிட்டாயினும் ஏதும் உரை யாமைபற்றி அவரை நாத்திகரெனக் கூறுதலமையாது, அவர் ஆத்திகருமாகலாம் என்று உரைப்ப துண்மையே யாயினும், மொழிநூற் புலவர் **மாக்ஸ்மூலர்** "பௌத்த சமயங்கள் பலவும் கடவுள் இன்றெனநிலையிட்டுரைப்பன வாம்" எனக் * கூறுதலானும், பிராஞ்சுதேயத்துத் தத்துவநூற் புலவராகிய **பார்த்** என்பவர் "பௌத்த சமணக் கோட்பாடுகள் ஒருதலையாகக் கடவுள் இன்றெனக் கூறுவனவாம்" எனத் துணிவுதோன்றக் காட்டுதலானும், அரிய பல ஆராய்ச்சி செய்து வடமொழி நூலுரை வரலாறு புதுவதாக எழுதி வெளியிட்ட **மாக்டனல்** புலவரும் 'பௌத்தமும் சமணமும் சாங்கியநூலைப் போலவே கடவுளினிருப்பை மறுக்குங் கோட்பாடுடைய

---

*Origin and Growth of Religion, page, 312.

வாம்." என்று *அங்ஙனமே துணிபு ஒருப்படுத்தலானும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய தத்துவ முழுமுதற் றமிழ்நூலுரைகளின் கண்ணும் அவ்வாறே அவர் நாத்திக சமயிகளென்று வைத்து மறுக்கப்படுத லானும் பௌத்தரும் சமணருமாகிய அவ்விருவகைச் சமயி களும் நாத்திக சமயிகளேயாமென்பது ஒருதலையென் றுணர்க. இங்ஙனங் கடவுளின்றெனக்கொண்டு ஒழுகுவா ராகிய சமணசமயிகள், இறைவனை உண்மையன்பான் வழி படும் ஏனைச் சமயிகளைக் காண்டொறும் மனஞ்சிறிதும் பொறாராகி மற்று அவரையெல்லாந் தஞ்சமயத்தின்கட் படுக்கும் நோக்கம் பெரிதுடையராயினர். அந்நோக்கம் முதிரவே கொல்லாமை, பொய்யாமை முதலாகத் தாங் கைக் கொண்டுபோந்த சில அறத்தியல் வரம்பு கடந்து, தீய நெறியரனெல்லாம் ஏனைச் சமயிகளை வருத்தத் தொடங் கினர். தன் கட்டளையாற் சட்டதிட்டங்க ளேற்படுத்தி அவற்றிற்கேற்ப ஒழுகுவார்க்கு நன்மையும், அவற்றிற்கு ஏலாதன செய்தொழுகுவார்க்கு ஒறுத்தலுந் தந்து நெறிப் படுத்துவானாகிய அரசனையில்லாத குடிகள் தாந்தாம் விரும்பியவாறே சில சட்டதிட்டங்க ளேற்படுத்திக் கோட லும், தமக்கு அவை இணங்காத வேறு காலங்களில் தம் முன்னை ஏற்பாடுகளை மனம் போனவாறு புரட்டி வேறு வேறு இயற்றிக்கொண்டு தம்முட் கலாம் விளைத்தலும் நிகழக்காண்கின்றாம். இதுபோல, இறைவனொருவன் உண் டெனக் கொண்டு அவன் கட்டளையிட்டருளிய நல்வினை களைச் செய்யின் நன்றாம், அவன் வேண்டாவென்று விலக்கிய தீவினைகளைச் செய்யின் தீதாம் என்னும் மன வுறைப்பில்லாத பொய்ச்சமயிகள் தாம் ஒரோவொரு காலங் களில் உலகியல் அறநெறி பிறழாது ஒழுக உடன்படுவா ராயினும், தமக்கு அவ்வறநெறிகளியையாத பிறகாலங் களில் தாந்தாம் விரும்பியவாறே முன்னை அறவொழுக்க வரம்பழித்துத் தீவினை செய்யுந் துணிவுடையாராவர்.

* Sanscrit Literature, page, 395.

இங்ஙனமே, சமணசமயிகள் அக்காலத்துத் தம்மோடு ஒருங்கு இருந்த சைவர், வைரவர், பாசுபதர் முதலிய ஆத்திக சமயிகளுக்குப் பெருந்தீது செய்யும் கருவு பலவுடையரானார். திருநாவுக்கரசு நாயனார் சமண சமயந் துறந்து சைவ சமயந்தழுவிய ஞான்று சமணரொருங்கு கூடித் தம்மரசனால் அவரை நீற்றறையில் இடுவித்தும், கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்தியும், யானைக்காலில் இடறு வித்தும, நஞ்சம் உண்பித்தும் புரிந்த தீதுகள் நம் மேற் கோள்களை இனிது நிறுத்துவனவாம் அல்லவோ? அமை இத்தன்மைக்கு ஓர் உறையுளாய் விளங்கிய அப்பரே தாம் சமணராற்பட்ட துன்பங்களைத் தாமே தந் திருப்பதிகங்களி லாங்காங்குக் குறிப்பிடுமாறுங் காண்க. இவ்வாறே, அவர்கள் தங்காலத்திருந்த பாண்டியனை யுள்ளிட்ட முடி வேந்தர்களையெல்லாந் தஞ் சமயங்களிற் றிருப்பி; அவ்வர சரது வலியால் ஏனை ஆத்திகசமயிகள் வழிபடுந் திருக் கோயில்களை அடைப்பித்தும், திருமடங்களில் தீக்கொளு வியும், அவரைக் கண்டால் 'கண்டு முட்டு' என்றும், அவ ரைக் குறித்து ஏதேனுங் கேட்டாற் 'கேட்டு முட்டு' என்று சொல்லியும் பலவாறு இன்னலியற்றி வந்தனர். இங் ஙனஞ் செய்துபோந்த சமணர்கள் கொல்லாமை முதற் சிறந்த அறங்களை மேற்கொண்டு ஒழுகினாரெனல் யாங் ஙனம்? ஆகவே, இவ்வாறெல்லாந் தீதுபுரியும் ஒழுகலா றுடையரான சமணர் யாண்டும் பரவி நிரம்புதலும், சைவ சமயிகள் தீயினால் வளைக்கப்பட்டு இடையிற்கிடந்து துடிக் கும் புழுப்போற் பெரியதோர் இடருழவா நின்றார்.

அக்காலத்திற் சிவபெருமானிடத்து உண்மையன் புடையரான **சிவபாதவிருதயர்** என்னும் அச்சைவ அந்தணர் தீயரான சமணரொழியவுஞ் சைவம் யாண்டும் பரந்து ஒளிர வுஞ் செய்யவல்ல தெய்வமாட்சியுடைய மகப்பேறு தமக்குக் கிடைக்குமாறு தவங்கிடந்தார். அவர்க்குச் சில நாட்களி லெல்லாம் ஓராண்மகப்பேறு கிடைத்தது. அவ்வாண்மக வுக்கு மூன்றும் ஆண்டு செல்கின்ற காலத்திற் சிவபாத

விருதயர் என்றும்போல அச்சீகாழி நகரிலுள்ள சிவபிரான் கோயிற் றிருக்குளத்தில் தம் நாள் வினைகளை முடித்தற் பொருட்டு வீட்டிலிருந்து புறம்போதுவார், சிறுகுழந்தையாயிருக்கும் அப்பிள்ளையாரும் அழுதுகொண்டே பின்றொடர்தலைக் கண்டு பலவாறு அமைவுரைகள்சொல்லி யிருத்தியுங் கேளாமல் வர, வருகவென்று உடன் அழைத்துச் செல்வாராயினர். சென்று குளக்கரைமருங்கு சேர்ந்து அக்கரையின்மேற் பிள்ளையாரையிருத்தித், தாம் நீரிலிறங்கி நீர்க்குள் மூழ்கியிருந்து செய்யும் வழிபாட்டைச் செய்வாராயினர். அங்ஙனந் தந்தையார் நீர்க்குள் மூழ்கி நெடு நேரமிருப்பவே, அவரைக் காணப்பெறாத பிள்ளையார் அம்மே! அப்பா! என்று கூவி அழத்தொடங்கினர். அவ் வழுகையைக் கண்டு மனம் பொறாராகிக் கோயிலினுள் எழுந்தருளியிருக்குஞ் சிவபிரானும் உமைப்பிராட்டியாரும் பிள்ளையாரிடம் போந்து அவரழுகை தீர்த்துக் கண்ணீர் துடைத்து, அம்மையார் தங் குமிழ்முலையிற் கொழும்பால் கறந்து அதிற் சிவஞானங் குழைத்துப் பொற்கிண்ணத்தா லூட்டவும், அப்பனார் அவரழுகைதீரத் தடவி இன்சொற் சொல்லவும் பிள்ளையார் பொற்கிண்ணத்திற் பாலுண்ட வண்ணமாய் மகிழ்ச்சியுற்றிருந்தார். இதற்குள் நீரில் மூழ்கியிருந்த தந்தையார் ஆண்டுத் தாஞ் செயற்பாலவான வழிபாடுகளை இனிது முடித்துக் கரையேறி வந்து பிள்ளையார் கையிற் பொற்கிண்ணம் வைத்திருத்தலும் அவர் உடம்பெல்லாம் பால் வழிந்திருத்தலுங் கண்டு வெகுண்டு 'அடா! நீ யார் தந்த பாலையுண்டாய்? உனக்கு எச்சின் மயங்கப் பாலூட்டினாரைக் காட்டுக' என்று உரப்பிக் கையில் ஒரு சிறுகோல் எடுத்துக்கொண்டு கேட்டார். கேட்டலும், பிள்ளையார் அஞ்சி 'எனக்குப் பாலூட்டினார் இதோ! மழவிடையமர்ந்த பிரானும் பிராட்டியாருமாம்' என்று சுட்டித்.

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்

"ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே"

என்று கட்டளையிட்டருளினுர்.

இவ்வரலாறு பெரியபுராணத்தின்கண் விரிவாக எழு தப்பட்டிருத்தல் கண்டுணர்க.

இனி, உலகியலுணர்ச்சியும் பாவனை செய்யும் ஆற்றலும் வாய்ப்பப்பெருத குழந்தைப் பருவத்தினராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு எதிரே இறைவன் அவர்க்கு அருள் செய்தற்பொருட்டுத் தாங்கி எழுந்தருளிய அருட்கோலம் உருவெளித்தோற்றம்போற் பொய்யாய் ஒழிந்திடுமென்றல் யாங்ஙனம்? அல்லதூஉம், மூன்ருண்டு செல்கின்ற அக்காலத்திற் செந்தமிழ்ச் சுவையும் மெய்ப்பொருள் நுட்பமும் பொதுளத் "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பதிகங் கட்டளையிட்டருளியதுதான் என்னை? சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையேமாகிய எங்குழந்தைகள் மூன்ருண்டு செல்கின்ற அக்காலத்திலேதான் மழலைமொழிகள் சிலவுரைத்து எம்மையெல்லாம் உவப்பிக்கின்றன; அக்காலத்திலேதான் தளர்ந்து தளர்ந்து நடந்து செல்லுகின்றன; அக்காலத்திலேதான் 'அம்மே' என்றும், 'அப்பா' என்றும், 'சோச்சி' என்றும், 'பாச்சி' என்றுந் தமக்கு வேண்டும் பொருள்களைச் சுட்டுகின்றன; அக்காலத்திலே தெய்வம் உண்டு என்னும் உணர்ச்சி அவைகட்கு இன்ரும்; அத்தெய்வமுஞ் சிவபெருமானேயாமென்னு முணர்ச்சியுமின்ரும்; அச் சிவபெருமான் திருத்தேவியார் உமை என்னும் உணர்ச்சியுமின்ரும்; அச் சிவன் திருவடையாளங்கள் 'தோடு' 'விடை' 'கொன்றை' முதலியவா மென்னும் ஆராய்ச்சியுமின்ரும்; ஆகலின், இவ்வுணர்ச்சி வேறுபா டெல்லாம் நிகழ்ந்ததற்கு ஓர் இயைபு வேண்டுமெனின்; அற்றன்று, சிவபாதவிருதயரென்னுந் தந்தையார் சிவபெருமானிடத்து மிக்க அன்புடையாரென்பது பெறப்படுதலால் அவர் தமது இல்லத்திலே

சிவனை வழுத்துகின்ற காலங்களிற் சொல்லுஞ் சொற்களின் பொருள்கள் மிகத் தெளிவாகிய அப்பிள்ளையார் மூளையிற் பதிந்திருந்து பின்னொருநாட் புறம்போந்தன வென்பார்க்கு, அங்ஙனம் அவ்வுணர்வுமட்டுமே புறம்படுதல் பொருந்துவதாமன்றி அம்மையார் தமக்குப் பொன் வள்ளத்திற் பால்கறந்து ஊட்டினாரென்றலும், அது கண்டு தந்தையார் சிவபாதவிருதயர் வெகுண்டு தம்மை வினவிய போது இறைவனையும் இறைவியையுஞ் சுட்டிக் காட்டித் திருப்பதிகங் கட்டளையிட்டருளினா ரென்றலும் பிறவும் பொருந்துமாறு போதராமையின் அவர் கூற்றுப் போலியா மென்று மறுக்க. அற்றேல் அஃதாக, "தோடுடைய" என்னும் அத்திருப்பதிகத்திற் பிள்ளையார் தமக்கு இறைவி அங்ஙனம் பொற்கிண்ணத்திற் பால்கறந் தூட்டினாளென்றும், சிவபாதவிருதயர் அஃதுணராமற் றம்மை வெகுண்டு வினவியபோது இறைவனையும் இறைவியையுந் தாஞ் சுட்டிக்காட்டினாரென்றும் ஓதிற்றிலராலெனின்; அறியாது கூறினாய், ''மண்ணினல்ல வண்ணம்'' என்னுந் திருப்பிரமபுரப்பதிகத்தில்,

''போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே''

என்னுஞ் செய்யுளிற் பிள்ளையார் தாமே தமக்கு இறைவன் செய்த அருட்டிறத்தைக் கிளந்தெடுத்து உரையாநிற்பவும், அதனை ஆராய்ச்சிசெய்து உணர மாட்டாது உரைத்தல் இழுக்குரையாமென்க. இனி அச்செய்யுட் பொருள் ஒரு சிறிது உரைக்கின்றாம்.

போதையார் பொற்கிண்ணத்து அடிசில்-இதழ் விரிந்த தாமரை மலரைப்போல் வாயகன்று செவ்வென விளங்கும் பொன்வள்ளத்தில் உமையம்மை கறந்து ஊட்டிய கொழும்பாலுணவை; போதை என்பதில் 'ஐ'

காரம் "குறவரையார்க்குங் குளிர்மலே நாட" என்னுந் திருச்சிறம்பலக்கோவையாரிற் போல வந்த சாரியை; "ஆர்" என்பது "செப்புற்றகொங்கை" "தோளுற்றூர் தெய்வம்" என்னுந் திருக்கோவையார் சிந்தாமணியிற்போல உவமவுருபின் பொருள்பட வந்த உவமச் சொல்; மாற்றுயர்ந்த பொன் செவ்வென்று பொலிதலானும் வள்ளம் வாயகன்று வட்டமாயிருத்தலானும் உவமை வண்ணமும் வடிவும் விராய்வந்தது. இவ்வாறே "பாண்டிலெடுத்த பஃறுமரை கீழும்பழனங்களே" என்று திருக்கோவையாரினும் போந்தது காண்க; நச்சினார்க்கினியரும் "பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு" என்புழி வண்ணமும் வடிவும் விராய் வந்த வுவமையென் றுரையுரைத்திட்டார்; தாதையார் பொல்லாதெனமுனிவு உற - சிவபாதவிருதயரென்னுந் தந்தையார் இழிந்தாள் ஒருத்தி தந்த எச்சிலாதலின் அது நுகர்தல் தீதாமென்றுரைத்து வெகுள; தான் என்னை ஆண்டவன் - தான் தன் அருட்பெருக்கான் விரும்பி வந்து என்னை ஆண்டுகொண்டவன்; அங்ஙனம் ஆண்டு கொண்ட இறைவன் திருவடையாளங்கள் யாவையோ வெனின்; காதையார் குழையினன் - காதிற்செறிய இடப்பட்ட வெண்டோடு உடையனும்; அதுவன்றியும், பேதை யாளவளொடும் - தான் அறிவுருவினனா யிருந்தே உலகத்துப் பெண்டிர்க்கெல்லாம் அறியாமை கற்பித்தல் வேண்டுதலின் தானும் அறியாமையுடையாள்போற் றோன்றும் உமையம்மையுடன் பிரிவறக் கலந்து; 'அறியாமை' என்பது பெண்மைத் தன்மை நான்கனுள் ஒன்றும். அது தாஞெரு பொருட்டன்மை அறிந்தும் அறியாதது போன்று ஒழுகுதல், ஆசிரியர் நக்கீரனரும் "மடமென்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை" என்று உரை கூறினர்; பெருந்தகை - சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையராகிய உயிர்கள் போலாது அவற்றை யெல்லாந் தன்னகப்படுத்து வரையறையின்றி விரிந்து செல்லும் விரிந்தவுணர்ச்சியும் முழுமுதலாற்றலும் உடையனாகிய ஏது வினுலே பெருந்தகையாய் விளங்கும் முழு முதல்வனை

சிவபெருமான்; இருந்தது - உயிர்கள் தன்னை வழிபட்டு உய்யும் பொருட்டுத் தானே தன் பெருமைத் தன்மைகளைச் சுருக்கிக்கொண்டு அருளே திருமேனியா வெழுந்தருளி யிருந்த திருநகரம்; கழுமல வளநகர் - தன்னை வந்தடைந்த உயிர்களின் மும்மலங் கழுவித் தூய்மை செய்கின்ற ஒரு பெருந்தன்மையாலே 'கழுமலம்' என்று பெயர்பெற்ற வளவிய நகரமாம்; கழுமலநகர் - சீகாழி; பிள்ளையார் தமக்கு அருள் செய்யும்பொருட்டு இறைவன் தாங்கி வந்த அருட் கோலத்தின்கட் குழையிடப்பட்ட திருச்செவியைச் சுட்டித் "தோடுடைய செவியன்" என்று பதிகங் கட்டளையிட் டருளிவாறு போலவே, ஈண்டுங் "காதையார் குழையினன்" என்று குறிப்புரைத்தருளினர். இது கிடக்க.

இனி, நீர் கூறிய வழக்குரைகளெல்லாம் ஒக்குமன், சிவபாதவிருதயர் பிள்ளையாரைத் தடாகக்கரையில் இரு வித் தாம் நீரிலிழிந்து முழுகியிருந்த அமயத்திற் பிள்ளை யார் அவரைக் காணது அழுதலைக் கண்டு ஆண்டுவந்த கணவனும் மனைவியுமாகிய இருவர் அவர்க்கு இரங்கிப் பாலூட்டிப் போயினரென்றும், தந்தையார் கரையில்வந்து வெகுண்டு வினுதலை அஞ்சிப் பாலூட்டினர் இவர் என் றுரைப்பிற் பின்னும் வெகுள்வரெனக் கருதித் தமக்குச் சிவபெருமானும் உமையம்மையாரும் அங்ஙனம் பாலூட் டினரெனப் பொய்யுரைத்தார் என்றுங் கொள்ளாமோ வெனின்; நன்று கடாயினீர், நல்லது தீயது பகுத்துணர மாட்டாத பிள்ளைப்பருவத்தில் இஃது உரைப்பின் நன்றும், மற்று இஃது உரைப்பிற் றீதாம் என்றுணர்ந்து பிறழக் கொண்டு பொய்யுரைத்தாரென்றல் உலகவியல்பொடு மாறு படுதலானும், உலகவியற்கையொடு முரணுமைப்பொருட் டுப் பிள்ளையார் நிகழ்த்திய புதுமைகட்கு வேறு விளக்கங் கூறப்புகுந்து வழக்கிடும் நீவிரே அங்ஙனம் உலக வியற்கை யொடு முரண்பாடு பெரிதுடையிராய்க் 'கொசுகின் கடிக் கஞ்சிப் புலிவாய்ப்பட்டது' போற் பெரிதும் இடர்ப்படுவீ ர்தலானும் அவ்வாறு கோடல் ஒரு சிறிதும் பொருத்த

முறுவதின்று மென்பது. அல்லதூஉம், பொது மக்களாற் பாலூட்டப்பட்ட பிள்ளையார் அங்ஙனம் ஊட்டப்பட்ட அந் நேரத்தே பேரறிவும் பேராற்றலும் உடையராய்ப் பிள்ளைப் பருவத்தில் வரற்பாலதன்றும் மிகச் சிறந்த திருப்பதிகங் கட்டளையிட்டருளியவாறு யாங்ஙனம்? எனக் கடாவுவார்க்கு நீர் இறுக்குமாறு சிறிதுமின்றும். அற்றன்று, பிள்ளையார் அறிவுகூடாச் சிறுபருவத்தினராதலாற் றமக்குப் பாலூட்டிய பொது மக்களையே அங்ஙனம அறியாமையாற் சிவ பெருமானெனன் றுரைத்திட்டாரெனின்; நன்று சொன்னீர், பால்பருகிய அந்நேரத்தே திருஞானசம்பந்தப் பிள்ளையாராய் விரிவுணர்ச்சியும் முழுமுதலாற்றலு முடையராய்த் திகழ்ந்து உலகமெல்லாந் தம் ஆணை வழி நிறுத்தவல்ல தெய்வப்பெற்றியாளரான அப்பெருமானார் பொது மக்களையுஞ் சிவபெருமானையும் வேறு பிரித்து அறியமாட்டாது மயங்கிக்கூறினா ரென்றலும் அறியாமை முதிர்ச்சியாயொழிந்திடுமென்க.

இனி, இவையெல்லாம் ஒருபுறங் கிடக்க, நீவிரெடுத்துக்காட்டிய "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பதிகத்திலும் "மண்ணினல்லவண்ணம்" என்னுந் திருப்பதிகத்திலும் பிள்ளையார் தாங் குழந்தைப் பருவத்தினரென்பது புலப்படக் கூறுமையான் அப்பிள்ளைப்பருவ வலியுடை ஏதுப்பற்றி நீவிர் நிறுவப் புகுந்த இறைவனது அருட்கோலவியல்பு வலிகுன்றி விடுமாலோ வெனின்; அறியாது கூறினீர், பிள்ளையார் அப்பரோடு திருமறைக்காட்டில் எழுந்தருளியபோது மதுரைமா நகரத்திற் சமணருடைய மயக்கவுரையாற் சைவசமயம் வழீஇச் சமண மதந் தழீஇய தங்கொழுநரான பாண்டிய அரசனை யுள்ளிட்டுக் குடிமக்களெல்லாரையுந் திரும்பச் சைவராக்குதல் வேண்டி மங்கையர்க்கரசி என்னும் பாண்டிமாதேவியார் பிள்ளையாருக்குத் திருமுகம் விடுத்தார். அதுகண்ட பிள்ளையாருந் தந்திருக்கூட்டத்தொடு மதுரைமா நகர்க்கு எழுந்தருளப் பாண்டியவரசன் அமைச்சராகிய குலச்சிறை

என்பார் அவரை எதிர்கொண்டழைத்துச் சென்று பிள்ளையாரைத் திருக்கூட்டத்தோடும் ஒரு திருமடத்தில் எழுந்தருளியிருக்கச்செய்தார். இதனையறிந்த சமணக் குருக்களெல்லாருந் தெய்வப்பெற்றியுடைய இப்பிள்ளையாரால் நமது சமயம் அழிந்துபடும் எனப் பெரிதும் அஞ்சிப் பிள்ளையாரைத் திருக்கூட்டத்தோடுங் கொலை செய்ய எண்ணினர். அந்தோ! அந்தோ! இதுதானே கொல்லா அறத்தினரான சமணருக்கு அறமாவது! அன்பர்காள்! சிறிது ஆழ்ந்து நினைமின்கள்! இங்ஙனங் கருதிய அக் குருக்கண்மாரெல்லாந் தம்முள் துணிபு ஒருப்பாடு உடையராய்க் கூன்பாண்டியனிடஞ் சென்று அவனுக்குத் தம்மெண்ணம் புலப்படுத்துக் கரவுரை பலவால் அவனைத் தந்தொழிற்கு இயைவித்துக்கொண்டனர். பின்னர் அன்று இரவு நள்யாமத்திற் பிள்ளையார் திருக்கூட்டத்துடன் பள்ளிகொண்டிருக்கும் அமயங் கண்டு அச்சமணப்படுவர் எரிகொள்ளி கொண்டு மடத்தில் தீக்கொளுவினர். ஐயகோ! மடந் தீப்பற்றி எரியா நிற்க அதனுள்ளிருந்த அடியார்களெல்லாரும் மருண்டெழுந்து ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு இவ்விடரை அறிவித்து அடைக்கலம் புக, இதனை உணர்ந்த பிள்ளையார் சிவனடியார்களுக்குத் தீங்கு இழைக்க முந்துற்றுத் தீக்கொளுவிய சமணப்படுவர் பொருந்தர்ச் செய்கையைக் குறிப்பானறிந்து, இதற்கு வாயிலாயினன் பாண்டிய வரசனேயா மென்பதும் இனிது தெளிந்து,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொ ளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

என்னுந் திருப்பதிகங் கட்டளையிட்டருளி மடத்திற் கொளுவிய தீப்பிழம்பு அத்தனையும் பாண்டியன் உடம்பிற் சென்று பற்றுகவென்று ஏவினர். ஏவுதலும், உருவமாகத் தோன்றிய தீப்பிழம்பு முழுதும் அருவ வெப்பு

நோயாய்ப் பாண்டியனைப்பற்றிக்கொண்டது. உடனே பாண்டியன் அந்நோய் பொறுக்கமாட்டானாய்ச் சமணக் குருமார்களை அழைப்பித்து அவர் தம் மந்திர முறைகளானும் மருந்து முறைகளானும் செய்வித்துக்கொண்டன ஒரு சிறிதும் பயன்றரா்மை கண்டு மிக வருந்தித் தம் மனையுரிமைக்கிழத்தியா ராகிய மங்கையர்க்கரசியாரைத் தன்மாட்டு வருவித்து அவர்க்கு இதனைத் தெரிவித்தான். அரசியாரும் உடன் வருந்தித் தங்குறிப்பு நிறைவேறுங்காலம் இதுவென்று எண்ணித் தங்கொழுநனை நோக்கிப் "பிள்ளைப்பருவத்தே உமை திருமுலைப் பாலுண்டு ஞானசம்பந்த வள்ளலாய்த் தந்திருக்கூட்டத்தோடு இந்நகரத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமான் இங்கு எழுந்தருளினால் அன்றி இந்நோய் தீராது" என்றுரைப்ப, அதனைக் கேட்ட அரசனும் அதற்கு உடன்பட்டுத் தம் அமைச்சரான குலச்சிறையாரைப் பிள்ளையாரிடம் போக்கினான். அமைச்சரும் நிகழ்ந்தவெல்லாம் பிள்ளையார் திருமுன்பிற் றெரிவித்து அவர் பாண்டியனிடத்திற்கு எழுந்தருளச் செய்தார். பிள்ளையார் அருமைத் திருவுருவைக் காண்டலும் பாண்டியன் ஆறுதல் பெரிதுடையனாயினான். இவ்வாறு ஞானசம்பந்தப்பெருமானார் பாண்டியனருகில் மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் பக்கத்தே எழுந்தருளியிருக்கும் அளவில் ஆண்டுக் குழுமி யிருந்த சமணக்குருமார் பிள்ளையாரைச் சுட்டிப் பலவாறு இகழ்ந்து சொல்லிக் குரைத்திட்டார். பக்கத்தே யிருந்து அதனைக் கண்டு பொறாராகிய மங்கையர்க்கரசியார் தங்கணவனை நோக்கிக் "குழந்தையா யிருக்கும் பெருமானை இவர் இவ்வாறு இகழ்வதே?" என்று வருந்திக் கூற, அப்போது ஞானசம்பந்தப்பெருமானார் அரசியாரைப் பார்த்து,

"மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் றிருவாலவாயர னிற்கவே."

என்னுந் திருப்பதிகங் கட்டளையிட்டருளினார். இதன்கண் **ஞானசம்பந்தப்பிள்ளையார் மங்கையர்க்கரசியாரை** நோக்கிப் "பால்மணக்கும் நல்வாயையுடைய பாலன் நானென்று அம்மே! நீ வருந்தாதே" என்று உரைத்தருளினாரென்பது பெறப்படுதலால், அவர் பாண்டி நாட்டிற்குச் சென்று சமணரொடு வழக்கிட்ட காலத்திலேயே பாலருவாயராக இருந்தாரெனல் தெற்றென விளங்கும். இங்ஙனம் பிள்ளையார் மதுரைமா நகரிலிருந்த காலத்தே அவர்க்கு நான்கு அல்லது நாலரை ஆண்டுதான் சென்றதென்பதற்கு அவர் தம்மைப் 'பால்மணக்கும் நல்வாயர்' எனக் கூறுதலே சான்றாம். இனிப், பெரியபுராணத்தின்கண் ஓதப்பட்ட மெய்வரலாறு ஒரு சிறிது ஆராய்ந்து செல்வார்க்கும், மதுரைமாநகர்க்குச் செல்லுமுன்னரே பிள்ளையார் தெய்வப் பெற்றியுடையராய்ச் சிவபிரான் திருக்கோயில்கடோறுஞ் சென்று திருப்பதிகங் கட்டளையிட் டருளிச்செய்த காலம் ஒன்று அல்லது ஒன்றரையாண்டுக ளாகலாமென்பது விளங்கும். ஆகவே, பிள்ளையார் சிவபெருமான் றாங்கிவந்த அருட்கோலத்தை நேரே கண்டு அக் கோலத்தால் அருள் செய்யப்பட்ட காலம் அவர் தமக்கு மூன்றாண்டு செல்கின்ற பருவத்திலேயா மென்று பெரியபுராணங் கூறிய உண்மை வரலாறு மேன்மேல் உரங்கொண்டு திகழுமாறு காண்க. இங்ஙனம் அளவை நூற் பொருளொடுபடுத்து யாம் இனி தெடுத்து விளக்கிய வரலாற்றின் முடிபொருளாய்ப் பிள்ளையார் தாம் மூன்றாண்டு செல்கின்ற அக்காலத்திலேதான் இறைவனும் இறைவியும் ஒருங்கெழுந்துவந்த அருட்டிருக்கோலத்தை நேரே கண்டு பின் அதனால் அருள்செய்யப் பட்டாரென்பது நன்று பெறப்பட்டதாகலின், அதுபற்றி யாம் நிறுவப் புகுந்த வருட்கோல வியல்பு வலிவிழுந்ததாய் விடுமென்று நீர் கூறியது போலியுரையேயா மென்று துணிக. இன்னுந் 'தோடுடையசெவியன்' எனக் கண்ணினாற் காணப்படும் உருவமும், 'பால்கறந்தூட்டுக' என்னுஞ் செவியினாற் கேட்கப்படும் ஓசையும், மூக்கினாற் கவரப்படும் இனிய பான்மணமும், வாயினாற் சுவைக்கப்

படும் பாலும், அம்மையப்பரால் தொடப்பட்ட ஊற்றுணர்வு நிகழ்ச்சிக்குரிய உடம்பும் உடைய அவ்வருட்கோலம் உண்மைப்பேறுடையதா மென்று நன்குணர்ந்து கொள்க. இங்ஙனம் உலக வழக்குணர்வும் அதனுற் பாவனை செய்யும் ஆற்றலும் வாய்ப்பப் பெருத குழந்தைப் பருவத்திலே **ஞானசம்பந்தப் பிள்ளையார்** மதிமுகிழ்பிணித்த மாதியல் பாகனை நேரே கண்டு அருள் செய்யப்பட்டுத் திருப்பதிகங் கட்டளையிட் டருளிய வியத்தகு நிகழ்ச்சியை வரலாற்றியல் பிறழாது உண்மையான் ஆழ்ந்தாராயவல்ல எந்த **நிரீசுர வாதி** தாம் பொய்யென்று மறுக்க முந்திடுவார்? மக்களுக்கு அமைந்த மூளையின் ஆற்றலால் மிக வியப்பான நிகழ்ச்சிகளும் எளிதில் நிகழும் என்று தமக்குத் தோன்றியவாறெல்லாம் வர்னக்கோட்டை கட்டி அதன்கண் நின்று பிறரை அறைகூவி யாரவாரஞ் செய்யும் **மனநூலார்** தாம் இவற்றுக்கெல்லாம் யாது சொல்லவல்லார்? உண்மை வரலாற்று முறையொடு மாறுகோளுருது நிகழ்ந்த இவ்வியத்தகு நிகழ்ச்சியை அற்புதமே ஒன்றில்லையெனக் கூறும் **பிரமசமாசத்தார்** தாம் எவ்வாறு கடந்து பேச வல்லார்? இது நிற்க.

இனிப் **பிரமசமாசத்தார்** உலகவியற்கைக்கு வேருக அற்புதமென ஒன்று நிகழுமாறில்லையெனக் கிளந்துரையாடி ஆரவாரஞ் செய்தலின் அவருரைப் பெற்றியையும் ஒரு சிறிது ஆராய்ந்து அது பேர்லியாமாறு காட்டிப் பின்னர் எடுத்துக்கொண்ட பொருண்மேற் செல்வாம்.

பிரமசமாசத்தார் கூறுமாறு: வித்தினின்று முளை கிளம்பிப் பின் பல ஆண்டுகள் சென்று மரமர்தலும், ஒரு தாய்க் கருப்பையிற் கருமுதிர்ந்து பத்துத் திங்கள் கழியப் பிறந்து வளர்தலும், வளர்ந்தன ஒரு காலத்து இறந்தொழிதலும், நிலன் நீர் நெருப்புக் காற்று வான் முதலியவுலகியற்பொருள்கள் தத்தம்நிலையிற் பிறழாது நின்று இயங்குதலும் பிறவுமாகிய தொழிற்பாடுகளெல்லாம் இயல்பாக வருவனவாம்; இவற்றை இங்ஙனம் வகுத்தமைத்து

நெறிபிறழாது நடாத்துகின்றவனாகிய முழுமுதற்கடவுள் அவற்றினியல்பைப் பிறிதொரு காலத்து மறுத்து மாற்றினானென்றல் அவனுடைய இறைமைத் தன்மைக்குப் பொருந்தாமையான், அற்புதங்கள் என்பன உலகவியல் பொடு மாறுபாடு பெரிதுற்று நிகழ்வனவாமென்று ஒரு சார் சமயவாதிகள் கூறுவது பொய்யேயாம் என்பர். இதனை ஆராய்வாம்.

இனி, வரலாற்றுண்மை யுணர்ச்சி மிகவுடையார்க்கு இங்ஙனம் நடந்த வியத்தகு நிகழ்ச்சிகளைப் பொய்யென்று மறுத்த லாகாமையான், இவைதமக்கு வேறு வழி சொல் லாமல் வாளா தமக்குத் தோன்றியவாறே பொய்யென் றுரைத்தன் முறையாகாது. அல்லதூஉம், இவ் வற்புதங் கடாம் ஒருகாலத்து ஒரு தேயத்தில் நிகழ்ந்தனவாகாமல், எக்காலத்தும் எல்லாத் தேயத்தின்கண்ணும் நிகழா நிற்கின்றன. ஏசுநாதர் ஒரு சில அப்பங்களையும் மீன் களையும் பெருந்திரளான மக்கட்கு விருந்தளித்தாரெனவும், அத்திமரத்தை வற்றச்செய்தாரெனவும், இறந்தவனை எழுப்பினாரெனவும், ஏனைச் சமய நூல்களிலுங் கூறப் படுதல் காண்கின்றாம். இந்நாவலந்தீவில் உண்மை மேலறிவு முதிர்ச்சி கைவந்தவராகிய தூயசான்றோர்கள் தோன்றி பல வேறு அற்புதங்கள் நிகழ்த்தியவாறு போலவே ஏனை நாடுகளிலும் உண்மைக் கீழறிவுப்பே றுடையரான தீர்க்கதரிசிமார் தோன்றிப் பலவேறு அற் புதங்கள் நிகழ்த்தக் காண்டலால் இவையனைத்திற்கும் ஒரு வழி சொல்ல அறியாமல் மற்று அவையெல்லாம் வெறும் பொய்யாமென் றுரைப்பார்கூற்று வெறுங்கூற் றுவதன்றிப் பிறிதென்னை? எம்மறிவுக்குப் பொருந்தவில்லை என்றும் எம்மனுபவத்திற்கு அஃது இயையவில்லை யென் றும் உரைத்து அத்தனை எளிதாக அவற்றைப் பொய் யென் றுரைப்பார் வேறு என்கடவரென்க! இக்காலத்தில், நீராவிப் பொறிகளின் உதவியாலும், மின்வலிப் பொறி களின் உதவியாலும் வியப்பான பல பொருள்களும், பல

தொழிற் கூறுபாடுகளும் செய்ப்படுதல் காண்கின்றும். இவையெல்லாம் ஓர் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னிருந்த எம் முது மக்கள் கனவினுங் கண்டறியார். அவர் காலத்தில் ஒருவர் தோன்றிப் பின்னொரு காலத்தில் நீராவிப் பொறிகளும் மின்வலிப் பொறிகளும் ஏற்பட்டு அருமையான பலவுஞ் செய்யுமென்று உரைத்தக்கால் அதனைக் கேட்ட ஒரு சிலர் அது பெரும் புதுமையாயிருக்குமெனவும், வேறு சிலர் அஃது உலக வியற்கைக்கு மாருகலின் அவ்வாறு நிகழாது எனவும், வேறு சிலர் எந்த வினையுஞ் செய்கின்றவன் ஆற்றல்பற்றி நிகழ்வதாகலின் பின்னர்ப் பிறக்கும் அறிவு நுட்பவாற்றல் மிக்குடையரான மக்கள் அது செய்தற்கு முரியராவரெனவும் உரைத்துத் தத்தங் கருத்து மொழிந்திடுவார். இனி, அப்பொறிகளின் பயனை நேரே கைக்கொண்டு போதரும் எமக்கெல்லாம் அங்ஙனம் வியப்புணர்வு நிகழ்த லின்ருகலின் அவ்வமைப்புகளெல்லாம் எளியனவாகவே எமக்குக் காணப்படுகின்றன. இவ்வர்றே, செம்பைப் பொன்னுக்கும் இரசவாதம் பொய்யாமென்று சொல்லிக்கொண்டிருந்த இயற்கைப் பொருணூலாரும் இப்போது அமெரிக்கா தேயத்தில் ஒருவர் செம்பைப் பொன்னுகத் திரித்து விற்றலைக் கண்டு அதனையும் உண்மையாமென நம்புதற்குத் தலைப்பட்டு விட்டார்கள். மந்திரவொலிகட்கு வடிவமுண்டென்று சைவசித்தாந்திகள் சொல்வதை மறுத்தார் சிலர், அமெரிக்காவில் ஓரரிய கலைநூல் அறிஞர் ஒலி நுட்பங்கட்கெல்லாம் வடிவுண்டென்பதைக் கண்கூடாகச் செய்து காட்டுதலை யறிந்து அதனையும் நம்பத் தலைப்பட்டு விட்டார்கள். மின்னோட்டக் கம்பியின்றி மின்செய்தி இயங்கமாட்டாதென்று சொல்லிக் கொண்டிருந்த ஐரோப்பியக் கலைஞர் எல்லாரும், நுண்ணறிவுக் கலைஞர் ஒருவர் புதுவதாகக் கண்டு பிடித்த முறையால் கம்பியின்றியும் மின்னியக்கம் நடைபெறுமென்று கூறி அதனையுந் தழுவிக்கொண்டார்கள். இவ்வாறே இக்காலத்தில் அறிவுநுட்பத்தாற் பேராற்றலுடையரான நன்மக்கள் பலர் தோன்றி முற்காலத்திற் கனவு

காண்டற்கும் அரியவர்க்கு கிடந்த அரும்பெருந் தொழில் களை இயற்றுகின்றார். இங்ஙனம் இவர் கண்கூடாகச் செய்து காட்டுஞ் செயற்கரிய செயல்களை யெல்லாம் நேரே கண்டு வைத்தும், தம்முடைய அறிவுக்கும் அனுபவத் திற்கும் எட்டவில்லையென்று அவற்றையெல்லாம் பொய் யென்றல் பேதை நீரார் செயலேயாமென்று ஒழிக.

இனிப், பெரியோர் நிகழ்த்திய புதுமைகள் உலக வியற்கைக்கு மாறுபாடுறுதல் இல்லை யென்பதூஉம் ஒரு சிறிது காட்டுவாம். **ஞானசம்பந்தப்பிள்ளையார்** திருமயி லாப்பூருக்கு எழுந்தருளின காலத்திற், சிவநேயர் என்பார் ஒருவர் வளர்த்த அரியபெண் பாம்பு கடித்திறக்க, அப் பெண்ணின் தந்தையாரான அவர் அவளுடம்பைத் தீயி லிட்டுக் கொளுத்தி என்புகளையெல்லாம் ஒரு குடத்திற் பெய்து பொதிந்து பிள்ளையார் திருமுன்பே கொண்டுவந்து அவர்க்கு அடியுறையாக இட்டு, 'அருமையாக வளர்க்கப் பட்ட பூம்பாவை என்னும் என் மகள் இறந்தாளாயினும் பெருமானுக்கே அடியுறையாகச் செலுத்திவிடல் வேண்டு மென்னுங் கடப்பாட்டால் அவள் என்பைத் திருவடிக்கு உறையாக உய்த்தேன்' என்று நெஞ்சங்கரைய மொழி தலும், பிள்ளையாரும் அவ்வன்பர்க்கு மிக இரங்கி இறை வன் திருக்கோயிலுட்புகுந்து அக்குடத்தையுந் திருமுன்பே இருத்தி,

"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திரப் பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்னுந் திருப்பதிகங் கட்டளையிட்டருளினர். அருளலும், என்பாய்க்கிடந்த அப்பிண்டம் எழுவகை முதலுங்கூடித் திரண்டுருண்டு அழகிய பெண்வடிவாய்க் குடத்தினின்றும் எழுந்தது. இப்புதுமை உலக வியற்கையோடு இணங்கு மாறு காட்டுவாம். அப்பெண்ணின் உடம்பு அழிந்தது

என்பதனாற் பெறப்பட்ட உண்மை யாது? என ஒருங்கி ஆராயலுறுவார்க்கு, எழுவகைப் பொருள்களாற் கட்டப் பட்டுப் பருவடிவிற் காணப்பட்ட உடம்பு நுண் அணுக்க ளாய்ப் பிரிந்து கட்புலனாகாது நுண்வடிவிற்றாய் ஒழிந்தது என்பதேயா மன்றோ? இங்ஙனம் அதனை நுண் அணுக்க ளாகப் பிரித்தற்கு வினைமுதலான ஒருவனுடைய தொழில் இன்றியமையாததாமன்றோ? அங்ஙனமே, எழுவகைப் பொருள்களையும் ஒருங்கு கூட்டுதற்கும் வினைமுதலாக ஒருவன் வேண்டப்படுமன்றோ? அவ்வினை முதல்தான் எல்லாம்வல்ல முழுமுதற் பெருங்கடவுள் ஒருவனேயாம். எவ்வாறு வனைதற்றொழிற்கு முதலான குயவன் தன் ஆற் றற்கேற்பச் சிறிது சிறிதாக மண்ணைக் கூட்டிக் குடந் திரட்டுகின்றானோ அவ்வாறே எல்லாம்வல்ல முதல்வன் தன் பேராற்றற்கேற்ப அளவிறந்த உலகங்களையும் அவ்வுலகங் களிற் பலவேறு வகைப்பட்ட உடம்புகளையும் படைத்திட்டு உயிர்களுக்கு இன்பம் நுகர்விக்கின்றான். இங்ஙனஞ் செய் கின்ற இறைவன் எல்லாந் தனக்குரிய முழுமுதலறிவாற்றல் பற்றியே செய்வதல்லது, எம்மைப்போலப் பிறர்வழியனாய் நின்று செய்வானல்லன். அவனுடைய அருளுக்கும் ஆற்ற லுக்கும் ஓர் அளவேயில்லை. அவ்வியல்பினனாகிய இறை வன் றிருவருள் பதியப்பெற்ற **ஞானசம்பந்தப் பிள்ளையார்**, பூம்பாவை என்னும் பெண்மகளின் உடம்பு நுண் அணுக் களாய்ப் பிரிந்தழிய அங்ஙனம் அழிந்தவதனைத் திரும் பவும் முன்னைப் பருவுடம்பாம்படி இறைவன் றிருவருள் வலிகொண்டு செய்திட்டார். அற்றேல் ஒரு தாய் அகட்டிற் கருவைப் புகுத்தி அதனைச் சில காலத்திற் புறம்படுத்தி வளர்த்து அழிக்கின்ற இறைவன் றிரு வருட்செயல் அச்செயன் முறைதிறம்பி, இடையொரு காலத்து அழிந்ததோர் உருவைப் பெயர்த்தும் வேறு ஒருபுதுமுறையாற் படைத்திடுதல் பொருந்துமோவெனின்; அற்றன்று, அழியும் பருவ மன்றாகிய காலத்தே அழிந்து பட்ட அவ்விளம் பெண்ணைப் பெயர்த்துந் தந்தது அருள் செய்ததாகலின் அஃது இழுக்கன்றாம். அல்லதூஉம், தனக்

கென அறிவாற்றலுடையனாகிய முதல்வன் தன்றிருவடித் தொண்டு பேணும் அன்பர்க்கிரங்கி அவர் வேண்டியவாறே செய்திட்டா னாகலானும், மலவழியராய்க் கிடந்துழலும் எம்பொருட்டாகவே சட்ட திட்டங்க ளியற்றியதன்றித் தன்னியல்பில் அறிவுருவாய் விளங்கும் பெருமானுக்குச் சட்டதிட்டங்கள் பிறர் வகுத்துவைத்தல் பொருந்தாதாய் முடியுமாதலானும், சட்டதிட்டங்கட்கு உட்படுவாரெல்லாம் பிறர்வழியராதல் காணக்கிடத்தலால் இறைவனுக்கும் அவை யுண்டெனக்கூறுதல் அவன் முதன்மைக்கு இழுக் காமாதலானும் அவ்வாறு கடாதல் இறைவனொருவனுண் டெனக் கொண்டு வழுத்தும் பிரமசமாசத்தார்க்கு ஒரு சிறிதும் இணங்காதென் றொழிக. இதுபற்றியன்றே "விதியும் விலக்குங் கடந்தார்க்கு விதியா லொன்றை விதிப்பாரார்" என்னுந் திருமொழியும் எழுந்ததென் றுணர்க. இன்னும், இயற்பொருட்கலைஞன் * ஒருவன் தனக்கிருக்கும் ஆற்றல்பற்றித் தன்மாட்டுள்ள கருவி கொண்டு தண்ணீரை இருவேறு நுண்வளிகளாகப் பிரித் தலும், அங்ஙனம் பிரித்த அவற்றைப் பெயர்த்துந் தான் விரும்பியவாறே பருவடிவத் தண்ணீராகச் செய்தலுங் காண்கின்றாம். இவ்வாறே இறைவனும் நுண் அணுக்க ளாகப் பிரித்த அவ்விளம்பெண்ணின் உடம்பைப் பெயர்த் தும் பருவடிவில் முன்னையுடம்பாகத் தன் முழுமுதலாற்ற லாற் செய்திட்டானாகலின் அஃதுலகவியற்கையொடு முரணிற்று என்றல் யாங்ஙனம்? அவ்வவர் செய்யுந் தொழிற்கூறுபாடுகளெல்லாம் அவ்வவர் ஆற்றன்மிகுதி பற்றியே சிறப்பனவாம். இயற்பொருட்கலைஞன் தன்னாற்ற லுட்பட்டதொன்றை அவ்வாறு செய்தானாயின், எல்லாம் வல்ல தன்னாற்றலுக் கேற்ப இறைவன் தானும் அவ்விளம் பெண்ணை அங்ஙனம் எழுப்பினான்.

"பிறந்தோரி றத்தலு மிறந்தோர் பிறத்தலும்
அறந்தரு சால்பு மறந்தரு துன்பமும்"†

*Chemist. †மணிமேகலை

என்றவாறு போலப் பிறத்தலும் இறத்தலு மியற்கையா வாரா நின்ற இவ்வுலகத்தே, அவ்விளம் பெண்ணை இறக்கச் செய்தும் பின் குடத்தினின்று பிறக்கச்செய்துந் திருவிளையாட லியற்றிய முதல்வன் உலகவியற்கையொடு முரணிச்செய்தா னென்றல் அமையாது.

அற்றேல் அஃதாக, யாம் உலகவியற்கையொடு முரண் பாடுடையதென்றது அவ்விளம் பெண்ணை ஒரு தாய் வயிற்றினின்று பிறப்பியாமல், இடையொருகாலத்துக் குடத்தினின்றும் எழுப்பியதையேயாமாகலின் அதனை யுணராமல் நீர் மேலே யுரைத்த வழக்குப் புரைபடுமாம் பிறவெனின்: நன்று சொன்னாய், அதனை யுணராதேம் அல்லேம், அங்ஙனம் உலவியற்கையொடு பொருந்தச் செய்தல் வேண்டினனாயின் முதல்வன் அவ்விளம் பெண்ணைத் தாய்க் கருப்பையில் நுழைப்பிக்கக் கடவனென நீ கூறியது ஒக்கும்; இறைவன் அவ்விளம் பெண்ணை வேறு ஓர் உடம்பின்கண் உய்த்தல் வேண்டினனாயின் அவ்வாறே செய்கிற்பன். அங்ஙனமின்றிச் சிவநேய ரென்னும் அன்பர்க்கு மகளாய்ப் பிறந்த அந்த யாக்கையின் கண்ணேயே அவ்வுயிரை அவர் வேண்டுகோட்கு இரங்கிப் புகுத்தல் வேண்டினமையின், அவ்வாறு இடையொருகாலத்து நுண்வடிவாய்ப் போன அவள் யாக்கையைத் திரும்பவும் பருவடிவிற்றுக்கி அருள் செய்தானென்றுணர்க. அவ்வாறு திரும்ப அருள் செயல் வேண்டினனாயினும், சிவநேயர் மனைவியின் கருப்பையிற் புகுத்தி அவ்வாற்றால் அவளைப் பிறப்பித்தலே முதல்வனுக்கு முறையாமாலெனின்; அதனால் அவ்விளம்பெண் மறுபடியுங் கருப்பையிற் கிடந்துழலும் பெருந்துன்பமே போதரலானும், தாய்தந்தை முதலாயினார்க்கும் அதனாற் பேரிடரே விளையுமாதலானும், மணங் கூடும் மங்கைப்பருவங்காறும் வளர்த்தக்காற் பட்ட மேலைத்துன்பங்க ளெல்லாங் களைத்து முன்னை முயற்சிகள் எல்லாம் பயனின்றிப் போதலானும், பேரிரக்கமுடையனாகிய பெருமான் இத்தனை துன்பங்

கட்கும் தன் அன்பரை யுள்ளாக்குதல் அவனுக்கு இரக்கம் இன்ருமென்பது பட்டு இழுக்காய் முடிதலானும் அவ்வாறு விஞதல் பெரிதும் ஏதமாமென்று மறுக்க.

அற்றேலஃதாக, எழுவகைப் பொருள்களையுங் கொண்டு அங்ஙனம் அவள் உடம்பு படைத்திடுதலே முறையாமன்றி, அவற்றுள் ஒன்ருகிய என்பைக் கொண்டு அவள் உடம்பைத் திரட்டி எழுவித்தானென்றல் அமை யாதாமெனின்; அறியாது கடாயினுய், 'அண்டங்களெல் லாம் அணுவாக அணுக்களெல்லாம் அண்டங்களாக' ஒரு நொடியில் மாற்றவல்லனுகிய இறைவன் மாட்டும் அங்ஙனஞ் செய்கைத்திறங் குறைபாடுண்டாக விஞதல் அறியாமை முதிர்ச்சி யாவதன்றிப் பிறிதில்லையென விடுக்க. அல்லதூ உம், என்பை யொழித்து ஒழிந்த பொருள்களெல்லாம் நெகிழ்ச்சியும் மென்மையுமுடையனவாகையால் அவையெல் லாம் நுண்வடிவாய் நின்றன; அவற்றைப் பருப்பொருளா கத் திரித்து என்போடு ஒருங்குகூட்டி உடம்பைப் படைத் திட்டாஞகலின் ஆண்டும் மாறுபாடில்லை யென்ருெழிக. இது நிற்க.

இனி, ஞானசம்பந்தப்பிள்ளையார் மூன்ரும் ஆண்டி லேயே பேரறிவினராய் விளங்கிஞரெனல் யாங்ஙனம்? அஃது உலக வியற்கை யன்ருலோவெனின்; அறியாது கடாயினுய், **போப்** முதலான முன்னை ஆங்கிலப் புலவர்களுங் குழவிப் பருவத்திலேயே புலமை மிகவுடையராய் விளங்கிஞரென் பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின் உலகவியற்கை உலகவியற்கையென நீர் கூறுவன வெல்லாங் குன்றக் கூறல் என்னுங் குற்றமுடையதா யொதுங்குமாறு அறியக் கடவிராக. உலகவியற்கைக்கு நீர் வரைந்து சொல்லும் இலக்கணம் பெரும்பான்மையாய் நிகழ்வதென்றுரைப்பீ ராயின் அப்போது அக்குற்றம் வரமாட்டாது; யாங்கூறும் வழக்குரைகளும் வாய்ப்புடையனவேயா மென்பதூஉம் எளிதி லுமக்கு விளங்கும். இன்னும், உலகவியற்கை யென்பது இறைவன் உயிர்களின் அறிவுமுதிர்ச்சிக் கேற்பத்

தன் உரிமை அறிவாற்றலால் நிகழ்த்துஞ் செய்கையின் அமைப்பேயாமென யாங்கூறும் இலக்கணத்தை நீர் ஒரு சிறிது உளங்கொளப்பொருத்தி யாராயவல்லிராயின் 'பெரும் பான்மை' யென அடைகொடுத்து இடர்ப்பட்டு நீர் இலக் கணங் கூறுதலும் வேண்டா, அல்லது அவ்வடை கொடுத்து இலக்கணஞ் சொல்லுவீராயினும் அதுவுமெம் வழக்கிற்கு ஒத்துநிற்பதேயன்றி மாறுபாடுறாது. எனவே, **ஞானசம்பந்தப் பிள்ளையார்** மூன்றாம் ஆண்டிலேயே பேரறி வினராய் உலகை உய்வித்தது உலக வியற்கையொடு பொருந்துவதே யாமென்றுணர்ந்துகொள்க.

இனி, நிரீசுரவாதிகளுள் ஒருசாரார் ஞானசம்பந்தப் பிள்ளையாரே தாம் நிகழ்த்திய அற்புதங்களைக் குறிப்பிட்டுப் பதிகங்கள் கட்டளையிட்டருளினா ரென்பதற்குச் சான்று என்னையென்று வினவுவராலெனின்; உலக வழக்கும் ஆன் றோர் வழக்குமே அதற்கு உறுசான்றாம். பிள்ளையாரோடு ஒருங்கிருந்த திருநாவுக்கரசுகளும், அவர்க்குச் சிலகாலம் பின்னிருந்த சுந்தரமூர்த்திகளும், அவர்க்குச் சிலகாலம் பின்னிருந்த நம்பியாண்டார் நம்பிகளும், அவர்க்குச் சில காலம் பின்னிருந்த பெரியபுராணமுடைய சேக்கிழாரும் பிள்ளையார் அருமை பெருமைகளை மிக விரித்துரைக்கும் வழக்கானும் மரபானும் முன்னெடுத்துக்காட்டிய பதிகங் களும் பிறவும் பிள்ளையார் கட்டளையிட்டருளியனவேயா மென்க. அற்றேலஃதாக, அவ்வான்றோர் உரையைத்தான் மெய்யெனக் கொள்ளுதற்குச் சான்று என்னையெனின்; நன்று வினாயினாய். இத்தனை ஐயுறவுடையையாய்த் தெளிய மாட்டாது தடை நிகழ்த்து முனக்கு எத்தனைதான் யாம் உரைப்பினும் மேன்மேலும் தடைநிகழ்த்தி வரம் பிறந் தோடுங் குற்றத்திற்கு இடஞ்செய்வை யாகலான் அவ்வா றெல்லாம் உனக்கு விடையுரையேம். ஆயினும் நினக்கு மெய்யறிவு கொளுத்துதற் பொருட்டு நின்மாட்டு யாமே சில வினாக்கள் நிகழ்த்துகின்றாம்; உய்த்துணர்ந்து கேட்பையாக.

நீ குழந்தையாயிருந்த பருவத்திலே நின்தாய் இன்னளென்று யாங்ஙனம் உணர்ந்தாய்? அவளுரைப்பவன்றோ உணர்ந்தாய். அவள் பாலுண்ணுக என்று சொல்லி நின்னை ஊட்டிய காலத்தினெல்லாம் நீ உணவுகொள்ளும் அப்பொருளை யாங்ஙனம் உணர்ந்தாய்? அவளுரைப்பவேயன்றோ உணர்ந்தாய். இவ்வாறே உலகியற் பொருள்கட்கெல்லாம் பெயரிடுமாறும், அவற்றைத் தெரிந்து பயன்படுத்துமாறுமெல்லாம் யாங்ஙனம் உணர்ந்தாய்? அவளுரைப்பவே யன்றோ உணர்ந்தாய். அக்காலங்களிலெல்லாம் நின் அன்னை சொல்லியவற்றை அவள் சொல்லியவாறே நீ நம்பினதன்றி, அவள் சொன்ன ஒவ்வொன்றனையும் ஆராய்ச்சி செய்து பின் நீ நம்பியதுண்டோ? இல்லையே. இப்போதுதான் என்ன! நீ கலைபயில்கழகஞ் சென்று கல்வி பயிலுங் காலங்களி னெல்லாம், ஆசிரியர் சொல்லியவற்றை ஒருங்கே நம்பி, அந்நம்பிக்கையின் மேல் உன்னறிவெனுந் திண்ணிய அரணைக் கட்டுதலன்றி, அவர் கற்பிக்கும் ஒவ்வொன்றிலும் நீ ஐயங்கொண்டு தெளிந்ததுண்டோ? ஆசிரியன் ஒரு பொருளுக்கு நீர் என்றும், ஒன்றுக்கு நிலமென்றும், ஒன்றுக்குத் தீ என்றும், பலவாருகப் பெயரிட்டுக் காட்டினல் அவற்றுக்கு ஏன் அப்பெயர் அமைத்தார் என்று நீ ஆராய்ந்ததுண்டே? அல்லது அவர் சொல்வது பொருத்தந்தானுமென்று நீ ஐயம் நிகழப் பெற்றதுண்டோ? இவையெல்லாம் ஒரு புறங்கிடக்க. நீ நாடோறும் நண்பர்களோடு கலந்து பழகுங்காலும் அவ்வவர் உரைக்குஞ் சொற்களையும் பொருள்களையும் பொருந்த ஆராய்ச்சி செய்துதான் நம்புகின்றனையோ? ஒருவர் அமெரிக்கா தேயம் ஒன்று இருக்கின்றது என்றுரைத்தால், அப்படி ஒரு தேயத்தை நான் கண்டதில்லாமையால் அதுபொய் யென்பையோ? ஒருகாலும் உரையாய். இருந்தவாற்றல், உன்னறிவு முதிர்ச்சியும் ஆராய்ச்சித் திறனுந் தொழிலொருமைப்பாடும் பிறவுமெல்லாம் பிறர் சொல்லின்கண் உனக்கு இயல்பாகவெழுந்த நம்பகம் பற்றியே மெய்யாய் நிகழ்வதல்லது வேறு இன்ரும். இனி,

அங்ஙனம் உனக்கு நிகழ்வதாகிய நம்பகவுணர்ச்சியும் உனக்கு அதனை வருவிக்கின்றவர் மெய்யுரையியல்பு பற்றியே உரம் பெற்றுத் தோன்றும். அவர் சேயநாட்டின் கண் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றனைத் தாம் நேரே கண்டிருந்த தாக உரைத்திடுவராயின் அதன்கண் நம்பிக்கை மிக உறுதியாக நினக்குத் தோன்றா நிற்கும்; அவர் அதனைத் தாமே நேரிற் காணுமற் கண்டார் ஒருவர் தமக்குரைப்பத் தாங்கேட்டவாறே அதனை நினக்கு மொழிந்திடுவராயின் அதன்கண் நம்பகஞ் சிறிது குன்றித் தோன்றாநிற்கும். இவ்வாறே ஒருவர் ஒருவர்க்கு உரைப்ப வருகின்றன வெல்லாம் முறைமுறையே நம்பகங் குறையத் தோன்றாநிற்கும். இனி ஒரு நிகழ்ச்சியைக் கேட்டோர் உரைத்தவாறே அதனைக் கண்டிருந்தோரும் பொருந்தவுரைத்திடுவராயின், அது மெய்ம்மை மிகவுடைத்தாய் உலகத்தின்கட் பரந்த வழக்க முற்று ஆன்றோரால் பாதுகாக்கப்படும் மெய்வழக்காய் நிலையுதலுறும். இங்ஙனம் பரந்துபட்ட வழக்காய்வரும் மெய்ந் நிகழ்ச்சிகளையே குறிப்பிட்டு ஆங்கில நூலாரும் நாட்டு வரலாறுக ளெழுதுகின்றனர். அவரெழுதுகின்ற அவ்வரலாற்று நூல்களின்கண்ணெல்லாம் எந்த நிரீசுரவாதியும் ஐயுறவுகொள்ள இடம்பெறார். சீசர் என்னும் ஓர் அரசர் ஆயிரத்தெழுநூறு ஆண்டுகளின்முன் உரோம நகரத்திற் செங்கோலோச்சினரென்பது அவர் செதுக்கிய சில கல்வெட்டுக்களால் இனிதுணரப்படுமென்றால் அதன்கண் ஐயுறுவார் யாருமிலர். இதுபற்றியன்றே அளவை நூலாரும் உரையளவையென வொன்று சிறந்தெடுத்துக் கொள்வாராயினர். இது நிற்க.

இனி, இங்ஙனங் காட்டிய வரலாற்று முறைக்கு இணங்கவே, எம் ஞானசம்பந்தப் பெருமானார் தாம் நிகழ்த்திய அரும்பேரற்புதங்களைத் தம் அருமைத் திருப்பதிகங்களிற் கட்டளையிட்டருளுதலும், பிள்ளையாரோ டொருங்கிருந்து அவ்வற்புதங்களை நேரே கண்டிருந்த தோலாநாவின் மேலோராகிய அப்பருந் தம் அன்புருவான பதிகங்களிலவற்றைக் கட்டளையிட்டருளுதலும், இங்ஙனம் மெய்ம்மை

கொண்டு நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகள் சுந்தரமூர்த்திகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார்நாயனர், உமாபதிசிவனர், தாயுமானர் முதலிய மெய்த்திருவாளரான சான்ருேரான் மொழியப்படுதலும், அங்ஙனம் மொழியப்படு தலாற் பரந்துபட்ட உலகியல்வழக்கும் ஆன்ருேர் அறநெறி வழக்குமாய்ப் பாதுகாக்கப்படுதலுந் தேர்ந்துணர வல்லே யாயின் மேன்மேல் வரம்பிறந்தோடுந் தடை நிகழ்த்தி மலே வாயல்லே. இனி, இங்ஙனங் காட்டிய உரையளவைகளேயுங் கடந்து அழிவழக்குப் பேசத் துணிதல் உலகத்தாராற் பித்தனென்று எள்ளப்படுதற் கேதுவாமாகலின், இனி யாமெடுத்துக்கொண்ட திருவுருவ வழிபாட்டினியல் வழாது மேலும் அதனே ஆராய்ந்து செல்வாம்.

இதுகாறும் யாம் எடுத்து விளக்கியதன் முடிபொரு ளாய்ப் பெறப்படுவன யாவையோ வெனின், நர்வலந்தீவின ராகிய நம்மனேர் செய்து போதருந் திருவுருவ வழிபாடு இறைவன் ஒரோவொரு காலத்து ஒரோரன்பர்க்கு அருள் புரிதற் பொருட்டு அருளேயே திருமேனியாக்கொண்டு எழுந்தருளி வந்த திருக்கோலக் குறிப்பு இனிது விளங்க அமைத்து நிறுத்திய வழிபாடாய், அவ் வழிபாடு வாயி லாகவே எமதுணர்வை இழுத்துச் சென்று இறைவன் மாட்டுப் பதியவைக்குங் கருவியா மென்பதூஉம், இங்ஙனம் போந்த அருட்கோலத்தை அறிதரற்குரிய நல்வினே முகிழ்ப்பு இல்லாத ஏனேநாட்டவர் தத்தமக் கறிவு சென்ற வாறெல்லாங் கல்லானுஞ் செம்பானும் இயற்றிவைத்துக் கொண்டு வழிபடும் அவரது வழிபாடு அவ்விக்கிரகங்கண் மேற் கடந்துசென்று இறைவன் உண்மை யருட்கோலத் தின்கண் அவரறிவைப் பதிக்கமாட்டாமையின் அவர் செய்யும் அவ்வழிபாடு விக்கிரகாராதனே யென்று வழங்கப் பட்டதாமென்பதூஉம், இங்ஙனம் வேறுபாடு பெரிதுடைய திருவுருவ வழிபாட்டிற்கும் விக்கிர காராதனேக்கும் இலக் கண முணராது அவையிரண்டனேயும் ஒன்றெனக்கொண்டு அவ்வாற்ருன் நம்மனேர் செய்து போதருந் திருவுருவ வழி பாட்டு நன்முறையை ஒரு சாரார் இகழுதல் பொருந்தாதா

மென்பதூஉமேயாமென் றுணர்ந்து கொள்க. இனி இறைவனை அங்ஙனம் உருவத் திருமேனியிற்கொண்டு வழிபடுமாறுதானென்னை? அருவமாகக் கொண்டு வணங்குதலே அமையுமா மென்பார் தடைக்குமொழிய ஒரு சிறிது காட்டுதும்.

இனி, வழிபாடு உருவமான கோலத்தின்கட் செயப்படுதல் வேண்டுமெனக் கூறியதென்னை? அருவமாக இறைவனை வழிபடுதலே முறையாமாலெனின், நன்றுகடாயினுய், அவ்விறைவனை அருவமாகத்தான் வழிபடுதல் வேண்டுமென்னுங் கடப்பாடு என்னை என எதிர்கடாவுவார்க்கு நீர் இறுக்குமாறு இன்றும். அற்றன்று, காலத்தானும் இடத்தானும் வரையறைப்படாது விரிந்த அருவப்பொருள் காலத்தானும் இடத்தானும் வரையறுக்கப்படும் உருவமாக வந்து அருள் செயுமென்றல் சாலாதென்பதே எமது கருத்தாமெனின்; நன்றே விஞயினுய், அறிபொருளான உயிரின்கண்ணும் அறிவில் பொருளான உருவருவ வுலகங்களினுமெல்லாம் இறைமுதற் பொருள் ஒருங்கு நிறைந்து அவற்றின் மேலும் விரிந்து செல்லும் பெரும் பரப்பும் முழு முதன்மையுமுடையதென்ப தெல்லார்க்கும் ஒப்ப முடிந்தது; முடியவே, பருப்பொருளான குடம் ஆடை முதலியவற்றி னெல்லாம் நிறைந்திருக்கும் அவ்விறை முதற்பொருள் அந்நிறைவுபற்றி ஒருவாற்றுல் வரையறுக்கப்படுமென்பது துணிபொருளாம். அற்றேல், அது முழு முதற்கடவுளின் நிறைவிற்கும் இறைமைத் தன்மைக்கும் இழுக்காம் போலுமெனின்; அற்றன்று, குடம் முதலிய பொருண்மட்டின் மடங்கி நிறைந்து மேற் செல்லாதாயின் அஃது அதற்கிழுக்காம்; அவ்வாறன்றி அவற்றினுள்ளும் புறம்புமெல்லாம் ஒருங்கு நிறைந்து மேல்விரிந்து நிறையும் முதன்மையுடைமையால் அஃது அதற்கு இழுக்கன்றும். குடம் முதலிய பருப்பொருள்களில் நிறையுந் துணையே அது வரையறைப் பொருளென்பது பெறப்படுமாம் பிறவெனின், அஃதமையாது, வரையறுக்குங் குடம் முதலியவற்றின் வரம்பின்கண்ணும் அது நிறைந்து உள்ளும்புறம்புந்

தொடர்புற்று நிற்குமாகலின், தொடர்பின்றி யறுத்து வேருக்கப்படும் பருப்பொருள்போல் அது கொள்ளற்பால தன்று. இங்ஙனங் குடம் முதலிய பொருள் நிறைவு பற்றியும் அஃதொருவாறு வரையறைப்படுமென்பது காண்டுமாகலின், உருவப் பொருண் மட்டுமேதான் காலத்தானும் இடத்தானும் வரையறைப்படுமென நீ கூறியது பொருந்தாது. அல்லதூஉம், பிறர்மாட்டு நின்று படைக்கப்படும் பருவுடம்பு மேற்கொண்டு கருப்பையிற்புகுந்து பிறக்கும் எம்மனோரைப்போன் முழுமுதற் பெருங்கடவுளும வினைவழிப்பட்ட உடம்பு தாங்கிவந்து அருளுமென வுரைப்பி னன்றே அஃது அவன் இறைமைக்கு இழுக்காம்.

கட்புலனாகாத பேரொளிப் பிழம்பாய்ப் பேரறிவுருவாய் இன்ப நிலையாய் விளங்குந் தன் அருட்பெருந்தன்மையே தனக்குரிய வடிவமாகத் தான் நினைந்தவாறே, தன்னை நெஞ்சுருகிக் குழைந்து வழுத்தும் உண்மையன்பர்க்கு வெளிப்பட்டு அருளும் முழுமுதன்மையுடையான் இறைவன் என்று கோடுமாகலின் அஃது அவற்கு இழுக்காதல் யாண்டையதென் றொழிக. அற்றேலஃதாக, இறைவன் அங்ஙனம் அருட்கோலந் தாங்கி வெளிப்படுங்கால் தன் பரப்பையெல்லாஞ் சுருக்கிக்கொண்டு போதருமோ, அல்லது அப்பரப்பின்கண் ஓரோரிடத்திலேயே முனைந்து தோன்றுமோ என ஆயும் வழி, அவன்றன் நிறைவனைத்தையும் ஒருங்கு சுருக்கிக்கொண்டு போதராநிற்குமென வுரைத்துமாயின் அக்காலத்து நிறைவின்மை பெறப்படுதலானும், ஓரோரிடத்து முனைந்து தோன்றுமெனக் கோடுமாயின் அறிபொருளான இறைமுதற் பொருள் வரையறுக்கப்படாமையின் அஃதோரிடத்துத் தோன்றவே பிறிதோரிடத்தில்லையாமெனக் கொள்ளக் கிடத்தலானும் அவையிரண்டும் அமையாவென்பது தெற்றென விளங்குதலால் இறைவ னுருவமாகத் தோன்றுமென்றல் யாங்ஙனம் நிலைபெறுத்தப்படுமெனின்; நன்று கூறினாய், இறைவன் அருட்கோலந் தாங்கி வெளிப்படுங்கால் தன் பரப்பு முழுமையுஞ் சுருக்கிக்கொண்டு போதருவானல்லன்; கன்று

ஈன்ற புனிற்றாவின் புனிதவுடம்பெங்கும் நிறைந்த நுண் அமிழ்தந் தீஞ்சுவைப்பாலாய் மடியினின்றும் பொழியுமாறு போலவும், விரிதிரைக்கடலிற் குளிர்மிகும் ஒரோ விடங்கள் பனிக்கட்டிகளாய் உறைந்து கிடக்குமாறுபோலவும் யாண்டும் விரிந்த இறைவன் றிருவருள் மெய்யன்பர் பொருட்டு ஒரோ விடங்களில் முனைந்து உருவாக, அதன் கண்ணே யிருந்து முதல்வன் அருள் புரிவனென் றுணர்க. இதுபற்றியன்றே,

"இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ - லில்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லூற்று."

என்னுஞ் சிவஞானபோதத் திருமொழியும் எழுந்ததென் றுணர்க. அற்றேல், இறைவன் கொள்ளும் உருவத்திரு மேனிக்கும் நம்மனோர் எடுக்கும் பருவுடம்பிற்கும் வேறுபா டென்னை யெனின்; நம்மனோர் உடம்புக ளெல்லாம் வினை வழிப் பட்டுப் பிறராற் படைக்கப்படும் வரையறைப் பொரு ளாய் நிலையுதலின்றி அழிவுபா டெய்து மியல்பினவாம்; இறைவனுடைய திருமேனியோ அருளே வடிவாய் அவன் நினைந்தாங்குத் திரண்டெழூஉந் திருவுருவாம்; இறைவனது அருட்டிருமேனி அவன்றன் பெரும் பரப்பு முழுவதூஉந் தொடர்புற்று ஒருவாற்றாற் சிறிதாதலும் ஒருவாற்றாற் பெரிதாதலு முடையதாம். யாங்ஙனமெனின்; நெடுங்கடற் பரப்பி லாங்காங்கு உறைந்த பனித்துண்டங்கள் அக்கடல் நீரோடு இயைபுடையவாமாறு போலவெனக. இனி அது நம்மனோர் உடம்பு போல்வதன்று மற்று அருட்டிருவுருவாம் என்கின்றீரால், அத்திருவுருவத்தி னியல்புதா னென் னையோவெனின்; அவ்வுருவத்தி னியல்பு நம்மனோரால் அறியவாரா தென்று உணர்க. பருப்பொருள் வடிவாய் விளங்கும் இவ்வுலகத்தினியல்பே யறியமாட்டாத சிற்றறி வினராகிய நாம் மனமொழிகளுக்கு எட்டாது விளங்கும் இறைவன்றன் திருக்கோல வியல்பை யறியுமாறு யாங் ஙனம்? மின்னாற்றல் இன்னது என்று அறிந்துள்ளாம்,

அதன் உண்மை யியல்பு இன்னதென் றறியோம்; விசும் பென்பதொன் றுண்டென்ப தறிவோம், அதன் உண்மை இன்னதென அறியமாட்டோம்; இரும்பைக் காந்தம் இழுப்பது கண்டு காந்தக்கல்லின் ஆற்றலை யறிவோம், அவ்வாற்றலின் உண்மைத் தன்மை இன்னதென்றறியும் ஆற்ற லுடையோமல்லோம்; இவ்வாறே உருவருவாய் உள்ள மண் புனல் அனல் கால் முதலிய பொருள்களின் உண்மை யின்னதென் றறியமாட்டாத சிற்றறிவினராகிய நம்மனோர் இறைவனியல்பை உணர்வேமென்றல் குழறு பாடாய் முடியும். ஆழ்கடல் நீரில் ஆழவமுக்கி முகந்தாலும் நாழி நால்நாழி தண்ணீரை முகவாது, நாழித் தண்ணீரையே முகக்கும்; அந்த நாழிபோற் சிறிதான உயிரினுணர்வு கடல்போற் பரந்த இறைவன் இயல்பை யாங்ஙனம் அளந் தறியும்? ஆகலின், உயிரினறிவு விரியுந் துணையே இறை வன் அருட்கோல வியல்பு விளங்குவதல்லது மேற்சிறிதும் விளங்காதென்றுணர்க. ஆகவே, இறைவன்றன் திருமேனி யியல்பு நம்மனோர்க் கறியவாரா தென்பதூஉம், அங்ஙன மாயினும் அவன் றாங்கும் அருட்டிரு வுருவுபற்றி அவற்கு வரக்கடவதோர் இழுக்கில்லை யென்பதூஉங் காட்டப் பட்டன.

இனி. இறைவனை உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடுதலினும் அருவமாய்க் கொண்டு வழிபடுதலே சிறந்ததாமென வைத்து ஒருசாரார் வழக்கிடுகின்றமையின் அவர் செய்யும் அவ்வழக்கும் போலியாமென்பது காட்டு வாம்; பருப்பொருள் வடிவான விழிகளிரண்டும் பருப் பொருள்களையே காண்பனவன்றி நுண்ணியவான வான் முதலிய பொருள்களைக் காணமாட்டா; இவ்வாறே மெய் வாய் மூக்குச் செவி முதலிய உறுப்புக்களும் பருவடிவான ஊறு சுவை மணம் ஓசை முதலியவற்றையே உணருமா றல்லது வேறு அறியா. இவ் வைம்பொறிகளின் வழியாகப் பஃறலைப்பட்டுச் செல்லும் மனவுணர்வும் அவ்வைம்பொறி வாயிலாய் வந்த பருப்பொருட்டன்மைகளையே அறிவதல் லது பிறிதில்லை. இங்ஙனம் பருப்பொருள்களையே அறியு

மாற்றலுடைய மனமுதலான பருப்பொருட் கருவிகளுடைய இப் பருவுடம்பி லிருப்பாரான நம்மனோர் ஒருவாற்றானும் இக் கருவிகளான் அறியப்படாத அருவமாகக் கொண்டு இறைவனை வழிபடுமாறு யாங்ஙனமென்றுணர வல்லார்க்கு அவர் சொல்லும் வழக்கு வெறுஞ் சொல்லளவாகவே முடிவதல்லது வேறு பொருட்பேறின்றாம்.

இனி, 'வழிபாடு' என்பதுதான் யாது? மனமுதலிய பருப்பொருட் கருவிகளெல்லாம் புறப்பொருளிற் சென்று பதிந்து விரியாது மடங்கி இறைவன்றன் அருட்டிரு வுருவின்கட் சென்று பதிந்து உயிரை இறைவன் மாட்டு ஒருமையுறுத்துவதாமன்றோ? அறிபொருளான இரண்டு ஒருங்கு சேர்ந்து ஒருமையுறுதற்கு இடைநின்று கூட்டு விப்பன பருப்பொருட் கருவிகளும் அவற்றையுடைய உடம்புமல்லவோ? என்னை? இன்ப வடிவான அருட் கோலத்தைக் காண்டலும் அதன்கண்ணே மனவுணர்வு சென்றுபற்றும், பற்றுதலும் அக்கோலத்தின்கண் நிறைந்த இறைவன் மாட்டு உயிர் ஒன்றி ஒன்றுமாதலின். இதனை உலகியற் பொருள்களினும் வைத்துக் காட்டுதும். இங்ஙனம் எல்லாம் வழக்கிடும் நீவிர் நும்முடம்பின்கண் இல்லாதொழியின் ஈண்டு எம்மெதிர் வந்துநின்று எங்ஙனம் அதனை நிகழ்த்துவீர்? நுமது வழக்கை மறுத்து மெய்ப்பொருள் வலியுறுத்துகின்ற யாம் எமது இவ்வுடம் பின்கட் புகுதாவிடின் எங்ஙனம் எம்மேற்கோளை நிறுத்து வேம்? நாமிருவரும் இக்காலத்து ஈண்டிருந்து வழக்கிடுவ தெல்லாம் இருவேறுடம்புகளுடைமையினாலன்றோ? இங் ஙனம் இருவேறுடம்புகளை நிலைக்களனாக்கொண்டு இரு வேறுயிர்கள் ஒன்றுசேரும்வழி இரண்டும் ஒருமையுற்று இன்பமெய்துகின்றன. எழினலங்கனிந்த கொழுவிழி மகளிரும் உலம்பொரு தடந்தோளுறுவலி இளைஞரும் ஒருங்கியைந்து ஒன்றுசேரி னல்லது இன்பநுகர்தல் செல் லாமை இனிது விளங்கும்; கன்னலுங் கனிந்த பலாச் சுளையும் மாம்பழமும் வாழையங்கனியும் நறைகமழ்தேனும் ஒருங்கு கலந்தகூட்டு வாய்ப்பெய்துழி யல்லது சுவை

யின்பந் தோன்றுது; நானமும் புழுகுஞ் சாந்தமும் விரை கமழ்மலரும் அருகணையினல்லது மூக்கினுற் பிறக்கும் நறு மணவின்பந் தோன்றுது; தீங்குழலோசையும் யாழிய லோசையுங் கேட்பினல்லது செவியினுற் பிறக்கும் ஓசை யின்பந் தோன்றுது; செழும்பட்டாடையிற் சமைத்த ஐவகை யமளியுறினல்லது மெய்யினுற் பிறக்கும் ஊற்றின் பந்தோன்றுது. ஆகவே, இன்பந் தோன்றுதற்கு இரு பொருட் சேர்க்கை இன்றியமையாதாகலானும், அச் சேர்க்கைதானும் இருவகையுடம்புகளையே நிலைக்களனுக் கொண்டு நிகழ்தலானும் இறைவனை வழிபட்டு அவனை ஒன்றியைந்து இன்ப நுகர்கின்ற உயிருக்கு ஒருடம்பும் அங்ஙனந் தொழப்படும் முதல்வனுக்கு ஓர் உடம்பும் வேண்டுமென்பது சொல்லாமே யமையும். அங்ஙனமா யினும் உயிருக்கு உண்டான உடம்பு வினைக்கீடாக மாயை யிற் றிரட்டப்பட்டதா மென்பதூஉம், இறைவனுக்கு உண்டான உடம்பு இரக்கத்தால் அருளிற்றிரண்டு எழுந் ததாமென்பதூஉங் குறிக்கொண்டு போற்றற்பாலனவா மென்க. இங்ஙனம் இருவகை அறிவுப் பொருள்கள் தம் முள் ஒன்றிணங்குதற்கு இருவேறுடம்புகள் வேண்டு மென்னும் நுட்பந்தெரித்தற்கன்றே, தமிழிலக்கணவாசிரி யர் நிலைமொழியீற்றினின்ற உயிரோடு வருமொழி முத னின்ற உயிரிணைதற்கு இடையே ஓர் உடம்படுமெய் தோன்றுமென் றுரையாநிற்பர். இங்ஙனம் உண்மை மறை பொருள்களையெல்லாந் தந்து இலக்கண நூலுள்ளும் விளங்க வைத்தல் தமிழ் நூலாரிடத்தன்றி ஏனை மொழி நூலாரிடைக் காண்டலரிது என்பது இதனெடுபடுத்து ஈண்டு விதந்துரைத்து அத்தமிழ்மொழிமாட்சி குறிப்பா னறியவைத்தாம். இதுநிற்க.

இனி, உடம்புகளெல்லாந் தம்மையுடையானுக்குப் பல்வகைத் துன்பங்களுந்தந்து வேறுபடுத்தக்காண்டலின், அதுபற்றி இறைவன் ருங்கிவரும் அருட்டிருவுருவும் அவனை வேறுபடுத்தாதோ வெனின்; படுத்தாது, உடம்புக ளுடையரான உயிர்களினியல்பு பற்றியே உடம்புகளின்

றன்மை யறிவதல்லது, உடம்பினியல்பு பற்றி உயிரை யளந்தறிதல் ஒரு சிறிதும் பொருந்தாது. யாங்ஙனமெனிற் கூறுதும், இருநிலமுழுதுந் தன்னடிப்படுத்துச் செங்கோலோச்சுவானுன முடியுடை மன்னன் தன் இரும்பொருள் வைப்பிற் கேற்பவும் வளங்கட்கேற்பவுந் தலைமைசெலுத்து முறைகட்கேற்பவும் மிக அகன்ற உயர்ந்த வெழுநிலைமாடங் களும் மாளிகைகளும் அமைத்து அவற்றின்கண் இருப் பக் காண்கின்ருேம்; விலங்கினங்களைச் செகுத்துண்டு மழையினும் வேனிலினும் உழன்று திரிவானுன வேட்டுவன் தன்னியல்புக் கேற்ப வைவேய்ந்த புல்லிய குடிலில் ஒதுங்கியிருந்து வாழ்நாட் கழிப்பதூஉங் காண்கின்ருேம். உறையுள் கொள்கின்ற அரசன் வேட்டுவன் இயல்பு பற் றியே உறையுள் அமைக்கப்படுதல் போல உடம்புகளைத் தாங்கி வருகின்றவரான இறைவனும் உயிரும் என்னும் இவரியல்பு பற்றியே அவர் தாங்கிவரும் உடம்புகளுங் கருதி அளந்தறியற்பாலனவாம். இறைவன் முற்றறிவும் முழு முதன்மையும் வரம்பிலாற்றலுந் தன்வழியனுதலும் அருளு றையுளாதலு முடையனுகலின் அவன் ருங்கிவருந் திருக் கோல வியல்பு எம்மனோா லறியவாராத் தூய்மை பெரி துடையதாதலும், உயிர் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் பிறர் வழிப்படுதலும் மலத்தான் மறைக்கப்படுதலும் பிறவுமாகிய குறைபாடுடையனுகலின் அவன் மேலிட்டுவருமுடம்பும் வாலாமை பெரிதுறுவதாதலும் நன்றுணரக் கிடக்கும். இவ் வுண்மை கடைப்பிடித்தன்றே அருணந்திசிவமும்

"மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகு
மாயவா ணவம கன்ற வறிவொடு தொழிலை யார்க்கு
நாயக னெல்லா ஞானத் தொழின்முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னுல்"

என்று சிவஞான சித்தியாரில் ஓதி யருளியதூஉ மென்க. இங்ஙனமாகலின் உடம்புகள் தாங்கிவரும் ஒப்புமையற்றியே அவையிரண்டற்குமுள்ள வேற்றுமை யுணராது அவை, தம்மையுடையாரைக் கட்டுறுத்து மெனக் கூறுதல் சிறு

மகார்கூறுங் குழறுபாட்டுரையாய் முடியுமென்க. அது நிற்க.

இனி, உருவத்திருமேனியிற் கொண்டு இறைவழிபாடு ஆற்றுகின்ற அறிவுடையோர்க்குத் தாம் அன்பு முதிர்ச்சியடைந்து இறைவனோடொன்றி யொன்றறக் கலக்கும் அத்துவிதமுத்திப் பெரும்பேறு வாய்க்குமென்பது மேற்கூறியவாற்றால் இனிதுவிளங்கும். என்னையோவெனிற்; குழவிப்பருவந் தொட்டு முதுமைப் பருவங்காறும் உலகியற் புறப்பொருளோடு மனவுணர்வு ஒற்றுமையுறுகின்ற நெறியானே மக்களெல்லாரும் அறிவுவிளக்கமும் நாகரிக வளர்ச்சியு மெய்திவருகின்றா ரென்பது மேலே விளக்கிப் போந்தாம். ஆதலான், மக்கள் மனவுணர்வு எக்காலத்தும் உலகியற் புறப்பொருளொன்றனைப்பற்றியே நிற்குமல்லது, தானே வேறு பிரிந்து தனித்து நிற்குந் தனிமுதலன்றாம். மனவுணர்வு ஒன்றையும் பற்றாவாறு வேறு பிரித்துத் தனியே ஒருவழி நிறுத்துவே மென்பாருரை வெறுஞ் சொல்லளவே யன்றி அஃது அவர் கூறுமாறு அடங்குமியல்பிற்றன்று என்பது சிறிது கருதிப்பார்ப்பார்க்கும் பொள்ளெனப் புலனும். இப் பெற்றியுணர்ந்தன்றே "காடுங் கரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே, யோடுந் தொழிலாற் பயனுளதோ" என்று தாயுமானசுவாமிகளுந் திருவாய் மலர்ந்தருளினாரென்க. இத்தகைய மனவுணர்வின்பெற்றி தேறாது யாம் அருவமாகக்கொண்டு இறைவனை வழிபடமாட்டுவே மென்பா ரென்கடவரென்க. அவர் இருவிழியினையும் மூடிக்கொண்டு வானத்தை நோக்கி நிற்பாராயினும் அவர் மனவுணர்வும் அங்ஙனம் நில்லாது; மற்றைத்தேயத்தி லிருக்கும் அவர் மனைவியை நாடிச்செல்லும், மைந்தரை நாடிச்செல்லும், நேயரை நாடிச்செல்லும், பொருள் வருவா யெதுவென் றாராயும், புதல்வர்க்குப் பொருள் தொகுக்குமாறு யாங்ஙனமென்று ஆராயும், உயர்ந்தநிலைகள் எமக்கெப்போது கிட்டுமென்னும், மன்னவர் கொண்டாட வாழுமாறெப்படி யென்னும், இன்னும் எத்தனையோ அரும்பெருஞ் செயல்களை யெல்லாம் ஒரு

நொடியிற் செய்யவல்லும்; இத்தகைய மனத்தாலும் அருவமாக இறைவனை வழிபடுதல் எவர்க்கேனுங் கூடுமோ? அன்றி அங்ஙனஞ் சொல்வார் சொற்களை எவர்தாமும் நம்புவார்களோ? அறிவுடையீர் சிறிதாராய்ந்து சொன்மின்! காணப்படும் உலகியற் பொருளின்கண் மனவுணர்வைப் பதித்தன்றே காணப்படாத இறைவனையறிந்து வழிபட்டு உய்தல் வேண்டும்; இதுபற்றியன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என்றோதிக் கடவுள் உண்மைதெரிப்பாராயினதூஉ மென்க. நம் மனவுணர்வின் விளக்கமே உலகியற்பொருள்களை ஒன்றனோடொன்று ஒப்பித்து அவ்வழி வளர்ந்துவாராநிற்கின்றது;'நிழலருமை வெயிலிற் சென்றால் தெரியும்' என்னும் பழமொழியும் இதனை வற்புறுத்தும். வெயிலையே யறியாதவனுக்கு நிழலின்றன்மை யறியவாராது. ஒளியை யறியாதவனுக்கு இருளின்றன்மை யறியவாராது, தீஞ்சுவை யறியாதவனுக்குப் புளிஞ்சுவையின்னதென்று அறியவாராது, நறுநாற்ற மறியாதவனுக்குத் தீநாற்றந் தெரியவாராது. வாராதர்கவே, உலகியற் பொருளுணர்வு சிறிதுமின்றி விலங்கினங்களினுந் தாழ்ந்தவராதல் வேண்டும் மக்களெல்லாம். மற்று அவரெல்லாம் இன்றியமையா அவ் வொப்புமையுணர்வுபற்றியே அறிவு விளக்கம் பெறக்காண்டலால், மேலும் அவ்வொப்புமையுணர்வுதானே அவரை மறுமைப்பெரும் பேற்றின்கண் உய்க்கவல்லதாம். ஒப்புமையுணர்ச்சி இத்துணைப் பெருஞ்சிறப்பினதாதல் பற்றியன்றே அளவை நூலாரும் உவமையை ஏனையளவைகளோடு விதந்தெடுத்துக்கொண்டார்.

இங்ஙனம் உலகியற் பொருள்களைப் பற்றி யன்றி மனவுணர்வு நில்லாமையானும், அம்மன வுணர்வும் ஒப்புமை பற்றியன்றிப் பெருகாமையானும் இறைவனை உருவத்திருமேனியிற்கொண்டு வழிபடும் முறையே உண்மையாமல்லது ஏனையவெல்லாம் வெறுஞ் சொல்லளவாகவே முடியுமென்றொழிக. அல்லதூஉம் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து பரந்த முழுமுதற் பெரும் பொருள் உருவமாகக்கொண்டு

வணங்கப்படும் ஒரு பொருளின்கண்ணும் நிறைந்திருக்கும் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையாற் திருவுருவ வழி பாடு ஆண்டும் பொருத்தமாவதேயன்றி இழுக்காமாறு இல்லை. அற்றேலஃதாக, சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டாமல் விளங்கும் முழுமுதற் பெருங்கடவுளை அவை யிரண்டிற்கும் எளிவந்து விளங்குவதொரு பொருளில் வைத்து வணங்குதல் நிரம்பாதாமெனின்; அறியாது கடா யினய், சொல்லுக்கும் மனத்திற்கும் எளிவந்து விளங்கும் ஏனை உலகியற்பொருள்போல இறைவனது திருக்கோலத் தையும் பிறழக்கொண்டு அவ் வாற்றால் அது பொருந்தா தென்றல் அறியாமையேயன்றிப் பிறிதில்லை. சொல்லுக்கும் நினைவுக்கும் புலனும் உலகியற் பொருளெல்லாம் இது இதுவென்று சுட்டியறியப்படுதலான் வரையறைப்படும் சிறுபொருள்களேயாம். இறைவனது எங்குமுள்ள முழு முதன்மை அங்ஙனம் இதுவென்று சுட்டியறியப்படுவ தன்றாகலானும், அவன் அன்பர்க்கு அருள்வழங்குதற் பொருட்டு மேற்கொண்டுவரும் அருட்கோலம் அவன் பரப்பு முழுவதூஉம் இயைபுடையதாகலானும், அஃது அவைபோல வரை யறைப்படும் வரம்புடைப்பொருளன்று; மற்று வரையறைப்படாது விரிந்த வரம்பில் பொருளே யாம். இவ்வாறாகலின், சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத அப்பெரும்பொருள் அவைதமக்கு எளிவந்து தோன்றுதலாற் போந்த இழுக்கொன்றுமில்லை யென் றுணர்க. அற்றன்று, சொல் நினைவுகளுக்குப் புலனும் பொருளெல்லாம் அழியக்காண்டலால் அங்ஙனம் நினை விற்கு விளங்கித் தோன்றும் அவ்வருட்டிருவுருவும் அழி தல் வேண்டும், அழியவே வேறுபாடின்றி யிருக்கும் இறைவன் வேறுபாடெய்தின னென்று கொள்ளப்பட்டு மாறுபாடாமெனின்; மாறுபாடில்லை, மனத்தினாற் பற்றப் படும் உலகியற்பொருண் மட்டுமே அங்ஙனம் அழியக் காண்டுமன்றி, அறிபொருளாய் உலகியற் பொருளைக் கடந்து செல்லுங் கடவுட்பொருளும் அங்ஙனம் அழிதல் வேண்டுமென்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையின் அவ்வாறு கூறுதல் அடாதென்றொழிக. மேலும், மனத்

திற்குப் புலனும் அத்துணையேபற்றி உலகியற்பொருளையும் உலகினை யிறந்துநின்ற கடவுட் பொருளையும் ஒன்றென்று கூற ஒருப்படுதல் பெரிதும் ஏதமாமென்று மறுக்க. மன வுணர்வின்கட் டோன்றும் இறைவனது திருக்கோலம் அவன்றன் பரப்பு முழுவதூஉம் இயைபுடையதா மென்ப தற்குப் பிட்டுவாணிச்சி பொருட்டு ஒட்டவடிவங்கொண்டு எழுந்தருளிய பெருமான் றுங்கிய பிரம்படி இயங்குமுயிர் நிலையுயிர் முழுதும்பட்ட வியத்தகு நிகழ்ச்சியே கரிபோக்கி யினிது விளக்கு மென்க; இவ்வரலாற்று மெய்ம்மையில் ஐயுறவுகொள யாரும் இடம்பெறமாட்டா ரென்பது மேலே வரலாற்றியல் வழாமையுரைத்து நிறுத்தினும்; ஆண்டுக் காண்க. அற்றேல், உரை நினைவுக்கு எட்டாதான் என்று அவ்வாறு இறைவனை ஓதியதுதான் என்னையெனிற் கூறுதும். அறியாமை வழிப்பட்டுத் தன்னறிவு முனைப்பால் இறைவனை யாமறிந்து வழிபட மாட்டுவேமென்று தருக்கு வார் மனவுணர்வுக்கு ஒருவாற்றானும் புலனாதலின்றிப் பரந்துபட்ட நிறைவாம் முழுமுதன்மை யுடையனாகலின் அவ்வாறு சொல்லப்பட்டதென்க. அருள்வழிப்பட்டுச் சிவவுணர்வு முனைப்பால் அருட்கருவிகளாய்த் திரிந்த மனத்தின்கண் முதல்வன் விளங்கிய வழித் தருக்கறுந்து அசைவின்றி யின்பநுகர்ந்து கிடக்கும் மெய்யடியார்க்கு அவன்றன் திருக்கோலம் புலனாதல் ஒருதலையேயா மென் றுணர்க. எனவே, உரையுணர்வுகடந்த சிவம் நெக்கு நெக்குக் குழைந்துருகு மெய்யன்பர் திருவுள்ளத்தின்கட் புலனுமாறு பற்றி வரக்கடவதோர் இழுக்கில்லை யென்பதூஉம், இழுக்கின்றாகவே உருவத்திருமேனியிற் கொண்டு வழிபாடியற்று மன்பர்க்கு மனவொருமை யுண்டாய் இரண் டற்ற வீடுபேறு வாய்க்கு மென்பதூஉம் பெறக்கிடந்தவா றுணர்க. இது கிடக்க.

இனி உலகமியாங்கணும் பரந்துபட்டுக் கிடக்கும் மக்கட் பரப்பில் நாகரிகவுணர்ச்சி மிகப் பெற்றுடையார் முதல் அஃதில்லாமையின் விலங்கினத்தோடொப்பவைத் தெண்ணப்படும் மாக்களீறாக யார்க்கும் இறைவனுளன்

என்னும் உணர்ச்சியும், அவ்வுணர்ச்சியோடு உலகத்தின்கட் காணப்படும் பொருள்கள் வாயிலாக அவனை வழிபடுதல் வேண்டுமென்னும் மனவெழுச்சியும், திருவுருவவழிபாட்டி னின்றியமையாமைக் கடப்பாடும் இயற்கையிலேயே அமைந்துகிடக்கு முண்மை அவ்வத்தேயமாக்கள் வரலாறு களை ஒரு சிறிது உற்றுநோக்குவார்க்கும் நன்கு விளங்கும்.

நாகரிகவுணர்ச்சி யுடையராகாத மாக்களெல்லாம் தமக்குந் தம்மைச் சார்ந்தார்க்கும் அச்சம், துன்பம், நலம் முதலியன நிகழ்தற்கேதுவாகப் புறத்தே தோன்றும் உல கியற் பொருள்களையெல்லாங் கடவுளாகக்கொண்டு வழி பாடு இயற்றிவருகின்றார். ஆகவே, தமக்கு உறுதுயர் நீக்கி நலம் பயப்பதாக அவர் தாங்கருதிய புறப்பொருளையே இறைவனாக வைத்து வணங்கக் காண்டலாலே, அவர் தங் கருத்துவகையால் அவையும் இறைவன் வழிபாடாய் முடிந் திடுதற்கு ஓரிழுக்கில்லை. நாம் முதல்வரல்லோம் நம்மினும் வல்லதான பிறிதொரு பொருளையே சார்ந்து நிற்கும் அடி மைத்திற முடையோ மென்னும் உணர்ச்சி நிகழப்பெற்றுச் செய்யும் வழிபாடெல்லாம் எத்துணை யிழிந்தனவாயினும் அவ்வவர் நிலை வேறுபாட்டால் அவையும் பொருத்த முடையனவேயாம். அதுபற்றி அவை எள்ளற்பாலன வல்ல. மற்று அவ்வுணர்ச்சியின் அருமைப்பாடும் அது முறை முறையே முதிருமாறும் உலக மியாங்கணும் அஃ தொன்று தானே வேறு வேறாய் நிகழுமாறும் பிறவும் நன்றாராய்ந்து கோடல் சமயப் பொருட்பொதுமை யுணரும் வேட்கை யுடையரான மெய்யுணர் வுடையார்க்கு இன்றி யமையாத கடமையாம். அது நிற்க.

அறிவு விளங்கப்பெறாது விலங்கினத்தோடு ஒப்ப வைத் தெண்ணப்படும் அத்துணை நாகரிகமற்ற நிலையி லிருக்கும் மக்கட் பகுப்பினர் மாட்டும் சமயவுணர்ச்சி நிகழ்த்தல் அவர் தம் வரலாற்றால் இனிது விளங்குதலின், அச்சமய வுணர்ச்சிதானும் அவர்க்கு முன்னே நிகழும் அச்சங் காரணமாகத் தோன்றுவதாயிற்று. அவ்வச்சந் தானும் இடி, மழை, மின்னல் முதலான உலகியற் புறப்

பெர்ருள் விரைந்தியங்கும் இயக்கத்தானும், நோய், சாக்காடு முதலாகத் தம்மாட்டுத்தோன்றும் பீழைகளானும் அவர்க்குத் தோன்ரு நிற்கும். அவ்வச்சம் நிகழ்ந்தவழி அவர் அவ்வச்சத்தினீங்கி நலம்பெறுமாறு எங்ஙனமென்று ஆராய்வாராயினர். அங்ஙனம் ஆராய்ந்தவிடத்து விசும்பின்கண்ணே ஒரோவொருகாலத்து விரைந்தியங்கும் இடி, மழை, மின்னல் முதலிய அவையெல்லாம் மிகவல்லதான மற்ருெரு பொருளின் ஏவல் வழிநின்று இயங்குகின்றனவென்றும், அவற்றை அங்ஙனம் இயக்கும் அப்பொருள் வெறுவெளியில் நிலைதிரியாதியங்கும் ஞாயிறு திங்களையன்றி வேறு கட்புலனுக்குத் தோன்ருமையின் அவைதாம் வணங்குதற்குரிய முழுமுதற் பொருளாமென்றும் அறிவாராயினர்.

இம் முறைபற்றியே ஞாயிற்றினை வழிபடுஞ் **சௌரமதமும்**, திங்களை வழிபடுஞ் **சந்திரமதமும்** உண்டாயின. மழையினுதவியைப் பெரிது வேண்டி நிற்குந் தேயங்களினுள்ளார் மழைக்கடவுளாகிய இந்திரனையும் வணங்கிவந்தார். இங்ஙனம் வானத்தின்கண்ணே அச்ச நிகழ்த்தும் அப்பொருள்களை வழிபடுமாறுணர்ந்தபின், இந்நிலவுலகத்தின் கண்ணேயும் அங்ஙனம் அச்சம் நிகழ்த்துஞ் சிற்றுயிர்களை வணங்கத் தலைப்பட்டார். தம்மினத்தாரிற் சிலர் பாம்பு கடித் திறக்கக் கண்டு பாம்பினை வழிபடுவாராயினர். தம்முட் சிலர் தறுகணாளராய்ப் பலரை நலிந்து தலைமை செலுத்திப் பின் இறந்தொழிந்தவழி அவரையுந் தெய்வங்களாகக் கொண்டு பரசினர். தம்முள் வேறுசிலர் நல்லறிவுடையரார்ய்ப் பலர்க்கு நல்லனபலவுஞ் செய்து இறந்துபட்டவழி, அந்நல்லோரை வணங்காதொழியின் யாது நேருமோவென வெருக்கொண்டு அவரையும் வணங்குவாராயினர். இவ்வாறெல்லாம் அவர் வழிபாடு செய்தற்குக் கருத்தொருப்பட்டு அது செய்யப்புகுதுகையில் தம்மறிவும் உணர்வும் ஒருவழிப்பட்டு நில்லாது சிதர்ந்து பல தலைப்படுதலின் அவர் அதன்கண் இடர்ப்பாடு பெரிதடைவாரானர். அவ்விடர்ப்பாடு அவரறிவை நுணுகி விளங்கச் செய்தலின், அவர் தாம் வழிபடக் கருதும் பொருளினுரு

வத்தைக் கல், மரம் முதலிய பிறபொருளின்கட் செதுக்கி அவற்றை எதிர்நிறுத்தி அவற்றிற்குத் தம் வழிபடு கடன்களைச் செலுத்தத் துவங்கினர்.

அங்ஙனம் வழிபடும் போதெல்லாம் அவரறிவு முன்போற் சிதர்ந்து போகாமல் ஒருங்கி அவ்வுருவத்தின் கண்ணே சென்று பதிதலால் அவர் அவ்விக்கிரக வாராதனையின் நலப்பாடுணர்ந்து அதனைக் குறிக்கொண்டு போற்றத் தலைப்பட்டார். இங்ஙனம், எத்துணையிறப்ப இழிந்த வகுப்பினராயினும் அவர்மாட்டுந் திருவுருவ வழிபாடு காணப்படுகின்றது. இனிக் கல்வியறிவான் மிகச் சிறந்த நன்மக்களும், இயற்கையறிவாற்றன் மிக முதிர்ச்சியடைந்து விளங்கும் பெரியரும் உருவத்திரு மேனியிற் கொண்டு முதல்வனை வழிபடுவார்க் கன்றி ஏனையோர்க்கு அம் முதல்வன்பால் அறிவு ஒருங்கி அன்பு உளதாதல் ஒரு சிறிதும் செல்லாதென்னுங் கருத்துடையர். அற்றாயிற், கிறித்தவருள் ஒருசாராரும் மகமதிய மதத்தாரும் இறைவனை உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடுதல் பொருந்தாதெனக் கூறுதலென்னையெனின்; நன்று கடாயினாய், பண்டைக்காலந்தொட்டு வருஞ் சமயிகளெல்லாந் தம்மியற்கை நல்லறிவால் திருவுருவ வழிபாடு செய்து போதரக் காண்டலானும், இக்காலத்து இடையே தோன்றிய ஒரு சில சமயிகளே தஞ்செயற்கையறிவால் தாம் வேண்டியவாறு பொருளில மொழிந்து திருவுருவ வழிபாட்டை மறுத்தலானும் அதுபற்றி ஈண்டைக்காவதோர் இழுக்கில்லை யென்றொழிக. அல்லதூஉம், உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடுதல் பொருந்தாதெனக் கூறும் மற்றவர் தாமும் முதல்வனை யாங்ஙனம் வழிபட மாட்டுவாரென்று நுணுகி நோக்க வல்லார்க்கு அவருரை வஞ்சம் பொதிந்த வழுவுரையாமென்ப தினிதுவிளங்கும். திருக்கோயில்களில் அவர் விழிபொத்திக்கொண்டு விசும்பு நோக்கி நிற்ப, அவர் உள்ளம் அவர் வழிப்படாமற் காடுங் கரையும் அலைந்து திரியும்; அல்லதவர் இறைவன் மாட்டு மெய்யன்புடையராயின் அவருள்ளந் தன்கண் அவ்விறை

வர்க்கு ஓருருவத்தை எழுப்பி அவரறிவினை அதன்கட் பதித்துவிடும். கண்ணறிவிற்குப் புலனும் வடிவத்தை வழி படுதற்கு அவர் உடம்படுகிலராயினும், உள்ள வறிவின்கட் புலனும் ஓருருவத்தை அவர் யாங்ஙனம் நீக்கவல்லார்? உள்ள வறிவின்கண்ணும் அவ்வுருவம் புலனுகாமல் நீக்கி வைத்து வழிபட வல்லேமென்பாராயின், அவர் செய்யும் அவ்வழிபாடு தம் பெண்டிரை நோக்கிச் செய்யும் வழி பாடாம், தம் புதல்வரை நோக்கிச் செய்யும் வழிபாடாம், தம் நண்பரை நோக்கிச் செய்யும் வழிபாடாம், மற்றுஞ் சிலரை நோக்கிச் செய்யும் வழிபாடாம்; அவர் அங்ஙனஞ் செய்யும் வழிபாடு இறைவனை நோக்கிச் செய்ததாகமாட்டாது. உயிர்களின் உள்ளவறிவு சார்ந்த பொருளின் வண்ணமாய் வீறி விளங்குதலன்றி, தான் அவற்றின் வேருய்ப் பிரிந்து விளங்கு மியல்பினதன்று. மனநூற்புலமை கைவந்தோரும் உள்ளத்தினியற்கை அவ்வாருதல் இனிது விளங்க விரித்துக்காட்டுவர். ஐம்பொறிகளுக்குப் புலனுகாத பொருள் மனத்தின்கட் புலப்படுமாறில்லை. கட்புலனுய் விளங்கும் ஓருருவத்தைப்பற்றி நின்று நினையாதொழியின், அம்மனம் வேறு பிறவுருவங்களைப்பற்றிக்கொண்டு அவர்க் குக் கடவுளுணர்வு வரவொட்டாமல் தடை செய்தல் ஒருதலை. இப்பெற்றியெல்லாம் மேலே விரித்துக் காட்டினும். பின்னும் விரிப்பிற் பெருகுமாதலின் இத்துணையினமை கின்ரும். ஈண்டுக் காட்டியவாற்ருல் இறைவனை உருவத் திருமேனியிற் கொண்டு வழிபடும் முறையேதான் அறிவின் நுட்பத்திற்கும், மக்கள் மனவியற்கைக்கும் மிக இயைந் ததாமென்பது பெறப்படுதலின், அருவமாக இறைவனை வழிபடற்பாற்றென்று வாளாது வழக்கிடுவார் போலி யுரைகள் பொருட்பேறிலவா யொழியுமென்றுணர்க.

இனிப் பிரமசமாசத்தாரில் ஒரு சாரார் ஆரிய வேதோபநிடத நூல்களை மேற்கோளாகக் கொண்டு, அவற்றின்கட் டிருவுருவ வழிபாடு சொல்லப்படாமையின் அந்நூல்வழிநின் ரொழுகுவார்க்கு விக்கிரகாராதனை செய் தன் முறையாகாதென்று கூறுகின்ருர். உலகியற் பொருள்

களில் வெள்ளிடை மலைபோல் விளங்கித் தோன்றும் ஞாயிறு திங்கள் தீ முதலியவற்றின் வழிபாடு இருக்கு வேதம் எங்கணும் இனிது காணக்கிடத்தலானும், இருக்கு வேத விறுதிப் புருடசூத்த மந்திரவுரையின்கண்ணே இறைவனுக்கு உறுப்பின் பாகுபாடுகள் நன்றெடுத்துச் சொல்லப்பட்டமையானும், மிகப் பழைய கேனுேப நிடதத்தில் முதல்வன் இயக்கவுருவந் தாங்கித் தோன்றித் தேவர்க்கு அருள்செய்த வரலாறு விரித்துக் காட்டப் படுதலானும், பின்னெழுந்த கைவல்லியம், அதர்வசிகை முதலிய வுபநிடதங்களினும் "உமாசகாயம் பரமேசுவரந் திரிலோசனம் நீலகண்டம்" முதலிய உருவத் திருவடையாளங்கள் கிளந்தெடுத்து மொழிந்திடப் பட்டமையானும், புறத்தே தோன்றும் உலகத்திற்கு நெஞ்சத் தாமரையாக விளங்குந் தில்லையம்பலத்திலே திருக்கூத்தியற்றும் முதல்வனை வழிபடுமாறு போல அகத்தே இவ்வுடம்பினுள் உள்ளத் தாமரையிலுள்ள அருள்வெளியிலே திருக்கூத்தியற்றும் இன்பக்கூத்தனையறிந்து வழிபடுமாறு கூறுந் தகரவித்தையினியல்பு சாந்தோக்கிய முதலான பழைய உபநிடதங்களில் வகுத்துக் கூறப்படுதலானும், யோகநூல் செய்த பதஞ்சலி பகவானும் பிரத்தியாகாரந் தாரணை முதலான யோகப் பயிற்சியினெல்லாம் இறைவனைக் குறிகளானறிந்து வழிபட்டு உள்ளத்தை ஒருமை யுறுத்துக வென்று கட்டளை தருதலானும், மக்களின் அளவை யுணர்வைப் பாகுபடுத்துக் கூறிய நியாயம் வைசேடிகம் முதலான நூலுடையார்க்கும் அஃதொப்ப முடிந்தமையானும், வேதாந்த நூல்செய்த வாதராயணரெனப்படும் வியாச முனிவருந் தமது பிரமமீமாஞ்சையின் முதலத்தியாயம் இரண்டாம் பாதம் "குஹாம் ப்ரவிஷ்டா வாத்மா நௌஹி தத்தர்சநாத்" என்னும் கக-ஆஞ் சூத்திரத்தானே இதய குகையின்கண் இறைவனை வழிபடுந் தகரோபாசனை எடுத்து மொழிதலானும், வேதோபப் பிருங்கணங்களான பதினெண் புராணங்களினும் சிவரகசியம் பாரதம் இராமாயண முதலான இதிகாசங்களினும் முதல்வனருட்குறி நிறுத்த திருக்கோயில் வழிபாடு காணப் படுதலானும், தேவரும் முனிவரும் இறைவனுடைய அரு

ளுருவத் திருமேனியை வழிபட்டு ஆங்காங்கு நிலைநிறுத்திய திருக்கோயில்கள் இந்நாவலந்தீவு யாங்கணும் பரந்துபட்டுக் கிடத்தலானும், அத்திருக்கோயில் வழிபாடு தானும் பிற்காலத்தன்றிப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னதான பண்டைக்காலந்தொட்டே நடைபெற்று வருதலானும், பார்ப்பனர் நாடோறும் உருச்செய்து போதருங் காயத்திரி மந்திரவுறையுளிற் பொன்னுருவனை இறைவன் பர்க்கனென்னுந் திருப்பெயரோடு கூடிவிளங்கலானும், திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலான அருட்குரவரும் முதல்வன தருளுருவத்திருமேனி வழிபாட்டிற் றலைநின்றமை எல்லாரானும் அறியப்படுதலின் அஃதான்றோர் ஒழுகலாறாய் நிலையுதலானும், பிறவாற்றானும் அங்ஙனங் கூறும் பிரமசமாசத்தாருரை பொய்படு போலியுரையாதல் தெளியப்படுதலின் அவர் ஆரவார வுரைபற்றி மயங்குவார் ஈண்டு யாருமிலர்.

என்று இதுகாறும் விரித்தவுரையால் இந்நாவலந்தீவின்கணுள்ள நன்மக்கள் இறைவன தருளுருவத்திருமேனியிற் செய்து போதரும் வழிபாடு அருளுருவவழிபாடாவதன்றி விக்கிரகவாராதனையாதல் ஒரு சிறிதுஞ் செல்லாதா மென்பதூஉம், திருவுருவத்தின்கட் செய்யும் வழிபாடுபற்றி இறைவனது முழுமுதற் பரப்பாம் இறைமைத் தன்மைக்கு வரக்கடவதோ ரிழுக்கில்லை யென்பதூஉம், அருவமாக இறைவனை நினைக்க வல்லே மென்பாருரை மக்கள் மன வியற்கைக்குத் தினைத்துணையுமியைதல் செல்லாமையால் அது வெறுஞ் சொல்லளவாகவே முடிவதல்லது பொருணிறைந்த தாகாதென்பதூஉம், உலகத்தின்கண் நாகரிகமில்லாத மக்களுள்ளும் உருவவழிபாடே காணக்கிடத்தலின் அவ்வியற்கைக்கு வேறாக மொழிதல் முரண்பாடா மென்பதூஉம், வடமொழி நூல்களினும் அருளுருவ வழிபாடே கூறப்படுதலின் அதனொடு திறம்பியுரைப்பாருரை வழூக்குரையாமென்பதூஉங் காட்டப்பட்டனவென்க.

சிவலிங்க உண்மை

" விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
விந்துவதே பீடம் நாதம் இலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்த கருவைந்துஞ் செய்யும் அவைஐந்தே."

—திருமூலர் திருமந்திரம்

சிவலிங்கம் எனப்படுந் திருவுருவ அடையாளத்தின்கண் வைத்து ஆன்ருேர் அறிவுறுத்திய அரும்பெரு மெய்ப் பொருள்களை யாம் ஆராயப்புகுதலின், இவ் விரிவுரை 'சிவ லிங்க உண்மை' எனப் பெயர் பெறுவதாயிற்று. 'சிவம்' என்பது முழுமுதற் கடவுளை யுணர்த்துஞ் சிறப்புப் பெய ராகும்; 'லிங்கம்' என்பது அக்கடவுளின் உண்மைத்தன் மையை அறிவிக்குங் குறி அல்லது அடையாளத்தைக் காட்டுவதாகும். ஊரும் பேரும் இல்லாக் கடவுளுக்குச் 'சிவம்' என்பதனைச் சிறப்புப் பெயராகக் கூறுதல் என்னை யெனின்; இறைவன் தன் நிலையிலே ஊரும் பேரும் இல்லா ஞயினும், எல்லா உலகங்களிலும் எல்லாப் பொருள்களி லும், எல்லா உயிர்களிலும் ஊடுருவி நிற்பானுன அவன் றன் பெரும் பரப்பினை அறிந்துகொள்ளுதற்கேற்ற பேரறிவு வாயாமல், ஒவ்வோர் இடத்தின் எல்லையிலும் ஒவ்வொரு காலத்தின் எல்லையிலும் இருக்குஞ் சிறு சிறு பருப் பொருள்களையும் அப்பருப்பொருள்களி னூடு புலனுகும். உயிர்ப் பொருள்களையுமே அறிதற்கேற்ற சிற்றறிவுவாய்ந்த மக்களாகிய நாம் அம் முதல்வன் இயல்பினை எளிதின் உணர்ந்து, அதனை நம் நினைவில் இடையருது பதித்து. அவ்வாற்ருல் நமதுயிரைத் தூய்தாக்குதற்குக் கருவி யாகவே அவன்றன் உண்மைத் தன்மையினை நன்குணர்த் துஞ் 'சிவம்' என்னுஞ் சொல்லை அவற்குச் சிறந்த பெய ராக இட்டு அதனைப் பண்டைக்காலந்தொட்டு ஆன்ருேர் வழங்கிவரலானுர்கள். இவ்வியல்பினை உணர்த்துதற்கே மாணிக்கவாசகப் பெருமானுந்,

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும்இலாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ."

என்று அருளிச் செய்தனர். ஆகவே, இறைவனுக்கு ஒரு பெயரிட்டு வழங்குவது மக்களாகிய நாம் அவனை நினைந்து அவன் வயமாதற் பொருட்டே யல்லாமல், அவன் அப்பெயருடையனாய் இருப்பதுபற்றி யன்றெனை உணர்தல் வேண்டும்.

அற்றேல், எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான 'கடவுள்,' 'இறைவன்,' 'முதல்வன்' முதலான சொற்களிருக்க அவற்றால் அவனை வழங்காமல், அவன் சைவ சமயம் ஒன்றற்கே யுரியான்போல் வைத்து அவனைச் 'சிவன்' என்னும் பெயரால் அழைத்தல் என்னை யெனிற்; 'கடவுள்' என்னுஞ்சொல் எப்பொருளையுங் கடந்தோன்' என அவன்றன் எட்டா நிலைமையினையும், 'இறைவன்' எனுஞ்சொல்' எப்பொருளிலுந் தங்குபவன்' என அவன்றன் எங்குமுள்ள நிலைமையினையும், 'முதல்வன்' எனுஞ் சொல் அவன் எதற்கும் முற்பட்டவனாய் நிற்கும் அவன்றன் முதன்மையினையும் அறிவித்தல்போலச், 'சிவன்' எனுஞ் சொல்லும் அவன் ஏனை எப்பொருளிலும் இல்லாத பேரின்பத்திற்கு உறையுளாய் உள்ளவனென்பதனை அறிவிப்பதொன்றாம். சிற்றுயிர்களாகிய நாம் அவன்றன் எட்டா நிலைமையினையும் எங்குமுள்ள நிலைமையினையும் எல்லாவற்றுக்கும் முற்பட்ட முதன்மையினையும் உணர்தலாற் பெறும்பயன் சிறிதுமின்றாம். நாம் தொன்று தொட்டு அறியாமையிற் கிடந்து துன்புற்று வருதலின், அறியாமையைக் களைதற்கு அறிவும், அவ் அறியாமையின் வாயிலாக வருந் துன்பத்தைக் களைதற்கு இன்பமுமே இன்றியமையாது வேண்டி நிற்கின்றோம். நாம் பிறவி யெடுத்ததன் நோக்கமெல்லாம் பேரின்பத்தைப் பெறுதற் பொருட்டாகவேயாம். அப் பேரின்பத்தை முன்னறிவிக்குங் கருவியாகவே இவ்வுலக வாழ்க்கையின் இடை

யிடையே சிற்றின்ப நுகர்ச்சியானது நடைபெறுகின்றது. குடங்குடமாகக் கொணர்ந்து நிறைத்திருக்குந் தீம்பாலினையும், குப்பி குப்பியாக நிரப்பி வைத்திருக்குந் தேனினையும், குடலை குடலையாகத் தொகுத்துச் சேர்த்திருக்குந் தேமாங்கனியினையுந் தான் வேண்டியவாறு நுகருதற்கேற்ற பரிசாய்த்தானிருக்கும் இல்லத்திலேயே ஒருவன் எளிதாகப் பெற்றிருந்தும், அவற்றின் சுவையினையும் உண்டால் அவை தனது கொடும் பசிதீர்த்துத் தன் உடம்பினைக் கொழுமையாக வளரச் செய்தலையும் உணராத மடவோன் ஒருவன் அவை தனக்குத் தீதுபயப்பதென அஞ்சி அவற்றை உட்கொள்ளானுய்ப் பசித்து வருந்தியிருப்ப, அவனைக் கண்டு இரங்கிய அருளுடையான் ஓர் அறிஞன் அவன்பாற் போந்து அவற்றின் சுவையினையும் பயனையும் அவனுக்கு எடுத்துக்காட்டி அறிவு தெருட்டி, அவை ஒவ்வொன்றிலுஞ் சிறிது சிறிதெடுத்து அவன் வாயினுட் பெய்து, அவ்வாற்றால் அவன் அவற்றின் இனிமை கண்டு அவை தம்மை யுண்டு களைதீருமாறு செய்தாற்போல. எல்லாம்வல்ல இறைவனுந் தன்பாலுள்ள பேரின்பக் கொழுந்தேறல் வெள்ளத்திற் சிற்றுயிர்களாகிய யாம் படிந்துகிடந்தும் எம்மைப் பொதிந்த ஆணவ வல்லிருளால் அறிவுமாழ்கி அவ் இன்பத்தினியல்பினை உணராது துன்புற்றிருக்க, அது கண்டு எமக்கு இரங்கி இவ்வுடம்பையும் இவ் வுடம்பின்கட் பல வியத்தகு கருவிகளையும் அமைத்து அவ்வாற்றால் யாம் அவ் வின்பத்தின் றன்மையினைச் சிறிது சிறிதே தம் மாட்டுத் தோற்றுவிக்கும் இவ்வுலகத்துப் பல் பண்டங்களையும் நுகர்ந்து நுகர்ந்து, 'இப்பருப் பொருள்களினூடே புலனுகி எம் அறிவைத் தன் வயப்படுத்திச் சிறிது நேரத்தில் மறைந்துவிடும் இச் சிற்றின்பமே இத்துணை விழுமிதாயின், எல்லையற்ற நுண்ணறிவுப் பொருளாய் விளங்கும் ஆண்டவன்பால் என்றும் அழியாதாய் விரிந்து விளங்கா நின்ற பேரின்பச் சுவை எத்துணை விழுமிதாம்!' என உணர்ந்து அதனையே யாம் நாடுமாறு இவ்வுலகத்து இன்ப நுகர்ச்சியை அதற்கொரு சிறந்த கருவியாய் அமைத்திருக்கின்றனனென்று

உணர்ந்து கொள்ளல்வேண்டும். இப் பேரின்பப் பெருந் தேன் வெள்ளமானது எங்கும் பெருக்கெடுத்துக் கிடந்தும் அதனைச் சிற்றுயிர்கள் தம தறியாமையால் உணராமை கண்டன்றோ,

"காகம் உறவு கலந்துண்ணக்
 கண்டீர் அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம்
 பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வெளியாய்க் கிடக்குதையோ!
 இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கே
 சேர வாருஞ் செகத்தீரே!"

என்று தாயுமான அடிகளும் நம்மனோரை யெல்லாம் பரிந்தழைப்பாராயினர்! ஆகவே, என்றும் அழியாப் பேரின் பப்பேற்றை எய்துதலில் மக்கட் பிறப்பினரெல்லாரும் இயற்கையாகவே பெருவிழைவு கொண்டவரென்பது, அவ் வின்பத்தை முன்னறிவித்தற் கருவியாய்த் தோன்றுஞ் சிற்றின்ப நுகர்ச்சியில் அவர்க்கிருக்கும் ஆராவேட்கையே சான்றுமாகலானும், சிற்றின்ப நுகர்ச்சிக்கு ஏதுவான உலகத்துப் பொருள்களெல்லாம் நிலையுதலின்றி அழிய அச் சிற்றின்பமும் அவற்றோடு உடன் அழிதலின் அழிவிலாப் பேரின்பமானது இவ் வுலகியற் பொருள்களிற் பெறப்படுவ தன்றாய்த் தன்போல் அழிவிலா முதல்வனிடத்து மட்டுமே பெற்று நுகரற்பாலதா மாகலானும் அவ் வின்பத்தையும் அவ் வின்பத்திற்குக் கொள்கலனான முதல்வனையும் இடை யறாது நினைவிற் கொண்டு வருதலே அப்பேரின்பப்பேற்றி னுக்குச் சிறந்த வழியாமாகலானும், அந்நினைவினை அங் ஙனம் எளிதிற் றோற்றுவிப்பதற்கு அவ்வின்பத்தை உணர்த்துஞ் சொல்லொன்று இன்றியமையாது வேண்டப் படுமாகலானும் பேரின்ப உறையுளாய்த் திகழாநின்ற முதல்வனுக்குச் 'சிவன்' என்பதே உறுபெருஞ் சிறப்புப் பெயராக ஆன்றோரால் எடுக்கப்படுவதாயிற்று. 'சிவன்' எனுஞ்சொல் 'இன்பத்தை யுடையவன்' எனப் பொருடந்து

முழுமுதற் கடவுளின் உண்மைத் தன்மையினை யறிவித்து ஆருயிர்களுக்குப் பெரிது பயன்படுவதொன்றாய் இருத்தலின், அவ் வுயிர்களுக்குப் பயன்படாத எட்டா நிலைமையினை யுணர்த்துங் 'கடவுள்' எனுஞ் சொல்லினுஞ் 'சிவன்' எனுஞ் சொல்லே சாலச் சிறந்த பெருமாட்சி யுடைத்தாமென்பது. இதனைச் 'சைவ சமய மாட்சி' என்னும் விரிவுரையில் விரித்து விளக்கியிருக்கின்றேமாகலின், இவ்வளவில் இச் 'சிவம்' எனுஞ் சொற்சிறப்புக் கூறுதலை நிறுத்தி மேற் செல்வாம்.

இனி, இங்ஙனம் பேரின்ப நிலையனாய் நிற்கும் இறைவனைச் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையராகிய மக்கள் தாமாகவே அறியப்புகுந்தால், அவர் அவனைச் சிறிதும் அறியமாட்டுவாரல்லர். அங்ஙனம் அறியப்படாத ஐயனை அறியாதுவிடின் அவர் தாமே தம் அறியாமையினையுந் துன்பத்தினையும் நீக்கிக்கொண்டு பேரின்பத்தைப் பெறமாட்டுவாரும் அல்லர். ஈன்றணிய குழவி பசியெடுத்த போதெல்லாம் வீறிட்டழுது துன்புறுமேயல்லாது, தன் அன்னையின் முலையைக் கௌவிப் பால்பருகித் தன் கொடும் பசி தீர்த்துக் கொள்ளுதலை அறியாது; மற்று அதன் மாட்டா நிலைமையினை யுணர்ந்த அன்னையே அதன் பசித் துன்பங் கண்டு பொறுளாய் நெஞ்சங் குழைந்து அதனையெடுத்துத்தன் மார்போடணைத்துத் தன் முலைக்காம்பையும் அதன்வாயினுட் புகுத்தி, அவ்வாற்றால் அம்மதலை ஆண்டு நிறைந்த பாலைப்பருகிப் பசிதீர்ந்து களிக்கச் செய்கின்றாள். இந்நிகழ்ச்சியைப் போலவே, அறியாமையிற் கிடந்து துன்புறும் இளங்குழவிகளாகிய நாம் எல்லாம்வல்ல இறைவனாகிய அன்னையிடத்துத் தேங்கி நிற்கும் பேரின்ப அமிழ்தத்தை நுகரும் வகையறியாமல் துயருறல் கண்டு எம் ஐயனே எமக்கு மிக இரங்கி எல்லையற்ற தனது அருளுருவினை யாம் உணர்தற்கு எளிதாம்படி ஓர் எல்லையுள் அடக்கிக் காட்டி எமக்கு அப்பேரின்ப அமிழ்தை ஊட்டும் அருள் நிலையனாய் நிற்கின்றான். இவ் வுண்மையினையே மாணிக்கவாசகப் பெருமான்,

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே."

என்று அருளிச் செய்தனர். இவ்வாறு தாயினுஞ் சிறந்த எளிமையனாய் இறைவன் எம்மனோர்க்கு அணித்தாய் நின்று அருள்செய்யும் இயல்பினை நம் சைவசமய ஆசிரியன்மார் தெளியக்கண் டுரைத்தாற்போல, வேறெந்தச் சமய ஆசிரியரும் உரைப்பக் காண்கிலம். இத்தகைய அருட்டன்மை யுடையனல்லனாயிற் கடவுளை நம்மனோர் வாழ்த்துதலும் வணங்குதலும் பயமிலவாகும். இறைவன் தன் னியற்கையிலேயே அருட்டன்மை வாய்ந்தவனாய், அவ் வருட்டன்மையால் உந்தப்பட்டே எல்லார்க்கும் அண்ணியனாய்த் தனது பேரின்பத்தை வழங்குதற்கு முன்னிற்றலினாலேதான், தமது உள்ளத்தே அவ்அருள்முனைப்பினால் உணர்வு எழுப்பப்பட்டு எல்லாரும் இறைவனைப் பண்டு தொட்டே வணங்குதலும் வாழ்த்துதலுஞ் செய்து போதருகின்றார். கடவுளை எட்டா நிலைமைக்கண் வைத்துரைத்தலே சிறந்ததெனக் கொள்ளுங் கொள்கையுடைய ஏனைச் சமயத்தவர்கள், அவன் நமக்கு அணுக்கனாய் வந்து அருள் செய்யும் அருட் பெருந் தன்மையன் என்பதைச் சிறிதும் அறியாதவர்களா யிருக்கின்றாரென்று உணர்மின்கள்! இறைவன் சிற்றுயிர்களுக்குச் சேயனாயினும் அவர்கட்குத் தனது பேரின்பத்தை வழங்க வேண்டுமென்னும் பேரிரக்கமும் ஒருங்குடையனாகலின் அவன் அவர்கட்கு அண்ணியனுமாய்த் தான் வேண்டியவாறெல்லாம் இயங்கவல்லனென்பதை உணராத சமயத்தவர் இறைவன்றன் உண்மைத் தன்மையையும் அவன்றன் அளவிலாற்றலையும் உணர்ந்தாராவரோ சொன்மின்கள்!

அற்றாயினும், எல்லாம்வல்ல கடவுள் சிற்றறிவினராகிய நம்மனோரறிவுக்குப் புலனாகா நிலையிலேயே நிற்கக் காண்டுமன்றி, நம்மனோரறிவுக்குங் காட்சிக்கும் எளிதிற் புலனாவதொரு நிலையில் நிற்றலைக் காண்கிலமாலெனிற், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவார் போலவுங், கொழுஞ்சுவை நீர்ததும்பு குளக்கரையிலிருந்தும் விடாய்த்து வருந்துங் குருடன் போலவும், நம்மனோர் தமக்கு அண்மையிலே கடவுளைக் கட்புலனாற் காணும் பெரும்பேறுடையரா யிருந்தும் அவனைக் காணாதார்போல் ஏக்கமடைந்திருக்கின்றனர்! ஈன்றணிய குழவி வளர்ந்து தன்னிலையைத் தான் உணரும்வரையில் அதனைப் பெற்ற தாய் தந்தையர் அதன் பக்கத்தே யிருந்து அதற்கு அவ்வுணர்வினை எழச்செய்தாலன்றி, அஃது அவ்வுணர்வு கைகூடப் பெறாதவாறு போல, அறியாமையிலழுந்தி அறிவின்றிக் கிடக்கும் நம்மனோர்க்கும் நம் ஆண்டவன் அருகேயிருந்து அறிவு துலக்கினாலன்றி நாமும் அறிவு கைகூடப் பெறுதல் ஒருவாற்றானும் இயலாது. குழந்தை வளர்ந்து அறிவு பெற்றபின் அப்பிள்ளைக்காயினுந் தாய் தந்தையருதவி வேண்டப்படுவ தின்றாய் ஒழிகின்றது; தாய்தந்தையருஞ் சில காலத்தில் இல்லையாய் ஒழிகின்றனர்; ஆனால், அறியாமையிற் கிடக்கும் உயிர்களுக்கோ அவை அவ்வாறு அறிவின்றிக் கிடக்கும் அக்காலத்தும், அவை அறிவு பெறும் பிற்காலத்தும், அறிவு பெற்ற மற்றைக்காலத்தும் அவை தம்மை ஓரிமைப்பொழுதும் பிரியாதுடனிருந்து அறிவு தெருட்டி இன்பத்தை யருத்துபவனாய் இறைவன் எஞ்ஞான்றும் அவ்வுயிர்கட்கு அண்ணியனாகவே விளங்கி நிற்கின்றான். அங்ஙனம் நமக்கு எளியனாய் அண்மையில் நிற்கும் ஆண்டவனை ஆராய்ந்து அறியாக்குறை நம்மனோர்பால் உளதேயன்றி, நமக்கு அரியனாய் நிற்குங் குறைபாடு அவன்பாற் சிறிதுமில்லை.

அற்றேல், அத்துணை யெளியனாய நம்மனோர்க்கு அருகில் நிற்கும் ஆண்டவனை நாம் அறிந்துகொள்ளுமாறு யாங்ஙன மெனிற் காட்டுதும்: எல்லாம்வல்ல இறைவ

ணியல்புகளை ஆராய்ந்து பார்த்து, அவ்வியல்புகள் அவ்வளவும் நமக்குப் புலனுகும் பொருள்களில் எதன்கண் எவ்விடத்து அமைந்து காணப்படுகின்றன என்பதைத் தெளிய அறிவோமாயின், அதன்கண் அவ்விடத்து இறைவன் நமக்கு நேர்நிற்றலையும் நாம் தெளிந்து கொள்ளுதல் இயலும். காற்றைக் கண்ணுற் பாராதவன் அஃது எம்முகமாய் வீசுகின்றதென அதனியல்பை ஆராய்ந்து அஃது இயங்கும் இடத்தை யறிதல் காண்டுமன்றே? நறுவிய செங்கழுநீர் மலரைக் காணுதவன் அதன் மணம் வந்து கமழும் வழியை யாராய்ந்துகொண்டு சென்று அதனைக் கண்டு மகிழ்தலும் அறிது மன்றே? இங்ஙனமே கடவுளியல்புகள் எதன்கண் எவ்விடத்தே புலனுகின்றன வென்று ஆராய்ந்தறிந்தால் அவ்வியல்புகள் வாய்ந்த முதல்வனை நேரே காண்டலும் எளிதிற் கைகூடுமென்று தேர்தல் வேண்டும்.

இனிக், கடவுளோ அளக்கலாகாப் பேரறிவொளி வடிவாய்த் திகழ்பவர்; அவரது அவ்வறிவொளிக்கு முன்னே அறியாமை யென்னும் இருள் இருந்த இடமுந் தெரியாமல் மறைந்துவிடும். அவர் மிகவுந் தூய்மை யுடையவர்; அவர்பால் உள்ள அத்தூய்மையானது எவ்வெவ்விடங்களிற் புலப்பட்டுத் தோன்றுமோ அவ்வவ்விடங்களிலுள்ள பொருள்களின் அழுக்குங் கறையும் எவ்வளவு மிகுந்திருப்பினும் அவை தம்மை யெல்லாம் அஃது எரித்துத் தூய்மை செய்யுமே யல்லாமல், தான் அவ்வழுக்குகளாற் பற்றப்பட்டுத் தன் தூய்மையினை ஒரு சிறிதும் இழவாது. கடவுள் எப்பொருளையுந் தாமே படைப்பவர், படைத்தவற்றைத் தாமே காப்பவர், காக்கப்பட்டவை வலிதேய்ந்து பழுதுபட்ட வழி அவற்றைத் தாமாகவே அழிப்பவர். அழித்தற்றொழிலைச் செய்யுங்காற் கடவுள் கொடியவர்போற் றோன்றினும், அவரே எப்பொருளையும் படைத்துக் காத்தலால், அருள் என்னுங் குளிர்ந்த இனிய தன்மையை அவர் என்றுந் தம் அகத்தே யுடையரென்று முணர்தல்வேண்டும். கடவுள் எல்லா

உலகங்களிலும் எல்லா உயிர்களிலும் நிறைந்து நிற்குந் தமது பொதுவிலக்கணத்திற் கட்புலனாகா அருவினராயும், அன்பினால் நெக்குநெக்கு உருகுந் தம் அடியவர்க்கு அவர் தம் ஆரா அன்பிற்கு ஆறுதல் பிறப்பித்தற் பொருட்டு அவரை யொப்பதொரு மக்கள் வடிவிற்றோன்றி அருள் புரியும் நீரராகலிற் கட்புலனாகும் உருவினராயும், அத்துணை அன்பு வாயாத நம்போன்ற ஏனையுயிர்கள் உய்தற்பொருட்டுச் சிறிதும் புலப்படாத அருவுக்குந் தெளியப் புலப்பட்ட உருவுக்கும் இடைப்பட்ட பிழம்பு வடிவில் துலங்குபவராகலின் அருவுருவினராயும் இருப்பர். இனி, இவ்வுலகத்திற் காணப்படும் உயிர்ப்பொருள்களெல்லாம் ஆண் பெண் என்னும் இருபெரும் பகுப்பில் அடங்கக் காண்டலின், இவ்வுயிர்களின் தோற்றத்திற்கு முதலாய் நிற்குங் கடவுளும் அப்பனும் அம்மையுமாம் இருதிறமும் ஒருதிறத் தடங்கக் கொண்டு நிற்பர். இனி, உயிரில்லாத ஏனைப் பருப்பொருள் நுண்பொருள்களெல்லாஞ் சூடுங் குளிர்ச்சியும் ஆகிய இருவகை யாற்றல்களிலுஞ், சிவப்பும் நீலமும் ஆகிய இருவகை நிறங்களிலும் அடங்கக் காண்டலின் இவை தமக்கு முதல்வரான கடவுளும் வெப்ப தட்பங்களுஞ் செம்மை நீலங்களும் உடையராவர்.

இனி, இவ்வியல்புகளையுடைய முழுமுதற்கடவுள் எதன்கண் எவ்விடத்தே நமக்கு அணுக்கராய் விளங்கி நிற்கின்றாரென்பதை நாம் அறிந்துகொள்ளல் வேண்டுமாயின், நம்மால் அறியப்படும் உலகத்துப் பொருள்களுள் எதன்கண் எவ்விடத்தே அவர்தம் இயல்புகள் அத்துணையும் புலனாகின்றன வென்பதை நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். நம்முடைய அறிவினால் அறியப்படும்பொருளகளெல்லாம் நிலன், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்னும் ஐந்து பெரும் பகுப்பில் அடங்கி நிற்கின்றன. இவற்றுள் அடங்காத உயிர்ப் பொருள்களையும், அவற்றின் தன்மைகளையுங்கூட இவ்வைம்பெரும் பொருள்களின் வாயிலாகவும் இவ்வைம்பெரும் பொருட்கலப்பாற் றோன்றும் பல்வேறுடம்புகளின் வாயிலாகவுமே அறியப் பெறுகின்றோம்.

ஆகையால், இவ் வைம்பெரும் பொருள்களில் எதன் கண்ணே கடவுளுக்குரிய தன்மைகள் காணப்படுகின்றன வென்று ஆராய்ந்து பார்ப்போமாக.

முதலில் நிலத்தின் றன்மை நீரின் றன்மைகளை ஆராய்வம். கடவுள் ஒளிவடிவினராய்த் திகழாநிற்க, நிலனும் நீரும் ஒளிவடிவினவாய்த் திகழக்காணேம். கடவுள் என்றுந் தூயராயிருக்க, நிலனும் நீருந் தூய்மை கெட்டு அழுக்குற்று நிற்கவுங் காண்கின்றேம். கடவுள் அருவும் உருவும் அருவுருவும் என்னும் மூன்று தன்மையிலும் நிற்பவராக, நிலனும் நீரும் பற்றுதற்கு எளிய உருவாகவே நிற்கின்றன. கடவுள் ஆண்டன்மை பெண்டன்மைகள் ஒருங்குடையரா யிருக்க, நிலம் அத்தன்மைகள் இலவாயும் நீர் பெண் டன்மை யொன்றே யுளதாயும் நிற்பக் காண்டும். கடவுள் வெப்ப தட்பங்களுஞ் செம்மை நீலங்களும் உடையரா யிருக்க, நிலந் தன்னியற்கையாகவே அவை தம்மையுடைய தன்றாயும் நீர் தட்பமும் நீலமுமே யுடையதாயுங் காணப்படுகின்றன. இனி, வானுங் காற்று மென்னும் இரண்டிலாதல் இறைவனுக்குரிய இவ் வியல்புகள் அமைந்து கிடக்கின்றனவோ வென்று உற்றுநோக்குவேமாயின், அவையும் ஒளியும் உருவும் வெப்ப தட்பங்களும் பிறவும் இல்லாதனவா யிருக்கின்றன. காற்றின்கட் புலனாகும் வெப்ப தட்பங்கள் தீ நீர் என்பவற்றின் சேர்க்கையால் உண்டாவனவேயன்றி, அவை தமக்கு இயற்கையிலேயே உரியன அல்ல. ஐம்பெரும் பொருள்களுள் நாற்பெரும் பொருள்களின் றன்மை இவ்வாறொழியவே, எஞ்சிநின்ற தீயின் றன்மைகளே இனி ஆராயற்பாலனவாகும்.

எல்லாம்வல்ல இறைவன் அருள் ஒளி வடிவினனாய்த் திகழ்தல்போலவே தீயும் பொருளொளி வடிவினதாய்த் திகழா நிற்கின்றது. இறைவன்றன் அருளொளிக்கு முன் ஆணவ வல்லிருள் இருந்த இடமுந் தெரியாமல் மறைதல் போலவே, தீயொளிக்கு முன்னும் உலகிருள் சுவடு தெரியாமல் மறைந்து போகின்றது. இறைவனிடத்துள்ள தூய தன்மையானது எத்தகைய அழுக்கையுந் தூய்தாக்கித்

தானும் எஞ்ஞான்றுந் தூய இயல்பிற்றாய் விளங்குதல் போலவே, தீயும் எத்துணைப் பெரிய அழுக்கின் குவியலையும் எரித்துத் தூயசாம்பராக்கித் தானும் எந்நாளும் தூயதாகவே விளங்கா நிற்கின்றது. இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்தல் போலவே, கதிரவனாகிய தீயின்வெம்மையும் எல்லா உயிர்ப் பொருள்களையுந் தோற்றுவித்து அவற்றைச் சில காலம் வரையிற் காத்து அவற்றின் உடம்புகள் வலிதேய்ந்து பழுதுபட்டவழி அவை தம்மை அழித்துவிடுகின்றது. மரஞ் செடி கொடிகளும், மற்றை இயங்கும் உயிர்களும், அவை தம்முட் சிறந்த மக்களுமாகிய எல்லா உயிரின் உடம்புகளிலும் ஓரளவான சூடு இல்லையாயின் அவை தோன்றவேமாட்டா; இதனாலன்றோ காக்கை கோழி முதலான பறவைஇனங்கள் தாம் இட்ட முட்டைகளிலிருந்து குஞ்சுகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு அவற்றின்மேல் அடைகிடந்து அவற்றிற்குச் சூடேற்றுகின்றன. அங்ஙனமே, தாயின் கருப்பையில் ஓடுஞ் சூடான செந்நீரால் உருவாக்கப்பட்டு மக்களாகிய நாமும் இந்நிலவுலகத்திற் பிறந்தனம்: பிறந்த பின்னும் நமதுடம்பிலுள்ள சூடு தன்னிலையினின்று ஏறாமலும் இறங்காமலும் இருக்கும்வரையில் நாம் அதனாற் பாதுகாக்கப்பட்டு இந்நிலத்தின்மேல் ஓடியாடியுலவித் திரிகின்றோம்; மற்று, அச்சூடு தன்னிலையில் மிகுந்து செந்நீரைச் சுவறச்செய்தாலும், அல்லது அது குறைந்து அதனை உறையச் செய்தாலும் நமது உயிர் உடம்பில் நிலைக்கமாட்டாதாய் உடனே அதனைப் பிரிந்து போய் விடுகின்றதன்றோ? ஆகவே, தீயின் வெம்மையே எல்லா உயிரின் உடம்புகளுந் தோன்றுதற்குந் தோன்றிச் சில காலம் நிலைபெறுதற்கும் அதன்பின் அழிந்துபடுதற்கும் ஏதுவாய் நிற்கின்றதென்பது கருத்திற் பதிக்கற்பாற்று. இறைவன் அழிக்கு நிலையிற் கொடியன்போற் காணப்படினும், படைத்துக் காக்கும் நிலையில் மிகுந்த அருளுடையனாதல் தெளியப்படுமாறு போலவே, தீயுந் தன் ஆற்றலை மிகுத்துக்காட்டி எல்லாவற்றையும் படுசாம்பராய் எரிக்கும் நிலையிற் கொடியதுபோற் றோன்றினும், எல்லா

உயிருடம்புகளையுந் தோற்றுவித்தற்கண்ணும் தோற்றிய அவைகள் குளிரால் விறைக்கும் வழி அவ்விறைப்பினைத் தனது கதகதப்பால் நீக்கி அவற்றைக் காத்தற்கண்ணும் அது மிக இனிய தொன்ருகவே எல்லா உயிர்களானுங் கருதப்படாநிற்கின்றது. இறைவன் எங்கும் நிறைந்து நிற்கும் நிலையிற் கட்புலனுகா அருவினனுயிருத்தல் போலவே, தீயும் எல்லாப் பொருள்களிலும் மறைந்து நிறைந்து நிற்கும் நிலையிற் கட்புலனுகா அருவ இயல்பிற் ருய் நிற்கின்றது. இறைவன் தன்னைப்பேரன்பால் நினைந்து குழைந்துருகும் அடியார்க்கு அவர்தங் கண்ணெதிரே எழில்கனிந்த பழுதறும் உருவிற்ருேன்றி யருள்செய்தல் போலவே, தீயுந் தன்னை இன்றியமையாது வேண்டிநிற்கும் மக்களின் கண்ணெதிரே சிவந்த ஒளி வடிவினதாய்த் தோன்ரு நிற்கின்றது. இறைவன் அருவுக்கும் உருவுக்கும் இடைப்பட்ட பிழம்பு வடிவம் உடையராதல் போலவே, தீயுங் கட்புலனுகா அருவுக்குங் கட்புலனுகும் மக்கள் உருவுக்கும் இடைப்பட்டதாகிய பிழம்புவடிவம் உடையதா இருக்கின்றது. இனி எல்லாம்வல்ல முதல்வன் அப்பனும் அம்மையுமாயும், ஆண்டன்மைக் கேற்ற வன்மையும் பெண் டன்மைக் கேற்ற மென்மையுஞ் சிவப்பு நீலங்களும் உடை யனுயுமிருத்தல் போலவே, தீயுந் தன்கட் சூடுங்குளிர்ச்சியு மாம் ஆண்டன்மை பெண்டன்மைகளுஞ் சிவப்பு நீலநிறங்க ளும் உடையதாய்த் துலங்கா நிற்கின்றது. தீயின்கண் நீரும் அடங்கியிருக்கும் உண்மை, கொழுந்துவிட்டெரியுந் தழல்மேல் ஒரு கிண்ணத்தைக் கவிழ்த்துப் பிடித்தால் அதன் விளிம்புகளிலிருந்து நீர்த்துளிகள் சொட்டு மாற் ருல் அறியப்படும்.

எனவே, நம்மறிவால் அறியப்படும் மண், புனல், அனல், வளி, வெளி என்னும் ஐம்பெரும் பொருள்களில் அனற் பிழம்பு ஒன்றுமட்டுமே இறைவன்கட் காணப்படும் எல்லா இயல்புகளுந் தன்கண் அமையப் பெற்றதாய் விளங்கும் உண்மை இப்போது இனிது விளங்குதலால், இறைவன் எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைந்து நிற்பினுந்,

தன்னியல்போடு ஒருங் கொத்த தீப்பிழம்பின்கண்ணே இயற்கையாகவே முனைத்து தோன்றுகின்ரு னென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனப்புலப்படும். ஆதலால், அனற்பிழம்பு ஒன்றுமே இறைவனது விளங்கிய இருப்புக்கு இசைந்த தூய உடம்பாகு மென்பதுங் கடைப் பிடித்துணரற்பாற்று. இது பற்றியே, திருஞானசம்பந்தப் பெருமான்,

"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடோறும்பரவப்
பொங்கு அழல்உருவன் பூதநாயகனல்
வேதமும் பொருள்களும்அருளி
அங்கயற்கண்ணி தன்னெடும்அமர்ந்த
ஆலவா யாவதுமிதுவே.'

என்றும், திருநாவுக்கரசு நாயனர்,

"எரிபெருக்குவர் அவ்வெரிஈசனது
உருவருக்கமதாவது உணர்கிலார்."

என்றுஞ், சுந்தரமூர்த்தி நாயனர்,

"காற்றுத் தீப்புன லாகி நின்ருனைக்
கடவுளைக் கொடுமால் விடையானை
நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை."

என்றும், மாணிக்கவாசகப் பெருமான்,

"சுடர்கின்ற கோலந், தீயேயென மன்னும்."

என்றும் அருளிச்செய்வா ராயினர்.

இனிச், சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய நம்மனோர் மனமொழிகளால் எண்ணவுஞ் சொல்லவும் முடியாத முதல்வன், நமது சிறுமையினையுந் தனது பெருமையினையும் உணர்ந்து நம்பாற் பேரிரக்கம் உடையனுய் நாம் தன்னைக் காணவுங் கருதவும் வாழ்த்தவும் வணங்கவும் எளிதாம்படி, இங்ஙனந் தன்னியல்புகளோடு பெரும்பாலும் ஒத்த தீப்

பிழும்பின்கண்ணே விளங்கித் தோன்றி நமக்கு அணுக்க ளுய் நிற்கின்றனனாகலின், இத்தீப்பிழம்பே எல்லாம்வல்ல சிவனை அறிந்து வழிபடுதற்குச் சிறந்த 'இலிங்கம்' அல்லது 'குறி' அல்லது 'அடையாளம்' ஆமென்றுணர்தல் வேண்டும். இறைவனைக் காட்டும் மெய்க்குறியாய் இருத்தல் பற்றியே தீப்பிழம்பு 'சிவலிங்கம்' எனப்படுவதாயிற்று. இத னாலன்றோ உலக மெங்கணுமுள்ள எல்லாவகையான மக்கட் கூட்டத்தாரும் பண்டுதொட்டே இத்தீப்பிழம்பினையும், இத்தீப் பிழம்பினையொப்ப நீண்டுகுவிந்த கல்வடிவினையும் இறைவன்றன் மெய் யடையாளங்களாக ஆங்காங்கு நிறுத்தி வழிபட்டு வருகின்றாரென்க.

அற்றன்று, நீண்டு குவிந்த கல்வடிவே சிவலிங்கமென வழங்கப்படுகின்ற தன்றி அனற்பிழம்பு அவ்வாறு வழங்கப் படுதலைக் கண்டிலமாகலானும், நீண்டு குவிந்த அக்கல் வடிவு ஆண்குறியின் அடையாளமாகவும், அக்கல்லைச் சூழ்ந்த வட்டக்கல் வடிவு பெண்குறியின் அடையாளமாக வுமே முன்னையோரால் கருதப்பட்ட தென்பதற்குச்,

"சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும்பெண்ணும் உயர்குண குணியுமாக
வைத்தனன் அவளால்வந்த ஆக்கம்இவ் வாழ்க்கையெல்லாம்
இத்தையும் அறியார்பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார் "

என்னுஞ் சைவசித்தாந்த நூலாகிய **சிவஞானசித்தியாரின்** திருப்பாட்டே சான்று மாகலானும், ஆண் பெண் குறிச் சேர்க்கையினாலேயே இன்பமும் உயிர்களின்தோற்றமும் நிகழக்காண்டலானும் ஆண் பெண்குறிச் சேர்க்கையே தொன்று தொட்டுச் சிவலிங்கவடிவாக வைத்து வணங்கப் படலாயிற்றென்று கோடலே பொருந்துமாம் பிறவெனின்; அறியாது கூறினாய்; இக்கூற்று ஒருவகையில் உண்மையா மல்லது முழுதும் உண்மையாகாது; யாங்ஙனமெனிற் காட்டுதும்: ஆண் பெண் குறிகள் இன்பத்திற்கும் உயிர்களின் தோற்றத்திற்குங் கருவியாயிருப்பினும், அவை மேலே காட்டிய இறைவனியல்புகளொடு முற்றும் ஒவ்வாமையின்

அவை தம்மை இறைவனடையாளமாக வைத்து எல்லா மக்களும் பண்டுதொட்டு வழிபடலாயினரென்பது சிறிதும் ஒவ்வாது. மற்றுத், தீவடிவு ஒன்றுமே இறைவற்குரிய பண்புகளெல்லாம் ஒருங்கே பொருந்தப்பெற்றிருத்தல் காண்டுமாகலானுஞ், சிவலிங்க வடிவினைப் பண்டுதொட்டு வழிபட்டுவரும் பழஞ்சமயத்தவரெல்லாருஞ் சாம்பலாகிய திருநீற்றினைத் தமதுடம்பின்மேற் பூசிவருதலை உற்று நோக்குங்கால் அவரெல்லாந் தீவடிவில் வைத்து இறைவனை வணங்கியபின் அத்தீயினால் நீறுக்கப்பட்டுத் தூய் தூய் வெளேலென எஞ்சி நிற்கும் புனிதமாஞ் சாம்பற் பொடியினைப் பூசிவருதற் காரணம் புலப்படுதலானும், இவ்வாறன்றி அவரெல்லாம் ஆண் பெண் குறிச் சேர்க்கையையே தொழுதுவருபவராயிருந்தால் அதனைத் தொழுது முடிந்தபிற் சாம்பற்பூச்சு மேற்கொள்ளுதற்கு ஒரு காரணம் வேறொருவாற்றானும் பொருந்தப் போதராமையானும் ஆண் பெண்குறிச் சேர்க்கையே சிவலிங்கமெனக் கரைதல் அடாது.

அற்றேல், மேற்காட்டிய சிவஞானசித்திச் செய்யுள் அதனை அவ்வாறோதுதல் என்னையெனிற், கூறுதும். தீப் பிழம்பின் வடிவு எப்போதும் நீண்டு குவிந்து நிற்கவே காணப்படுகின்றது. தீ மிக்கதோராற்றல் வாய்ந்ததாயிருத்தலின் அதனை ஆண்பாலாகக் கூறுதல் அறிஞர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததேயாகும். மற்று நீரின்வடிவோ சுழிந்த வட்டவடிவினதாகவே காணப்படுகின்றது. ஓர் யாற்றின்கட் புனல் பெருகிச் செல்லுங்கால் அதன் இயக்கத்தை உற்று நோக்குமின்! அப்போது அது சுழிந்து சுழிந்து ஏகுதல் நன்கு உணரப்படும். இங்ஙனஞ் சுழிந்தோடும் நீர் மென்பதத்ததாய்த் தண்ணென்று குளிர்ந்திருத்தல் பற்றி அதனைப் பெண்பாலாகக் கூறுதலும் ஆன்றோர்க்கெல்லாம் ஒத்த கருத்தேயாகும். இவ்வாறு ஆண்பாற்றன்மையதாகிய அனல் வரிவடிவினதாயும், பெண்பாற்றன்மையதாகிய நீர் வட்டச் சுழிவடிவினதாயும் அமைந்திருத்தல் போலவே, இவ்வுலகத்தில் ஆண்கூற்றிற் பட்ட உயிர்க

ளெல்லாம் வரிவடிவான குறியுள்ள ஆணுடம்புகள் உடை யனவாயும், பெண்கூற்றிற் பட்ட ஏனையுயிர்களெல்லாம் வட்டவடிவான குறியுள்ள பெண்ணுடம்புகள் உடையன வாயும் அமைக்கப்பட்டு இன்ப வாழ்க்கை நடாத்தாநிற் கின்றன. இனி, உயிரில்லாத பொருள்களும், உயிருடை யன போல் இயங்குமாறு அமைக்கப்படுங்கால் வரிவடி வாயும் வட்டவடிவாயுமே அமைக்கப்பட்டு அவ்விரண்டின் சேர்க்கையால் விரைந்து இயங்குதல், இஞ்ஞான்றை மேல் நாட்டு மக்களால் அமைக்கப்பட்டுலவும் நீராவி வண்டியி லும் ஏனை வியத்தகு பொறிகளிலும் வைத்துத் தெளிய வுணர்ந்து கொள்ளப்படும். இன்னும், இந்நிலவுலகமும், இந்நிலவுகத்தினும் பெரியவும் சிறியவுமாகிய எண்ணிறந்த வுலகங்களுமெல்லாம், வான் வெளியிற் சிவலிங்கத்தை யொப்பச் சுழன்று நீண்டு செலும் மிக நுண்ணியதோர் இயக்கத்தாற் றோன்றி நடைபெறுநிற்கின்றன வென்று, இப்பேருண்மையினைப் பல வியத்தகும் ஆராய்ச்சிகளால் நிலையிட்டுரைக்கும் ஆங்கில ஆசிரியரான குரூக்கசு (Crookes) என்பார் உரைக்கும் மெய்ப்பேருரையாலும், எண்ணிறந்த இவ்வுடம்புகளும் எண்ணிறந்த இவ்வுலகங் களுமெல்லாம் இவ் வரிவடிவு வட்டவடிவுகளின் சேர்க்கை யினுலேயே தோற்றமுற்று உலவுதல் ஐயுறவின்றித் தெளியப்படு மென்பது. எனவே, இறைவனும் இறைவியு மாய் ஒருங்கியைந்து இச் சிற்றுலகு பேருலகுகளைப் படைத்துங் காத்தும் அழித்தும் அருள்வழங்குங் கடவுள் நிலையே வரிவடிவிலும் வட்டவடிவிலும் புலனுதல், நெருப் புருவிலும் நீர்வடிவிலும் வைத்து நன்கறியக் கிடத்தலின், யாண்டும் பிறழா அத்தெய்வ அருள் நிலைக்கு அடங்கியே ஆண்குறி பெண்குறி யமைப்புகளும் ஈண்டு உளவாயின வென்பது தெற்றெனவிளங்காநிற்கும். இவ்வரிவடிவு வட்டவடிவுகள் ஆண் பெண் உயிருடம்புகளின் மட்டுமே யன்றி, உயிரற்ற அரியபெரிய பொறி (இயந்திர) அமைப்பு களிலும் நன்கு புலனுகிநிற்றல் காண்டுமாகலின், உயிர்ப் பொருள் உயிரில் பொருள்களாகிய எல்லாவற்றின் தோற்ற இயக்கங்களிலுஞ் சிவலிங்க வுருவே உள்ளும்புறம்புமாய்

நிற்கும் உண்மையினை விளக்குதற்கே "சத்தியுஞ் சிவமு மாய" என்னும் அவ்வரிய சிவஞானசித்திச் செய்யுள் எழுந்ததென்று கொள்க. இவ்வாறல்லது ஆண் பெண் குறிச் சேர்க்கையே சிவலிங்க மாமென அதன் மெய்ம் மையை ஆய்ந்துணராது அரற்றுவா ருரை அறிவில்லாக் கயவருரையேயாமென விடுக்க. ஆண் பெண் என்னும் இருகூற்றிற்பட்ட எல்லா அமைப்புகளின் வடிவுக்கும் முத லாய் ஊடுருவிநிற்பது சிவலிங்கவுருவாகுமன்றி அச்சிவலிங்க வுருவுக்கு முதலாய் நிற்பது ஆண்பெண் குறிச் சேர்க்கை யேயா மென்றல் ஒருவாற்றானும் ஏலாதென்றுணர்க.

அற்றேல், தீயுருவு ஆண்வடிவும் நீருருவு பெண்வடிவு மாதல், வடிவளவினன்றித் தன்மையளவிற் கண்டிலமா லெனின்; அறியாது வினவினாய், எல்லா உயிர்களிலுங் காமவிருப்பு மீதூர்ந்து முனைத்துச் செல்வது ஆணே யன்றிப் பெண் அல்லாமையானும், அங்ஙனம் அவ்விருப்பு மீதூர்ந்தவழி ஆணுடம்பு அனலாய்நிற்க அதன் ஆண் உறுப்பு விறைத்து அனல்வடிவுபோல் நேர்நின்று புணர்ச் சிக்குக் கருவியாய் நிற்றலானும், மற்றுப் பெண்ணெல்லாந் தாமாகவே பெரும்பாலுங் காமவிருப்பு மீதூரப் பெறுத லின்றி ஆண்விருப்பைக் கண்டவழி அஃது எழப்பெற்று அங்ஙனம் எழப் பெற்றவழியும் ஒரு வரம்பில் அடங்கியே நிகழக்காண்டலானும், அங்ஙனம் நிகழ்வுழிப் பெண் ணுறுப்பு முனைத்தெழ மாட்டாதாய் நீர்வடிவாய் நெகிழ்ந்து ஆணுறுப்பின் நுழைவுக்கு இடந்தந்து குளிர்ந்த தன்மைய தாகவே நிற்குமளவன்றி வேறல்லாமை அறியப்படுத லானும் ஆணுடம்பில் தீயுருவும் பெண்ணுடம்பில் நீரு ருவும் விரவிநின்று அவையிரண்டனையும் வடிவானுந் தன்மையானுந் தங் கூற்றிற் படுத்திருத்தல் நன்கறியப்படு மென்க.

அற்றாயின், எரியினைவளர்த்து அதனை வழிபடுதலே செயற்பாலது; பண்டிருந்த தமிழ்ச்சான்றோரும் முத்தீ

வேட்டு அதனையே வழிபட்டு வந்தனர்; மற்றை மேல்நாடு கீழ்நாடுகளிலிருந்த அறிஞரும் பிறரும் நெருப்புருவினையே வழிபட்டு வந்தனரென்பதற்கு அவர் சாம்பற்பூசுந் திரு நாளொன்று இன்றுகாறுங் கொண்டாடி வருதலே சான்றும். அவ்வாறிருக்க, அதனை விடுத்து உருண்டு நீண்ட குழவிக் கல்வடிவு மண்வடிவில் வைத்துச் சிவ பிரானை வணங்கி வருதலும், இயற்கையுண்மைச் சிவக் குறியான தீப்பிழம்பினைச் சிவலிங்கமெனக் கொண்டு அதனை வழிபடுதல் செய்யாது செயற்கையாகச் சிற்றறி வுடைய மக்களாற் செய்யப்படுங் கல்வடிவு மண்வடிவு களைச் சிவலிங்கமென விதந்து வைத்து அவற்றிற்கு வழி பாடு ஆற்றிவருதலும் பொருந்தாவாம் பிறவெனின்; அறியாது கூறினுய், தீவடிவு இயற்கைச் சிவலிங்கமே யாயினும், அதனை வழிபடுவார் அதன்பால் அன்புமீதூரப் பெற்றவழி, அதனைச் சென்று தொடுதலும் அணைதலும், அதற்குத் திருமுழுக்குச் செய்தலும், பூமாலை புனைதலுஞ், சாந்தம் அப்புதலும் பிறவுமாகிய அன்பின் செயல்களைச் செய்தல் இயலாது. என்னை? தொட்டால் அது சுடும், நீர் சொரிந்தால் அஃது அணைந்துபோம், மலர்மாலையணிந் தால் அம்மலர்மாலை கரிந்துபோம், அனற்கொழுந்து பருப் பொருள் அல்லாமையால் அதற்குச் சாந்தங் குழைத் திடுதலும் இயலாது. மற்று, அன்பின் பெருக்கோ அதற் குரியார்பாற் புறத்தே அச்செயல்களைச் செய்தாலன்றிச் சிறிதும் அமைதி பெறாது. தம்மாற் பேரன்பு செய்யப் பட்டவர் சிறு மகாரேயாயினும் அன்றி இளைஞரேயாயினும், அல்லது ஆண்டில் முதிர்ந்தாரேயாயினும் அவரைத் தொடு தற்கும், முத்தம் இடுதற்கும் அல்லது அணைதற்கும், அவரை நீராடச் செய்தற்கும், அவர்க்குப் பூமாலை புனைந்து சாந்தம் பூசுதற்கும், இன்னும் இவை போன்ற பிறவெல் லாஞ் செய்தற்கும் அவர்பால் அன்பு மிகப் பெற்றார் வேட்கை மீதூர்ந்து நிற்றல் காண்டுமன்றே! அங்ஙனம் அவர் போலவே, இறைவனைத் தீவடிவில் வைத்து வழிபடு வாரும் ஆண்டவன்பாற் கரைகடந்த அன்புமீதூரப் பெற் றக்கால், அவற்கடையாளமான தீப்பிழம்பிலும் அவ்

அன்பின் செயல்களைச் செய்தற்குப் பெரிது விழைந்தும், அவற்றிற்கு அஃது இடந்தராமை கண்டு அதனை யொப்ப தொரு கல்வடிவே அவற்றிற்கெல்லாம் நன்கு இடமாதல் உணர்ந்தும், அவ்வனற் பிழம்பு வடிவினை யொப்பதாகக் கல்லின்கண் நீண்டு குவிந்த வடிவினைச் சமைத்து, அதனையே சிவலிங்கமாக நிறுத்தி, அதற்குத் தம் அன்பின் அடையாளங்களாகச் செயற்பாலனவெல்லாஞ் செய்து, பண்டுதொட்டு வழிபாடு செய்து வருவாராயின ரென் றுணர்ந்து கொள்க.

மேலுங், கல்லும் மண்ணுந் தீயைப் போலவே இயற்கை யுண்மைப் பொருள்களாய் இறைவனாற் படைக் கப்பட்டவைகளே யாகையாலும், வான் வளி தீ நீர் மண் என்னும் ஐம்பெரும்பொருள்களிலும் அவ்வைம்பொருட் சேர்க்கையாலாகிய எல்லா வுலகங்களிலும் எல்லா உடம்பு களிலும் பாலுள் நெய்போலப் பழத்திற் சாறுபோல இறை வன் பிரிவற நிறைந்து நிற்றல் எல்லாச் சமயத்தார்க்கும் உடம்பாடே யாகையாலும், மக்கள் சிற்றறிவுடையரே யாயினும் அவர்களுட் பேரன்பும் பேரறிவும் உடையாரும் உளராகலின் அவர் இறைவன்பால் மிக்கெழுந்த தூய பேரன்பின் வயத்தராகி ஆக்கி வழிபட்ட சிவலிங்கக் கல்வடிவு மண் வடிவுகளை ஏனைச் சிற்றறிவினர் செய் தவைகளோடு ஒப்பவைத்து இகழ்ந்துரைத்தல் பொருந்தா தாகையாலும், மக்களுள்ளும் அறிவுமிக்காரால் வரையப் பட்ட ஓவியங்களையுங் கடைந்து திருத்தப்பட்ட கற்பாவை பொற்பாவைகளையும் பலர்க்குப் பலவகையிற் பயன்றரும் நீராவிப் பொறி மின்னற்பொறி அச்சுப் பொறி பறவைப் பொறி முதலானவைகளையும் மக்களாற் செய்யப்பட்டமை பற்றி இகழ்ந்து பேசாமல் அவை தம்மை யெல்லாம் மிகவுங் கொண்டாடிப் பேசுவாரையே எங்குங் காண் கின்றேமாகையாலும், மக்கள் தம் அறிவொளியால் அமைப்பனவெல்லாம் இறைவனது அருளொளியோடு ஒருங்குகூடியே நிற்குமாகலின் அவை தம்மை ஏனை அறிவில்லாப் பொதுமக்கள் செயலில் வைத்து இழித்துக்

கைவிடுதல் தம் பிறவிப் பயனை இழப்பதற்கே இடஞ் செய்யுமாகையாலும், மக்களாற் செய்யப்பட்ட தென்னுங் காரணம் ஒன்றேகொண்டு கல்வடிவு மண்வடிவுகளில் ஆக்கிய சிவலிங்கத்தை வழிபடாதொழிதல் எவர்க்கும் நன்றுகாதென்க. தமக்குப் பெரிதும் அன்பரா யுள்ளாரைத் தாமே ஓவியத்தில் வரைந்து பார்த்துந், தம்மால் வரைதல் இயலாவிடிற் பிறரைக்கொண்டு அவரதுருவினை அதன்கண் வரைவித்துப் பார்த்தும் மகிழ்ச்சியிற் பொங்குவாரை ஆங்காங்குக் காண்டும் அல்லமோ? அங்ஙனமே இறைவன்பால் அன்புமீதூரப் பெற்றுரும் அவன் இயல்பாகவே முனைத்து விளங்குந் தீயுருவினைக், கல்லிலும் மண்ணிலுந் தாமே யமைத்தும் பிறரைக்கொண்டு அமைப்பித்தும் வழிபட்டு மகிழ்மீக்கூர்கின்று ரென்க.

அற்றேல். அனற்பிழம்பில் இயற்கையே முனைத்து விளங்குமாப்போற் கல்வடிவு மண்வடிவுகளிற் கடவுள் முனைத்து விளங்குதல் இல்லாமையால், அப்பருப்பொருள் வடிவுகளில் வைத்துக் கடவுளுக்கு வழிபாடாற்றுதல் பயமின்றுய் முடியும்போலு மெனின்; அற்றன்று, கல்மண் வடிவுகளில் இயற்கையே முனைத்து விளங்காத முதல்வனை அவை தம்மில் முனைத்துநின்று அருள் செய்யுமாறு வேண்டுதற் பொருட்டன்றே திருக்குடமுழுக்கு என்னும் வினை ஆன்றோரால் நடாத்தப்பட்டு வருகின்றதென்க.

இனி, அக்குடமுழுக்கு வினையின் கருத்தினை ஈண்டொரு சிறிது விளக்கிக் காட்டுதும். இறைவன் இயற்கையே முனைத்து விளங்கும் இடனாய் நிற்பதான அனல் வடிவு நம்மனோர் கட்புலனுக்கு மூன்று திறமாய்ப் பிரிந்து விளங்குகின்றது; அவைதாம் பகலவனுந் திங்களுந் தீயுமேயாகும். அம்மூன்றிலுந் தோன்றுநின்ற ஆண்டவனைப் பண்டை நம் செந்தமிழ்ச் சான்றோர்கள் வழிபாடாற்றிய வகை வருமாறு: தூயதொரு நிலத்தே தீயினுக்கு அடையாளமாக முக்கோண வடிவொன்று கீறி, அதனுள்ளே பகலவனுக்கு அடையாளமாகவட்டவடிவொன்று வரைந்து, அவ்வட்டத்தினுள்ளே திங்களுக்கு அடையாள

மாகப் பிறைவடிவொன்று தீட்டி, அங்ஙனம் அமைக்கப்பட்ட முக்கோணவட்டத்தில் தீவளர்த்து அத்தீயின் பக்கத்தே கிழக்கு நோக்கியபடியாய் இரண்டு புது மட்குடங்களை நிறீஇ. அவ்விரண்டினுள்ளே தூயபுனலை நிரப்பி, அக்குடங்களின் வாய்களில் மாவிலைகளுந் தேங்காயும் வைத்து, அவையிற்றுக்கு மலர்மாலையும் பிறவுஞ் சாத்துவர். அதன்பிற் றீயிலே நெய்யைச் சொரிந்து, அது கொழுந்துவிட்டு எரியுங்கால், அதன்கண் முனைத்து விளங்கா நின்ற முதல்வனை அதற்கு எதிரே அமைத்துள்ள இரண்டு குடங்களின் நீரிலும் புகுந்து விளங்கி நிற்குமாறு வேண்டுவர். அங்ஙனம் பலகாலும் வேண்டிய பின் அக்குடங்கள் இரண்டினையும் எடுத்துக், கல்வடிவு செம்புவடிவுகளில் அமைப்பித்த சிவலிங்கத்திருவுருவின் மேற் சொரிந்து, அங்ஙனஞ் சொரியுங்கால் அந்நீரில் விளங்கும் இறைவன் அச்சிவலிங்கத்தினுள்ளும் புகுந்து முனைத்து நின்று விளங்குமாறு வேண்டாநிற்பர். அவ்வாறுசெய்து வேண்டியபிற் சிவலிங்கத்தின்கண் இறைவன் முனைத்து நின்று அருள்செய்கின்ருன் என்பது நம் பண்டையாசிரியரது கோட்பாடாகும்.

அஃதொக்கும்; அவ்வாறு தீயிலிருந்து நீருக்கும் நீரிலிருந்து கல்லுக்குஞ் சென்று சிவபிரான் விளங்க வேண்டுமென்று வேண்டுதல் எற்றுக்கு? கல்லுருவிலிருந்தே விளங்கி அருள்செய்க என்று அஃதொன்றைச் சுட்டியே வேண்டிக்கோடல் போதாதோ? என வினவிற்; கரைகடந்த பேரன்பாற் கண்ணப்பரைப்போல் நெஞ்சம் நெக்கு நெக்குருகி வேண்டுவார்க்கு, எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிநிற்கும் ஆண்டவன் கல்லிலுஞ் செம்பிலுங் கட்டையிலும் மண்ணிலும் நேரே விளங்கித்தோன்றி அருள்செய்வனென்பது திண்ணமேயாம். ஆனல், அத்துணைப் பேரன்பு வாயாத ஏனைப் பொதுமக்கள் எல்லார்க்கும் அவன் அங்ஙனம் எளிதிலே நினைந்த நினைந்த பருப்பொருள் வடிவுகளிற் புலனய்த்தோன்றி அருள்புரிதல் செல்லாது. அவர் பொருட்டாகவே நுண்ணிய ஒளிப்

பொருளான அனற்கொழுந்தின்கண் முனைத்து நிற்கும் முதல்வனை, அவ்வனலுக்கு அடுத்தபடி நுண்மையுடைய துஞ் சிறிதொளிவாய்ந்ததுமான நீரின்கட் புகுமாறு வேண்டி, அதன்பின் ஒளியில்லாத பருப்பொருட் கல்வடி வில் அந்நீரை உகுத்து, அவ்வாற்ருல் அவன் அக்கல் வடிவில் முனைப்புற்றுநின்று அருள் செய்யுமாறு வேண் டுதல் செய்கின்ருரென்க. இறைவன் இயற்கையாகவே விளக்கம் இல்லாத கல் மண் செம்பு முதலான பருப் பொருள் வடிவுகளில் முனைத்து நிற்கின்றிலன் என்பது பற்றியே **பட்டினத்தடிகள்,**

"சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியினும்
அல்லினும் மாசற்ற ஆகாயந் தன்னினும் ஆய்ந்துவிட்டோர்
இல்லினும் அன்ப ரிடத்தினும் ஈசன் இருக்கும்இடங்
கல்லினுஞ் செம்பினு மோஇருப் பான்எங்கள் கண்ணுதலே."

என்று அருளிச்செய்வாராயினர். அனற்பிழம்பில் இயல் பாக விளங்கித்தோன்றும் ஐயன். அங்ஙனம் விளங்காத ஏனைப் பருப்பொருள்களிலும் விளங்கிநின்று அருள்புரிதல் வேண்டுமென்று நெஞ்சங்குழைந்து வேண்டிஞல் மட்டுமே, ஆண்டு அவன் முனைத்துநின்று அருள்வன் என்பது பண்டைச் சான்ருேர்க்கெல்லாம் ஒத்ததொரு கோட்பாடா கலின், முத்தீவேள்வி வேட்டுக் கல்லிலுஞ் செம்பிலும் இறைவனை விளங்கச் செய்யும்வினை ஏனைப் பொதுமக்கள் எல்லார் பொருட்டும் இன்றியமையாது செய்யப்படுவதா யிற்றென்க. இங்ஙனம் முத்தீவேட்டு முதல்வனைப் பருப் பொருள் வடிவுகளில் விளங்கிநிற்கச் செய்தவழியும், முதற் கடவுள் உண்மையுணர்ந்து, அவனை யொருவடிவில் வைத்து வணங்க விழைவு மீதூர்ந்து, பேரன்பிற்கு ஒரு கொள்கலனுத் திகழும் மெய்யடியார் உள்ளம் நீராய்க் கரைந்து கரைந்துருகி வழிபட்ட கல் மண் செம்பு கட்டை முதலானவைகளில் அவன் எக்காலுந் தோன்றி நின்று அருள்செய்யுமாப்போல் ஏனை அப்பருப்பொருள் வடிவு களில் அவன் அத்துணை நில்லானென்பதே தேற்றமாம். அதுபற்றியன்றே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர்,

சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் முதலான மெய்யாசிரியன்மார் சென்று வழிபட்டுச் செந்தமிழ்ப்பாக்களால் வழுத்திய சிவபிரான் திருக்கோயில்களே சிறந்தனவென்று கற்ருர்முதற் கல்லாதார் ஈருன எத்திறத்தாரும் அவற்றைப் பெரிது பாராட்டி வருகின்ருர். மெய்யாசிரியன்மார் செந்தமிழ்ப்பாடலின் பொருட்டாகவே, காணவுங் கருதவும் படாத முதல்வனுன சிவபிரான் காணவுங் கருதவும் எளிதாகிய சிவலிங்கக் கல்வடிவிலே விளங்கிநின்று அருள் செய்யும் உண்மை வெள்ளிடை விலங்கலென வீறித் தோன்றவும், இவ்வுண்மையினை மறைத்துத் தமக்குந் தமது ஆரியமொழிக்கும் உண்மையில் இல்லாத ஒரு தெய்வத்தன்மை கற்பித்துக்கொள்வான் வேண்டி ஆரியரும் அவரது போலியொழுகலாற்றைப் பின்பற்றிய கோயிற் குருக்கண்மாரும், நம் தெய்வ ஆசிரியர் அருளிச்செய்த தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைகளாற் சிவபிரானுக்கு வழிபாடு ஆற்ருது, எல்லாப் பொய்ம்மையும் நிறைந்த ஆரியமொழிச் செய்யுட்களாலேயே வழிபாடு முற்றும் ஆற்றுகின்ருர். ஒரு கற்ருவின்பாலைப் பெற வேண்டுவார், அதன்கன்றை அதன்பால் உய்த்து, அஃது உண்ண உண்ணப் பால் சுரந்து ஒழுகாநிற்புழி, அதனைப் பின்னர்த் தாம் கறந்து கைக்கொள்ளுமாப்போல், மெய்யடியார் சென்று வழிபட்ட திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்களிலே அவர்பொருட்டுத் தோன்றிநின்று பேரருள் செய்த இறைவன் திருவருளை அவ்வுருவங்களின் வழி நாம் பெறுதலே எளிதிற் கைகூடுவதாகும். ஆகவே, கல் மண் முதலான பருப்பொருள் அடையாளங்களில் இறைவனை விளங்கச் செய்தற்பொருட்டுச் செய்யும் ஏனை எல்லா முறைகளையும்விட, அவன்றன் மெய்யடியார் அவ்வத்திருக்கோயிலின்மேற் பாடிய தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைத் திருப்பதிகங்களை அன்பினுல் எடுத்தோதி அகங்கரைதலே கழிபெருஞ் சிறப்புடைத்தாமென்க.

என்ருலும், நிறைந்த அன்பும் ஆழ்ந்த அறிவுமில்லா ஏனைப் பொதுமக்கள் பொருட்டுத், திருக்கோயில்களிற்

சிவலிங்கத்திருவுருவின் எதிரே அடுத்தடுத்து மேற்சொல்லியவாறு முத்தீவேட்டு, அதன்கட்டோன்றும் முதல்வன் அச்சிவலிங்கத்தினுந் தோன்றி நின்றருள் வழங்குமாறு வேண்டித் திருமுழுக்குச் செய்தல் பெரிதும் நலம்பயப்பதொன்றேயாமென் றுணர்தல் வேண்டும்.

இனித், தீப்பிழம்பின் வடிவான சிவலிங்கத்தை அமைத்துத் திருக்கோயில்கள் எடுப்பிக்கும் உண்மையினையுஞ் சிறிது விளக்கிக்காட்டுவாம். நம் ஐம்புலனுக்கும், அவை வாயிலாக நடைபெறும் நமது மனனுணர்வுக்கும் புலனுகித் தோன்றாநின்ற இவ்வியற்கையமைப்பு உலகும் உடம்பும் என இருகூருய்க் காணப்படுகின்றது. இவ்விரு கூற்றிற்பட்ட உலகு பெரிதாயும், உடம்பு சிறிதாயும் அமைக்கப்பட்டு நிலவுகின்றன. வடிவத்தாற்பெரிது சிறிதாயிருப்பினும், உலகத்திலுள்ள அமைப்புகள் உடம்பிலும உடம்பிலுள்ள அமைப்புகள் உலகத்திலுங் காணப்படுகின்றன. உலகக்தில் வான் வளி தீ நீர் மண் என்னும் ஐம்பெரும்பொருள்கள் இருத்தல் போலவே, உடம்பிலும் வெளியும் மூச்சுஞ் சூடுஞ் செந்நீரும் எலும்பு தோல் நரம்பு தசை முதலான மண்ணின் கூறுகளும் அமைந்திருக்கின்றன. உலகில் மலைகளும் மரங்கள் அடர்ந்த காடுகளும் இருத்தல் போலவே, உடம்பில் என்புகளும் மயிர்த்தொகுதிகளும் அமைந்திருக்கின்றன. உலகிற் பொன் வெள்ளி இரும்பு ஈயம் கெந்தகம் முதலான முதற்பொருள்கள் ஆங்காங்கு உளவாதல்போலவே, உடம்பிலும் பொன் வெள்ளி இரும்பு ஈயம் கெந்தகம் முதலான முதற்பொருள்கள் பொருந்தியுள்ளன. உலகிற் கடல்களும் ஆறுகளும் அமைந்திருத்தல்போலவே, உடம்பில் தீனிப்பை குண்டிக்காய் முதலான நீர்நிலைகளுங் குருதியோடும் நரப்புக்குழாய்களும் அமைந்திருக்கின்றன. உலகில் ஞாயிறு திங்கள் தீயென்னும் முச்சுடர்கள் காணப்படுதல் போலவே, உடம்பில் வலக்கண் இடக்கண்ணும் புருவத்திற்கு நடுவே நெற்றிக்கண்ணுங் காணப்படுகின்றன. உலகில் அனற்காற்றுங் குளிர்காற்றும் வீசுதல்போலவே,

உடம்பின் வலது மூக்கில் அனல்வளியும் இடது மூக்கிற் குளிர்வளியும் வீசுகின்றன. உலகமெங்கும் வான்வெளி பரந்திருத்தல் போலவே, உடம்பெங்கும் வான்வெளி பரந் திருக்கின்றது. இன்னும் இங்ஙனமே உலகத்தின்கண் உள்ள அமைப்புகள் அத்தனையும் உடம்பின்கண்ணுங் காட்டலாம். இருந்தவாற்றால் உலகினைப் பேருலகு என்றும், உடம்பினைச் சிற்றுலகு என்றுங் கூறுதல் இழுக்காது.

இனி, எல்லாம் வல்ல கடவுள் இவ்வுலகங்களிலும் இவ்வுடம்புகளிலும் நிறைந்துநின்று இவைதம்மை இயக்கிலனன்றி இவை தாமாகவே இயங்க வல்லன அல்ல; மற்று, உயிர்களோ சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையன வாகையால், இவை மிகப்பெரிய உலகங்களின் உள்ளும் புறம்புமுள்ள இயல்புகளை முற்ற உணரமாட்டாமையொடு, தமதுடம்பின் இயக்கத்தையே நன்கு நடைபெறுத்தவல்ல ஆற்றலும் இல்லாதனவாய்ச் சடுதியிலே மாய்ந்துபோகுந் தன்மையவாய் இருத்தலின் இவை அவ்வுலகங்களையும் உடம்புகளையும் இயக்குமென்றலும் ஏலாது. ஏலாதாகவே, முழுமுதற்கடவுள் ஒருவனே இவை தம்மையெல்லாம் ஊடுருவி நின்று இயக்குகின்றானென்பது தானேபோதரும். அங்ஙனம் அவன் இவ்விரு கூற்றிற்பட்ட உலகுகளை இயக்குவதும், உயிர்களுக்கு மேன்மேல் அறிவு விளங்கச் செய்து, அவ்வாற்றால் அவைதந் துன்பத்தை அகல்வித்து இன்பத்தை நுகர்வித்தற் பொருட்டேயாகலான், அவன் இவ்வுலகுகளை இயக்குவதொன்றின்மட்டும் அமையாது. இவையிற்றின்கண் இருந்து உயிர்வாழும் எல்லா உயிர்கட்கும் அறிவையும் முறைமுறையே விளங்கச்செய்து வருகின்றான். யாங்ஙனம் அறிவு விளங்கச் செய்கின்றானெனின்; உயிர்களின் கண்ணறிவை விளக்கி அவ்வாற்றால் அவை தம் மனனுணர்வையும் விளங்கச் செய்கின்றானென்க.

இனி, உயிர்களின் கண்ணறிவை விளக்குதற்கு, ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றிலும் புறத்தே உலகின் கண் ஒளியுருவாய் ஒளிராநின்ற முதல்வன், கண்ணறிவு

விளங்கி அவ்வாற்றால் விளங்கப்பெறும் உயிர்களின் உடம்பின் அகத்தே மனவுணர்விலும் அறிவொளியாய்த் துலங்காநிற்கின்றனனென்று ஓர்ந்துகொள்க. இவ்வாறு இறைவன் புறத்தே உலகின்கண் ஒளிவடிவாய் விளங்கும் வகையினையும், அகத்தே உடம்பின்கண் அறிவொளியாய்த் திகழும் வகையினையும் அறிவுறுத்தி, மக்கள் உள்ளத்தைத் தூய்மைசெய்து இறைவன்றன் அருளொளியிற் படிவித்தற் பொருட்டாகவே, அறிவான்மிக்க நம் பண்டைச் சான்றோர்கள், திருக்கோயில்களையும் இருவகை யமைப்புகளுட் படுத்து அமைக்கலாயினர்.

ஆனாலும், உலகினை யொப்ப அமைக்கப்பட்ட திருக்கோயில்களின் கருவறையிலே ஞாயிறுவது திங்களாவது வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. நமக்குக் கட்புலனாகும் ஒன்பதுமண்டிலங்களில் ஞாயிறுந் திங்களுமே ஒளி விளக்கமுடையனவாய், நம்முடம்பையும் உயிரையும் அறிவையும் வளர்ப்பனவாய் இருத்தலின், அவையிரண்டும் இறைவன் விளங்கித் தோன்றி உறையுந் திருவுருவங்களாகக் கருதப்பட்டன. உலகினையொப்ப அமைத்த பழைய திருக்கோயில்கள் ஒரே மதிற்சுற்று மட்டும் வாய்ந்தன. அவற்றின் நடுவே பகலவன் அல்லது நிலவோனது திருவுருவம் நிறுத்தப்பட்டிருந்தது. இத்தகைய பகலவன் கோட்டம் நிலவோன் கோட்டம் பண்டை நாளில் இத்தமிழ் நாட்டின்கண் இருந்தமை சிலப்பதிகாரம் என்னும் பழைய தமிழ்நூலால் நன்கறியப்படுகின்றது. இத்தமிழ்நாட்டின் மட்டுமேயன்றி, வடநாட்டின்கண்ணும் பகலவன்றிருக் கோயில்கள் இருந்தமை பவிடியபுராணத்தாலும் பழைய சத்திராபி மன்னர்கள் வழங்குவித்த நாணயங்களில் ஞாயிற்றின் வடிவம் பொறிக்கப்பட்டிருத்தலாலும் புலனாகின்றது; அதுவேயுமன்றிப் பஞ்சாபுதேயத்தின் கண்ணதான முலுத்தானத்தில் மிகச் சிறந்ததொரு பகலவன் கோட்டம் இருந்தமை, இற்றைக்கு ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் இவ்விந்தியநாடு போந்து இங்குள்ள காட்சிகளைக் கண்டெழுதிய சீனஅறிஞரான அயூன்தாங்கு

கூறும் உரைகளாலுந் தெளியக்கிடக்கின்றது. மிகச் சிறந்த இப்பகலவன்றிருக்கோயில் மகமதிய வேந்தனை அவுரங்கசீபுகாலத்திலேதான் சிதைத்து அழிக்கப்பட்டது. இங்ஙனமே நிலவோனை வழிபடுஞ் சமயத்தவர் இருந்தமை 'சங்கரவிஜயத்'தினுட் சொல்லப்படுதலின், அதற்குந் திருக்கோயில்கள் வடநாட்டின்கண் இருந்தமை உய்த்தறியப்படும்.

இனி, இவ்விந்தியதேயத்தின் மட்டுமேயன்றி, இற்றைக்குப் பதினாயிர ஆண்டுகளுக்கு முன்னரே நந்தமிழ் மக்களின் முன்னோர்கள் சென்று குடியேறிவைகிய மேல்பால் நாடுகளான சாலடி, அசுரம், எகுபதி, பாபிலோனியம் முதலானவைகளிலுங், கீழ்பால் நாடுகளான மெகுசிகம், பேரு முதலானவைகளிலும் மிகப்பெரிய சிறந்த பகலவன் கோட்டங்களும் நிலவோன் கோட்டங்களும் இருந்தன. அவைகள் நிலத்தின்கட் புதைந்துபோனமை தெரிந்து, அவைகளை வெள்ளைக்கார அறிஞர்கள் அகழ்ந்துவைத்து, அவையிற்றின் வியத்தக்க மிக அழகிய அமைப்புகளை விரிவாக எழுதி ஓவியம் எடுத்துங் காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, இற்றைக்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னமே மேல்பால் கீழ்பால் நாடுகளிலும் இவ்விந்திய நாடுகளிலும் இருந்த அறிவான் ஆன்ற நாகரிகமக்கள் அனைவரும், இவ்வுலகினை ஒரு புடையொப்ப எழுப்பிய பெரிய பெரிய திருக்கோயில்களிலெல்லாம் பகலவன் றிருவுருவினையும் நிலவோன் றிருவுருவினையுமே நிறுத்தி, அவைதம்மில் முனைத்து விளங்காநின்ற முழுமுதற் கடவுளை வழிபட்டுவந்தமை தெற்றென வுணரப்படுமென்க.

இனி, இந்நிலவுலகினிற் சிறந்த இவ்விந்தியநாட்டை இறைவற்கோர் உடம்பாகக்கொண்டு, அவ்வுடம்பினகத்தே இறைவன் விளங்கி நிற்றற்கேற்ற சிறந்த இடங்கள் தலையின் உச்சியும் நெற்றியும் புருவநடுவும் மார்பும் நெஞ்சமும் நெஞ்சநடுவும் மூலமும் என ஏழிடங்கள் உளவாகலின் அவ்வேழிடங்களுந் திருப்பருப்பதம், திருக்கேதாரம், காசி, குருக்கேத்திரம், பிரயாகை, தில்லை, திருவாரூர் ஆமென

வகுத்து, அவ் வேழிடங்களிலுந் திருக்கோயில்கள் அமைத்து, அவற்றின்கட் சிவலிங்க உருவினை நிறுத்தி அதன்கண் இறைவனை, நம் பண்டைப் பெரியார்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றார். புறத்தே இவ் விந்தியநாட்டின்கண் ஏழிடங்களிலே வைத்து அங்ஙனம் இறைவனை வழிபட்டு வருதல்போலவே, அவர்கள் தம துடம்பின் அகத்தேயும் அவ்வேழிடங்களில் இறைவன்றன் ஒளியுருவினை நிறுத்தி, அதன்கட்டமது கருத்தினை ஒருமுகப்படப் பதித்து வழிபாடாற்றி வருதலையும் மேற்கொண்டு நிற்கின்றார். இவ்வுண்மை,

"சென்னி சீசைலம் பாலங்கேதாரந் திகழ்தரு புருவமத்தியமே
மன்னியகாசி வண்குயத்தானம் வளர்குருக்கேத்திரம் இதயந்
துன்னிய புண்ணியப் பிரயாகை சொல்லும் அவ்விதயத்தின் நடுவண்
மின்னிடு தெய்வ சிதம்பரம் மூலாதாரத் தாரூர் என்பர் மெய்க்கண்."

என்னுஞ் சூதசங்கிதைச் செய்யுளால் அறியப்படும். இவ் விந்திய நாட்டின் வடக்கைத் தலையாகவுங் குமரிமுனையுள்ள தெற்கை அடியாகவுங் கொண்டால், இமயமலைக் கண்ணதான திருக்கைலாயத்தை அத்தலையின் உச்சியாகவும். அம்மலைச்சாரலின் கண்ணதான திருக்கேதாரத்தை நெற்றியாகவும், அதற்குக் கீழ்க்கண்ணதான காசியைப் புருவத்தின் நடுவாகவுங் கோடல் பொருந்தும். ஆனற், காசியின் வடக்கேயுள்ள குருக்கேத்திரத்தை மார்பாகவும், அதற்குத் தெற்கேயுள்ள பிரயாகையை நெஞ்சமாகக் கோடல் பொருந்துமேனும் பிரயாகைக்குத் தெற்கே நெடுந்தொலைவிலுள்ளதான தில்லைச்சிற்றம்பலத்தை அந்நெஞ்சத்தின் நடுவாகவுங் கூறுதல் பொருத்தமாகக் காணப்படவில்லை. மற்றுத், திருவாரூரை மூலத்தின் கண்ணதாகக் கூறுதலோ பொருத்தமுடைத்தேயாம். இங்ஙனம் புறத்தே வடக்கேயுந் தெற்கேயுங் காணப்படும் ஏழு திருக்கோயில்களையும் இவ்விந்திய நாடாகிய உடம்பின் ஏழுமுதன்மையான இடங்களில் உளவாகவைத்துக் கூறுதலிற் சிறிது

மாறுபாடு உளதேனும், இவைதம்மை மக்களுடம்பின் முதன்மையான ஏழு இடங்களில் உளவாக வைத்துச் செய்யும் அகமுக வழிபாட்டிற் சிறிதும் அத்தகைய மாறுபாடில்லையென்பது உணரற்பாற்று. யாங்ஙனமெனிற் காட்டுதும்.

வயிற்றின் அடிக்கீழ் எருவாய் கருவாய் என்னும் இரண்டுக்கும் நடுவே முக்கோண வடிவினதான ஓர் எலும்பினைப் பற்றிக்கொண்டு காணப்படும் இடமே 'மூலம்' ஆகும் என்று தவநூல்கள் நுவலாநிற்கின்றன. இம்மூலத்தின்கண்ணதான அனல் மிகாதுங் குறையாதும் இருக்குமாயின் மக்களுடம்பு எல்லா நலங்களும் உடையதாய் நீண்டகாலம் அழிவின்றி நிலைபெறும்; அவ்வாறின்றி அவ்வனல் தன் நிலையினின்றும் மிகுந்து விடுமாயின் அஃதுடம்பெங்கும் பரவி உடம்பிலோடுஞ் செந்நீரினை உரிஞ்சி உயிரை உடம்பினின்றும் அகற்றும்; அல்லதது தன்னிலையிற் குறைந்து விடுமாயின் உடம்பினுள்ளோடுஞ் செந்நீருஞ் சூடுகுறைந்து உறைய உயிர் அவ்வுடம்பில் நிலையாதாய் அதனைவிட்டு அகலும். இவ்வாறு மூலத்திலுள்ள சூடு மிகுந்தேனுங் குறைந்தேனுங் காணப்படும்போதெல்லாம் வெப்பு நோயும் பிறநோய்களும் உடன்காணப்படுகின்றன. இந்நுட்பத்தை நன்குணர்ந்தன்றே மேனாட்டு மருத்துவ ஆசிரியரான லூயிஸ்கூன்* என்பார் வயிற்றின் கீழ்ப்பகுதியைக் குளிர்ந்தநீராற் கழூவும் இயற்கைமுறையைக் கண்டு, அதனால் எல்லா நோய்களையும் எளிதில் நீக்கிக்கொள்ளும் வழி காட்டலாயினர். எத்துணைக்கொடிய வெப்பு நோய் கொண்டாருந் தமது வயிற்றினடியைக் குளிர்ந்த நீரினுள் அமிழ்த்தி அதனைச் சிறிதுநேரங் கழுவுவராயின், அவ்வெப்புநோய் உடனே தணிந்து போதலை எந்நாளும் எளிதிற்காணலாம். ஆகவே, உடம்பெங்கும் பரவுங் கொடிய காய்ச்சலின் சூடு வயிற்றின அடிமூலத்தினின்றே மிகுந்து தோன்றி உடம்பெங்கும் பரவும் உண்மை இது

---

*Louis Kuhne; see his "New Science of Healing."

கொண்டு தெற்றென அறியப்படும். இங்ஙனமே, மூலத்தின் சூடு குறைய உடம்பெங்குமுள்ள சூடும் உடன்குறையக் குளிர்நோய் காணுங்காலும், வயிற்றினடியை நீருள் அமிழ்த்திக் கழுவுமுறையாற் கழுவ, அங்ஙனங் கழுவிய சிறிது நேரத்திலெல்லாம் உடம்பெங்கும் இருக்கவேண்டுஞ் சூடு இருக்குமளவாய்ப் பரவ, அக்குளிர்நோய் நீங்கிவிடுதலுங் கண்கூடாய் அறியக்கிடக்கின்றது. இவ்வாற்றுல், மூலத்திலுள்ள அனலே உடம்பினிருப்புக்கும் அழிவுக்கும் ஏதுவாய் நிற்றல் நன்கு விளங்காநிற்கும். இத்துணைச் சிறந்ததாகிய மூல அனலிலே இறைவனது ஒளிவடிவை அகக்கண்ணுல் விளங்கக் கண்டு அதன் கண்ணே நினைவைப் பதித்து உள்ளம் உருக வல்லார்க்கு, அவர்தம் உடம்பும் உயிரும் அவ்வொளியினுல் ஊடுருவப் பெற்று அழிவின்றித் திகழும். இஃது,

"எருவிடும் வாசல் இருவிரன் மேலே
கருவிடும் வாசல் இருவிரற் கீழே
உருவிடு சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடு சோதி கலந்து நின்ருனே."

என்னுந் **திருமூலர்** திருப்பாட்டால் நன்கறியப்படும்.

அற்றேல் அஃதாக; இவ்வுடம்பினகத்தே வயிற்றினடியில் மூலவனலும் அதன்கண் இறைவனொளியும் ஒளிருமாப்போற், புறத்தே திருவாரூரின் கண்ணும் அவையிரண்டும் ஒளிருதல் கண்டிலம், அதனுல் அத்திருக்கோயில் இவ்விந்திய நாடாகிய உடம்பின் மூலத்தே அமைந்துளதென்றல் யாங்ஙனம் பொருந்துமெனின்; அது பொருந்துமாறு காட்டுதும். இவ்விந்தியநாட்டின் இயற்கையமைப்பை ஓவியத்திற் காண்பார்க்கு, இத்தென் றமிழ்நாடு முக்கோணவடிவினதாய் அமைந்திருத்தல் நன்கு விளங்கும். முக்கோணவடிவு தீயின்வடிவினைக் குறிப்பதோர் அடையாளமாம். என்னை? நெருப்பு எரியுங்கால் அதன் அனற்பிழம்பு அடியில் அகன்று மேலெழுங்காற் குவிந்து முக்கோணவடிவினதாய்த் திகழக் காண்டலின்,

இத்தென்றமிழ்நாடு முக்கோணவடிவிற்றாய்த் திகழ்தல் கொண்டும், இதனையடுத்தே இந்நிலவுலகத்தின் சூடு மிகுந்த நரம்பிணேட்டம் (Equator) செல்லுதல்கொண்டும், வடநாடுகளெல்லாங் குளிர்மிகுந்தே நிற்க இந்நடுநரம்பினை யடுத்த தென்னாடுகளே வெம்மை மிகுந்தனவாயிருத்தல் கொண்டுந் தென்னாட்டின் கண்ணதான 'திருவாரூர்' இவ் விந்திய நாட்டுக்கு மூலமான முக்கோண வடிவின்கண் அமைக்கப் பட்டுளதென்னும் ஆன்றோருரை சாலவும் பொருந்துவதேயாம் என்க. இவ்விந்திய நாட்டின் வட பகுதியிற் குளிர்மிகுந்த நரம்பிணேட்டமும், இதன் றென் பகுதியில் அனல் மிகுந்த நரம்பிணேட்டமும், இவையிரண் டுக்கு மிடையே நடுநரம்பிணேட்டமும் அமைந்துளவென்று ஆசிரியர் தெய்வத்திருமூலர்,

"இடைபிங் கலைஇம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே"

என்றருளிச் செய்தமையுங் கருத்திற் பதிக்கற்பாற்று. இச் செய்யுளிற் கூறப்பட்ட 'இடைநாடி' என்பது குளிர் மிகுந்த தொன்றாய் இமயமலைப் பக்கமாய்ச் செல்லா நிற் கின்றது. 'பிங்கலைநாடி' என்பது அனல்மிகுந்த தொன்றாய் இலங்கைப் பக்கமாய்ச் செல்லா நிற்கின்றது. "இடை பிங்கலை இமவானோடு இலங்கை" என்பதில் இடை என் பதனை இமவானோடும், பிங்கலை யென்பதனை இலங்கை யோடும் நிரல்நிரையாக இயைத்துப் பொருள் கொள்க; இங்ஙனம் பொருள்கொள்ள அறியாதார், இடைநாடியை இலங்கையோடும், பிங்கலை நாடியை இமவானோடும் இயைத் துப் பிழைபடுவர். சூடுமிகுந்த பிங்கலைநாடி இலங்கைப் பக்கமாய்ச் செல்லுமென்றலே இஞ்ஞான்றை இயற்கைப் பொருள் நூலுக்கும் பொருத்தமாய்க் காணப்படுகின்ற தல்லாமல், அஃது இமயமலைப் பக்கமாய்ச் செல்லுமென்றல் அதற்குப் பொருத்தமாய்க் காணப்படாமையும் ஆராய்ந் துணர்தல் வேண்டும். "நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை"

என்பதில் மேரு என்பது பொதுவாக எல்லா மலைக்கும் பெயராகலின் அதனைத் திருவண்ணுமலைக்குப் பெயராகக் கோடலே பொருத்தமாம்; ஏனெனில், இலங்கைக்கும் இமயத்திற்கும் நடுநிற்குஞ் சிறந்த தெய்வமலை அதுவே யாகலானும், அடுத்து ஓதப்பட்ட 'தில்லைவனம்' அத் திருவண்ணுமலைக்கு அணித்தாய் இருப்பதொன்ருகலா னும், திருவண்ணுமலையை நடுநாடியாகிய 'சுழுனை'யாகக் கொண்டாலல்லாமல் 'தில்லை'யை அச்சுழுனையின் நடுவாகக் கொள்ளுதல் இயையாதாகலானும், இவ்வாறன்றி ஈண்டு 'மேரு' என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பட்ட மலை இமய மலைக்கும் அதற்கப்பாலுள்ள சீனதேயத்திற்கும் வடக்கே அப்பெயர் பெற்றுள்ளதொரு மலையெனக் கொள்ளின் அஃது இலங்கைக்கும் இமயத்திற்கும் நடுவணதாதல் செல்லாதாகலானும், செல்லாதாகவே அதன்நடுவிற் றில்லைமன்று உண்டென்றல் பொருந்தாதாகலானும் இத் திருமூலரது திருப்பாட்டிற் போந்த 'மேரு' என்பதற்குத் திருவண்ணுமலை யெனப் பொருளுரைத்தலே பொருந்து வதாமென்று தெளிந்து கொள்க.

இனி, இவ்வுடம்பினகத்தே நெஞ்சத்தாமரையில் இறைவன் ஒளிவடிவினனுய் விளங்கும் உண்மையினைச் சிறிது விளக்குவாம். மக்களாய்ப் பிறந்த மன்னுயிர்களும் மற்றைச் சிற்றுயிர்களுந் தமதுடம்பின் புறத்தேயுள்ள மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐந்து அறிவுப் பொறிகளையும், நா கை கால் எருவாய் குறியென்னும் ஐந்து தொழிற்பொறிகளையும் இயக்கவல்லவைகளா யிருக்கின் றனவே யன்றி, உடம்பினகத்தேயுள்ள மூளை நெஞ்சப்பை மூச்சுப்பை தீனிப்பை மலஞ் சிறுநீர்ப்பை முதலானவை களை யெல்லாந் தாம் வேண்டியவாறெல்லாம் இயக்கவல் லவைகளாயில்லை. நம் நினைவுக்கேற்றபடி யெல்லாம் எவ் வாறு மூளை இயங்குகின்றது? நம்மையறியாமலே நாம் உறங்குவதும், நம்மை யறியாமலே நாம் விழிப்பதும் யாங்ஙனம் நடைபெறுகின்றன? நாம் உள்ளிழுக்குந் தூயகாற்றைச் செந்நீரிற் சேர்ப்பித்து அதிலுள்ள நச்சுக்காற்றை வெளிப்

படுத்தும் அருஞ் செயலைநெஞ்சப்பைகள் எவ்வாறு செய்கின்றன? நாம் உட்கொள்ளும் உணவை ஏற்குந் தீனிப்பை அதனை நம்முடம்பின் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டும் பலவேறு சாறுகளாக எவ்வாறு பிரித்து எவ்வாறு அவற்றை உட்செலுத்துகின்றது? அதனால் அதனினின்றும் பிரித்துக் கீழ்க்கழிக்கப்படுங் கழிவுகளாகிய மலமுஞ் சிறுநீரும் மலநீர்ப்பைகளுக்குப் போதலும் பின்னர் அவற்றினின்று புறம்போக்கப்படுதலும் எங்ஙனம் நிகழ்கின்றன? என்று எவ்வளவுதான் நாம் ஆராய்ந்து பார்த்தாலும் அந்நிகழ்ச்சிகள் நம் அறிவுக்குச் சிறிதும் புலப்படுகின்றில. நமதுடம்பின் அகத்துள்ள பல்வேறு வியத்தகு உறுப்புகளின் இயற்கையுஞ் செயலும் ஒரு சிறிதும் அறியமாட்டாச் சிற்றறிவினேமாகிய யாமே அவற்றைப் படைத்து யாமே அவற்றை இயக்குகின்றேமெமன உரைத்தால், அவ்வறிவில்லா உரை அறிவிற் சிறியராயினார்க்கும் நகையினை விளையா தொழியுமோ? மற்று, அறிவிற் பெரியராயினார்க்கோ அஃது எத்துணைப் புல்லிய குருட்டுரையாகக் காணப்படும். ஆகவே, நமதுடம்பின் அகக்கருவி புறக்கருவிகளின் இயற்கையும் இயக்கமும் அறியமாட்டாப் பேரறியாமை வாய்ந்த நாம் அவற்றை அமைத்தலும் நடத்தலும் ஒரு சிறிதுஞ் செய்யமாட்டாமையின், நம் அறிவுக்கு எட்டா அவை யிரண்டனையுஞ் செய்யவல்லவன் இறைவன் ஒருவனே யாவனென்பதூஉம், அவ்விறைவன் அகம் புறம் என்னும் எல்லா இடங்களிலும் வான்வெளிபோல் நிறைந்து நிற்கும் இயல்பின னாகலின் அவனே எல்லா உடம்புகளின் அகத்தேயும் ஊடுருவி நின்று அவ்வுடம்புகளின் அகப்புற வுறுப்புகள் அத்தனையும் இயக்கி அவை தம்மை உயிர்களுக்குப் பயன்படுத்துகின்றன னென்பதூஉம் நன்கு முடிக்கப்படும்.

இங்ஙனமாக இறைவன் உடம்பினகத்துள்ள எல்லா உறுப்புகளிலும் நின்று அவையிற்றை இயக்குகின்றானேனும், அவ்வுறுப்புகளிற் றலைசிறந்ததாகிய நெஞ்சத் தாமரையினுள் நின்றே ஏனையெல்லா உறுப்புகளையும்

இயக்குகின்றனனென்பது ஆராய்ச்சியால் இனிது புலனுகின்றது. ஒரு நாழிகை வட்டிலின் (கடிகாரத்தின்) அகத்தும் புறத்துமுள்ள உருள்களும் முட்களும் அதன் முதன்மையான சுழல்வில்லின் விரிவினுலேயே இயக்கப்படுதல் போலவும், ஒருபெருந் தொழிற்சாலையில் இயங்கும் பல்வகைப் பொறிகளும் அதன்கண் முதன்மையாய் மிகுவிரைவுடன் சுழலும் ஒரு பேர் உருளினுலேயே இயக்கப்படுதல் போலவும், ஒரு புகைவண்டித்தொடர் அதனை ஈர்த்துச் செல்லும் ஒரு நீராவி வண்டியினுலேயே இயக்கப்படுதல் போலவும், மக்களுடம்பின் நெஞ்சத்தாமரையினுள்ளே விளக்கின் சுடர்க்கொழுந்தென அசையும் இறைவனது அருள்ஒளியி னசைவினுலேயே இவ்வுடம்பின் உள்ளும் புறம்புமுள்ள எல்லா உறுப்புகளுந் தொடர்புபட்டு அசையா நிற்கின்றன. இத்துணைச் சிறந்ததாகிய நெஞ்சப் பையினசைவுக்குச் சிறிது ஊறுபாடு நேருமாயினும் இவ்வுடம்பினசைவு நின்றுவிடும்; அது நிற்கவே, உயிர் உடம்பின்கண் நிலையுதல் இல்லையாய் ஒழிந்துபோம் இது, நெஞ்சடைப்பு நோயால் ஒரு நொடிப்பொழுதில் இறந்து படுவார் மாட்டு வைத்து நன்கறியப்படும்.

அற்றேல், நமது அறிவி னியக்கத்திற்குத் தலையின்கண் அமைந்த மூளையே இன்றியமையா உறுப்பாய் விளங்கி நிற்றலின் அதன்கட் புலப்பட்டு நின்றே இறைவன் இவ்வுடம்பினை இயக்குகின்றுன் என்னுமோவெனின்; என்னும்; என்னை? விழித்திருக்கும் நிலையிலன்றி, அயர்ந்த உறக்கத்தில் மூளையிருந்தும் அஃது உயிரின் அறிவு விளக்கத்திற்குத் துணை செய்யாமல் ஓய்ந்து கிடத்தலானும், மற்று நெஞ்சத்தாமரையோ விழிப்பின் மட்டுமேயன்றி உறக்கத்திலும் ஓவாது இயங்குதலானும், நோய்கொண்டார் சிலர்க்கு மூளையை மண்டையினின்றும் பிரித்தெடுத்த வழியுஞ் சில நாழிகை நேரம் அவரதுயிர் அவருடம்பின்கண் நிற்க அவரது நெஞ்சப்பையை அவ்வாறு அவரது உடம்பினின்றும் பிரித்தெடுத்த அந்நொடியே அவரதுயிர் உடம்பைவிட்டு ஏகக்காண்டலானும், நெஞ்சத்தாமரையின்

இயக்கமே இவ்வுடம்பினியக்கத்திற்கும் அதன்கண் உயிர் நிலவுதற்கும் இன்றியமையாததாய் நிகழ்கின்றதென்ப தூஉம், அவ்வியக்கம் மக்களறிவுக்கும்ஆற்றலுக்கும் எட்டா நிலைக்கண் நிகழ்தல்பற்றி அதனை நிகழ்த்துவான் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனேயாவன் என்பதூஉம் பெறப்படு தலின் என்க. விழிப்பின்கண் மூளையில் முனைத்து நின்ற உயிர் உறக்கத்தின்கண் நெஞ்சப்பையினுட் சென்றடங்கி விட, அதனை அங்கே சில நாழிகை நேரம் இளைப்பாற அடக்கி வைத்து அவ்விளைப்புத் தீர்ந்தவுடன் அதனை ஆண்டு நின்றும் மேலெழுப்பிவிடும் இறைவனது அருட் பெருஞ் செயல் நெஞ்சத்தாமரையினுள்ளே தான் ஓவாது நடைபெறுகின்றதென ஓர்ந்துகொள்க. இந்நெஞ்சத் தாமரையின்கண் இடைவிடாதொளிரும் இறைவன்றன் றிருவருளொளியிலே தமது கருத்தைப் பதித்திருப்பார்க்கு எல்லாப் பெறற்கரும் பேறுகளும் வாய்க்குமென்பது தெரிப் பார் ஆசிரியர் தெய்வத்திருமூலர்,

"நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யுந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே."

என்று திருமந்திரத்தின்கண்ணும் அருளிச் செய்தாரென் பது. வடமொழியிற் கைவல்யோப நிடதமும்.

"தனிமையான இடத்தே இனிதிருந்து, தூயனாய்க், கழுத்துத்தலை யுடம்புகளை நேரொக்க நிறுத்தி, நிலைகளைக் கடந்து ஐம்புலன்களையும் ஒடுக்கி, அன்பினாற் றன் ஆசிரி யனை வணங்கி, நெஞ்சத்தாமரையைத் துகளற்ற தூயதாக நினைந்து, அதன் நடுவிலே மாசற்றதாய்த், துயரமில்லாத தாய், எண்ணுதற்கரியதாய், வெளிப்படுதலிலதாய்ப், பல வடிவினதாய்ச், சிவம் என்னும் பெயரினதாய், உலகங்கள் ஒடுங்குமிடமாய், அழிவில்லாததாய், நான்முகற்குப் பிறப் பிடமாய், அதுவெனப்படுவதாய், முதல் நடு ஈறு இல்லாத தாய், ஒரே பொருளாய், எங்கும் நிறைந்ததாய், அறிவும்

இன்பமும் வாய்ந்ததாய், உருவமற்றதாய், இரண்டற்றதாய், உமையொரு கூறதாய், எல்லாவற்றிற்கும் மேலான தலைமையுடையதாய்ச், செல்வத்தின் மிக்கதாய், மூன்று கண்களையுடையதாய், நீலமிடற்றினதாய்ப், பொறுமையிற் சிறந்ததாய், எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாய், எல்லாவற்றினையுஞ் சான்றாக நோக்குவதாய் இருப்பதனை வழுத்தி, அதனால் முனிவனாகி, இருளின்மேற் போவன்." என்று இங்ஙனமே நெஞ்சத்தாமரையுள் வைத்து இறைவனை வழிபடுமாற்றை விரித்துரைத்தமை காண்க.

அது பொருந்துமாயினும், உடம்பினகத்தே இறைவன் முனைத்து நின்றாடும் உறுப்புத் தாமரை முகைவடிவாய்த் தொங்கும் நெஞ்சப்பையின் அகமேயாயினாற்போலப், புறத்தே இவ்வுலகினுக்கு அல்லது இவ்விந்திய நாட்டுக்குத் தில்லைச் சிற்றம்பலமே நெஞ்சத்தாமரையா மென்றல் யாங்ஙனம் பொருந்துமெனின்; அதனையுஞ் சிறிது விளக்குவாம். இந்நிலவுலகின் நடுவே ஊடுருவிச் செல்லும் அனற்கோடு இலங்கைக்குத் தெற்கேயுளதேனும், அதன் பரப்பு அதற்குத் தெற்கேயும் வடக்கேயும் ஆயிரத்தறுநூறுகல் வரையில் உளதென்று இஞ்ஞான்றை நிலநூல்வல்லார் கணக்கெடுத்திருத்தலின், இலங்கைக்கு வடமேற்கிலுள்ளதான தில்லைச்சிற்றம்பலம் அவ்வனற்கோட்டின் பரப்பின் கண்ணேதான் அமைந்திருத்தல் தெள்ளிதின் விளங்கா நிற்கும். உயிர்களதுடம்பின் நடுவே செல்லுஞ் சுழுனை நாடிபோல், இவ்வுலகின் நடுவே அனற்கோடு செல்கின்றதெனவும், அச் சுழுனை நாடியிற் றொங்கும் நெஞ்சத்தாமரை முகிழ்போல் அவ்வனற் கோட்டின்கட் டில்லைச்சிற்றம்பலம் அமைந்துளதெனவுந் **திருவாதவூரடிகள் புராணமுங் கோயிற் புராணமும்** முறையே இவ்வுண்மையினை,

"இடம்படும் உடம்பின் மூலத் தெழுந்தநற் சுழுனை நாடி
உடன்கிளர் ஒளியே யாகி யொளியில் அஞ்செழுத்தும் ஒன்றாய்
நெடுங்குழல் ஓசை யாகி நிலவும்அவ் வோசைபோய் அங்கு
அடங்கிய இடமே யென்றும் ஆடும் அம்பலம தாகும்."

என்றும்,

"நாடரு நடுவின் நாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடும்அங் கதனின் மூலக் குறியுளது அதற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணு மன்னும்அம் பலமொன்று உண்டு
[அங்கு
ஆடுதும் என்றும் என்றான் என்னை யாளுடைய ஐயன்."

என்றும், விளக்கிக் காட்டினமை காண்க. இன்னும் இந் நிலவுலக அமைப்பினைக் காட்டும் ஓவியத்தினை ஒரு சிறிது நோக்குவார்க்கும், இந் நிலவுருண்டையின் ஒரு பாதியில் இவ்விந்தியநாடு நடுவே யமைந்திருத்தலும் இத்தென்றமிழ் நாடு அதில் ஒரு தாமரை முகைவடிவாய்த் தொங்கிக் கொண்டிருத்தலும், அத்தாமரை முகையினுள்ளே தில்லைச் சிற்றம்பலந் திகழ்ந்துகொண்டிருத்தலுங் கண்கூடாய்க் காணக்கிடக்கும் என்க. எனவே, நமதுடம்பினகத்தே நெஞ்சத்தாமரையினுள் நுண்ணிய வெளியிலே அஃதாவது சிற்றம்பலத்திலே இறைவனது அருளொளி முனைத்து விளங்கி யியங்கும் இயக்கத்தால் நம்முடம்பு முயிரும் இயக் கப்படுதல் போலவே, இவ்வுலகின் புறத்தேயுந் தாமரை முகிழ்வடிவாய் அமைந்த இத்தென்றமிழ் நாட்டில் தில்லைச் சிற்றம்பலமாகிய நுண்வெளியிலே இறைவனது அரு ளொளி யசைவாகிய திருக்கூத்து நடைபெற்று இவ் வுலகினை இயக்கா நிற்கின்றதென்னு முண்மை நன்கு பெறப்படுமென்க.

அஃதொக்கு மாயினும், இந்நிலவுலகின் ஒரு பாதி யின் கண்ணதான இவ்விந்திய நாட்டின் தில்லைச்சிற்றம் பலத்தே இறைவனது திருவருட் கூத்து நடைபெறு மென்றாற்போல, அதன் மறுபாதிக் கண்ணதான அமெ ரிக்க தேயத்திலும் அப்பெற்றியதான ஓரிடத்தே இறை வன்றன் அருட்கூத்து நடைபெறுமெனக் கூறுதல் வேண் டும்; மற்று அங்ஙனங் கூறுதற்குச் சான்றில்லை யாலோ வெனின்; அற்றன்று; ஆண்டும் இறைவன்றன் அருட் கூத்து நிகழும் இடம் உண்டென்பது காட்டுவாம். வட அமெரிக்காவுக்குந் தென்னமெரிக்காவுக்கும் நடுமையமாகிய "மெகுசிகம்," "பேரு" என்னும் பண்டை நாடுகளில்

இற்றைக்குச் சிறிதேறக்குறைய ஏழாயிர ஆண்டுகட்கு முன்னமே அமைக்கப்பட்ட மிகப் பெரிய பழைய சிவபிரான் திருக்கோயில்கள் உண்டு. அவைகள் இந்நாளில் இடிந்து காடு மூடிக்கிடப்ப, வெள்ளைக்கார அறிஞர்கள் அக்காடு களின் உள் நுழைந்து சென்று, அத்திருக்கோயில்களின் மிக வியப்பான அமைப்புகளைக் கண்டு இறும்பூதுற்றவர் களாய், அவற்றின்மேன் மூடிய காடுகளை அழித்து, இடிந்துகிடக்கும் அக்கோயில்களையும் இடியாமல் அவற் றின்கண் எஞ்சி நிற்கும் பகுதிகளையும் பாதுகாத்துக், காணவிரும்புவாரெல்லாரும் அவற்றை வந்து காண்டற்கு வேண்டும் ஒழுங்குகள் எல்லாம் செய்திருக்கின்றார்கள். அக்கோயில்கள், நம் தமிழ் நாட்டில் தில்லை, ஆரூர், கூடல், திருவண்ணாமலை முதலிய நகர்களில் உள்ள சிவபிரான் திருக்கோயில்களைப் பார்க்கினும் மிகப் பெரியனவாயும், மிக அரிய தொழில் நுட்பம் வாய்ந்தனவாயும், இறைவன் திருவுருவம் நிறுத்தப்பட்ட கருவறைகளின் சுவர்களிற் பொற்றகடுகள் பதித்து மேன்முகடுகளிற் பொன்னோடுகள் வேயப்பட்டனவாயுங் காணப்படுகின்றன. இக்கோயில்களிற் பகலவன் திருவுருவில் வைத்தே அஞ்ஞான்றை மக்கள் சிவபிரானை வணங்கி வந்தனர்; அனற்சுடருக்கு அடை யாளமான சிவலிங்கங்களும் அக்கோயில்களில் நிறுத்தப் பட்டிருக்கின்றன; இச்சிவலிங்க வடிவாக நிறுத்தப்பட்டிருக் கும் ஓர் உருவினைக் கண்ட வெள்ளைக்கார அறிஞர் சிலர் அதனைத் தமது மதத்திற்குரிய 'சிலுவை' யென்வே நினைந்து விட்டனர். ஆறைற் கிறித்துமதந் தோன்று தற்குப் பல நூற்றுண்டுகளின் முன்னரே நடு அமெரிக்கா வின் கண்ணவான நகர்களில் உள்ள பழைய கோயில் களில் நிறுத்தப்பட்ட அத்திருவுருவினைச் 'சிலுவை' என்றல் ஒரு சிறிதும் இசையாது. நடுவே ஒரு கோட்டு வடிவுஞ் சுற்ற ஒரு வட்டவடிவும் உடைய ஓர் உருவே தொலைவிலிருந்து நோக்குவார்க்குச் "சிலுவை" போற் றோன்றுநிற்கும். இனிச், சிலுவை வடிவுஞ் சிவலிங்கவடிவே யாகுமெனும் உண்மையினை அவ்வெள்ளைக்காரரில் அறி வான் ஆன்ற ஒரு சான்றோரே * நன்கெடுத்து விளக்கிக்

காட்டி யிருக்கின்றார். ஆதலாற் பழைய நடு அமெரிக்காவின் றிருக்கோயில்களில் நிறுத்தப்பட் டிருக்குந் திருவுருச் சிவலிங்கவுருவே யல்லது சிலுவையுரு வன்றெனக் கடைப்பிடிக்க.

அங்ஙனம் இறைவனது ஒளியுருவு நிறுத்தப்பட் டிருக்கும் ஒருகோயிலின் கருவறை முழுதும் பொற்றகடு பதித்துப் பொன்னொளி வீசுதல்பற்றி அதனை அஞ்ஞான்றிருந்த மக்கள் "பொன்னம்பலம்" எனத் தமது மொழியில் வழங்கி வந்தமையும் அந்நாட்டின் பண்டை வரலாறு கூறும் நூலால் நன்கறியக் கிடக்கின்றது.† எனவே, இந்நிலவுலகின் ஒரு பாதியில் நெஞ்சத்தாமரையென விளங்குந் தில்லைப் பொன்னம்பலத்தே இறைவன்றன் அருட்கூத்து நடைபெறுமாறு போலவே, இதன் மறுபாதியில் நெஞ்சத்தாமரையென வயங்கும் நடுஅமெரிக்காவின் ஒரு பழம்பெருந் திருக்கோயிலின் பொன்னம்பலத்தேயும் இறைவன்றன் அருட்கூத்து நடைபெறுகின்றமை தெள்ளிதின் உணரப்படும்.

நாமிருக்கும் இம் மேலுலகினுக்கு நேர்கீழ்ப் பாதல உலகு அமெரிக்கதேயமேயாகும்; அத்தேயத்தின் நடுவணதான மெகுசிகநகரும் நாம் வணங்குந் தில்லையம்பலத்திற்குச் சிறிதேறக்குறைய நேர்கீழ்க் கண்ணதாகவே அமைந்திருக்கும் உண்மையினை இந்நிலவுலகின் ஓவியத்தை நோக்குதலால் எளிதில் அறிந்துகொள்ளலாம். இன்னும், மேலே தில்லையம்பலமுங் கீழே மெகுசிக அம்பலமும் அமைந்திருக்குமிடம் இந்நில வுலகின் அனல் நடுக்கோட்டை யடுத்தேயிருத்தலானும், அவ்வனல் நடுக்கோட்டிலிருந்தே இந்நிலவுலகு மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ப் பகலவனைச் சுற்றிச் சுழலுதலானும். இறைவன்றன் அருட்கூத்தாகிய இயக்கம் இவ்விரண்டு அம்பலங்களுக்கும் ஊடாகவே நடைபெறுகின்றதென ஓர்ந்து கொளல் வேண்டும் என்பது.

---

* Eliphas Levi's The Mysteries of Magic. p. 84.
† Harmsworth History of the World, p. 5867.

இனிப், பிரயாகையை நெஞ்சமாகக்கோடல் பொருந்தாமையினை மேலே காட்டினும்; அங்ஙனமே, குருக்கேத்திரத்தை மார்பாகக் கோடலும் பொருந்தாமை மேலே காட்டப்பட்டது. ஆகவே, அவ்விரண்டனையும் புறத்தே அவ்வுறுப்புகளாக நினைதலைவிட்டு, இவ்வுடம்பினகத்தே நெஞ்சத்தாமரையைப் பிரயாகையாகவும், நெஞ்சத்திற்குப் புறத்தேயுள்ள மார்பினைக் குருக்கேத்திரமாகவும் நினைந்து கொண்டு, அவையிரண்டனையும் ஒருவாற்ருற் பொருத்திக் கொள்க.

இனிக், காசியைப் புருவநடுவின்கண் உளதாக வைத்து வழிபடுதற்குரிய இயைபினைச் சிறிது விளக்குவாம். நமதுடம்பின் நடுவே செல்லுஞ் சுழுனைநாடியின் இடப்புறத்தே இடாநாடியும் வலப்புறத்தே பிங்கலநாடியுஞ் செல்கின்றன. இடாநாடியானது வலக்காற் பெருவிரலிலிருந்து துவங்கி, வயிற்றின்கீழ் மூலத்தே வந்து குறுக்கிட்டு இடப்பக்கத்தே மாறி இடது மூக்கின்கண் வந்து முடிகின்றதென்றும், பிங்கல நாடியானது இடக்காற் பெருவிரலிலிருந்து துவங்கி மூலத்தே வந்து குறுக்கிட்டு வலப்பக்கத்தே மாறி வலது மூக்கின்கண் வந்து முடிகின்றதென்றும், நடுநிற்குஞ் சுழுனைநாடி எருவாய் கருவாய்க்கிடையே துவங்கிக் கொப்பூழ் மேல்வயிறு, நெஞ்சு, மிடறு, புருவநடு என்னும் ஐந்திடங்களின் அகங்களையும் ஊடுருவிக் கொண்டு தலையின் உச்சியிற் சென்று முடிகின்றதென்றுந் தவநூல்கள் நுவலாநிற்கின்றன. இவ்வாறு தலைக்கண் வந்து முடியும் நரப்புக்குழைகள் மூன்றும் புருவத்துக்கு நேரே தலையினகத்துளதாகிய நடுவிடத்தே போந்து ஒருங்கு கூடுதல் போலப் புறத்தே காசிமா நகரின்கண்ணுங் கங்கை யமுனை சரச்சுவதி என்னும் மூன்றியாறுகளும் போந்து ஒருங்கு கலத்தலிற் காசியைப் புருவநடுவின்கண் உளதாக வைத்து வணங்குதல் சாலவும் பொருந்துவதேயாம். பண்டைக்காலத் தோடிய சரச்சுவதியென்னும் யாறு இக்காலத்தில் நிலத்தினுட் சுவறி இலதாயிற்றேனும், முன்னொருகால் மூன்றியாறுகளும் ஒருங்குகலந்த இடங் காசிமா

நகரேயாகலின், அதனை அதுபற்றிப் புருவநடுவினதாக வைத்து வழிபாடாற்றுதலில் இழுக்கொன்றுமில்லையென்க.

இன்னும், புருவத்துக்கு நேராகத் தலையினுள்ளே ஒரு கோடு செல்வதாகவுந் தலையுச்சியின் நடுவிருந்து கீழ் நோக்கி ஒரு கோடு அதனுள்ளே செல்வதாகவும் நினைந்து, அவையிரண்டும் ஒன்றையொன்று ஊடறுக்கும் இடமே புருவநடுவென்றும் நெற்றிக்கண்ணென்றும், இறைவனும் உயிரும் ஒன்றனோடொன்று பிரிவற விராய் ஒளிரும் நடு நிலையாமென்றும் உணர்ந்துகொள்க. இதனை ஆசிரியர் திரு மூலர்,

"கண்நாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
அண்ணாக்கி னுள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே"

என்றும்,

"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடஞ்
சிற்றம்பல மென்று தேர்ந்துகொண் டேனே."

என்றும் நன்கு தெருட்டியருளினமை காண்க,

இனி, இவ்விந்திய நாடாகிய உடம்பிற்கு நெற்றி போல்வது திருக்கேதாரம் என்றும், அதன் தலையுச்சி போல்வது திருக்கைலாயம் என்றுங் கூறினமை, முன்னை யது இமயமலைச்சாரலிலும் பின்னையது அம்மலை மேலும் உண்மையினாலென்பதை முன்னரே விளக்கிப் போந்தாம். ஆகவே, புறத்தே ஏழிடங்களில் உளவான திருக்கோயில் களிற் சிவபிரான் றிருவருள்ஒளி முனைத்து நின்று ஆருயிர் கட்கு அருள் வழங்குமாப்போல், இவ்வுடம்பினகத்தேயும் மூலம் நெஞ்சம் செஞ்சத்தாமரை மார்பம் புருவநடு நெற்றி சென்னி என்னும் ஏழிடங்களிலும் இறைவன்றன் அரு ளொளி முனைத்து நின்று ஆருயிர்கட் கருள்செய்யும்

மறைந்த பேருண்மையினை மனத்தின்கட் பதித்துக்கொள் ளல் வேண்டுமென்பது.

இனி, இவ்விந்திய நாட்டைத் தாமும் அங்ஙனமே ஓர் உடம்பாக உருவகப்படுத்தி, அவ்வுடம்பின்கண் முதன்மை யான ஆறிடங்கள் உளவெனவும், அவை மூலம், கொப் பூழ், மேல்வயிறு, நெஞ்சம், மிடறு, புருவநடு* என்னும் ஆறுமாமெனவும், அவ்வாறிடங்களிற் புறத்தேயும் அகத் தேயுந் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, தில் லைச்சிற்றம்பலம், திருக்காளத்தி, காசி என்னும் ஆறு திருக்கோயில்களும் விளங்காநிற்குமெனவும் பரஞ்சோதி முனிவர்,

“ திருவளர் ஆரூர் மூலம், திருவானைக் காவே நாபி†
மருவளர் பொழில்சூழ் அண்ணா மலைமணி பூரம் நீவிர்
இருவருங் கண்ட மன்றம் இதயமாம் திருக்கா ளத்தி
பொருவருங் கண்டம் ஆகும் புருவமத் தியமே காசி”

என்று தாமியற்றிய திருவிளையாடற் புராணத்திலே கூறுநிற் பர். ஆனால், திருமந்திரம் முதலான பழைய நூல்கள் இங் ஙனங் கூறக் காணேம். என்றாலும், இக்கூற்றும் பொருத்த மாகவே காணப்படுகின்றது; யாங்ஙனமெனில், ‘திரு வாரூர்’ என்பது எருவாய் கருவாய்க்கிடையேயுள்ள மூலத் தின்கண்ணதாதலை முன்னரே விளக்கிப் போந்தாம்.

இனித், ‘திருவானைக்கா’ என்பது இறைவன் ஊற்று நீரிலும் விளங்குகின்றானென்பதனைக் காட்டுதற்பொருட்டு நீர்ஊற்று உள்ளதோரிடத்தில் அமைக்கப்பட்டதொரு திருக்கோயிலாகும்; இது புறத்தே நீரூற்றுள்ளதோரிடத் தில் அமைக்கப்பட்டாற்போலவே, நமதுடம்பின் அகத் தேயுங் கொப்பூழ்க்கீழ் உள்ள நீனிப்பை எந்நேரமும் நீர்

---

* இவை தம்மை வடநூலார் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனவழங்குவர்.

†(பாடம்) குய்யம்.

நிறைந்ததாக இருத்தலின் அதன்கண்ணும் இறைவன் அமர்ந்திருக்கும் அத்திருக்கோயில் உண்டென்பது பொருத்தமேயாம். நாம் வாயிலிடுஞ் சோறு காய் கனி கிழங்கு வித்துக் கீரை முதலியன பருப்பொருள்களேயாயினும், அவை வாயிலிடப்பட்ட வளவானே எச்சில் நீருடன் கூட்டிக்குழைத்து நீராக்கிக் கீழே இறக்கப்படுதலானும், அங்ஙனம் எல்லாப் பருப்பொருள்களும் நீராகக் குழைக்கப்பட்டுத் தீனிப்பைக்குச் சென்றாலல்லாமல் அவை செரியாமற் கக்கப்படுதலானும், ஒரோவொருகாற் செவ்வனே மெல்லாமல் இறக்கப்பட்ட பண்டங்கள் தீனிப்பையினுட் சென்றவுடனே செரித்தற் பொருட்டு வாயினின்றும் உமிழ்நீர் ஓவாது சுரந்து கீழிறங்கித் தீனிப்பைக்குச் சென்றுகொண்டேயிருத்தலானும், அதனொடு பித்தப்பையிலுள்ள பித்தநீருந் தீனிப் பையினுள் வந்துசேர்ந்து அவ்வுணவைச் செரிக்கச் செய்தலானும், இவ்விருவகை நீரும் போதாவிடின் விடாய் எடுப்ப மேலும் மேலும் நாம் தீஞ்சுவைத் தெண்ணீர் பருகிக் கொண்டேயிருத்தலானுங் கொப்பூழின் கீழிருக்குந் தீனிப்பை எஞ்ஞான்றும் நீர்நிறைந்ததாகவே இருக்குமாகலின் அதனை அகத்துள்ள திருவானைக்காவாகக் கோடல் சாலப் பொருந்துவதேயாம் என்க.

இனித், 'திருவண்ணாமலை' என்பது இறைவன் நெருப்புருவாய்த் தோன்றியதோரிடமாதல் பழைய வரலாறுகளால் அறியப்படுவதொன்றாகும். இங்ஙனம் இறைவன் நெருப்புருவாய் நின்ற இயல்பினை ஆசிரியர் திருமூலரும்,

"பிரமனும் மாலும் பிரானே நான்என்னப்
பிரமன் மால்தங்கள் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரன்அடி தேடி அரற்றுகின் றாரே"

எனத் திருமந்திரத்தில் (௬எஉ) அருளிச்செய்திருத்தல் காண்க. நமதுடம்பின் வயிற்றிலுள்ள தீனிப்பை மேற்சொல்லியவாறு நீர்நிறைந்ததா யிருப்பினும், அதன் மேற்பகுதி சூடுடையதாக அமைந்திருக்கின்றது. ஏனென்றால்,

வெளியே உணவு வெந்து நன்ருய்ப் பதப்படுதற்கு நீரும் நெருப்பும் இன்றியமையாது வேண்டப்படுதல்போல, உள்ளே இரைப்பையிற் சென்ற உணவும் இன்னும் நன்ருய்க் குழையவெந்து கூழாகிச் செந்நீரிற்கலத்தற்கு நீரொடு நெருப்பும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. அதனுற், றீனிப்பையின் மேற்பகுதி எஞ்ஞான்றும் அனன்றுகொண்டே யிருக்கின்றது. ஆகவே, புறத்தே நெருப்புருவில் இறைவன் றிருவண்ணுமலையில் விளங்கித் தோன்றினுற்போலவே, அகத்தே தீனிப்பையின் மேற் பகுதியில் உளதாகிய வெம்மையிலும் விளங்கி நிற்பனென் பதூஉம் பொருத்தமாகவே காணப்படுகின்றது.

இனி, இதன்மேலுளதாகிய நெஞ்சத்தாமரையின் கண்ணதாம் வெளியிலே அசையா நிற்கும் ஒரு பெருவிரல் அளவினதான ஒளிப்பிழம்பிலே இறைவன் விளங்கிநின்று இயக்கும் இயக்கத்தையே திருவம்பலக்கூத்து எனத் தவ நூல்கள் நுவலுமாறும், அக்கூத்து நிகழும் இடமே அகத் தும் புறத்துந் திருச்சிற்றம்பலமென வழங்கப்படுமாறும் முன்னமே விளக்கிக் காட்டினும்.

இனித், 'திருக்காளத்தி'யென்பது எல்லாம்வல்ல இறைவன் காற்றின்கண் முனைத்துநின்று அதனை இயக்கு மாற்றைக் காட்டுதற்கென்று அமைக்கப்பட்ட திருக்கோயி லாகும். அஃதங்ஙனம் புறத்தே அமைக்கப்பட்டாற் போலவே, நமதுடம்பின் அகத்தும் மிடற்றின்கண்ணே இயங்காநின்ற காற்றினிடத்து இறைவன் விளங்கிநிற்ற லின் மிடற்றின் மேற்பகுதியே சிவபிரான் உள்நிற்குந் திருக்காளத்தியாகும். வெளியேயிருந்து உள்ளும் உள்ளே யிருந்து வெளியும் முறையே யிழுத்து விடப்படும் உயிர் வளியின்ரியக்க மில்லையேல் நமதுடம்பு ஒரு சிறிது நேரத் தில் அழிந்துபடுதல் திண்ணமேயாம். ஆகவே, உயிர்வளி இயங்கும் மிடற்றினைத் திருக்காளத்தியாகக் கூறியது பொருத்தமுடைத்தேயாம்.

இனிக், 'காசி'யென்பது கங்கை யமுனை சரச்சுவதி என்னும் மூன்றியாறுகளும் ஒருங்கு கூடுமிடத்தே புறத்

தில் அமைக்கப்பட்டாற்போல, அகத்தில் இடைபிங்கலை சுழுனையென்னும் நரப்புக்குழாய்கள் மூன்றும் ஒருங்குகூடும் இடமாகிய புருவநடுவில் அக்காசியுளதாதலை முன்னரே விளக்கிக்காட்டினும்.

தில்லைக்கு வடக்கேயுளதாகிய திருவண்ணாமலையை அதற்குத் தெற்கே யுளதுபோற்கொண்டு மேல்வயிற்றுளே திருவண்ணாமலையையும் அதற்குமேல் நெஞ்சத்தாமரையிற் றில்லைச்சிற்றம்பலத்தையும் வைத்துரைத்தது மட்டும் பொருத்தமாகாமை உணரற்பாற்று.

இங்ஙனமாகப் புறத்துளதான இவ்விந்தியநாடென்னும் உடம்பின் முதன்மையான ஏழு அல்லது ஆறிடங்களில் ஏழு அல்லது ஆறு திருக்கோயில்கள் எடுப்பித்து, அவற்றின்கண் நிறுத்திய சிவலிங்க அருட்குறியிலே முதல்வனை வழிபட்டு வருதல்போல, நமதுடம்பின் அகத்துளவான முதன்மையான ஏழு அல்லது ஆறிடங்களில் விளங்காநின்ற இறைவன்றன் ஒளிவடிவினை நினைந்து வழிபாடு ஆற்றுதலும் இன்றியமையாததாதல் காண்க.

இனிப், பிற்றைஞான்றைச் சிவபிரான்றிருக்கோயில்கள் நமதுடம்பின் அமைப்பினையொப்ப வகுக்கப்பட்டவாறும் ஒரு சிறிது விளக்குவாம். மக்களுடம்பினை மேற்கே தலையுங் கிழக்கே காலுமாகக் கிடத்தி வைத்தாலென, இத் திருக்கோயில்களிற் பெரும்பாலனவும் அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கேயுள்ள கால்கள் இரண்டுங் கோபுரங்களாகும்; அக்கால்களில் இடைவழியே கோபுரங்களின் வாயிலாகும்; அக்காலிரண்டன் ஊடேசென்று எருவாய் கருவாய்க்கிடையேயுள்ள மூலத்திற் சென்றுசேர்வதே, கோபுரவாயிலினூடே சென்று மூத்தபிள்ளையாராகிய யானைமுகக் கடவுளின் இருக்கையைச் சென்று சேர்வதாகும்; மூலத்தே பாம்பு சுருண்டாற்போல் இருக்குங் குண்டலியுருவினை வணங்குவதே, அம்முதலிருக்கையில் ஓங்காரவடிவாய் அமர்ந்திருக்கும் பிள்ளையாரை வணங்குவதாகும்; அம்மூல குண்டலியை யெழுப்பி

அதனுடன் சென்று, கொப்பூழ்க்குக் கீழே மிக நுண்ணிய ஒலிகள் மயில்முட்டையுட் பலநிற நீர்போல் நிற்குங் கீழ் வயிற்றினுட் சேர்ந்து, ஆண்டுள்ள இறைவனை இறைஞ்சுவதே, அப்பிள்ளையார் இருக்கையைக் கடந்து சென்று பன்னிறமயில்மேல் அமர்ந்திருக்கும் முருகப்பிரான் இருக்கையை அடைந்து அவனை வணங்குவதாகும்; அக்கொப்பூழின் கீழ்வயிற்றினை அந்நுண்ணிய ஒலியுடன் கடந்து மேலேறி மேல்வயிற்றினுட் சென்று ஆண்டுத் தன் இருவகைச் செருக்கினையும் ஒழித்து இறைவன் றிருவருட்கீழ் நிற்றலே, அம்முருகப்பிரா னிருக்கையைக் கடந்து பலிமேடையின் அடிக்கீழ் விழுந்து வணங்குவதாகும்; இனி, அம்மேல் வயிற்றினையுங் கடந்து மேலேறி நெஞ்சத்தாமரையிற் சென்று சேர்வதே, பலிமேடையைக் கடந்து எருதுவடிவாய் அமர்ந்திருக்கும் நந்தியைச் சேர்வதாகும்: நெஞ்சத்தாமரை முகிழ் இறைவற்கு இருப்பிடமாகலின், அது போல் இறைவற்கு ஊர்தியாகிய நந்தியை வணங்கிக் கொண்டு, மிடற்றினூடே செல்வது போல், இறைவன் எழுந்தருளியிருக்குங் கருவறை வாயிலினூடே நுழைந்து, புருவநடுவிற்கு நேரே தலையின் நடுவணதான சிற்றறையினுட் சென்றடைதல்போல் அக்கருவறை நடுவிற்சேர்ந்து, அத்தலைநடுச் சிற்றறையினுள் விளங்காநின்ற ஒளியுருவிற் சிவபிரானை வழிபடுதல்போல், அக்கோயிற் கருவறையில் அவ்வொளிப்பிழம்பின் அடையாளமாக நிறுத்தப்பட்டிருக்கும் அருட்குறியை வணங்கி வழிபட்டு நிற்றலாகுமென்க. இங்ஙனந் தவத்தான் மிக்கோர் தம்முடம்பினுள்ளே இறைவனை மூலத்திற் றுவங்கி மேன்மேல் ஏறி வழிபடுமுறையில் வைத்து, அவரது தூய தவவுடம்பின் அமைப்பினை யொப்பச் சிவபிரான் றிருக்கோயில்கள் வகுத்து அவற்றினுள்ளே அவர் இறைவனை வழிபடுமாறுந் தெற்றென எவர்க்கும் விளங்குமாறும் ஆன்றோர் விளக்கிக் காட்டினமை காண்க.

இனி, உடம்புகளெல்லாம் வெளிப்பார்வைக்கு எழுவகை முதற்பொருள்களால் ஆக்கப்பட்ட பருப்பொருள் போற் றோன்றினும், ஒவ்வோருடம்பும் அகத்தே வெவ்வேறு

நான்குடம்புகளோடு ஐவகை யுடையயதாகும். வெங்காயம் என்னுங் கிழங்கு வெளிநோக்கில் ஒன்றுபோற் றோன்றினும், அஃது உரிக்க உரிக்கப் பற்பல தோல்களையுடைய தாமாறு போல நம்மனோருடம்பும் அகத்தேயுள்ள வெவ்வேறு நான் குடம்புகளோடு ஐவகையுடையதாய் அமைக்கப்பட்டிருக்கின் றது. அவை: உணவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறி வுடம்பு, இன்பவுடம்பு என்பனவாகும்; இவற்றை வட நூலார் முறையே அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என வழங்கா நிற்பர். இவ்வாறு ஒவ்வோருடம்பும் ஐந் துடம்புகள் தொக்க தொகையாய் இருத்தலை ஆசிரியர் அருணந்திசிவனாரும்,

"மருவா னந்தம் விஞ்ஞானம்
மனோபி ராணன் அன்னமயம்
உருவாந் தன்மை உண்டாய்முன்
னென்றுக் கொன்று சூக்குமமாய்
வருமாம் அன்ன மயம்பற்றி
மாயை முதற்கா ரணமாகும்
அருவாய் ஆன்மா ஐங்கோசத்
தார்ப்புண் டவற்றி னகம்புறமாம்"

என்னுஞ் சிவஞான சித்தியார்ச் செய்யுளால் இனிது விளங்க வைத்தருளினர். இவ்வாறு நமதுடம்பு ஒன்றினுள் ஒன்றாக ஐந்துடம்புகளுடன் கூடியதாய் இருத்தல்போல நம துடம்பை யொப்ப ஆக்கப்பட்ட சிவபிரான் திருக்கோயில் களும் ஐந்து சுற்றுகள் உள்ளனவாக வகுத்து அமைக்கப் பட்டிருக்கின்றன. இனி, நம்முடம்புகள் ஐந்தையும் வேறொருவாற்றால் மூன்றாகக்கொண்டு பருவுடம்பு, நுண் ணுடம்பு, காரணவுடம்பு எனவும் மெய்ந்நூல்கள் வழங்கு முண்மை,

"சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்க ளெல்லாம் அருந்தியும் நிற்கு மான்மா."

என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுளால் அறியக்கிடத்தலிற், பெரும் பான்மையான சிவபிரான் றிருக்கோயில்கள் மூன்று சுற்றுகள் உடையனவாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இங்ஙனமாக இந்நிலவுலகிற் சிறந்த இவ்விந்திய நாட்டை ஒருடம்பாகக் கருதி, அதனுள் மூலத்திற்றுவங் கித் தலையுச்சிவரையில் உளவாக வைக்கப்பட்ட இடங் களில் இறைவன் திருவுருவினை நிறுத்தி வழிபடுமுறையும், இனி இவ்விந்திய நாட்டினுள்ளுஞ் சிறந்த தென்றமிழ் நாட்டை ஒருடம்பாகக் கருதி அதன்கண்ணும் மூலத்திற் றுவங்கி மிடறுவரையில் உளவாக வைக்கப்பட்ட இடங்க ளில் இறைவன் றிருவுருவினை நிறீஇ வழிபடுமுறையும், இனி ஒவ்வொரு சிவபிரான் றிருக்கோயிலையும் ஒரு தவமுனிவ னுடம்பினேடொப்பவகுத்து, அம்முனிவன் தனதுடம்பி னகத்தே இறைவனை வழிபடுமுறையோடொப்பப் புறத்தே அத்திருக்கோயிலினுள்ளும் எல்லாருஞ் சென்று இறை வனை வழிபடுமுறையும் ஆகிய இவையெல்லாம், **ஆசிரியர் திருமூலர்** இற்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன் அருளிச் செய்த திருமந்திர நூலிலாதல், அதற்கும் முந்நூறாண்டுகட்கு முன்னே, அஃதாவது, இற்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன்னே **மணிமொழிப் பெருமான்** அருளிச் செய்த **திருவாசகந் திருக்கோவையாரி** லாதல், அதற்கும் முன்னே, அஃதாவது, இற்றைக்கு இரண் டாயிர ஆண்டுகட்கு முன்னே இயற்றப்பட்ட பண்டைத் தண்டமிழ் நூல்களிலாதல் ஒருசிறிதுங் காணப்படாமை யால், இம்முறைகளெல்லாம் நம் சைவ சமயாசிரியன்மார் காலத்திற்குப் பன்னெடுங்காலம் பின்னே, அஃதாவது நம் சைவசித்தாந்த முதலாசிரியர் **மெய்கண்டதேவர்** காலந் தொட்டே வழங்கி வரலாயின வென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெள்ளிதின் விளங்கா நிற்கின்றது.

அற்றேல், ஆசிரியர் திருமூலர் காலத்தும் அவர்க்கு முற்பட்ட தமிழ்ச்சான்றோர் காலத்தும் வழங்கப்பட்டு வந்த கடவுள் வழிபாட்டு முறைதான் யாதோவெனின்; அப்

பழைய முறையினையுஞ் சிறிது விளக்குதும். நம் பண்டைச் செந்தமிழ்த் தாபதர், எல்லா உலகங்களிலும் எல்லா உயிர்களிலும் ஊடுருவி மறைந்து நிறைந்து நிற்கும் எல்லாம் வல்ல இறைவன், சிற்றுயிர்களாகிய நாம் தன்னைக் கண்ணாரக் கண்டு வணங்கியுய்தலை வேண்டிப் பெருகிய அருளால், ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று ஒளி வடிவுகளில் முனைத்து விளங்கித் தோன்ற, அவ்வியல்பினை விளங்க அறிந்தபின், முதலில் அம்மூன்று ஒளிவடிவுகளில் வைத்தே இறைவனை நேரே வழிபட்டு வரலாயினர். பண்டை மக்களில் அகக்கண் திறக்கப்பெற்றுப் பேரறிவுடையராய் வயங்கிய சான்றோர்களும் அவர்களைச் சூழ்ந்திருந்த அம்மக்களும் மலைகளையே இருப்பிடமாய்க்கொண்டு உயிர்வாழ்ந்தார்களாகலின், அவர்கள் தாமிருந்த மலைகளின் முகடுகள் மேற் சென்று அங்கிருந்தபடியே பகற்காலத்திற் கதிரவனையும் இராக்காலத்தில் நிலவோனையும் நிலவோனும் இல்லாத இராக்காலத்தில் தீயினையும் வணங்கிவரலானார்கள். இது, பாரதப்போர் நிகழ்ந்தகாலத் திருந்தவரான **முரஞ்சியூர் முடிநாகராயர்** பாடிய "மண்டிணிந்த நிலனும்" என்னும் பாட்டிற்போந்த "மாப்பிணை, அந்தி யந்தணர் அருங்கடன் இறுக்கும், முத்தீ விளக்கில் துஞ்சும், பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே" (புறம், உ) என்னும் அடிகளால் நன்கறியப்படும். இந்நிலவுலகின்கண் உள்ள எல்லா மலைகளைப் பார்க்கிலும் மிக்குயர்ந்ததாகிய இமயமலையின் ஒரு கொடுமுடிக்கண் உளதான திருக்கைலாய மலையிற் சிவலிங்க வடிவந் தொன்று தொட்டு வைத்து வணங்கப்படுதலும், அங்ஙனமே இத்தென்றமிழ் நாட்டிலும் மிகப்பழைய காலந்தொட்டே 'திருப்பரங்குன்றம்,' 'திருவேங்கடம்,, 'திருக்கழுக்குன்றம்,' 'திருக்கொடிமாடச் செங்குன்றூர்' முதலான உயர்ந்த மலைகளின் மீதெல்லாஞ் சிவலிங்கம் வைத்து வழிபாடு செய்யப்படுதலும் இவ்வுண்மையினை நன்கு விளக்கும். பழைய உபநிடதமாகிய **சுவேதாசுவதரமும்** (ங,ரு) "ஓ உருத்திரனே! நின்னுருவினதாய் அச்சமில்லதாய்த் தூய்மையளிப்பதாய் உள்ள நின்திருக்கோலத்தோடு, எல்லா அருளும் நிரம்பிய

அக்கோலத்தோடு, மலைமீதிருந்தவாறே நலந்தருவோனே! எம்மைக் கடைக்கணித்தருள்க!'' *எனச் சிவபிரானை விளித்து வழுத்தும் உரைகொண்டும் அவன் மலைமிசை வைத்துப் பண்டைநாளில் வணங்கப்பட்டமை தெள்ளிதிற் புலனும். பழைய விவிலிய நூலிலும், ஆபிரகாம் என்னும் முனிவர் தம் மகனை இறைவனுக்குப் பலியாக இடுதற் பொருட்டு ஒரு பொருப்பின்மிசைக் கொண்டு சென்று ஆண்டுத் தீ வேட்டமை† நுவலப்படுதல் கொண்டும் பண்டிருந்த மேன்மக்கள் மலைமேல் தீவளர்த்து இறைவற்கு வழிபாடு ஆற்றினமை தெளியப்படும்.

இனி, அத்துணைப் பழைய காலத்திற்குப் பின், மலைமீதுறைந்த மக்களிற் பெரும்பாலார் கீழிறங்கி, ஆற்றோரங்களிலும் ஏரியோரங்களிலுங் குடியேறி உயிர்வாழத் துவங்கியபின், தாம் முன்னர் மலைமேற் செய்துபோந்த அனல் வழிபாட்டை மரச்செறிவுகளின் கீழ்ச் செய்து வரலாயினர். நாளேற நாளேறப், பகலவனிலும் நிலவோனிலும் இறைவனை வைத்து வணங்கும் வணக்கத்தை மெல்லமெல்லக் கைந்நெகிழவிட்டுத் தீவடிவில் வைத்து இறைவனை வணங்கும் முறையினையே மிகுதியாய்க் கடைப்பிடிக்கலாயினர். பகலவனும் நிலவோனும் இறைவற்கு விழுமிய ஒளியுடம்புகளேயாயினும், அவை எட்டாத் தொலைவி லிருத்தலால் அவை தம்மைத் தம் அருகேயிருத்தித், தாம் உட்கொள்ளும் உணவை அவை தமக்கு ஊட்டவுந், தாஞ்சூடும் நறுமலர் மாலைகளை அவை தமக்குச் சூட்டவும், இன்னும் அங்ஙனமே தம் அன்பின் அடையாளங்களாக அவை தமக்குச் செய்யவேண்டுவன வெல்லாஞ் செய்யவும் இல்லாமையானும், பகலவனும் நிலவோனும் விளங்கா நள்ளிருளிரவில் தீயினொளியே தமக் கின்றியமையாத தொன்றாய்க் காணப்பட்டமையானுந், தீயொன்றே தாம் வேண்டும்போ

*''யாதே ருத்ர சிவாதநு ரகோரா பாபகாசிநீ, தயா நஸ் தநுவா சந்தமயா கிரிசந்தாபிசாக சீஹி'' சுவேதாசுவதரோபநிஷத், ங, ரு.

† படைப்பின்றோற்றம் (Genesis), உஉ.

தெல்லாந் தம்மருகே வளர்த்துக்கொள்ளுதற் கியைந்த எளிமையுடைத்தாய், அளக்கலாகாத் தன் அரும்பெருந் தன்மைகளை யொடுக்கித் தன்னைக் குழைந்துருகி நினையும் ஏழையடியார்க்கு எளியனுய்வந் தருள் வழங்கும் இறைவன்றன் அருட்பெருந் தன்மையினைத் தன்னகத்தே விளங்கக்காட்டுந் தகைத்தாய்த் துலங்குதலானும் இடைக்காலத்துச் சான்றோர்கள் இறைவனை நெருப்புருவில் வைத்து வழிபடுதலையே பெரும்பான்மையாய்க் கைப்பற்றி யொழுகலாயினர். அதனால், அவர்கள் குடியேறிவைகிய இடங்களிற் செறிந்த சோலைகள், இளம் மரக்காக்கள், தோட்டங்கள், தோப்புகள், பொழில்களிலெல்லாம் மரங்களின் கீழ்க் குழிகள் அகழ்ந்து அவற்றின்கண் எரியோம்பி இறைவனை வழுத்துதலும் வாழ்த்துதலும் மேற்கொண்டார்.

இவ்வாறு இவ்விந்திய நாட்டில் வடக்கே இமயமலை முதல் தெற்கே பொதியமலைவரையிலிருந்த தமிழ் மக்களெல்லாம முத்தீயோம்பி இறைவனை வழிபட்டு வந்த பல நூற்றுண்டுகளுக்குப் பின்னே, இந்திய நாட்டின் எல்லைக்குப் புறம்பே ஆடுமாடு மேய்த்துக்கொண்டும் அவற்றின் ஊனைத் தின்றுகொண்டும் வாழ்நாட் கழித்துவந்த ஆரியர், தாம் இருந்த வடபால் இடங்கள் வரவாக் குளிர் மிகுந்து தாம் இருத்தற்கு இசையாத தன்மையவாய் மாறினமையால், அவைகளைவிட்டு நீங்கி, இவ்விந்தியநாட்டின் வடமேற் கெல்லைவழியே இதனுட்புகுந்து, வருந்தி வந்தவரை விருந்தேற்கும் இயல்பினரான பண்டைத் தமிழ் மக்களின் உதவியால் ஊணும் உடையும் இருக்கையும் பெற்று, ஆங்காங்குக் குடியேறி வாழலாயினர். அங்ஙனம் வந்து புகுந்து நிலைத்த ஆரியர், தம்மை வரவேற்ற தமிழ் மக்கள் கல்வியிலும் ஏனைச் செல்வ வளங்களிலும் நிரம்பினவராய், முத்தீவேட்டு வருதலைக் கண்டு, அம்முத்தீ வேட்டலின் உண்மையுங் கருத்தும் அறிந்துகொள்ளாமலே, தாமும் அவர்போல் நெருப்பினை வணங்கினுல் தமக்கும் அவர்போற் கல்வியுஞ் செல்வமும் உண்டாமெனக் கருதி, அவரினும் மிகுதியாய் அழலோம்புதலை மேற்கொண்டார்.

இவ்விந்திய நாட்டிற் புகுமுன்னரே ஆரியமாந்தர் ஆடு மாடு குதிரை முதலான விலங்கினங்களைக் கொன்று அவற்றின் இறைச்சியை நிறையத்தின்று, சோமப்பூண்டில் இறக்கிய ஒருவகையான கள்ளை மிகுதியாய்ப் பருகிவந்த பழக்க முடையவர்களாதலால், இந்நாட்டுட்புகுந்து வைகிய பின்னும் அப்பழக்கத்தை விடமாட்டாராய்த், தம் ஆரியப் பிரிவினர்க்குத் தலைவராய் இருந்து இறந்துபட்ட 'இந்திரன்,' 'வருணன்,' 'மித்திரன்,' 'அரியமான்' முதலானவரின் ஆவிகளை வழிபடுதல் நினைந்து, எரிவளர்த்து, ஆடு மாடு குதிரை முதலிய விலங்குகளை வெட்டி அவற்றின் ஊனையுஞ் சோமப்பூண்டின் கள்ளையும் அதன் முன்னே வைத்துப் படைத்துப், பின்னர்த் தாமுந் தம்மினத்தவருமாக அவற்றை யெடுத்தருந்திக் களித்து வந்தனர்.

உயிர்க்கொலையும் ஊனுணவுங் கட்குடியும் இல்லாமற், காய் கனி கிழங்கு வித்துக் கீரை முதலியவைகளையே உணவாகக் கொண்டு, பாலையும் நீரையுமே பருகிப், பிறந்திறக்கும் மக்களையும் பிற சிற்றுயிர்களையும் வணங்காமல், ஒளிவடிவில் முனைத்து விளங்கும் ஒரு முழுமுதற் கடவுளையே அன்பினாற் குழைந்துகுழைந் துருகி வழிபடும் வாழ்க்கையிலேயே பழகிய தமிழ் மேன்மக்களுக்கு அவ்வாரியர்தங் கொலை புலை யொழுக்கம் பெரியதோர் அருவருப்பினைத் தரலாயின. அதனால் அவர்கள், 'கொலைபுலை கட்குடி யில்லாமலே எரியோம்பி வழிபடுக' என்று அவ்வாரிய மக்கட்கு எவ்வளவோ அறிவுரை பகர்ந்து வற்புறுத்தியும், அவர்கள் அவ்வறிவுரைக்குச் சிறிதுஞ் செவிகொடாராய்த், தாம் வேண்டிய வெறியாட்டு வேள்விகள் அயர்தலையே விடாப்பிடியாய்க் கொண்டனர்! அதுமட்டுமோ! அவர்கள் தாஞ்செய்யும் வெறியாட்டு வேள்விகட்குப் பெரும் பொருளுந், தம் வெறியாட்டு வேள்விகளை அழித்தற்கு முனைந்துநின்ற வலிய தமிழரசர்களைத் தடைசெய்யத் தமக்குத் துணையும் வேண்டி யிருந்தமையால், வலிய தமிழரசர்களிலேயே தமது சூழ்ச்சியிற் சிக்குவாரைத் தெரிந்தெடுத்து, அவரை ஏமாற்றி அவர்பாற் பெரும்

பொருள் கவர்ந்தும், அவரைத் தமது வெறியாட்டு வேள்விக்குத் துணைகொண்டுந் தமது கருத்தை நிறைவேற்றி வரலானார். இதுகண்ட தமிழ்ச் சான்றோரிற் சிலர், தீங்கற்ற ஏழை விலங்குகளைத் துடிதுடிக்கக்கொன்று, அவற்றின் ஊனை இந்திரன் முதலான ஆவிகளுக்குப் படைக்கும் இரக்கமற்ற வன்செயலை யொழிக்குங் கருத்தினராய், அவ்வாரியர் அயரும் வெறியாட்டு வேள்விகட்குத் தாமும் உடன்படுவார்போற் காட்டி, முதலில் அவ்விலங்குகளை உணர்வின்றி வெட்டுண்ண வழி பிறப்பித்தார். வெட்டுண்ணப் போகும் விலங்குகளை அத்தமிழ்ப் பெரியார் தம்முடைய கண்களால் உறுத்து நோக்கியுந், தம்முடைய கைகளாற் சிறிதுநேரம் நீளத்தடவியுந், தமது நினைவை ஒருமுகப்படுத்தி 'அவை உணர்விழந்து இறைவனுலகிற்குச் செல்க!' என்று உரைத்த அளவில், அவையுணர்விழந்து நிற்ப, அந்நேரத்தில் அவை தம்மை வெட்டி வீழ்த்தற்குக் கற்பித்தார். இஞ்ஞான்றும் அறிதுயில் (Hypnotic and Mesmeric sleep) வருவிக்கும் முறையில் நன்கு பழகித் தேர்ச்சி பெற்ற ஆங்கில மருத்துவ ஆசிரியரும் பிறரும், மக்களையும் விலங்குகளையும் அறிதுயிலிற்செலுத்தி அவர்களை உணர்விழக்கச் செய்து அவர்களுக்குச் சிறிதும் நோய்த்துன்பமில்லாமலே கழலைக் கட்டிகளையும் பிறவற்றையும் அறுத்து நலப்படுத்தி வருகின்றனர். *

இவ்வருங்கலைப் பயிற்சியில் முற்காலத்தே நன்கு பழகிய நந்தமிழந்தணர்கள், ஆரியர்தம் வெறியாட்டு வேள்விகளிற் கலந்து, அவர்கள் வெட்டும் ஆடு மாடு குதிரை முதலான விலங்குகள் அவர்களால் வெட்டுப்படுதற்குச் சிறிது முன்னரே யுணர்விழந்து வெட்டுப்படுமாறு செய்து, அவை அந்நேரத்தில் அடைய இருந்த பொறுத்தற்கரிய நோய்த்துன்பத்தைப் போக்கி வந்த பேரருட்டிறம் பெரிது! பெரிது! இவ்வாறாக வேள்வியிற் கொல்லப்பட்ட விலங்கினங்கள் உணர்விழந்து நோவின்றி

* Read "Mesmerism in India" by James Esdaile, M.D., and "Hypnotism" by Carl Sextus.

யுயிர் விடுமாறு செய்தமைக்கு இருக்குவேத முதன் மண்டிலத்தின் கசுஉ-ஆம் பதிகத்திற் போந்த,

"நீ தேவர்கள்பாற் செல்கையில் நின் உயிர்வளி நின்னை வருத்தாததாக! கோடரியானது நின் உடம்பை ஊறுபடுத்தாததாக! திறமின்றி விரைந்து வெட்டித் தன் றொழிலிற் பெரிது பிழைபடுங் கொலைஞன் நின்உறுப்புகளைப் பிழைபடப் பிளவானாக! மெய்யாகவே நீ இங்கே இறந்து படுகின்றிலை! நீ ஏதொரு துன்பமும் அடைகின்றிலை! நீ எளிய இனிய வழியால் தேவர்கள்பாற் செல்கின்றனை!"

என்னும் உறுதியுரைகளே சான்றாகும். இஞ்ஞான்றும் மக்களையும் பிறவுயிர்களையும் உணர்விழக்கச் செய்யும் அறிதுயில் வல்லார் அடுத்தடுத்துக் கூறி அங்ஙனம் உணர்விழப்பினை (anaesthesia) வருவிக்கும் உறுதிக் கட்டுரைகளோடொப்ப மேற்காட்டிய பதிகக் கட்டுரைகள் அமைந்திருத்தலுங் கருத்திற் பதிக்கற் பாற்று. இவ்வாறாக, முன்னிருந்த தமிழ் முனிவர்கள், ஆரியர் செய்து போந்த உயிர்க்கொலை வேள்விகளில் தாமும் உடன்பாடுடையர்போற் கலந்துநின்று, அவர் அவ்வேள்விக் களங்களில் வெட்டி வீழ்க்கும் விலங்கினங்களை வெட்டுண்ணுங் கொடுந்துன்பம் அறியாமல் உணர்விழக்கச் செய்து, சில காலமெல்லாம் அவருடைய வேள்விகளையும் நடாத்தி வந்தனர். வந்துமென்!

" படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்"

என்னுந் தெய்வத் திருக்குறள் கூறியாங்கு, ஊன்சுவையிற் பழகிய ஆரியர் தாஞ் செய்துபோந்த உயிர்க்கொலை வேள்வியினைச் சிறிதும் விடாராயினர்!

அதுகண்ட தமிழந்தணருந் தமிழரசரும் அவ்வுயிர்க் கொலை வேள்விகள் மேன்மேற் றீவினையையே பெருக்கும் எனவும்; எல்லாம்வல்ல ஆண்டவன் மலத்தால் அறிவு

மறைப்புண்ட எல்லாவுயிர்களுக்கும் அம்மலமறைப்பினை நீக்கி அவை தமக்கு அறிவும் இன்பமுந் தருதற்பொருட்டாகவே உடம்புகளைப் பேரருளினுற் படைத்துக் கொடுத்திருக்க, அவனது அருட்டன்மைக்கு மாருக அவன் படைத்த அவ்வுடம்புகளைச் சிதைத்து அவ்வுயிர்களை அறியாமையிலுந் துன்பத்திலும் அமிழ்த்துதல் அவ்வாண்டவனுக்குத் தணித்தற்கரிய பெருஞ் சீற்றத்தினை மூட்டுவதாமெனவும்; இறைவனது அருளியல்பினையும் அதனைப் பெறுதற்குரிய சிற்றுயிர்களாகிய நாம் இப்போதிருக்கும் மருளியல்பினையும் நன்குணர்ந்து பார்த்து, அருளுக்கு மாருன மருளையெல்லாம் அறவே யொழித்து, எல்லாவுயிர்களிடத்தும் அவனை யொப்ப அருளுடன் ஒழுகி அவன்றன் அருட்பெருந் தன்மையினை ஓவாது நினைந்து நினைந்து கனிந்து கனிந்து உருகுதலால் மட்டுமே அறியாமை தேய்ந்து அருளறிவு நம்பாற் சுடர்ந்தொளிருமெனவும்; அதனுல் இம்மை மறுமை யிரண்டிலும் இயம்புதற்கரிய இன்பவாழ்க்கையே எல்லாவுயிர்க்கும் வாய்க்குமல்லது துன்பமென்பது சிறிதுந் தலைக்காட்டாதெனவும்; ஆகவே, உயிர்க்கொலை வேள்விகளைக் கற்பிக்கும் ஆரியவேதப் பகுதிகளும் அவற்றிற் கூறியவாறு செய்யுஞ் சிறுதெய்வ வெறியாட்டுகளுங் கழிபெருந் தீமை பயப்பவாகலின் அவற்றை யருவருத்து விலக்குதலே செயற்பாலதெனவும் வற்புறுத்திச் 'சாங்கியம்,' 'யோகம்' முதலான அறிவு நூல்களும், 'ஈச,' 'கேந,' 'கடம்,' 'பிரசிநம்,' 'முண்டகம்,' 'மாண்டூக்யம்,' 'தைத்திரீயம்,' 'சாந்தோக்யம்,' 'பிருகதாரண்யகம்,' 'சுவேதாசுவதரம்,' முதலான உபநிடதங்களும் இயற்றினர். இவற்றுடன் நில்லாமல், எல்லாம்வல்ல முழுமுதற் பொருள் சிவம் ஒன்றேயாதலையும், ஆரியரால் வணங்கப் பட்ட இந்திரன், வருணன், சோமன், பிரமன், விண்டு முதலியோரெல்லாம் பிறந்திறக்குஞ் சிற்றுயிர்களேயாதலையும் பிருகுத்தறிவுகூடாப் பொதுமக்கட்கு நன்கு தெருட்டுதற்பொருட்டு, அவர் அறிதற்கு எளியவான புராணக் கதைகள் சிலவும் புனைந்துரைப் பொருளாய்ப் படைத்தெழுதலாயினர்.

இன்னும், இவற்றுடன் அமைதிபெறுமல், உயிர்க் கொலைக்கும் வெறியாட்டுக்கும் இடனுக ஆரியராற்றிரிபு படுத்தப்பட்ட தீவேட்டலையே முற்றும் ஒழிப்பான் வேண் டித், தீவளர்க்குங் குழிக்கு அறிகுறியாக ஒரு வட்டக்கல் வடிவும், அக்குழியில் வளர்க்கப்படுந் தீயினுக்கு அறிகுறி யாகக் குவிந்து நீண்டதொரு கல்வடிவும் வகுத்து அவை யிரண்டனையும் ஒருங்கு பொருத்தி நிறுத்திய சிவலிங் கத்தினெதிரே, முன்னே வேள்வியில் வெட்டக்கொணர்ந்த மாட்டினுக்கு அறிகுறியாக ஒரு நந்தியுருவினையும் அமைத்து, முன்னே அம்மாட்டினை வெட்டிய பலி மேடைக்கு அறிகுறியாக அந்நந்தியுருவின் பக்கத்தே ஒரு பலிபீடத்தினையும் எழுப்பிச் சிவபிரான் றிருக்கோயில்களை ஆங்காங்கு எடுப்பிக்கலாயினர்.

இவ்வாறு சிவலிங்க அருட்குறியும், அதனெதிரே நந்தியுருவும் அதன் பின்னே பலிபீடமும் அமைத்துத் திருக்கோயில்கள் உண்டாக்கிய பின், முன்னே ஆரியர் செய்துபோந்த வெறியாட்டு வேள்வியும் அவற்றின்கண் நடந்த உயிர்க்கொலையும் நினைவில் வராமைப்பொருட்டு, அம்மூன்று குறிகளும் மூன்று மெய்ப்பொருளடையாளங் களாக வகுக்கப்பட்டனவென்று அவை தமக்கு விழுமிய மெய்ப்பொருளுங் கூறலாயினர். இறைவன் றிருவடை யாளமே சிவலிங்கமாமெனவும், இறைவனல்லாத சிற்று யிரின் அடையாளமே நந்திவடிவாமெனவும், அவ்வுயிரினுற் கழிக்கப்பட்ட அறியாமையாகிய மலமே பலிபீடமாமெனவும் நன்கு விளக்கிப், பதி பசு பாச உண்மையினை அறிவிக்கும் பொருட்டே சிவலிங்கமும் நந்தியும் பலிபீடமும் அமைத்த திருக்கோயில்கள் எடுக்கப்பட்டனவென்று பண்டிருந்த தமிழ்ச்சான்றோர்கள் திருக்கோயிலமைப்பினை மிகவுயர்ந்த மெய்யறிவு முறையிலே வைத்துத் திருப்பிவிடலாயினர். இங்ஙனம் உயர்ந்த முறையில் வைத்துத் திருக்கோயி லமைப்பு விளக்கப்பட்ட உண்மையினை, இற்றைக்கு ஆயி ரத்துநானூறு ஆண்டுகட்கு முன்னிருந்த அருந்தவ மாமுனிவராகிய **ஆசிரியர் திருமூலர்,**

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்க்கே"
—(செய்யுள் உசகக)

என்று தமது திருமந்திர நூலில் அருளிச்செய்தவாற்றுல் நன்கறிந்துகொள்க. திருக்கோயிலில் இறைவனைத் தொழுதற்குச் செல்லும் ஒருவர் பலிபீடத்தினருகே சென்றதும் தமக்குள்ள யான் எனது என்னும் இருவகைச் செருக்கினையும் வெட்டிப் பலியாகச் செலுத்துதற்கு அடையாளமாகவே அவர் அதன் பக்கத்தே நீளக்கிடந்து வணங்குதலாகும். அங்ஙனம் வணங்கிய அவரது உயிர் அதனுல் அவ்விருவகைச் செருக்குந் தீர்ந்து தூயதாகி இறைவனை நோக்கிச் செல்லும் அடையாளமாகவே பசுவின் வடிவினதான நந்தி சிவலிங்கத்தினெதிரே நிறுத்தப்பட்டதாகும். அந்நந்தியும் அந்நந்தியினெதிரே நிற்குஞ் சிவலிங்கமும் கல்வடிவிற் காணப்படினும், அச்சிவலிங்க வடிவு தூய ஒளியுருவில் முனைத்து நிற்குஞ் சிவமாமெனவும், அவ்வொளியுருவில் ஒன்றி இரண்டறக் கலக்குந் தூயவுயிர் அதிற் கரைந்து கலக்குமாறு இதுவாமெனவுங் காட்டுதற் பொருட்டே, இறைவனைத் தொழப்போவார் முன்னிலையிற் கருப்புர வொளிகாட்டும் முறையினைத் தமிழ்ச் சான்ருேர் வகுக்கலாயினர். கருப்புரந் தூய வெண்ணிறத்ததாயிருத்தலின், இருவகைப் பற்றும்விட்டு இறைவனே டொன்றி இரண்டறக் கலக்கப்போந் தூயவுயிர்க்கு அஃது அடையாளமாயிற்று; அக்கருப்புரத்திற் பற்றிய நெருப்பொளி அக்கருப்புரத்தைக் கவர்ந்து கரைத்துத் தனதாக்கும் நிலை, ஒளியுருவினனான இறைவன் அத்தூயவுயிரைப் பற்றித் தனதாக்கும் நிகழ்ச்சிக்கு அடையாளமாயிற்று. இவ்வரும் பேருண்மை முறையினையே தவமாச்செல்வரான **தாயுமான அடிகள்,**

"தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே

போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்;
ஞானகாரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்''

என்றும்,

"ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
ஓட்டுதல்போல் நான்பேதை யுப்போ டப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனிற் றீபம்
வயங்கவிட்டும் ஐக்கியமுன்னி வருந்தி நிற்பேன்;
அருளுடைய பரமென்றோ அன்று தானே
யானுளனென் றும்எனக்கே யாண வாதி
பெருகுவினைக் கட்டென்றும் என்னாற் கட்டிப்
பேசியதன் றேயருளால் பேசிற் றன்றே''

என்றும் ஆகார புவனஞ் சிதம்பர ரகசியத்தில், (உஉ, உகூ) அருளிச் செய்திருத்தல் கண்டுகொள்க.

இங்ஙனமெல்லாம் போந்த திருக்கோயில் மெய்ப் பொருள் விளக்கமுறை ஆசிரியர் திருமூலர் காலத்திற்குச் சிறிது முன்னே துவங்கிப் போந்த தன்றி அதற்கு முற் பட்டகாலத்தே வழங்கிய தன்றென்பது, பண்டைச் செந் தமிழிலக்கியங்களில் அது காணப்படாமையாற் றெற் றெனத் துணியப்படுகின்றது.

மற்றுப், பண்டைநாளில் ஆரியர் செய்துபோந்த உயிர்க்கொலை வேள்வியை அடியொடு நிறுத்தித், திருக் கோயில் எடுப்பித்த தொல்லாசிரியர், முத்தீவேட்ட வேள் விக்குழிக்கு அறிகுறியாகவே வட்டக்கல்வடிவும், அதில் வளர்த்த அனற்பிழம்புக்கு அறிகுறியாகவே அதுபோல் நீண்டு குவிந்ததொரு கல்வடிவும் வகுத்து, அவையிரண் டையும் பொருத்திய சிவலிங்கத்தினெதிரே, முற்காலத்து ஆரிய வேள்விக்களத்தில் வெட்டுண்ட எருதுக்கு அறி

குறியாகவே எருதுவடிவான நந்தியை நிறுத்தி, அவ் வெருது வெட்டுண்ட பலிமேடைக்கு அறிகுறியாகவே அதனையொத்த பலிபீடத்தை எழுப்பிச் சிவபிரான்றிருக் கோயில் அமைத்தனரெனக.

பண்டைநாளில் மலைகளின் மீதிருந்த தமிழ் முன் னோர்கள் முத்தீவேட்டலைக் கைவிட்டபின் அவற்றின் மேல் எடுப்பித்த திருக்கோயில்களே மிகப்பழையன. அவை: திருப்பரங்குன்றம், திருக்கொடுங்குன்றம், திருக் கழுக்குன்றம், திருக்கொடிமாடச் செங்குன்றம், திருவண்ணா மலை, திருவீங்கோய்மலை, திருநொடித்தான்மலை முதலியன.

பின்னர் மலைகளினின்றுங் கீழிறங்கிக் காடுகளில் வைகி வாழ்ந்த ஞான்று அவர்கள் அமைப்பித்த திருக் கோயில்கள், மலைக்கோயில்களுக்கு அடுத்தபடியிற் பழமை யுடையனவாகும். அவை: திருவாலங்காடு, திருமறைக்காடு, திருவெண்காடு, திருச்சாய்க்காடு, திருப்பனங்காடு, திருக் கச்சிநெறிக் காரைக்காடு முதலியனவாகும்.

அதன்பிற் காடுகளைவிட்டு அகன்று உயிர்வாழ்தற் கினிய இளமரக்காக்களிலும் பொழில்களிலும் புகுந்து உறைந்த ஞான்று அவர்கள் கட்டுவித்த திருக்கோயில் கள், கானகக் கோயில்களுக்கு அடுத்தபடியிற் பழமை வாய்ந்தனவாகும். அவை: திருக்கடம்பு, திருத்தில்லை, திருவானைக்கா, திருக்குரக்குக்கா, திருக்கோடிகா, திருக் கோலக்கா, திருநெல்லிக்கா, திருவாலம்பொழில் முத லாயின.

அதன்பின் உழவுதொழிற்கேற்ற வளவிய மருதநிலம் புகுந்து அவர்கள் நிலைபெற்ற நாகரிகவாழ்க்கை யுடையராய பிற்றைஞான்று எடுப்பித்த திருக்கோயில்கள் மேற்காட் டிய கோயில்களுக்குப் பிற்பட்ட பழமையுடையனவாகும். அவை: திருவாரூர், திருவிடைமருதூர், திருவொற்றியூர், திருக்கடவூர், திருக்கருவூர், திருநாவலூர், திருப்புகலூர், திருப்புன்கூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர் முதலாக இன்னும் பலவாகும்.

இங்ஙனமாக, மலை, காடு, கா, பொழில் முதலான இடங்களை உறைவிடமாய்க்கொண்டு, எல்லாம் வல்ல இறைவனை நெருப்புருவில் வைத்து வணங்கிய போதும், நெருப்புருவைக் கைவிட்டு அதனோடொத்த கல்வடிவு மண்வடிவில் வைத்து இறைவனை வணங்கிய போதும், அவர் அவ்வணக்கத்தைச் செய்தது ஒரு மரத்தின் நீழலிலேயாகும். திருப்புலியூர் என்னுஞ் சிதம்பரத்தில் தில்லை மரத்தின் கீழும், திருவாலவாயிற் கடம்பமரத்தின் கீழும், திருவானைக்காவில் நாவல்மரத்தின் கீழும், திருப்பாதிரிப் புலியூரிற் பாதிரிமரத்தின் கீழும், திருமயிலாப்பூரிற் புன்னை மரத்தின் கீழும், திருவொற்றியூரில் மகிழமரத்தின் கீழும், இன்னும் இவ்வாறே ஒவ்வொரு திருக்கோயிலும் ஒவ்வொரு மரத்தின் கீழும் அமைந்திருத்தலை உற்றுநோக்க வல்லார்க்குப் பண்டிருந்த தமிழ் மேன்மக்களனைவரும் எல்லாம் வல்ல சிவபிரானை மரநீழலில் வைத்தே வழிபாடாற்றி வந்தமை தெற்றெனப் விளங்கா நிற்கும். ஆ! மலைமேலும் நிலத்தின் கீழுங் காடுகளிலுங் காக்களிலும் மரத்தின் கீழ் முத்தீ வளர்த்தும், அத்தீப்பிழம்பிற் கறிகுறியான சிவலிங்கம் நிறுத்தியும் இறைவனை நந் தமிழ்மேன்மக்கள் வழிபட்டு வந்த ஞான்று அவருள்ளம் எத்துணை ஆறுதலுடையதாய், எத்துணை அமைதி யுடையதாய், எத்துணை ஒளிவிளக்கம் அருள் விளக்கம் வாய்ந்ததாய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும்! அருள் ஒளி வயத்தராய் நின்று அவர் வழிபட்டுவந்த ஒளியுருவும், அதனையொத்த சிவலிங்கவடிவுமே பிறப் பிறப் பில்லா முதல்வனை வழிபடுதற் கியைந்த உண்மை வடிவங்களாகும். இறைவற்குண்மையான இவ்வருட்குறி வடிவை விட்டு, இறைவனுண்மைக்கு மாறான வடிவுகளை அவரவர் தத்தம் மனம்போனவாறெல்லாம் வகுத்து வைத்துக்கொண்டு வழிபடுவராயின், அவர் இருளுலகம்புகுவரென ஈசாவாசியோப நிடதம் (௯) புகலுதலாற், சிவலிங்க வடிவினையே எல்லாரும் வழிபட்டு இறைவன்றன் அருளுலகம் புகுவாராக!

அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன் உனக்கும்
விளம்புகின்றேன் மடவாய்நீ கிளம்புகின்றாய் மீட்டும்
இப்பொருள்அப் பொருளென்றே இசைப்பதென்னே
பொதுவில்
இறைவர்செய்யும் திரதிசய இன்பநடந் தனைநீ
பைப்பறவே காணுதியேல் அத்தருணத் தெல்லாம்
பட்டநடுப் பகல்போல வெட்டவெளி யாமே"

—இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகளார் அருளிச்செய்த மேலைத் திருப் பாட்டினை மேற்கோளாக எடுத்துக்கொண்டு "அம்பல வாணர் திருக்கூத்தினுண்மையும் ஞானயோகமும்" என்னும் எமது விரிவுரையினை நிகழ்த்துவான் புகுகின்றேம். அறிவில்லா எவ்வகைப்பட்ட பொருள்களி னகத்தும் புறத்தும், அறிவுடைய எவ்வகை யுயிர்களின் அகத்தும் புறத்தும் நிறைந்திருப்பதும், இயற்கை யுண்மையும் இயற்கை யறிவும் இயற்கையின்பமும் உடையதாகி ஓவாது இயங்குந் திருக்கூத்தை இயற்றுவதும் ஆன உண்மைப் பொருளாஞ் சிவம் ஒன்றே முழுமுதற்கடவுளாகும் என்பதூஉம், இதனுண்மையை யுணர்ந்து அவ்வாற்றாற் சிவ வயமாய் நின்றவர்க்குத் தாம் பேரின்பத்தை யடைந்த அவ் வளவில் மனவமைதி வராது தாம் பெற்ற பெறலரும் பேற்றை அதுபெறாத ஏனைமக்களும் பெறும்படி அவர்க்கு அதனை யெடுத்துக்கூறும் அருளிரக்க முண்டாமென்பதூஉம், அங்ஙனஞ் சிவஞானிகளாயினார் கூறும் மெய்யுரையினை ஏற்று நலம்பெறும் நல்வினை வாயாதார் தமக்குள்ள ஆணவ அறியாமை முனைப்பால் அம் மெய்யுரையினை விடுத்து முழுமுதற்கடவுளல்லாத சிற்றுயிர்களையும் உயி

ரல் பொருள்களையுந் தெய்வமெனத் துணிந்து இதுதான் கடவுள் அதுதான் கடவுள் என இசைத்துத் தம்பிறவிப் பயனை இழுப்பரென்பதூஉம், மற்று அங்ஙனம் அறியாமை வயப்பட்டார்போலாது மெய்யுணர்ந்தார் கூறும் மெய் யுரையினை ஏற்று அதன்வழி நிற்கவல்ல நல்லார்க்கு எவ் வுயிர்க்கும் பொதுவாய் அருள்வெளியிலே ஆடல்புரியும் அம்பலவாணன் இன்பக் கூத்தினை நினைவு ஒருங்கி உணர்ந்து பிறவித்துன்பமறக் காணும் பேரின்பக்காட்சி வாய்த்தலின் அவர்க்கு உயிரினியல்பு உலகினியல்பு மலத்தினியல்பு முதலாயின வெல்லாம் பட்டப்பகலிற் கண் ணெதிரே காணப்படும் பொருள்போல் நன்குபுலனுமென் பதூஉம் மேலைத் திருப்பாட்டில் நன்கெடுத்து நுவலப் படுதல் காண்க.

இனி, இவைதம்மை முறையே விளங்க விரித்து ஆராய்ந்து காணப்புகுவாம். உலகத்தில் நம்மறிவிற்குப் புலனுகும் பொருள்களெல்லாம் அறிவில் பொருளும் அறி வுடைய உயிர்ப்பொருளும் என்னும் இருபெருங்கூற்றில்வந் தடங்குவனவாகும். இவை தம்முள், அறிவில் பொருள்க ளென்பன தாமே இயங்கமாட்டாவாய்ப் பிறிதொன்று இயக்கினுல் இயங்குந் தன்மையவாகும். இனி, அறிவுடைய உயிர்களென்பன தாமே அறிவனவாயும் பிறர் அறிவித் தனவற்றை அறிவனவாயும் பிறர்க்கு அறிவிக்கவல்லன வாயும் உயிரற்ற பொருள்களை இயக்கவல்லனவாயு மிருக் கும். எனவே, உயிரில்லாப் பொருளின் றன்மையும் உயி ருடைய பொருளின் றன்மையும் வெவ்வேருய் ஒன்றி ஞென்று மறுதலைப்பட்டு நிற்றலின், இவை எக்காலத்தும் எவ்விடத்தும் ஒன்றினென்று வேருன இயற்கையுடையன வாகவே இருக்கு மல்லாமல், அறிவில் பொருள் அறி வுடைப் பொருளாகவும், அறிவுடைப் பொருள் அறிவில் பொருளாகவும் மாறுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழமாட்டாதென்க.

அற்றேல், மேனுட்டவரில் இயற்கைப் பொருளா ராய்ச்சியிற் சிறந்தாரான 'பாஸ்டியன்' (Bastian) என்

பார், அறிவில்லாத பருப்பொருளினின்றே அறிவுடைய உயிர்ப்பொருள் தோன்றுகின்றதெனப் பலமுகத்தாராய்ந்து கூறிய தென்னை யெனின்: அவர் செய்த ஆராய்ச்சி உண்மையுடையதன்று. ஏனென்றால், அவர் செய்த அவ்வாராய்ச்சியினைத் திரும்பவும் நுணுகியாராய்ந்த 'டிண்டல்' (Tyndall) என்னும் பேராசிரியர், தாமாராய்ந்து கண்ட முடிபாக, உயிரில்லாப் பொருளிலிருந்து உயிருடைய பொருள் தோன்றாதென்றும், உயிருள்ள பொருட்சேர்க்கையி லிருந்தே பிறிதோருயிர் தோன்றுகின்றதென்றும் அறிவுறுத்தி யுறுதிகூறி யிருக்கின்றார்*. ஆகவே, அறிவில்லாப் பருப்பொருளிலிருந்து அறிவுடைய நுண்பொருள் தோன்றுமென்றல் உண்மை யாராய்ச்சிக்கு ஒவ்வாதென்று உணர்தல் வேண்டும்.

இனி, ஏகான்மவாதங்கூறும் ஒரு சாரார் சடமென்றுஞ் சித்தென்றும் இரண்டில்லை; சடமே சித்து, சித்தே சடம், பிரமத்தினின்றே நெருப்பிற் புகைபோல மாயையாகிய சடப்பொருளுண்டாம் என்று கூறுவர். அவர் கூற்று மேலே காட்டிய உண்மையாராய்ச்சிக்கு ஒவ்வாமையானும்; நெருப்பி லுண்டாகும் புகை நெருப்பை யணைந்த விறகின் காரியமேயல்லாது நெருப்பின் காரியம் அன்றென்பதற்குக் கனிந்த தணலிற் புகையுண்டாகக் காணாமையே சான்றுமாகலின் இவ்வுவமையின் தன்மையை யுற்றுணராது, இதனைக்கொண்டு தூய அறிவுப் பொருளாகிய பிரமத்தினின்று அறிவில்லாச் சடப்பொருளாகிய மாயை தோன்றுமென்றல் ஒருவாற்றானும் பொருந்தாமையானும் ஏகான்மவாதிகள் கூறும் பொருள் ஏற்கற்பாலதன்று. எனவே, அறிவில்லாப் பொருள்களும் அறிவுடைய உயிர்ப்பொருள்களும் எக்காலத்தும் வெவ்வேறும் இயல்புடையவாகவே யிருக்குமென்று கடைப்பிடித்துணர்தல் வேண்டும்.

---

*"Life does not appear without the operation of antecedent life"-Fragments of Science by Prof. J. Tyndall, Vol. II. p. 299.

இனி, இத் தன்மையவாகிய இருகூற்றுப் பொருள் களுள், அறிவில்லதாகிய சடப்பொருள் தானே இயங்க மாட்டாதாகலின், அதனை இயக்குதற்கு அறிவுடைய பிறி தொருபொருளின் சேர்க்கை அதற்கு இன்றியமையாது வேண்டப்படும். அஃதொக்குஞ், சடப்பொருளை இயக்கு தற்கு அறிவுடைய உயிர்ப்பொருள்கள் இருத்தலின் அவையே போதும், அவற்றினும் வேறாகக் கடவுளென்று வேறோ ரறிவுப்பொருள் வேண்டப்படுதல் எற்றுக்கு எனச் சாங்கியமதத்தார் கூறுபவாலோ வெனின்; அவர் கூற்றும் அடாது: ஏனென்றால், அறிவில்லாப் பொருளின் நிலை களும், அவற்றின் எல்லை காணப்படாத பரப்புகளும், அப் பரப்புகளில் எல்லையில்லாமல் அடங்கிக் கிடக்கும் எண் ணிறந்த பொருள்களுஞ் சிற்றறிவு சிறு தொழில்களுடைய சிற்றுயிர்களால் எங்ஙன மியக்கப்படக்கூடும்? இந்த நில வுலகத்தின் ஒரு சிறிய விடத்திலிருக்கும் ஒருவன், சில காலிருந்து சிலகாலத்தின் மாய்ந்து போகின்றவனுயுந், தான் உயிரோடிருக்குங் காலத்திலும் பலவகை நோய்களாற் பற்றப்பட்டு அந்நோய் தீர்த்தற்குப் பலவகை மருந்து களாகிய பருப்பொருளுதவியை வேண்டி நிற்பவனுயுந், தான் உயிர் பிழைத்து வாழ்தற்கு அரிசி பருப்பு பால் நெய் முதலான பருப்பொருட் பண்டங்களினுதவியை இன்றி யமையாது வேண்டி நிற்பவனுயுந், தன் கண்ணெதிரே அருகிலிருக்கும் இடங்களையும் பொருள்களையுமன்றித் தன் கட்பார்வைக்குப் புறத்தே அருகிலிருக்கும் பொருள்களை யுந் தன் கட்பார்வைக்கெட்டாத் தொலைவிலுள்ள பொருள் களையுங் காணமாட்டாதவனுயும், நேரே அருகில் உள்ள பொருள்களுள்ளும் மிகச் சிறியனவா யிருப்பனவற்றைத் தெரிந்துகொள்ளமாட்டாதவனுயும், மிகப் பெரியனவா யிருக்குஞ் சுமைகளையும் பொருள்களையும் பிறருடைய பிற கருவிகளினுடைய உதவியின்றி அசைக்கமாட்டாதவனு யும் இருத்தலின், இவனது அறிவிற்கும் இவனது ஆற்ற லுக்கும் எட்டாத இந் நிலவுலகமாகிய பெரும் பருப பொருளை இவன் றன்னறிவு கொண்டுந் தன்வலிமை கொண்டும் எங்ஙனமியக்க மாட்டுவான்? பருப்பொருளாகிய

இந்நிலவுலகஞ் சிறிது அதிர்ந்தாலும், இதன்கண் உள்ள எரிமலைகள் வெடித்து நெருப்பைக் கக்கினாலும், இதன் கணுள்ள ஆறுங் கடலும் வெள்ளம் பெருகினாலும், இதன்கண் உலவுங் காற்றுச் சூறுவளியாய்ச் சுழன்று அடித்தாலும் மக்களாகிய சிற்றுயிர்களும், இச்சிற்றுயிர் களா லமைக்கப்படும் நாடு நகரங்கள் மாடமாளிகைகளும் பொடிப்பொடியாய் நுறுங்கிச் சாம்பலாய் வெந்து புழுதி யாய்ப் பறந்து அழிந்து போவதை எங்கண்ணெதிரே ஒரோவொரு காலங்களில் ஒரோவோர் இடங்களிற் காண் கின்றே மல்லேமோ? 'சான்பிரான்சிஸ்கோ' வென்னும் அமெரிக்காவிலுள்ள மாப்பெரு நகரமும், இத்தாலி தேயத்தி லிருந்த 'மெசீனாப்' பட்டினமுஞ், சிறிது காலத் திற்கு முன் ஜப்பான் தேயத்தில் 'டோக்கியோ' பட்டினமும் நில அதிர்ச்சியாலும் எரிமலை நெருப்பாலும் அடியோ டழிந்து எரிந்து கரிந்த காலத்தில் அங்கங்கிருந்த மக்க ளெல்லாரும் பட்ட பெருந்துன்பத்தை அறியாதார் யார்? மக்கள் அவை தம்மைத் தடுக்கவல்ல ஆற்றலுடையரா யிருந்தால் அவ்வழிவுகள் நிகழாமல் தடைசெய்திருக்கலா மன்றோ? இங்ஙனம் இந் நிலவுலகத்தின் ஒரோவொரு பகுதிகளில் நிகழும் அழிவு நிகழ்ச்சிகளையே அவை நிகழா மல் தடை செய்யவும், அழிந்து நீரி லமிழ்ந்திப்போன நிலப் பகுதிகளை மீண்டும் மேற்கொணர்ந்து நிலை நிறுத்தவுஞ், சிறிதும் ஆற்றலில்லாத நம் மக்கள் இந்நிலவுலகத்தைத் தாமாகவே ஆக்கவும் அழிக்கவும் நிலைநிறுத்தவும் வல்லர் ஆவர் என்று உரைப்பதினும் புல்லிய வுரை வேறுண்டோ சொல்லுமின்! தமதுடம்பு பழுதுபட்டவிடத்து அதனையே ஆக்கிக்கொள்ளமாட்டாத நம்மனோர், எண்ணிறந்த பிற வுயிர்களுக்கு எண்ணிறந்த உடம்புகளைப் படைத்துக் கொடுக்கவல்லராதலும், அவ்வுடம்புகளோடு கூடியிருந்து இவ்வுலகத்து இன்பங்களை அவை நுகருமாறு பலவேறு பண்டங்களை யமைத்து வைக்க வல்லராதலும், அவ்வுடம்பு களும் அப்பண்டங்களும் இருத்தற்கு இம் மாப்பெரு நில வுலகத்தைப் படைக்கவல்ல ராதலும் யாங்ஙனங் கூடும்? பாருங்கள்! இந் நிலவுலகத்தளவிலேயே ஆற்றல்

மிகக் குறைந்தவராய் நிலையின்றி உயிர்வாழும் நம்மனோர், இந்நிலவுலகத்துக்கும் எட்டா நெடும் பெருந் தொலைவிலே இடைவெளியிற் சுழன்று செல்லும் பகலவன் மண்டிலம், திங்கள் மண்டிலம், செவ்வாய்மண்டிலம், புதன் மண்டிலம், வியாழன் மண்டிலம், வெள்ளிமண்டிலம், சனிமண்டிலம் முதலான வெவ்வேறு பேருலகங்களையும், இவற்றிற்கும் நெடுந்தொலைவிலே இவற்றினும் பல்லாயிர மடங்கு பெரியனவாய்ச் சுழன்று செல்லும் எண்ணிறந்த வான்மீன் மண்டிலங்களையும் எங்ஙனம் படைக்கவும் இயக்கவும் வல்லராவர்? இத்தனைகோடி யுலகங்களையுஞ் சிற்றுயிர்களாகிய நாம் படைக்கமாட்டுவேம், இயக்கமாட்டுவேம், அழிக்கமாட்டுவேம் என்று எவரேனுங் கூற முன்வருவராயின், அவரை 'மைத்துனர் பல்கி மருந்திற்றெளியாத பித்தனென்' றெள்ளிச் சிறுமகாரும் நகையாடுவரன்றோ? ஆகவே, சிற்றறிவினரான உயிர்கள் தாமாகவே மாயையை இயக்கி, அதனிலிருந்து தம்முடம்புகளையும் உலகங்களையும் இவ்வுலகத்துப் பல பண்டங்களையும் படைத்துக்கொள்ள மாட்டுவ ரென்னுஞ் சாங்கியருரை, பிறந்த குழவி தன் தாயினால் எடுத்து அணைக்கப்படாமல் தானாகவே பாலிருக்குமிடந்தேடி அதனைப் பருகுமென்று கூறுவாருரையோ டொத்து நகையாடற் பாலதாய் முடியும். ஆதலால், அறிவில் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முதற்காரணமாகிய மாயையை இயக்கி, அதன்கணிருந்து சிற்றுயிர்க ளெல்லாவற்றிற்கும் அவ்வவற்றின் இயற்கைக்கு இணங்கப் பலவேறு வகையான உடம்புகளையும், அவைகள் நுகருதற்குப் பலவேறு வகையான பண்டங்களையும், அவைகள் இருந்து உயிர்வாழ்தற்குப் பலவேறு வகையான உலகங்களையும் முன்னறிந்து அமைத்து வைத்தற்கு, எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் எல்லா முதன்மையும் எல்லா இரக்கமும் ஒருங்குடையனாகிய ஒரு முழுமுதற் கடவுள் இன்றியமையாது வேண்டப்படுவனென்பது தெளிந்த முடிபாமென் றுணர்ந்து கொண்மின்கள்! ஆனதுபற்றியே, இராமலிங்க அடிகளார் "எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும்" இறைவனாகிய

சிவபிரான் உண்டென்பதனை மேலைத் திருப்பாட்டில் நன்கெடுத்து அறிவுறுத்தருளினார்.

இனி, அப்பெற்றியனான இறைவன் பொருள்களினுள்ளும் புறம்பும் இருப்பனென்று கூறியதென்னை? இவ்விரண்டின் புறத்தே உருவுடையனாய் இருந்தே இவை தம்மை இயக்கமாட்டுவான் என்று துவிதவாதிகள் கூறுதல்போலாவது, அற்றன்று இறைவன் பொருள்களிலும் உயிர்களிலும் அருவாய் அவற்றின் அகத்தே மட்டும் இருப்பானல்லது புறத்தே இருப்பானல்லனென அருவவாதிகள் கூறு முறைபோலாவது நுவலாமல், அவை இரண்டனகத்தும் புறத்தும் இருப்பனென அடிகளார் அருளிச்செய்த தென்னையெனிற் கூறுதும்: கடவுள் உருவமாயே இருப்பனென்றாவது, அன்றி அருவமாயே இருப்பனென்றாவது,சொல்லி,எல்லாம்வல்ல அவனது இறைமைக் குணத்தை ஒரு வரையறைப்படுத்தல் அவன்றன் வரம்பிலாற்றலுக்கு இழுக்காய் முடியுமாதலானும், அவன் உருவமாயே இருப்பனென் றுரைப்பின் உருவு உடைய உலகத்துப் பொருள்களில் ஒருவனாய் முடிவன் ஆகலானும், அருவமாயே நிற்பனென் றுரைப்பின் அருவமாகிய வான் வெளி முதலிய பொருள்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படுவனாகலானும், புறத்தே இருப்பவனுக்கு அகத்தே செய்யவேண்டுவனவும், அகத்தே இருப்பவனுக்குப் புறத்தே செய்யவேண்டுவனவும் அறிந்து செய்தல் இயலாமையானும், பொருள்கள் உயிர்களின் அகத்தும் புறத்தும் இருக்கவல்லவனுக்கே அவ்விரண்டிடத்தும் அவைகட்கு ஆவன அறிந்து செய்தல் இயலுமாகலானும், எல்லாம்வல்ல இறைவன் அருவாயும் உருவாயும் அகத்தும் புறத்தும் வரையறையின்றி நிறைந்து நிற்பனென்பதே உண்மை முடிபாமென்று ஓர்ந்துகொள்ளல்வேண்டும். இவ்வுண்மை தேற்றுதற்கே ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார்,

“ இல்லா முலைப்பாலுங் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உள்வாமால் நீர்நிழல்போல்—இல்லா

அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று''

என்றும், அவர்தம் மாணாக்கர் அருணந்திசிவனார்,

"உலகினிற் பதார்த்த மெல்லாம் உருவமோ டருவ மாகி
நிலவிடும் ஒன்றொன் றாகா நின்றஅந் நிலையே போல
அலகிலா அறிவன் றானும் அருவமே என்னில் ஆய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன் குறித்தி டாயே"

"அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்[னின்
அருவமும் உருவா ரூப மானது மன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே"

என்றும, அருளிச் செய்தனர்கள். வடமொழியில் ஈசா வாசியோபநிடதமும்,

"அவனைக்கண்டு எல்லாம் நடுங்குகின்றன
அவனெதற்கும் நடுங்குவதில்லை
அவன் எல்லாவற்றிற்குந் தொலைவிலிருக்கின்றான்
அவன் எல்லாவற்றிற்கும் அருகிலு மிருக்கின்றான்
அவன் எல்லாவற்றின் உள்ளு மிருக்கின்றான்
அவன் எல்லாவற்றின் வெளியிலு மிருக்கின்றான்'

என்று இவ்வுண்மையினையே நன்கெடுத்து மொழிவதாயிற்று.

இனி, இங்ஙனம் பொருள்களின் உள்ளும் புறம்பும் உயிர்களின் உள்ளும் புறம்பும் நிறைந்திருப்பானான இறைவனியல்பு உணர்த்துவான் புகுந்து, அவன் இயற்கை யுண்மையும் இயற்கை யறிவும் இயற்கை யின்பமும் வாய்ந்தானாகியிருப்பனென அடிகள் மொழிந்திட்டார். இறைவனியல்பு இப்பெற்றியதாமெனவே, இறைவனது உதவியை அவாய் நிற்கும் பொருள்களும் உயிர்களும் அங்ஙனம் இயற்கையிலேயே உண்மையும் அறிவும் இன்பமும் வாயாவாயிருக்கு மென்பதும் அறிவித்தாராயிற்று. இனி,

இம் மூன்று தன்மைகளின் இலக்கணங்களும், பொருள் களும் உயிர்களும் இவை தம்மை இயற்கையிலே யுடைய வாகாமையும், இறைவ னொருவனே இவை தம்மை இயற் கையேயுடையனாதலும், இறைவனைச் சார்ந்தே உயிர்கள் அவை மூன்றும் நிலையாக எய்தப் பெறுதலும் முறையே விளக்கிச் செல்வாம்.

முதற்கண் 'உண்மை' என்பது 'என்றும் ஒருபடித் தாய் நிற்கும் மாறாநிலையே'யாகும். நமதறிவுக்குப் புல னாகும் பொருள்களுள் ஒன்றாயினும் மாறாநிலையினதாய் ஒரு படித்தாய் நிற்கக் காண்கின்றோமா? இல்லை, இல்லை. நாம் உயிர்வாழ்தற்கு இடமாயுள்ள இம் மண்ணுலகு எத்தன் மையதா யிருக்கின்றது? ஒருகாலத்து மேடாயிருந்தது பள்ளமாகின்றது. பள்ளமாயிருந்தது மேடாகின்றது; பண்டைக்காலத்திற் சிறந்த நாகரிகமுடையதாய் விளங்கிய குமரிநாடு இப்போது கடலுள் அமிழ்ந்திக்கிடக்கின்றது; கடலுள் மறைந்துகிடந்த எத்தனையோ நிலப்பகுதிகள் இப்போது கடல் நீருக்குமேற் பல தீவுகளாய்க் கிளம்பி யிருக்கின்றன; எத்தனையோர் ஆயிர ஆண்டுகளுக்கு முன் நாகரிகத்திற் சிறந்த மக்களால் எகுபதி நாட்டில் அமைக் கப்பட்ட பெரிய பெரிய நகரங்களும் அந்நகரங்களிலமைக்கப் பட்ட பெரிய பெரிய அரண்மனைகளும் பெரியபெரிய கோயில்களும், அங்ஙனமே சால்டி நாட்டில் 'ஊர்' என்னுந் தலைநகரில் எடுப்பிக்கப்பட்ட மிகப் பெரிய அரண்மனை களும் மிகப்பெரிய கோயில்களும, அங்ஙனமே நமது இவ் விந்திய நாட்டின் வடமேற்பகுதியிற் குடியேறிய பண்டைத் தமிழ் மக்களால் தலைநகராக அமைக்கப்பட்ட 'அரப்பா' என்னும் இடமும் அதன்கண் இருந்த அரண்மனைகள் கோயில்களும் மண்மூடுண்டு, இப்போது மேல்நாட்டு நன் மக்களால் நிலத்தினின்றும் அகழ்ந்தெடுத்துக் காட்டப் படுகின்றன. முன்னொருகால் மேல்நாடு முழுமையுந் தம செங்கோல் நீழலில் இனிது வைக அரசு செலுத் திய உரோம வேந்தர்க்குத் தலைநகராயிருந்த பழைய உரோம நகரின் மிக வியக்கத்தக்க மாடமாளிகைகள்

அழிந்து பாழாய்க் கிடத்தலை இப்போதுந் திரள் திரளான மக்கள் சென்று பார்த்து வருகின்றனர். இங்ஙனமே இத் தமிழ் நாட்டகத்தும் பழங்காலத்திருந்த தமிழ்வேந்தர் அமைத்த அரண்மனைகளுந் திருக்கோயில்களும் இடிந்து பாழாய்க்கிடத்தல் திருவாரூர், கங்கைகொண்ட சோளேச்சுரம், மகாபலிபுரம், செஞ்சி, வேலூர் முதலிய இடங்களில் இன்றும எல்லாருஞ் சென்று பார்த்து வருகின்றனர். வைகை முதலிய யாறுகளும் முற்காலத்து ஓடிய வழிமாறி ஓடுகின்றன. மிகப் பழைய நாளில் வடநாட்டில் ஓடிய சரசுவதி என்னும் யாறு இப்போது இல்லாமலே போயிற்று. முன்னில்லாத பல யாறுகள் பின்னர்ப் புதியவாய்த் தோன்றி ஓடா நிற்கின்றன. நாம் உறையும் இந் நிலமண்டிலமே வரவரக் குளிர்ந்து வருகின்றதென்றும, இன்னும் பல்லாயிர நூற்றுண்டுகள் கழிந்தபின் மக்களும் பிறவுயிர்களும் உயிர்வாழ்தற்கே இசையாதாய் இது மாறுமென்றும் சில நூல்வல்லார்கள் பெரிதாராய்ந்து உரைக்கின்றனர்.

இப்போது நமக்கு இரவில் ஒளியைத்தரும் நிலா மண்டிலமானது பன்னூறாயிர ஆண்டுகளுக்கு முன் உயிர் வாழ்க்கைக்கு இடமாயிருந்து, பின்னர் வரவரக்குளிர்ந்து உயிர்வாழ்தற்கு ஏலாத இயல்பினதாய் மாறியிருக்கின்றதென வான்நூலாசிரியர்கள் நுவல்கின்றனர். இன்னும் கண்களுக்கு ஆலம்வித்துப் போலவும் மின்மினியொளி போலவுந் தோன்றுகின்ற எத்தனையோ பெரிய பெரிய உலகங்களிற் பற்பல முன்னரே அழிந்துபட்டனவாயும், வேறு பல புதிது தோன்றினவாயும், மற்றும் பல அழிந்தொழியும் நிலைமையில் இருப்பனவாயும் பற்பல மாறுதல்கட்கு உட்பட்டனவாய்ச் செல்கின்றனவென்னும் உண்மை வான்நூல் ஆராய்ச்சியாற் புலனாய்க்கொண்டிருக்கின்றது. நாம் நுகரும் பண்டங்கள் நாம் புழங்கும் ஏனங்கள் முதலாயினவெல்லாம் நாளேற நாளேறத் தமது கட்டுச் சிதைந்துந் தேய்ந்தும் அழிந்துபோதல் போலவும், நமக்கு நெருங்கிய தொடர்புடைய நமுடம்பும் நாளேற நாளேற நரை திரை மூப்புப் பிணிகள் உடையவாகிக் கட்டுத்

தளர்ந்து நம்மைவிட்டு அழிதல்போலவும், இவ்வுலகமும் இவ்வுலகத்தைச் சூழ்ந்த எண்ணிறந்த உலகங்களும் அவற்றின்கண் உள்ள அளவிலாப் பண்டங்களும் ஒரு காற்றேன்றிச் சிலகால் இருந்து பிறிதொருகாற் கட்டுக் குலேந்து காணமற் போய்விடுகின்றன. ஆகவே, மிகச் சிறியது முதல் மிகப் பெரிய தீருன எல்லாவகையான உயிரில்லாப் பொருள்களும் ஒரே நிலேயாக இருக்கமாட்டா தனவாய்ச் சிதைந்தொழிந்து போதலால், அவைகளே ஒரே நிலேயிலுள்ள உண்மைப் பொருள்களாகக் கூறுதல் இயலாது.

இனி, உயிருடைய பொருள்களின் நிலே சிறிது ஆராயற்பாற்று. உயிருடையவைகள் எல்லாம் அறிவுடையனவாய் இருந்தும், அவற்றின் அறிவு என்றும் ஒரே தன்மையதாகச், சுருங்குதல் விரிதலின்றி என்றும் ஒரே அளவினதாக, அகவிருளால் இடையிடையே பற்றப்படா தனவாக விளங்கக் கண்டதுண்டோ? நாம் சிறு மகவாயிருந்தஞான்று நமதறிவு எந்நிலேயிலிருந்த தென்பது நமக்கே விளங்கவில்லே. ஆனுலும், எத்தனேயோ சிறு மகவுகளே நாம் நம் கண்ணெதிரே கண்டு, அவற்றின் இயல்பை உற்றுநோக்குதல்கொண்டு, அவற்றின் அறிவு ஏதோ ஒரு பேரிருளாற் கவரப்பட்டிருக்கின்றதென்றுந், தாய்தந்தையர் உடன்பிறந்தார் நேயர் ஆசிரியர் முதலான பிற அறிவுடையுயிர்களின் சேர்க்கையிலிருந்து அம் மகவுகள் சிறிது சிறிதாக அவ்விருள்நீங்கி அறிவு விளங்கப் பெற்று வருகின்றனவென்றுந் தெரிந்துகொள்கின்றே மாதலால், நாமுஞ் சிறு குழவிகளாய் இருந்த ஞான்று ஏனேக் குழவிகளேப்போலவே நம்மை இன்னரென்றும், நம்மைச் சூழ்ந்தவர் இன்னரென்றும், நம்மைச் சுற்றியுள்ள பண்டங்கள் இன்னவையென்றும் உணரமாட்டாதவர்களா யிருந்தோம் என்பதை ஐயமறத் தெளிந்து கொள்கின்றேம். இதுமட்டுமோ, நாம் ஆண்டில் முதிர்ந்தவர் களாய்க் கல்விப்பயிற்சியாற், பேரறிஞர் சேர்க்கையால் அறிவு விளங்கப்பெற்ற பின்னும், நமதறிவு ஒரு தன்மைத்

தாய் விளங்குவதின்றிப் பலவேறு மாறுதல்களின் வயப் பட்டு, நம்மை இடையிடையே துன்புறுத்திவரக் காண் கின்றேம் அல்லேமோ? நேற்று அறிந்தவைகளிற், சென்ற கிழமையில் அறிந்தவைகளிற், போன திங்களில் அறிந் தவைகளிற், கடந்த ஆண்டு அறிந்தவைகளில் எத்தனை கோடி நினைவுகள் எத்தனைகோடி எண்ணங்கள் நம்மறி வுக்குத் தென்படாமலே மறைந்துபோயின! முன்னறிந் தவைகளை இங்ஙனம் நாம் மறந்து மறந்து போதலால் நமக்குவரும் இடர்களுக்கு, நம்மாற் பிறர்க்கு வரும் இடர் களுக்கு ஒரு கணக்குண்டோ! முன்னறிந்தவைகளை மறத்த லால், நிகழ்ந்தவைகளை நிகழ்ந்தபடியே சொல்லமாட்டாத வர்களாய்ப், பார்த்த பொருள் கேட்ட பொருள் சுவைத்த பொருள் இயல்புகளை அப் பார்த்த கேட்ட சுவைத்தபடியே நினைவுகூர்ந்து சொல்லமாட்டாதவர்களாய்ப் பொய்த்துப் பிழைபடுகின்றனம் அல்லமோ?

கடந்தவற்றையறியும் அறிவிற்றான் இத்தகைய மாறு தல்கள் நிகழ்கின்றன வென்றாலும், இப்போது நம் கண் ணெதிரே நிகழ்வனவற்றிலாவது நமதறிவு பொய்படுத லின்றி மெய்யாக அறிதல் செய்கின்றதா? அதுவும் இல் லையே! நாம் நேரே காண்கின்ற பொருளையும் ஆராய்ந்து பார்த்தாலன்றி ஐயமறத் தெளியமாட்டாதவர்களாய் இருக் கின்றேம். ஒரு துண்டு செம்பையும் ஒரு துண்டு பொன் னையும் பளிச்சென்று தோன்ற விளக்கிக் கையிற் கொடுத் தால், அவை யிரண்டற்குமுள்ள வேறுபாடு தெரியாமல் எத்தனை பேர் ஏமாந்து போகின்றனர்! தித்திப்பான நாரத் தம்பழங் கொடிமுந்திரிப்பழம் முதலியன வாங்குபவரில் எத்தனைபேர் அவற்றை நன்கு ஆய்ந்து பாராமல் வாங்கித், தாம் வாங்கியவை தித்திப்புக்கு மாறான புளிப்புடையவா யிருத்தலைக் கண்டு ஏமாந்து போகின்றனர்! மருத்துவரில் எத்தனைபேர் நோயாளிகளின் நோயின் றன்மையை யறி யாமல் மாறான மருந்துகளைக் கொடுத்து அவர்கொண்ட நோயை மிகுத்து அவரையுங் கொல்லுகின்றனர்! கணக் கரில் எத்தனைபேர் தவறுகக் கணக்குச் செய்து தாமும்

பிழைப்பட்டுத், தாம் சார்ந்த செல்வுரையுங் கெடுத்துவிடு கின்றனர்! சமையற்றொழில் செய்வாரில் எத்தனைபேர் காலமும் இடமும் உணவெடுப்பார் உடல் நிலையும் ஆய்ந்து பாராமல் உணவு சமைத்துக்கொடுத்து, அதனையுண் பார்க்குப் பல கொடுநோய்களை யெல்லாம் வருவித்து விடுகின்றனர்! நூல்எழுதுவாரில் எத்தனைபேர் காலப்போக்கும் மக்கள் முன்னேற்றமுங் கருதிப் பாராமற் பயனற்றபொருள்களை எழுதி மக்களறிவு வளர்ச்சியைப் பாழ்படுத்துகின்றனர்! அவருள் எத்தனைபேர் தாம் வழங்கும் மொழியைத் திருத்தமாகப் பயிலாமற் சொற்குற்றஞ் சொற்றொடர்க் குற்றம் பொதுள எழுதியும், அயன்மொழிச் சொற்களை அடுத்தடுத்துக் கலந்தும் அதன் தூயவழக்கை மாயவைக்கின்றனர்! இன்னும் இங்ஙனமே நம் மக்களிற் பெரும்பாலார்—அவர் கற்றவராயினுங் கல்லாதவராயினுங், தங்கண்ணெதிரே காண்பனவுஞ் செய்வனவு மெல்லாம் உண்மைக்கு மாறாகப் பிழைபடச் செய்து தாந் துன்புறுவதொடு பிறரையுந் துன்புறச் செய்கின்றனர்! இவ்வாறு இவர்கள் நிகழ்கால நிகழ்ச்சிகளிலேயும் மெய்யொடு திறம்பிப் பொய்படுமறிவினரா யிருக்கக் காண்டலின், இவர்களது அறிவை உண்மை நிலையினதென் றுரைக்க மெய்யறிவு வாய்ந்தார் ஒருப்படுவரோ சொன்மின்கள்!

இனி, இங்ஙனங் கடந்தகால நிகழ்ச்சிகளிலும் நிகழ்கால நிகழ்ச்சிகளிலும் அடுத்தடுத்துப் பிழைபடும் அறிவுடைய இவர்கள், புலனுணர்வு மனனுணர்வுக்கு எட்டாத வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிந்து நடத்தல் யாங்ஙனங் கைகூடும்? நாம் நெடுங்காலம் உயிர்வாழ்ந்து இவ்வுலக இன்பங்களைத் துய்ப்போமென்று எண்ணிக்கொண்ட எத்தனை பேர் ஏழையெளியவர்கள் வயிற்றை யொடுக்கிச் சேர்த்த பொருளை அவர் கண்ணீர் சிந்தக் கைப்பற்றிக் கொண்டு வந்த அந்நேரத்திலேயே சடுதியில் உயிர் துறந்து பிணமாய்க் கிடக்கக் கண்டதில்லையா? தமக்குமேல் வலிமையுடையவர்க ளில்லையென்று இறுமாந்து வலியற்றவர்களைத் துன்புறுத்தி வந்தவர்கள் தாம் தம்மினும் வலி

யாரால் வெட்டப்பட்டு வீழ்ந்துகிடக்கவில்லையா? எத்தனை செல்வர்கள் எத்தனை அரசர்கள் எத்தனை மறவர்கள் தமது நிலையாமையை உணர்ந்து பாராமையால், நாளைக்கு நமது நிலைமை யெப்படியாமோ என்று ஐயுறவு கொள்ளாமற் பிறர்க்குத் தீங்கிழைத்துப், பின்னர்த் தாம் இருந்த இடமுந் தெரியாமல் இறந்து போகின்றனர். வருங்கால வியல்பை உணர்ந்து பார்க்கமாட்டாத நம் மக்களறிவும் அறிவெனப்படுமா? தன் உடம்பினுள்ளுந் தன்னைச் சுற்றிலும் நிகழப்போவனவற்றையே யறியமாட்டாதான் ஒருவன், தானே ஒருவனே பல்லாண்டு நீடுவாழ்வன் ஏனையோ ரெல்லாம் நீடுவாழார் என நினைந்து பிறர்க்கு முன் தானே மாய்ந்து ஏமாற்றம் அடைவனாயிற், சிற்றறிவுடைய இம் மகனறிவு உண்மையை யுள்ளபடி யுணரவல்ல உண்மையுடையதாமோ? மக்களின் இச் சிற்றறிவுப் பெற்றி தேற்றுதற்கன்றோ ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனர்,

"அறிந்தும் அறிவதே யாயும் அறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த
தெதுவறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுவதுதான் என்னும் அகம்"

என்று அருளிச் செய்தார். பிற்காலத்தில் தாயுமான அடிகளும்,

"இனியே தெமக்குன் அருள்வருமோ வெனக்கருதி
ஏங்குதென் நெஞ்சம் ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்று
எண்ணவோ திடம் இல்லையே"

என்று அருளிச் செய்தமை காண்மின்கள்! இங்ஙனமெல்லாஞ் செல்கால நிகழ்கால வருங்கால நிலைகளை உணரும் உண்மை யறிவு வாயாமையால், மக்களும் மற்றையுயிர்களும் இயற்கை யுண்மை நிலையுடைய வாகாமை தெற்றென விளங்கா நிற்கும்.

இங்ஙனமும் ஆராய்ந்தவாற்றால் உயிரில்பொருள்களும் உயிருள் பொருள்களும் இயற்கையிலேயே உண்மை நிலை யுடையவல்லாமை நன்கு பெறப்படுதலால், உயிர்

ளுள் தாமுந் தம்மை ஓர் அறிவுடைப் பொருளென்று தமது துண்மை உணர்தற்குந், தமக்கு உடம்பும் உலகமும் உலகத்துப் பல்பொருள்களுமாகத் திரிபெய்திப் பயன்படும் மாயையென்று ஒரு பொருள் உண்டு என்று அதன் உண்மையினை அவைகள் அறிதற்குங், கடவுள் என்று ஒரு முழுமுதற்பொருள் என்றும் மாறா இயற்கை யுண்மை யுடையதாய், அவை இரண்டனையுந் தொடர்புபடுத்துதற்கு வேண்டுமென்பது இன்றியமையாது பெறப்படும். என்னை? தன்னிலே மாறா உண்மைநிலை யில்லா ஒருவன் பிறர்க்கு ஏதொரு நன்மையுஞ் செய்யமாட்டாமை நமது உலக வாழ்க்கையில் அடுத்தடுத்து நிகழக்காண்டும் அன்றோ? தன் மனக்கினிய நண்பன் பட்ட கடனை நாளை வந்து தீர்த்து அவனைச் சிறைபுகாமற் காப்பேன் என்று உறுதி சொல்லிப் போன ஒரு செல்வன்தான் சொன்ன மொழியுந் தன் நினைவும் மாறிவிடுவனாயின், அவன் அவற்கு அவ் வுதவியைச் செய்யா தொழிதல் போலவும்; வெப்பு நோயால் வருந்து மொருவனுக்கு அந்நோய் தீர்க்க வந்த மருத்துவன் ஒருவன் நாளை விழுமியதொரு மருந்து கொணர்ந் தூட்டி அதனைத் தீர்ப்பேனெனச் சொல்லிப் போய் மறுநாளில் அங்ஙனமே வந்து செய்யாதொழியின் அவன் அவற்குச் சிறிதும் பயன்படாமை போலவும், ஒரு கொடியனால் துன்புறுத்தப்பட்டு நடுநிலை மன்றத்தில் முறையிட்டான் ஒருவனுக்கு முறை செய்யப் புகுந்த ஒரு நடுவன் தன் கடமையினின்றும் வழீஇத், துன்புறுத்திய கொடியன்பாற் கைக்கூலி வாங்கிக் கொண்டு முறைசெய்யாது மாறுவனாயின் அவன் தன்பால் முறை வேண்டினானுக்கு முறைசெய்யாது குறைசெய்தல் போலவும், இறைவனும் மாறுந் தகையனாயின், அவன் உயிர்களுக்கு ஏதொரு நன்மையுஞ் செய்ய மாட்டா நிலையினனாய் விடுவன். மற்று, அவன் எண்ணிறந்த வுயிர்களுக்கும் அவ் வவற்றின் அறிவுநிலைக் கேற்ப எண்ணிறந்த உடம்புகளைக் கொடுத்து அவற்றின் அறிவை மேன்மேல் விளங்கச் செய்து வருதலையும், அவற்றின் அறிவு விளக்கத்திற்கு இன்றியமையாத வெயில்மண்டில நிலாமண்டில இயக்கங்

களைச் சிறிதும் மாருமல் நிகழச் செய்து வருதலையும், அவற்றின் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத புற்பூண்டு மரஞ் செடி கொடிகளை மாருமல் விளைவித்து அவை காய் கனி கிழங்கு வித்துக் கீரை முதலான பயன்களைத் தொடர் பாகத்தருமாறு உதவி வருதலையும், மழை பெய்யுங்காலத்து மழை பெய்யவும் அதற்குக் கருவியான குளிர்ங்காற்று வேண்டுங் காலத்து அக் குளிர்ங்காற்று வீசவும், மழைக்கு முதலான நீராவி எழுதற்கு வெயில் மிகுங்காலத்து வெயில் மிகுந்து எறிப்பவும் மாருமற் புரிந்து வருதலையும், இவ் வாற்ருல் எல்லா வுயிர்களும் உணவு பெற்று அவற்றை யுட்கொண்டபின் அகத்திருந்து அவ் வுணவைச் சாறுஞ் சக்கையுமாகப் பிரித்துச் சாற்றைச் செந்நீராக மாற்றி உடம்பெங்கும் ஓடச்செய்துஞ் சக்கையை உடம்பினின்று உடனுக்குடன் கழியச்செய்தும் நம்பெருமான் ஒரு நொடிப் பொழுதும் மடிந்திராது பேருதவி யாற்றி வருதலையும், அவன் அமைத்த மாரு நிகழ்ச்சிகளுக்கு மாறுபடாமல் நமது வாழ்க்கையினை நாம் செலுத்தத் தெரியாமல் அறி யாமையினுலும் இறுமாப்பினுலுந் தீய இன்ப வேட்கை யினுலும் நமது உடம்பை நாமே சிதைத்துவிட்ட விடத்து அதனை யொழித்து நமக்கு வேறு புதிய உடம்புகளைக் கொடுத்து நம்மை வேறு வேறு புதிய பிறவிகளில் உய்த்து வருதலையும் நாம் நன்காராய்ந்து ஆழ்ந்து நினையுங்கால், எல்லாம்வல்ல நம் ஆண்டவன் ஒருவனே எக்காலத்தும் எவ்விடத்தும் மாரு உண்மை நிலையுடையனு யிருக்கின்றன னென்பதூஉம், அவன் ஒருவனே எல்லா உயிர்களிடத்தும்—அவை எத்துணை இழிந்தனவாயினும் எத்துணை உயர்ந் தனவாயினும், அவற்றின்பா லெல்லாம் மாரு அன்பினனுய் மாரு அருளினனுய் இருக்கின்றனனென்பதூஉம் உள் ளங்கை நெல்லிக்கனிபோற் றெள்ளத் தெளிய விளங்கு கின்றன வல்லவோ? ஆகையால், இயற்கை யுண்மை வாய்ந்தவன் இறைவன் ஒருவனே யல்லாமல் மற்றைய அல்லவென்று மேலைத் திருப்பாட்டில் அடிகளார் அறி வுறுத்தினமை சாலப் பொருத்த முடைத்தாதல் கண்டு கொள்ளப்படும்.

இனி, இவ் வுலகத்தின்கண் உள்ள சிற்றுயிர்களெல்லாம் ஒரே தன்மைத்தாக மாறாது விளங்கும் அறிவு வாய்ந்தவை அல்லவென்பது முன்னரே காட்டப்பட்டமையால், அவ் வுயிர்களெல்லாவற்றிற்கும் வேண்டுவனவெல்லாம் அறிந்து உதவி செய்தற்கு, என்றும் ஒரு பெற்றித்தாய் வயங்காநின்ற பேரறிவு வாய்ந்த முதல்வன் ஒருவன் இன்றியமையாது வேண்டப்படுவனென்பது முடிக்கப்படும். எத்தனையோ உயிர்கள் புதிது தோன்றுவனவாயும், எத்தனையோ உயிர்கள் இறந்துபடுவனவாயும், எத்தனையோ உயிர்கள் வேறு பிறவிகளிற் செல்வனவாயும் உயிர்களின் தோற்றக் கேடுகள் இடையறாது எங்கும் நிகழக் காண்டலின், அவ்வவ்வுயிர்களின் அகத்தும் புறத்துமிருந்து அவ்வவற்றின் தோற்றக்கேடுகளை யறிந்து அவ்வவற்றிற்குப் பிறரெவராலுஞ் செய்ய முடியாத பேருதவியைச் செய்யும் பெருமான் அறிவு, எத்துணைப் பெரியதாய் எத்துணை விழுமிய விளக்கத்ததாய் எத்துணை அருளிரக்கம் வாய்ந்ததாய் எத்துணைச் சிறந்த மாறாநிலையினதாய் மிளிர்வதாகல் வேண்டும்! பசித்து உணவு வேண்டி வந்தார்க்கு உணவு கொடுக்கும் ஒருவன், ஓரிடத்தில் ஒருகாலத்துள்ளார் சிலர்க்கு மட்டுமே உணவுகொடுக்க வல்லனவன்; தெற்கே குமரியிற் பசித்த பலர்க்கும், இடையே சென்னை வேங்கடம் முதலான ஊர்களிற் பசித்துள்ளார் பலர்க்கும், வடக்கே காசி அவந்தி முதலான ஊர்களிற் பசித்தார் பலர்க்கும் அவன் ஒருவனே ஒரே காலத்தில் உணவளிக்க மாட்டுவனோ? மாட்டானன்றே? ஒன்றைவிட்டு ஒன்று மிக அகன்றிருக்கும் அவ்வவ்வூர்களிலுள்ள வறிஞர்க்கெல்லாம் அங்ஙனம் அவன் ஒரே காலத்தில் உணவளிக்க வேண்டின், ஆங்காங்கு உணவமைப்பார் பற்பலரை நிறுவிப் பெரும் பொருள் செலவிட்டு அவர் வாயிலாக அங்ஙனஞ் செய்யலாமேயன்றித், தான் ஒருவனாகவேயிருந்து அங்ஙனஞ் செய்ய மாட்டுவான் அல்லன்!

இங்ஙனமே நோய்கொண்டு வருந்துவார்க்கு நோய் தீர்க்கும் மருத்துவனும், ஒரு காலத்து ஓரிடத்துள்ள ஒரு சிலர்க்குமட்டுமே நோய் தீர்க்கமாட்டுவானன்றி, ஒன்றி

ஞென்று அகன்றிருக்கும் பற்பல ஊரிலுள்ள பற்பலர்க்கும் ஒரே காலத்தில் நோய் நீக்கமாட்டுவா னல்லன்; அன்றி அவன் அங்ஙனஞ் செய்யவேண்டிற் பெரும்பொருள் செலவு செய்து மருத்துவர் பற்பலரை ஆங்காங்கு ஏவியே நோய் கொண்டார் பல்லாயிரவர்க்கும் மருந்தூட்டி நோய்தீர்க்கற் பாலன். மற்று, எல்லாம்வல்ல கடவுளோ ஓரிடத்தன்றி ஓரூரிலன்றி ஓருலகத்தன்றிப், பல்வேறிடங்களிலும் பல்வேறு ஊர்களிலும் பல்வேறு உலகங்களிலும் நிறைந்து ஆற்று மணலிலும் அளவிடப்படாதனவாய் உள்ள உயிர்த் தொகைகளில், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்தில் தோற்றுவிக்கின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத் திற் காத்துவருகின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரே காலத்தில் ஒரு பிறவியினின்று விடுவித்து வேறுபல பிறவிகளில் உய்த்துவருகின்றான், எத்தனைகோடி யுயிர்களை ஒரேகாலத்தில் தன் திருவடிப்பேரின்பத்திற் படிவித்து வருகின்றான்! இங்ஙனமாக எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலுந் தான் ஒருவனாகவே யிருந்து, எல்லா உயிர் களின் இயல்புகளையும் அறிந்து, அவ்வவற்றிற்கேற்ற உதவி களைத் தான் ஒருவனாகவே செய்துவரும் இறைவன்றன் அறிவாற்றல் எவ்வளவு சிறந்ததாய், எவ்வளவு பேரளவின தாய் இருக்க வேண்டுமென்பதைச் சிறிது எண்ணிப்பாருங் கள்! இத்துணைச் சிறந்த அவனறிவு, நம்மனோர்க்குள்ள அறிவுபோல் ஆணவ வல்லிருளில் மறைந்து இருந்து, பின் அதனினின்றும் விடுபட்டு விளங்குவதாயிருக்கக் கூடுமோ என்பதையும் எண்ணிப் பாருங்கள்! அவனறிவு சிறிது மறைந் திருந்தால், இவ்வுலகமெங்கே, இவ் வுலகத்துள்ள பண்டங்களெங்கே, புற்பூண்டுகள் எங்கே, பல்வகைப் பிறவி களெங்கே, பல்வகை யுயிர்களெங்கே, ஞாயிறு திங்க ளெங்கே, எல்லாம் வெறும் பாழாய் வெட்டவெளியாயிருக்கு மல்லவோ? ஆதலால் எல்லாம்வல்ல இறைவனறிவு, நம தறிவுபோல் ஆணவ வல்லிருளிற் சிறிதும் மறையாதாய், என்றும் விளங்கினபடியாயே யிருக்கும் என்பது சிறிதும் ஐயமின்றித் தெளியற்பாலதாகும். இதுபற்றியே, அடிகளார் அவன் இயற்கையறிவினனேயே யிருப்பன் என்று மேலைத்

திருப்பாட்டில் அருளிச்செய்தாரென் றுணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இனி, இறைவன் இயற்கையுண்மையினனும் இயற்கையறிவினனும் மட்டுமே இருப்பனென்று உரைப்பின், இவ்விரண்டு இலக்கணங்களும் மாயை ஆணவங்களுக்கும், மாயை ஆணவங்களினின்று விடுபட்ட உயிர்களுக்கும் முறையே பொருந்துவான் செல்லும். என்னை? உடம்பாயும் உடம்பின் கருவிகளாயும் உலகங்களாயும் உலகத்துப் பொருள்களாயுந் திரிபுறுத மாயையின் பரப்பு இன்னும் எவ்வளவோ பெரிதாய் இருக்கின்றது! இந்நால்வகைக் காரியப் பொருள்களாய்த் திரிந்த மாயையின் பகுதி சிறிதாயும், அங்ஙனந் திரியாத பகுதி பெரிதாயும் உளவென்பது ஆராய்ச்சியால் நன்கு புலனாதலின், திரிபில்லாத அதன் முதற்காரணப் பகுதி இயற்கை யுண்மைநிலை யுடையதாதல் தானே பெறப்படுமன்றோ? இங்ஙனமே, பிறவிக்கு வராத உயிர்களும் இன்னும் எத்தனையோ கோடிக் கணக்காய் உள்ளனவாகலின் அவைதம்மைப் பற்றியிருக்கும் ஆணவமலமுங் காரியப் படாததாய் இயற்கை யுண்மைநிலை வாய்ந்ததாதலுந்தானே பெறப்படுமன்றோ? இவை போலவே, சதாசிவதத்துவத்தில் வைகுஞ் சதாசிவர் முதலாயினர் இயற்கையிலேயே ஆணவமலப்பற்றுப் பெரிதும் அகன்றவராய், இயல்பாகவே பேரறிவுவிளக்கம் வாய்ந்தவராய் இருத்தலின், அன்னார்க்குள்ள அவ்வறிவு இயற்கையே யுண்மைநிலையுடையதாதலுந் தானே பெறப்படும்; பெறப்படவே, இறைவன் ஒருவனே இயற்கையுண்மையினனும் இயற்கையறிவினனும் விளங்குவ னென்ற சொற் குற்றமுடைத்தாய் முடியுமாம் பிறவெனின்; அற்றன்று, அக்குற்றம் அணுகாமைப் பொருட்டே "இயல் உண்மையறிவு" என்றவளவில் அமையாது, "இன்பம்" என்பதொன்றுகூட்டி, "இயல் உண்மை அறிவு இன்பவடிவாகி என்று ஓதி, இறைவன் வரம்பிலின்ப வடிவினனாய் நிற்றல் அவற்குச் சிறந்த இலக்கணமாதல் அடிகள் புலப்படவைத்தார்.

அஃதொக்குமா றென்னை? மாயையிற் றிரண்ட பண்டங்களிற் பல இன்சுவையினவாயும், வேறுபல நறுமணத்

தினவர்யும், மற்றும் பல இன்னோசையினவாயும், இன்னும் பல அழகிய தோற்றத்தினவாயும், பின்னும் பல இனிய மென்மையினவாயும் புகுந்து உயிர்கள்பால் இன்பத்தை விளைக்கக்காண்டலின், மாயையும் இன்பமுடைத் தென்பது போதருமாலோ வெனின்; அஃதொவ்வாது; என்னை? மாயையிற் றிரண்ட பண்டங்கள் அறிவுடைய உயிர்கள் மாட்டு இன்ப துன்பங்களை விளைவித்தற்குக் கருவியாமல் லது, அவைதாமே இன்பதுன்பங்கள் உடையவல்லவாக லின். மாயை அறிவில்பொருளாதல் கண்கூடாக அறியக் கிடத்தலின், அது தானே தனக்கு இன்பமுண்டென்றுதல், துன்பமுண்டென்றுதல் அறிதல் செய்யாது. கனிந்த பலாச்சுளையைத் தேனெடு கூட்டி யுண்டவனுக்கு, அதன் இன்சுவையினுல் இன்பம் மீதூரக் காண்டுமேயன்றி, அப் பலாச்சுளையே அவ் வின்சுவை இன்பத்தை எய்தக் காண்டு மில்லையே. ஒரு கூர்ங்கத்தியாற் கை யறுப்புண்டவனுக்கு அதனுல் துன்பம் மீதூரக் காண்டுமே யன்றி, அக்கத்தியே அவன் கையை அறுத்து அதனுல் துன்புறக் காண்டுமில் லையே. இவ்வாறே இன்ப துன்ப நிகழ்ச்சிகள் அறிவுடைய வுயிர்கள்பா லன்றி, அவை தம்மை அவற்றின்பால் விளை விக்கும் மாயையின் காரியங்களில் ஒரு சிறிதுங் காண்கில மாகலின், மாயை அவற்றிற்குக் கருவியேயா மல்லாமல், அவை தாமே இன்ப துன்பங்களை உடையவாகா என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த உண்மையே யாம்.

அஃதொக்குமாயினும், அறிவுடைய உயிர்கள் இன்பம் எய்தக் காண்டலின், அவையும் இன்பமுடைத் தென்பது பெறப்படும்; படவே, இறைவன் ஒருவனே இன்ப முடையன் என்று உரைத்தது இழுக்காமாலோ வெனின்; இழுக்காகாது; என்னை? உயிர்களெல்லாம் மாயை யிற்றிரண்ட பண்டங்களை நுகர்தலானும் அழகு அறிவு அன்புடைய பிறவுயிர்களொடு சேர்தலானுமே இன்புறக்காண்டுமல்லது, அவ்விரண்டன் றொடர்பின்றித் தானே தனித்திருந்து இன்புறும் ஒரு சிற்றுயிரை யாண்டுங் கண்டில மாகலின் என்பது. இங்ஙனம் பிறி

தொன்று இன்புறுத்தினாலன்றி இன்புறல் அறியாத சிற்றுயிர்களே இயற்கையின்பமுடையன வென்றல் இசையாமையின், முழுமுதற் கடவுளொருவனே இயற்கை யின்பமுடையனென்பது முடிக்கப்படும்; படவே, அவற்குரிய அச்சிறப்பிலக்கணம் பிறிதெதற்கும் உரிமையாவான் சேறல் இல்லையென்று கடைப்பிடித்துணர்ந்து கொள்ளல் வேண்டும்.

அதுவேயு மன்றிச், சிற்றுயிர்களெல்லாந் துன்புறுத்தும் பொருட் சேர்க்கையால் துன்புற்றும், இன்புறுத்தும் பொருட் சேர்க்கையால் இன்புற்றும் வருதல் போல், இறைவன் எதனாலேனுந் துன்புறுத்தப்படுதலும் பிறிதெதனாலேனும் இன்புறுத்தப்படுதலும் இல்லனாய், என்ஞான்றும் இன்பவுருவினனாயே நிற்கும் பெற்றியனாகலின், அவற்குரிய அச்சிறப்பிலக்கணம் பிறிதெதற்கும் உரியதாதல் செல்லாதென்று உணர்தல் வேண்டும். இறைவன் இங்ஙனம் இன்பவுருவினனாயே நிற்குந் தனிப்பேருண்மை அறிவுறுத்துதற்கன்றோ **மாணிக்கவாசகப் பெருமான்,**

" சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமாக் கடலே "

என்றும்,

" ஓரின்பவெள்ளத்து உருக்கொண்டு தொண்டரை
யுள்ளங் கொண்டார் "

என்றும், இங்ஙனமே **இராமலிங்க அடிகளார்,** 'மகாதேவ மாலை'யில்,

" தற்போத வொழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெலாந் தானேயாகிச்
சிற்போதத் தகம்புறமுங் கோத்துநின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத்தேவே "

என்றும் அருளிச்செய்திருத்தலும் நினைவிற் பதிக்கற்பாற்று.

அற்றேல், இறைவனேடொத்த அறிவினராக ஓதப்படுஞ் சதாசிவர் முதலாயினுர் மாட்டும் இயற்கையின்பம் உளதாகல் வேண்டுமா லெனின்; அற்றன்று, சதாசிவர் முதலியோர்க்குந் தலைமை செலுத்துதலால் உண்டாகுஞ் செருக்காகிய 'அதிகாரமலம்' ஒன்றுண்டென நூல்கள் ஓதுதலின், அவரது அறிவுஞ் சிறிது குறைபாடுடையதே யாகும்; அஃதுடையதாகவே, அவ்வறிவைப்பற்றி நிகழும் இன்பமுங் குறைபாடுடையதாகவே யிருக்கும். அதனுல், அவர்க்குள்ள அக் குறைபாடு நீங்குதற்கும், அவர் எல்லாம் வல்ல முழுமுதற் சிவத்தின் உதவியையே அவாய் நிற்றலின், அவரும் அச் சிவத்தின் றிருவருட்பேரின்பத்தைத் தலைக்கூடி, அதன்கட் படிந்த பின்னரே நிறைந்த அறிவும் நிறைந்த இன்பமும் உடையராவரென்பது முடிக்கப்படும். அங்ஙனம் முடிக்கப்படவே, முப்பத்தாறு பருப்பொருள் நுண்பொருட் படிகளுக்கும், அவ்வப்படிகளில் வைகுவாராய் மும்மல இருமல ஒருமலப் பற்றுடைய மூவகையாருயிர்த்தொகுதிகளின் நிலைகளுக்கும் அப்பாற்பட்ட இயல்பினதாயுள்ள சிவம் ஒன்றே இயற்கை யுண்மையும் இயற்கை யறிவும் இயற்கை யின்பமும் உடையதாய், எல்லாவற்றையுந் தன் அருள்வெளியி லடக்கி, அவற்றின் மேலும் எல்லையில்லாத விரிவினதாய் விளங்குமென்பதும் முடிக்கப்படும்.

அஃதொக்கும், காரியப்படாத மாயையின் பெரும் பகுதி இயற்கை யுண்மை யுடையதாதல் முன்னரே பெறப்பட்டமையின், அஃது அவ்வாற்ருல் இறைவனியல்போடு ஒத்ததாவான் செல்லுமா லெனின்; மாயையின் ஒரு பகுதி யியற்கையுண்மை யுடையதாயினும் அதன் மற்ருெரு பகுதி இயற்கையுண்மை வாயாதாய்க் காரியப்பட்டு மாறக் காண்டலினுலும், அங்ஙனந் தன்னிலே இருவேறு வகைப்பட்டு நிற்கும் அப்பொருள் ஒரே நிலையினதென்றற்கு இடம் பெருமையினுலும், இறைவன் அதுபோல் அங்ஙனந் தன்

னிலே இருவேறு வகைப்பட்டு ஒருவகையிற் காரியமாய் மாறுதலும் பிறிதொரு வகையிற் காரியமாய் மாருமல் நிற்றலும் ஆகிய வேறுபாடு உடையனல்லனுகலானும் மாயை இறைவனேடொத்த உண்மை நிலையினதாதல் செல்லாதென்று கடைப்பிடித்தல் வேண்டும்.

அஃதொக்குமன்ருயினுஞ், சைவசித்தாந்த நூல்களும் இறைவனுக்கு அருவம் உருவம் என்னும் இருவகை நிலைகளும் உண்டென்ருேதுதலின், அவனும் மாயைபோற் காரியப்படுதலுடைய னென்பது பெறப்பட்டு, அங்ஙனம் ஓதுமது மாயர்வாதக் கொள்கையர்ய் முடியுமாம் பிற வெனின்; அற்றன்று, இறைவன் மாசற்ற தூய அறிவுப் பொருளே யல்லாமல், அறிவில்லா மாயைபோல்வான் அல்லன். அறிவில்பொர்ருள் மட்டுமே ஒரு நிலையிலிருந்து பிறிதொரு நிலைக்குத் திரிக்கப்படும்; மற்று அறிவுடைப் பொருளோ அங்ஙனந் திரிக்கப்படுதல் எஞ்ஞான்றும் இல்லை; மண்ணனது குடமாகத் திரிக்கப்படுதல் போல, அம் மண்ணினின்று குடத்தை யுண்டாக்கும் அறிவுடையனை குயவன் அங்ஙனந் திரிக்கப்படுதல் இலன். இன்னும், மண்ணினின்று குடம் முதலிய பாண்டங்களை உண்டாக்கும் முன்னரே, அவை தம்மை யுண்டாக்குங் குயவனது அறிவின்கண் அப்பாண்டங்களின் வடிவங்கள் அமைந்துகிடத்தல் வேண்டும்; அங்ஙனம் அவ்வடிவங்கள் தன் அறிவின்கண் அமையப்பெருதவன், அப் பாண்டங்களைச் சமைத்தற்குரிய அறிவு வாயாதவனுமாகலின், அவன் அவற்றை ஆக்கமாட்டுவான் அல்லன். ஆகவே, அறிவில்லாத மாயையிலிருந்து இவ் வுலகங்களும் இவ் வுலகத்துப் பொருள்களும் இவ் வுடம்புகளும் இவ் வுடம்புகளில் அமைந்த கருவிகளும் படைக்கப்படுதற்கு முன்னரேயே, இவற்றை யெல்லாம் படைக்கும் இறைவனது பேரறிவின்கண் அப்பொருள்களின் உருவங்கள் அமைந்து கிடத்தல் வேண்டுமென்பது தெளியப்படும். எங்ஙனங் குயவனது அறிவின்கண் அமைந்த உருவங்களோடு ஒத்த வடிவுடைய பாண்டங்கள் மண்ணினின்றும் அவனற்

படைக்கப்படுகின்றனவோ, அங்ஙனமே இறைவனது அறிவின்கண் அமைந்த உருவங்களோடொத்த வடிவுடைய உலகமும் உடம்பும் பிறவும் மாயையினின்றும் அவனாற் படைக்கப்படுவனவாகும். எங்ஙனங் குடங்கள் முதலான பாண்டங்களின் வடிவு சிதைந்தழிந்தாலும் அவற்றோடொத்த அறிவினுருவங்கள் குயவனுள்ளத்தின்கண் அழியாவாய் நின்று அப் பாண்டங்களை மறித்தும் மறித்துந் தோற்றுவிக்குமோ, அங்ஙனமே இவ் வுலகங்களும் இவ் வுடம்புகளும் பிறவும் வடிவு சிதைந்து அழிந்தாலும் அவற்றோடொத்த அறிவினுருவங்கள் இறைவன் றிருவுள்ளத்தின்கண் அழியாவாய் நின்று அவை தம்மை மீண்டும் மீண்டுந் தோற்றுவியா நிற்கும். இதுகொண்டு, மாயையின் வடிவு அழிதல்போல, இறைவனது அறிவுருவு அழிவதன்றென்பதூஉந் தெற்றென விளங்கும்.

இன்னும், அறிவுடையோன் என்று உயர்த்துச் சொல்லப்படுபவன், தான் உணர்ந்த பொருள்களின் வடிவங்களோடொத்த உருவங்களைத் தன் அறிவின்கண் ஐயந் திரிபின்றி அமைத்துக்கொண்டவனேயாவ னென்பதூஉம், அறிவில்லாதோன் என்று இழித்துச் சொல்லப் படுபவன் தான் கண்ட எந்தப்பொருளின் வடிவத்தையுந் தன்னுள்ளத்தின்கண் அமைத்துக்கொள்ள மாட்டாதவனேயாவ னென்பதூஉம், இறைவனறிவு இம்மாயையிற் காணப்படும் எல்லா வடிவுகளையும் முன்னரே யறிந்த உருவுகளுடையதா யிருப்பினல்லது இப்பருப்பொருள் வடிவுகள் தாமே தோன்றுவாகலின் இறைவனது பேரறிவு இவையெல்லாவற்றையுந் தன்னகத்தடக்கிய உருவுடையதாயே திகழுமென்பதூஉம் பிறவும் "கடவுளுக்கு அருளுருவம் உண்டு" என்னும் எமது கட்டுரையில் நன்கு விளக்கியிருக்கின்றேம்; அவ்விரிவை அதன்கட் காண்மின்கள்!

அஃதொக்கும்; இறைவனறிவு உருவுடையதாயே நிற்குமெனின், அதனை அருவென்று கூறுதல் என்னையென்பார்க்கு, உயிர்களும் உயிர்களின் அறிவுங் கண்

முதலிய பொறிகளுக்குப் புலனுகாமைபற்றி அருவென்றும், உயிர்களின் அறிவு கட்புலனுகாவிடினும் புறப்பொருள்களில்தான் கருதிய வடிவினை அமைத்தல் கண்டு அதனறிவு அவ்வடிவிஞேடொத்த உருவுடையதென்றுங் கொள்ளுதல்போல, இறைவனும் இறைவன்றன்பேரறிவும் பொறிகளுக்குப் புலனுகாமைபற்றி அருவென்றும், அங்ஙனமாயினும் அவன்றன் பேரறிவு எண்ணுதற்கடங்கா. இத்தனை யுலகங்களையும் இவ்வுலகங்களிலுள்ள இத்தனை பண்டங்களையும் இவற்றிலிருந்து இவைதம்மை நுகர்தற்கு எண்ணிறந்த உயிர்களொடு கூடிய இத்தனையுடம்புகளையும் அமைத்திருத்தல் கொண்டு இவற்றின் வடிவுகட்கு முதலான உருவுகள் வாய்ந்ததொன்ருகவேயிருக்குமென்றும் விடுத்தல் வேண்டும். எனவே, அறிவெல்லாம் அழியா வுருவங்களுடைய வாயே யிருக்குமென்பதூஉம், அன்னவாயினும் அவை ஊனுடம்பில் அமைந்த பொறிகளின் வாயிலாக அறியப்படாமல் மாசற்ற அறிவுக்கண் கொண்டே காணப்படு மென்பதூஉம் நினைவிற்பதிக்கற்பாலனவாகும். **திருஞானசம்பந்தர்** மூன்ருட்டைச் சிறுமகவாயிருந்த ஞான்று கண்டு பாடிய இறைவனுருவம், அவர் தந்தையார் கண்களுக்குப் புலனுகாமல் அவர்க்குமட்டும் புலனன தன்மையை யுற்றுநோக்குங்கால், அவர் கண்ட இறைவனுருவம் அறிவுருவமே யல்லாது ஊனுருவம் அன்றென்பதூஉம், அவரதனைக் கண்டதுந் தமது அறிவுக்கண் கொண்டே யல்லாது ஊனக்கண் கொண்டன்றென்பதூஉம் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். இறைவனுருவம் இப்பெற்றியதாதல் கண்டே **அருணந்திசிவனர்,**

"மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
ஆயஆ ணவம் அகன்ற அறிவொடு தொழிலை யார்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முதல் நண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னல்"

என்றும்,

"சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்"

என்றும் அருளிச் செய்வாராயினர். ஆகவே, இறைவனது பேரறிவு நிலையை யுணர்வாராகிய மக்களின் சிற்றறிவுக் கண்ணுக்கே அவன் அருவமாகப் புலனாகாது நிற்பன்; மற்று, அவன் அருளைச் சார்ந்து, அதனால் மாசு தீர்ந்து தூயரான அன்பரின் தூயஅறிவுக்கு, அவன்றன் தூய அறிவுருவநிலை முற்றும் புலனாவாறேயாய் விளங்கா நிற்குமென்று உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

இனி, "மெய்ப்பொருளாஞ் சிவம் ஒன்றே" என்றது, மேற்காட்டியவாற்றான் மாறுந் தகையவான பொருள்களும் உயிர்களும், மாறுநிலையினதான சிவத்தை நோக்க மெய் யல்லாதனவாதல் பெறப்படுதலாற், சிவம் ஒன்றே மெய்ப் பொருளாதல் தெருட்டியவாறு. அற்றேற் சிவமல்லாத பொருள்களெல்லாம் பொய்யென முடிந்து ஏகான்மவாத மாம் பிறவெனின்; அங்ஙனமன்று, நிலை மாறாததே மெய் யென்றும், நிலைமாறுவதே பொய்யென்றும் உலகவழக் கானுஞ் சான்றோர் நூல்வழக்கானும் நன்கறியக்கிடத்த லின், என்றுமில்லாத வெறும் பாழையும் பொய்யையும் ஒன்றென்றல் அடாது. "நில்லாதவற்றை நிலையினவென் றுணரும், புல்லறிவு" என்னுந் திருக்குறளும் இக்கருத்தே பற்றி யெழுந்ததாகும். அல்லதூஉம், இல்லாத வெறும் பாழைப்பற்றிப் பேசுவாருங் கேட்பாரும் யாண்டு மிலராக லானும், உயிர்களும் பொருள்களு மிருந்தே முப்பொரு ளாராய்ச்சி நிகழ வேண்டுமாகலானும், நிலைமாறுவன உள் பொருள்களே யல்லால் இல்பொருள்களாதல் செல்லாமை யானும், இதன்கண் ஏகான்மவாதங் கூறுவாருரை ஒரு சிறிதும் பொருந்தாதெனை விடுக்க.

'சிவம்' என்னுஞ் சொல் செம்மை யென்னும் பண்படி யாகப் பிறந்து சிவந்த நிறத்தையும், இன்பத்தையும உணர்த்துஞ் சிறந்த தமிழ்ச் சொல்லாமாகலானும், இறை வன்றன் அறிவுருச் சிறந்த நிறத்தினதாயும் இன்பநிலை

யினதாயும் இருக்கும் உண்மையினை நமக்கு நினைவுறுத்திக் காணவுங் கருதவும் படாத முதல்வன்றன் அறிவுருவினை நாம் காணவுங் கருதவும் எளியதாம்படி வைத்து நமக்கு நினைவெர்ருமையினைப் பயப்பிப்பதில் இச்சொற்போலக் கடவுளுக்குரிய வேறெச்சொல்லும் உதவிபுரிவதின்மையர்னுனு, சிவம் என்னும் இச்சொல்லையே கடவுளுக்குச் சிறந்த பெயராக வைத்துப் பண்டைக்காலந் தொட்டு இன்றுகாறும் ஆன்றோர்கள் வழங்கி வருதலானும், ஈண்டு அடிகளாரும் அச்சொல்லையே சிறந்ததாக எடுத்து அருளிச் செய்வாராயினர். அடிகளார் பிறண்டுஞ் "சிவம் பிரமமுடியே" என்று ஓதுவதூஉங் கருத்திற் பதிக்கற்பாற்று.

இனிச், சிவம் ஒன்றே மெய்ப்பொருள் என்று ஆழ்ந்தாராய்ந்து கண்ட தொல்லாசிரியர்களும், அவர் வழி பிழையாது வந்த அடிகளாருந் தாங்கண்ட அவ்வரும் பேருண்மையினை, மக்களெல்லாரு முணர்ந்து உய்தல் வேண்டுமென் றெழுந்த பேரிரக்கத்தால் அடுத்தடுத் தெடுத்துணர்த்தி வரவும், அதனைக் கடைப்பிடியாது, பிறந்து பெருந் துன்பங்களிற் பட்டுழன்று இறந்து ஒழிந்த அரசர்களையும் இழிந்த மக்களையு மெல்லாந் தெய்வங்களாக வழிபட்டுப் பிறவியைப் பாழ்படுத்தி இருள் நிரயத்திற்குஞ் செல்லுங் கீழ்மக்களை அது செய்தலாகாதென்று மேலைச் செய்யுளின் பின்னிரண்டடிகளில் தடுத்தருளினர்.

இனி, மேலைச் செய்யுளின் இறுதிப்பகுதியில், இறைவன் எல்லாவுயிர்களின் அகத்தே நெஞ்சத்தாமரையின் அறிவுவெளியிலும், புறத்தே எண்ணிறந்த வுலகங்கட்கெல்லாங் களைகண்ணும் அருள்வெளியிலும் பொதுநின்று இன்ப ஆடல்புரியும் இயல்பினை, ஞானுசிரியன் மெய்யுரை வழிநின்று மூச்சை யடக்கி, மூலத்திலுள்ள குண்டலியை யெழுப்பி, அதனோடு உணர்வினை ஒருங்கியைத்துக் கொண்டு, நெஞ்சத் தாமரையின் அகத்தே சென்று கண்டு இன்புறும் ஞானயோகப் பயிற்சியுடையார்க்கு, எல்லா

அறிவும் எல்லா இன்பமும் ஒருங்கெழுந்து பெருகித் தோன்றும் என்றருளிச் செய்து முடித்தமை காண்க! இவ்வுண்மை ஆசிரியர் திருமூலர் அருளிச்செய்த,

"நாசிக்கு அதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே"

என்னுந் திருப்பாட்டானும் நன்கு தெருட்டப்பட்டதென்க.